# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் அக்டோபர் - 2017

www.tnpscthervupettagam.com













SHANKAR IAS ACADEMY™
Plot No.1742, Ist Floor, 18th Main Road, Anna Nagar, Chennai – 600 040.
Phone : 044-26216435, 64597222, 4353 3445, Mobile : 94441 66435

# பொருளடக்கம்

TNPSC துளிகள் ........ 3

தமிழ்நாடு செய்திகள் ........ 5

தேசியச் செய்திகள் ........ 10

சர்வதேசச் செய்திகள் ........ 46

பொருளாதாரச் செய்திகள் ........ 62

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப செய்திகள் ........ 69

சுற்றுச்சூழல் செய்திகள் ........ 75

மாநிலச் செய்திகள் ........ 79

பிரபலமானவர்கள் , விருதுகள் மற்றும் நிகழ்வுகள் ........ 81

விளையாட்டுச் செய்திகள் ........ 97

முக்கிய தினங்கள் ........ 105

இதரச் செய்திகள் ........ 113

# TNPSC துளிகள்

- பாரத ஸ்டேட் வங்கியின் (எஸ்.பி.ஐ) புதிய தலைவராக ரஜ்னீஷ் குமார் மத்திய அரசால் நியமிக்கப்பட்டுள்ளார்.
- வடகிழக்கு பருவமழையின் போது உண்டாகும் இடர்களை கையாள பூந்தமல்லியில் உள்ள தமிழ்நாடு சிறப்பு காவற்படையின் 13வது பட்டாலியன் பிரிவானது தமிழ்நாட்டின் பேரிடர் படையாக மாற்றம் செய்யப்பட்டு உள்ளது.
- மூத்த வழக்கறிஞர் மற்றும் முன்னாள் கூடுதல் சோலிசிடர் ஜெனரலான அமேந்தர் சரண் அவர்கள் மகாத்மா காந்தி கொலையின் மீது மறு விசாரணை கோரும் மனுவின் நடுநிலை அறிவுரையாளராக (amicus curiae) உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.
- பொது வருங்கால வைப்பு நிதி, தேசிய சேமிப்பு சான்றிதழ், மற்றும் கிசான் சேமிப்புப் பத்திரம் போன்ற திட்டங்களுக்கு ஆதார் எண்ணை இணைப்பது கட்டாயம் என மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.
- கீழடியில் சுயமாக தொல்பொருள் அகழ்வாராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளத் தேவையான அனுமதியை மத்திய தொல்பொருள் ஆலோசனை வாரியத்திடம் (Central Advisory Board of Archaeology ) தமிழ்நாடு அரசு பெற்றுள்ளது. இது வெறும் சோதனை மாதிரி திட்டமாக அல்லாமல் முழுஅளவிலான, ஆழமான அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளும் அகழ்வாராய்ச்சியாகும்.
- புதிதாக அமைக்கப்பட்டுள்ள, பிரதமருக்கான பொருளாதார ஆலோசனை குழுவின் (Economic Advisory Council to Prime Minister/ EAC-PM) முதல் கூட்டம் புதுடெல்லியின் நிதி ஆயோக் அலுவலகத்தில் நடைபெற்றது. நிதி ஆயோக்கின் உறுப்பினரான டாக்டர். பிபேக் தேப்ராய் இதன் தலைவராவார்.
- கிருஷ்ணகிரி மாவட்டத்தின் பர்கூரில் 360 கோடி செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள காலணி உற்பத்தி ஆலையை தமிழக முதல்வர் தொடங்கி வைத்தார்.
- பாகிஸ்தானுக்கான இந்திய உயர் ஆணையராக உள்ள கௌதம் பம்பாவலே சீனாவிற்கான புதிய தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- வங்கதேச கடற்படை கப்பலான சோமுத்ரா அவிஜன் நான்கு நாட்கள் நல்லெண்ணப் பயணமாக ஆந்திராவில் உள்ள விசாகப்பட்டின கிழக்கு கடற்படைப் பிரிவுக்கு வருகை தந்துள்ளது.
- ராஜ்ய சபா தொலைக்காட்சியின் முதன்மை ஆசிரியர் பதவிக்கான வேட்பாளரை தேர்ந்தெடுப்பதற்காக ராஜ்ய சபாவின் தலைவர் M. வெங்கய்ய நாயுடு அவர்கள் பிரசார் பாரதியின் தலைவர் A. சூர்ய பிரகாஷ் தலைமையிலான ஐந்து நபர் கொண்ட குழுவினை அமைத்துள்ளார்.
- கண்ணாடி இழை கேபிள் மூலம் இணையதள சேவை வழங்குவதற்காக தமிழ்நாடு அரசு கேபிள் தொலைக்காட்சி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கைக்கு மத்திய தொலைத்தொடர்பு அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.
- மத்திய அரசு குஜராத் மாநில பணிப்பிரிவைச் சேர்ந்த மூத்த காவல்துறை அதிகாரியான ராகேஷ் ஆஸ்தனாவை மத்திய புலனாய்வு அலுவலகத்தின் சிறப்பு இயக்குநராக நியமித்துள்ளது. நியமனங்களுக்கான அமைச்சரவை குழு தற்சமயம் கூடுதல் இயக்குநராக இருக்கும் 1984ம் வருடத்திய அதிகாரியை சிறப்பு இயக்குநராக பணிஉயர்வு செய்துள்ளது.

- சுவிட்சர்லாந்திற்கான அடுத்த இந்திய வெளியுறவுத் தூதராக 1993ம் வருடத்திய இந்திய வெளியுறவுத்துறை அதிகாரியான தற்சமயம் வெளியுறத்துறை அமைச்சகத்தில் இணை செயலாளராக உள்ள சிபி ஜார்ஜ் என்பவரை நியமித்துள்ளது.
- இந்திய அஞ்சல் வழி செலுத்து வங்கியின் (IPPB) புதிய நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரியாக சுரேஷ் சேதி நியமிக்கப்பட்டுள்ளார்.
- பாராளுமன்ற ஒப்புதல் இல்லாமல் "பிரிட்டன் வெளியேற்றத்தை (BREXIT)" கொண்டுவர நினைத்த பிரிட்டன் பிரதமர் தெரசா மேக்கு எதிராக சட்ட சவால்களில் வெற்றி பெற்ற இந்திய வம்சாவழி பிரசாரகரான ஜினா மில்லர் ஐக்கிய ராஜியத்தின் (UK'S) மிகுந்த செல்வாக்குமிக்க கருப்பினத்தவர் என அறிவிக்கப்பட்டுள்ளார்.
- மத்தியப் பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு அமைச்சகம் "ஸ்டார்ட் அப் சங்கம்" (Start-up Sangam) முன்னெடுப்பு முயற்சி ஒன்றினை நிறுவி உள்ளது. இது கனரக எண்ணெய் மற்றும் வாயு தொழிற்பிரிவில் 30 ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு, புதிய வர்த்தக மாதிரி திட்டங்கள், சந்தைப்படுத்துதல் திட்டங்கள், தொழில்நுட்பங்கள், புத்தாக்கப் பயிற்சிகள் உள்ளிட்டவற்றை வழங்குவது தொடர்பானதாகும்.
- 25-10-2017 அன்று தேர்தல் ஆணையம் குஜராத் சட்டமன்ற தேர்தலுக்கான தேதி தொடர்பான அறிவிப்பினை வெளியிட்டுள்ளது. இதன் மூலம் குஜராத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் (Model code of conduct) உடனடியாக நடைமுறைக்கு வந்தன. இமாச்சலப் பிரதேச மாநிலத்தின் சட்டமன்றத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதற்கு 13 நாட்களுக்கு பின்னர் குஜராத் சட்டமன்றத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது.
- ஆதார் கார்டு இல்லாதவர்களுக்கும், ஆதார் கார்டை ரேஷன் அட்டையுடன் இணைக்காதவர்களுக்கும் பொது விநியோகத் திட்டத்தின் பலன்களை வழங்கத் தடை விதிக்கக் கூடாதெனவும், ஆதார் அட்டை இல்லாததால் அவர்களின் பெயர்களை பயனாளர்களின் பட்டியலில் இருந்து நீக்கக்கூடாது எனவும் மத்திய அரசு, அனைத்து மாநில அரசுகளுக்கும் அறிவுரை வழங்கியுள்ளது.
- தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளில் 'மூத்த சகோதரன்' என பொருள்படும் 'அண்ணா' என்ற வார்த்தையானது ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியில் முதன் முறையாக சேர்க்கப்பட்டுள்ளது.கடந்த மாதம் அகராதியின் மேம்படுத்தப்பட்ட வெளியீட்டில் இந்திய மொழிகளான , தெலுங்கு, உருது, தமிழ், இந்தி மற்றும் குஜராத்தி மொழிகளைச் சேர்ந்த 70 வார்த்தைகள் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன.
- அமைச்சரவை நியமனக்குழுவானது, மத்தியத் தொழிலகப் பாதுகாப்புப் படையின் கூடுதல் இயக்குனர் ஜெனரலாக திரு.அலோக் குமார் படேரியா, ஐ.பி.எஸ் அவர்களை நியமித்துள்ளது.
- 'சோபியா' என்று பெயரிடப்பட்ட ரோபோட்டுக்கு (இயந்திர மனிதன்) குடியுரிமை வழங்கிய முதல்நாடு சவுதி அரேபியா ஆகும். இது ஹன்சன் ரோபோடிக்ஸ் எனும் நிறுவனம் உருவாக்கிய மனித வகையான ரோபோட் ஆகும்.
- நான்காவது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு தென்ஆப்பிரிக்காவில் உள்ள டர்பனில் நடக்கவிருக்கிறது. நவம்பர் 16ஆம் தேதி தொடங்குகின்ற நிகழ்ச்சியில் துணை குடியரசுத் தலைவர் M. வெங்கையா நாயுடு பங்கேற்கவுள்ளார்.
- இந்தியாவின் முதன்மை பயங்கரவாத எதிர்ப்பு நிறுவனமான தேசியப் புலனாய்வு முகமையின் புதிய தலைவராக (டைரக்டர் ஜெனரலாக) 1984 ஆண்டு அஸ்லாம் – மேகாலயா பணிப்பிரிவைச் சேர்ந்த ஐ.பி.எஸ் அதிகாரியான Y.C. மோடி நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்திய குடிமைப் பணி அதிகாரியான சத்யா கோபால் அருணாச்சலப் பிரதேசத்தின் தலைமை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# தமிழ்நாடு செய்திகள்

## குழந்தை இறப்பு விகிதம் – தமிழ்நாட்டில் 17 ஆகக் குறைவு

- தேசிய மாதிரி கணக்கெடுப்பின் சமீபத்திய அறிக்கையின்படி தமிழ்நாட்டில் குழந்தை இறப்பு விகிதம் இரண்டு புள்ளிகள் குறைந்து 17 ஆக பதிவாகியுள்ளது. ஆயிரம் குழந்தைகள் பிறக்கும் போது, அதில் நிகழும் இறப்புகள் கணக்கை வைத்து குழந்தை இறப்பு விகிதம் கணக்கிடப்படுகிறது.
- இத்தகைய ஆரோக்கியமான நிலையினை தமிழ்நாடு பெறுவதற்கு மூன்று காரணிகள் முக்கியமாக கருதப்படுகிறது ,
    i. பச்சிளம் குழந்தைகள் பிறக்கும் காலக்கட்டத்தில் எளிமையாகவும் மலிவாகவும் சுகாதார வசதிகள் கிடைக்கிறது.
    ii. மாநிலத்தின் பெருமளவு குழந்தைகள் தடுப்பூசி மூலம் பாதுகாப்பு பெறுகின்றன (குறிப்பாக தட்டம்மை , ரூபெல்லா மாற்றும் ரோட்டா வைரஸ் தடுப்பூசி)
    iii. அதிக அளவு குழந்தைகள் பெற்றுக்கொள்வது குறைந்துள்ளது [தமிழ்நாட்டில் நூற்றில் எட்டு பெண்கள் (8 out of 100)மட்டுமே இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றுக் கொள்கின்றனர்]
- மாநிலத்தில் பிறக்கும் பச்சிளம் குழந்தைகளுக்கு சிறப்பு தீவிர சிகிச்சைப் பிரிவு )Neonatal ICU - NICU) மற்றும் தாய்மார்களுக்கு விரிவான மகப்பேறு கால அவசர சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றை மாநிலத்தில் செம்மையாக மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- தமிழ்நாட்டில் 99 சதவீத குழந்தை பிறப்புகள் மருத்துவமனைகள் அல்லது மருத்துவ உதவி மையங்களில் நடைபெறுவதால் , குழந்தைகள் மற்றும் தாய்மார்கள் இறப்பு விகிதம் பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது.
- குழந்தைகள் பிறந்து ஆறு மாதங்களுக்குத் தாய்ப்பால் மட்டும் ஊட்ட வேண்டும் என்று அரசாங்கம் வலியுறுத்தி வருவதால் , மேலும் இது நல்ல விளைவுகளை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழகத்தின் வாக்காளர் எண்ணிக்கை

- தமிழகத்தில் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 5.95 கோடி என்று தலைமைத் தேர்தல் அதிகாரி ராஜேஷ் லக்கானி தெரிவித்தார்.
- மாநிலத்திலேயே அதிகளவு வாக்காளர்களைக் கொண்ட தொகுதியாக சோழிங்கநல்லூர் தொகுதி உள்ளது. அதில் 6.24 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர். மாநிலத்திலேயே குறைந்தளவு வாக்காளர்களைக் கொண்ட தொகுதியாக நாகை மாவட்டம் கீழ்வேளூர் தொகுதி உள்ளது. அங்கு 1.68 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர்.

## தமிழகத்தின் புதிய ஆளுநர்

- திரு. பன்வாரிலால் புரோகித் தமிழகத்தின் 25 வது ஆளுநராக சென்னை ராஜ் பவனில் உறுதிமொழியை ஏற்று பதவியேற்றுக் கொண்டார்.
- சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி .இந்திரா பானர்ஜி அவருக்கு பதவிப் பிரமாணத்தை செய்து வைத்தார்.
- அஸ்ஸாம் மாநில ஆளுநராக இருந்த பன்வாரிலால் புரோகித் தமிழகத்தின் ஆளுநராக, பொறுப்பு ஆளுநராக இருந்து வந்த திரு. வித்யாசாகர் ராவிற்கு பதிலாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## தமிழகத்தில் ஏழாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகள் அமலாக்கம்

- ஏழாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்த தமிழக அமைச்சரவை ஒப்புதல் தெரிவித்துள்ளது
- நிதித்துறை செயலாளர் K. சண்முகம் தலைமையிலான உயர்மட்ட குழுவின் அறிக்கையின் அடிப்படையில் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
- மத்திய அரசின் 7வது ஊதிய குழுவின் பரிந்துரைகள் அடிப்படையில் ஊதிய திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, மத்திய அரசின் அமலாக்கத்திற்குப் பிறகு, தமிழகத்தில் 2.57 சதவீதம் ஊதிய உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது.

## அரக்கோணத்தைப் பொதுத் தொகுதியாக அறிவிக்க கோரிய வழக்கு நிராகரிப்பு

- அட்டவணை சமூக வேட்பாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அரக்கோணம் தொகுதியை பொதுத் தொகுதியாக அறிவிக்குமாறு இந்திய தேர்தல் ஆணையம் மற்றும் மாநில தேர்தல் ஆணையத்தை அறிவுறுத்த வேண்டி தொடுக்கப்பட்ட மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.
- இந்த நீதிமன்றத் தீர்ப்பு இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் விதி 329(a) இன் படி வழங்கப்பட்டுள்ளது.
- விதி 329(a) ன்படி விதி 327, அல்லது விதி 328 ன் கீழ் மேற்கொள்ளப்படும் தொகுதிகளுக்கான இட ஒதுக்கீடு அல்லது தொகுதிகளில் மறுவரையறை குறித்த எந்த ஒரு சட்டத்தின் செல்லுப் படித்தன்மையைப் பற்றியும் எந்த நீதிமன்றத்திலும் கேள்வி எழுப்ப முடியாது.

### *தொகுதி மறுவரையறை*

- ஒரு நாட்டில் உள்ள சட்டமன்ற தொகுதிகளுடைய பகுதிகளின் எல்லையை அல்லது வரம்புகளை நிர்ணயிக்கும் செயல்பாடே தொகுதி வரையறுத்தல் எனப்படும்.
- தொகுதிகள் மறுவரையறையை மறுவரையறை குழு (Delimitation Commission) அல்லது எல்லைகள் குழு (Boundary Commission) மேற்கொள்கிறது.
- பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தொகுதிகள் மறுவரையறை குழு அமைக்கப்படுகிறது. இதுவரை இந்தியாவில் (1952, 1963, 1973, 2002) 4 முறை இந்த குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- அரசியலமைப்புச் சட்டத்தின் விதி 82-ன் கீழ் தொகுதிகள் மறுவரையறைக் குழு தோற்றுவிக்கப் படுகிறது.
- விதி 82-ன் கூறுகளின் படி ஒவ்வொரு மக்கள் தொகை கணக்கெடுப்பின் பிறகும் பாராளுமன்றத்தால் தொகுதிகள் மறுவரையறைச்சட்டம் பாராளுமன்றத்தால் இயற்றப்படும். இந்த சட்டம் செயல்முறைக்கு வந்த பின்னர் மத்திய அரசு மறுவரையறை குழுவை அமைக்கும்.
- இந்த குழுவினுடைய உத்தரவு நகல்கள் மக்களவையிலும், சம்பந்தப்பட்ட சட்டமன்றங்களிலும் சமர்ப்பிக்கப்படும். ஆனால் அம்மன்றங்களுக்கு எந்த திருத்தத்தையும் மேற்கொள்ள அனுமதி கிடையாது.
- இந்திய மறுவரையறை குழு இந்தியாவில் உயர் அதிகாரம் பெற்ற அமைப்பாகும். இவற்றின் உத்தரவுகள் சட்டத்தின் செயலாக்கத்தை உடையது (Force of law). இதன் உத்தரவுகள் பற்றி எந்த நீதிமன்றத்தாலும் கேள்வி எழுப்ப இயலாது.

## சதுப்பு நில பாதுகாப்பு கமிட்டி

- தமிழ்நாடு முழுவதும் சதுப்பு நிலங்களைப் பாதுகாக்கும் அரசின் முயற்சியினுடைய தொடர்ச்சியாக மாவட்ட அளவிலான சதுப்புநில மேலாண்மை குழுவை அமைக்க அரசு அறிவிப்பை வெளியிட்டுள்ளது.
- 11 உறுப்பினர்கள் உடைய இக்குழுவின் தலைவராக மாவட்ட ஆட்சியரும், செயலாளராக மாவட்ட வன அதிகாரியும் இருப்பர்.
- மாநிலம் முழுவதும் உள்ள சதுப்பு நிலங்களில் ஒருங்கிணைக்கப்பட்ட சதுப்புநில மேலாண்மையை கொண்டு வரும் பொருட்டு செயல்படும் உச்ச அமைப்பான தமிழ்நாடு மாநில சதுப்பு நில ஆணையம் இந்த மாவட்ட கமிட்டிகளை வழிநடத்தி, அவற்றின் பணிகளை மேற்பார்வையிடும்.
- ஒவ்வொரு மாவட்டங்களிலும் உள்ள சதுப்புநிலங்களை பாதுகாப்பதும், மேலாண்மை செய்வதுமே இதன் முக்கிய பொறுப்பாகும்.

## வ.உ.சி துறைமுகத்தில் ஒருங்கிணைந்த மேலாண்மை அமைப்பு (IMS)

- ஒருங்கிணைந்த மேலாண்மை அமைப்பை (IMS-Integrated Management System) செயல்படுத்திய இந்தியாவின் முதல் முக்கிய துறைமுகமாக தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகம் உருவெடுத்துள்ளது.

  இது,

  - ✓ தர மேலாண்மை அமைப்பு (QMS) .
  - ✓ சுற்றுச்சூழல் மேலாண்மை அமைப்பு (EMS).
  - ✓ தொழில் சுகாதார மற்றும் பாதுகாப்பு மதிப்பீடு (OHSAS).

ஆகிய மூன்றையும் ISO தரச் சான்றிதல்களுக்கு இணங்க ஒரே அமைப்பின் கீழ் கொண்டு வந்துள்ளது.

- க்யூஎம்எஸ் (QMS), ஈஎம்எஸ் (EMS) மற்றும் ஓஎச்எஸ்ஏஎஸ் – யின் (OHSAS) ஒருங்கிணைப்பானது மூன்று தனித்தனியான தணிக்கை முறையை ஒழித்து அதனை ஒருமுகப்படுத்தி வேலைப் பளுவை குறைப்பதோடு மட்டுமல்லாமல் ஆவணப்படுத்தும் நடைமுறையையும் எளிமைப்படுத்துகிறது.
- இந்தச் சான்றிதல்களும் அங்கீகாரங்களும் ஒவ்வொரு வருடமும் புதுப்பிக்கப்படும்.
  - ✓ QMS- Quality Management System
  - ✓ EMS- Environment Management System
  - ✓ OHSAS- Occupational Health and Safety Assessment Series

## உமறுப் புலவரின் பிறந்த நாள் ஆண்டுவிழா


- உமறுப்புலவரின் பிறந்த நாள் ஆண்டு விழா முதன் முறையாக அரசு விழாவாக தூத்துக்குடியில் உள்ள எட்டயபுரத்தில் கொண்டாடப்பட்டது.
- தமிழ் கவிஞர் உமறுப்புலவர் தன் மாபெரும் இலக்கியப் படைப்பான சீறாப்புராணத்திற்காக அறியப்படுகிறார். சீறாப்புராணம் 5027 அடிகளைக் கொண்ட இலக்கியப் படைப்பு ஆகும். சீறாப்புராணம் நபிகள் நாயகத்தின் வரலாற்றை எடுத்துரைக்கிறது.

## ஹார்வர்டு பல்கலைக்கழக தமிழ் இருக்கைக்கு தமிழக அரசு நிதி

- அமெரிக்க வாழ் தமிழ் ஆர்வலர்கள் இருவரின் முயற்சியால், பெருமை மிகு ஹாவர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமையவுள்ளது. அதற்காக தமிழக அரசு 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து அறிக்கை வெளியிட்டுள்ளது.
- இப்பல்கலைக்கழகத்தில் தமிழுக்கென ஓர் இருக்கை அமைவது இந்தியாவின் வரலாறு, மொழிகள் மற்றும் இலக்கியம், தமிழ் இலக்கியம் மற்றும் தமிழ் கலாச்சரம் தொடர்பான ஆய்விற்கு பெரிதும் உதவுவதாகும்.
- இருதய சிகிச்சை வல்லுனர் திரு.விஜய் ஜானகிராமன் மற்றும் புற்றுநோய் சிகிச்சை நிபுணர் திரு. S.T. சம்பந்தம் ஆகிய இருவரும் இதற்கான கருத்துருவை உருவாக்கி, நிதியும் திரட்டிவந்தனர்.

## ரோந்து கப்பலை கடலோர காவல்படையிடம் ஒப்படைத்தது எல் & டி நிறுவனம்

- 'விக்ரம்' என்று பெயரிடப்பட்ட ரோந்துக் கப்பலை எல் & டி நிறுவனம் கடலோர காவல் படையிடம் ஒப்படைத்தது.




- இது தனியார் கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்ட நாட்டின் முதல் பாதுகாப்புக் கப்பலாகும்.
- சென்னை எண்ணூருக்கு அருகில் இருக்கும் காட்டுப்பள்ளி கிராமத்தில் உள்ள எல் & டி யின் காட்டுப்பள்ளி கப்பல் கட்டும் தளத்தில் முழுக்க உள்நாட்டுத் தொழில்நுட்பத்தில் வெளி நிறுவனத்தின் உதவியில்லாமல் கட்டப்பட்ட ஏழு ரோந்து கப்பல்களின் ( Offshore Patrol Vessels - OPVs) வரிசையில் 'விக்ரம்' முதலாவது தயாரிப்பாகும்.
- இந்தக் கப்பல் முழு வடிவமைப்பு மற்றும் கட்டுமான முறைகள் ஆகியவற்றுக்காக அமெரிக்க கப்பல் கழகம் (American Bureau of Shipping) மற்றும் இந்தியக் கப்பல் பதிவாளர் (Indian Registrar of Shipping) ஆகியோரிடமிருந்து தர அங்கீகார சான்றிதழ்களைப் பெற்றுள்ளது.

- இந்தக் கப்பல் வெப்பமண்டல நிலைகளில் செயல்படும் திறன் கொண்ட அனைத்து வசதிகளுடைய தொலைநிலை அறிகருவி, கடல்பயண வழிகாட்டி மற்றும் தகவல் தொடர்பு அமைப்பு ஆகிய வசதிகளை கொண்டிருக்கிறது.

## காணொளி (வீடியோ) திருட்டு தடுப்புப் பிரிவு பெயர் மாற்றம்

- காணொளி திருட்டு தடுப்பு பிரிவை (Video Piracy Cell) அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவு (Intellectual Property Right Enforcement Cell - IPREC) என தமிழக அரசாங்கம் மாற்றி அமைத்துள்ளது.
- பதிப்புரிமை, வர்த்தக முத்திரைகள், வடிவமைப்புகள், காப்புரிமைகள் மற்றும் பொருட்களின் புவியியல் குறியீடுகள் ஆகியவற்றின் உரிமை மீறல் போன்ற குற்றங்களை விசாரணை செய்ய மாநிலத்தின் வெவ்வேறு மாவாட்டங்களில் உள்ள IPERC பிரிவுகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
- இந்த சிறப்புப் பிரிவானது கீழ்க்காணும் சட்டங்களின் விதிமீறல்களில் இருந்து எழும் வழக்குகளையும் விசாரிக்கும்.
  - ✓ கேபிள் தொலைக்காட்சி தொடரமைவு (ஒழுங்குமுறை) சட்டம்
  - ✓ ஒளிப்பதிவு சட்டம்.
  - ✓ தாவர வகைகளின் பாதுகாப்பு மற்றும் விவசாயிகள் உரிமைச் சட்டம்.
  - ✓ குறைகடத்தி ஒருங்கிணைந்த மின்சுற்றுவழி வடிவ அமைவுச் சட்டம்.

    (Semiconductor Integrated Circuits Layout design Act)
  - ✓ உயிரியல் பல்வகைமைச் சட்டம்.

## 3 திருநங்கைகளுக்கு காவலர் பதவி - தமிழ்நாடு அரசு

- இந்த ஆண்டின் ஆரம்பத்தில் தமிழ்நாடு அரசு மூன்றாவது பாலினத்தவரை காவல் துறையில் சேர்க்கும் முடிவை உறுதிசெய்த பின்பு கூடலூரிலிருந்து தாட்சாயினி, கிருஷ்ணகிரியிலிருந்து பிரபா மோகன் மற்றும் ராமநாதபுரத்திலிருந்து ஜெகதீஸ்வரன் என்ற நஸ்ரியா ஆகிய மூவரும் காவல்துறையில் சேர தேர்ச்சி பெற்றுள்ளனர்.
- மூன்றாவது பாலினத்தவருக்கு தேவையான வசதிகளை காவல்துறை பயிற்சி கல்லூரி ஏற்பாடு செய்துவருகிறது. இவர்களுக்கு பெண் பயிற்சியாளர்களுக்கு கொடுக்கப்படும் பயிற்சி அளிக்கப்படும்.
- தமிழ்நாடு காவல்துறையானது ஆண்களுக்கு என்று 10,500 பணி இடங்களுக்கான வேலை வாய்ப்பை அறிவித்துள்ளது.
- திருநங்கையரும் இந்த காலியிடங்களுக்கான பணிவாய்ப்பிற்கு விண்ணப்பிக்கலாம். எனினும், அவர்கள் ஆண்களுக்கான உடல் சார்ந்த தகுதி கூறுகளில் தேர்ச்சி பெற வேண்டும்.
- முன்பு காவல்துறையில் திருநங்கைகள் பெண் காவலர்களாக பணியமர்த்தப்பட்டு, பின்பு அவர்கள் தங்களின் பாலினத் தன்மையை வெளிக்காட்டியபின்பு பலர் பதவியிலிருந்து விலக்கப்பட்டனர்.

## விலங்குகள் மருத்துவ ஊர்தி (Ambulance) தமிழகத்தில் அறிமுகம்

- காயமடைந்த யானைகள் உள்ளிட்ட வனவிலங்குகளைக் காப்பாற்றி அதற்குத் தேவையான சிகிச்சை அளிப்பதற்கும், யானைகளை பாதுகாப்பாக ஏற்றிச் செல்வதற்கும் மருத்துவ வசதி கொண்ட பிரத்யேக ஹைட்ராலிக் ஆம்புலன்ஸ் தமிழகத்தில் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் ஏராளமான யானைகள் உள்ளன. வறட்சியால் வனப்பகுதியில் இருந்து வெளியேறி கிராமத்துக்குள் புகுந்து விவசாயிப் பயிர்களை சேதப்படுத்தும் யானைகள் அண்மைக்காலமாக அப்பகுதியிலேயே முகாமிட்டு கிராம மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்துகின்றன.
- மேலும், யானைகளை விரட்டும்போது மனித – விலங்குகள் மோதல் ஏற்பட்டு உயிரிழப்புகள் நிகழ்கின்றன. சில சூழ்நிலைகளில் கும்கி யானைகளை வரவழைத்து கிராமத்துக்குள் முகாமிட்டுள்ள யானைகளை வனத்துறையினர் விரட்டுகின்றனர். அது தவிர, சேற்றில் சிக்கித்தவிக்கும் விலங்குகள், நோயால் பாதிக்கப்பட்ட யானைகள், சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் தீவனம், தண்ணீர் தேடி இடம்பெயரும் யானைகள் ஆகியவற்றை மீட்க, சிகிச்சை அளிக்க உரிய வாகன வசதியில்லாததால் விலங்குகள் உயிரிழக்கின்றன.
- இது போன்ற வனஉயிரினங்களின் உயிரிழப்பைத் தடுக்க, சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் வனவிலங்குகள் மீட்புக்கான ஹைட்ராலிக் ஆம்புலன்ஸ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- யானைகளுக்கான ஆம்புலன்ஸ் வாகனம் என்பது இந்தியாவிலேயே இதுதான் முதல் முறை. இந்த ஆம்புலன்ஸை அடர்ந்த வனத்தில் நிறுத்தி வைத்து வனத்துறையினர் அதிலிருந்தபடியே விலங்குகள் நடமாட்டத்தைக் கண்காணிக்கலாம்.

# தேசியச் செய்திகள்

## சீரடியில் புதிய விமான நிலையம்

- மகாராஷ்டிராவின் அகமத் நகர் மாவட்டத்தில் உள்ள சீரடியில் புதிதாக கட்டப்பட்ட சர்வதேச விமான நிலையத்தை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் திறந்து வைத்தார்.
- சீரடி சாய் பாபாவின் நூற்றாண்டு நினைவு கொண்டாட்டத்தின் துவக்க தினத்தன்று (அக்டோபர் 1, 2017) இந்த விமான நிலையம் செயல்படத் துவங்கியுள்ளது.
- சீரடி சாய் பாபா 1918 ஆம் ஆண்டு மகாசமாதி அடைந்தார். அவரின் நினைவு தின நூற்றாண்டு அக்டோபர் 1, 2017 முதல் அக்டோபர் 18, 2018 வரை கொண்டாடப்படவுள்ளது.

## தூய்மை இந்தியா விருதுகள்

- நகர்ப்புற பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டத்தின் குறிக்கோளினை அடைவதற்காக பங்காற்றியவர்களுக்கு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரத்துறை அமைச்சகத்தால் தூய்மை இந்தியா விருதுகள் ) Swacchhata Bharath Awards (தூய்மை இந்தியா திட்டத்தின் மூன்றாவது ஆண்டின் தொடக்க நாளான அக்டோபர் 2 அன்று வழங்கப்பட்டுள்ளன.
- ஏழு பிரிவுகளின் கீழ் 20 விருதுகள் தனிநபர்கள் மற்றும் கூட்டமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- விருதினைப் பெற்றவர்கள்
    1. 'My Delhi Keep It Clean' எனும் டெல்லியை சேர்ந்த முகநூல் குழுவிற்கு பொது இடங்களில் தூய்மையை பேணுவதற்கான முயற்சிகளை ஊக்குவித்ததற்காக இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.
    2. நகராட்சி திடக் கழிவுகளில் இருந்து உரங்களை தயாரித்து சந்தைப்படுத்தியதற்காக KRIBHCO எனும் உர கூட்டுறவுச் சங்கத்திற்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

3. மத அமைப்பு வகைகளின் கீழ் ,சிக்கிமில் உள்ள பேமாயங்ஸ்டே மடாலாயத்திற்கு கழிவுகளற்ற நிறுவனமாக (Zero-waste institution) இருப்பதன் பொருட்டு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.
4. சுய உதவி குழுக்களுக்கான பிரிவில் , பெண்கள் மேம்பாடு மற்றும் வாழ்வாதார பெருக்கத்திற்கு குப்பைகளை வளமாக மாற்றி வரும் சுவச் அம்பிகாபூர் சஹாகாரி சமிதி எனும் சுய உதவி குழுவிற்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.
5. பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் பிரிவில் அம்பிகரில் உள்ள கஸ்தூரிபா காந்தி பாலிகா அவாசியா வித்யாலயா பள்ளிக்கு வழங்கப்பட்டுள்ளது.

## இதர பிற்படுத்தப்பட்ட வகுப்புகளை வகைப்படுத்தும் குழு - டெல்லி உயர்நீதி மன்றத்தின் முதல் தலைமை பெண் நீதிபதி தலைமை

- இந்தியாவின் குடியரசுத் தலைவர் அக்டோபர் 2-ம் தேதியன்று, அரசியலமைப்பு விதி 340-ல் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களை செயல்படுத்தும் பொருட்டு இதர பிற்படுத்தப்பட்ட வகுப்புகளை (Other Backward Classes) ஆய்வு செய்ய ஒரு ஆணையத்தை அமைத்தார்.
- இந்த ஆணையத்தை அமைக்கும் முடிவு, ஆகஸ்ட் 23-ம் தேதி அமைச்சரவை குழுவினால் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பு (OBC) என்ற பரந்த பிரிவுக்குள் சேர்க்கப்பட்ட சாதிகள் மற்றும் சமூகங்களிடையே ஒழுங்கற்ற முறையில் பகிர்ந்தளிக்கப்பட்ட இட ஒதுக்கீட்டின் பலன்களை ஆய்வு செய்வது என்ற முடிவினைத் தொடர்ந்தாகும்.
- தற்சமயம் உட்பிரிவிற்குள் வகைப்படுத்துதல் என்பது கிடையாது. 27 சதவீத இட ஒதுக்கீடு என்பது பிரிக்கப்படாத ஒரே பொருளாகும்.
- உட்பிரிவை வகைப்படுத்துதல் மூலம் இதர பின்தங்கிய வகுப்பினரில் உள்ள மிகவும் பின்தங்கிய வகுப்பினர் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு வேலை வாய்ப்புகளுக்காக இட ஒதுக்கீட்டின் பலன்களை அடைவது உறுதி செய்யப்படும்.
- இந்தக் குழுவில் உள்ளடங்கியோர்:

| | |
|---|---|
| தலைவர் | ஓய்வு பெற்ற நீதிபதி G. ரோகிணி |
| உறுப்பினர் | டாக்டர் J.K. பஜாஜ் |
| உறுப்பினர் (பதவி வழி) | இந்திய மானுடவியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் |
| உறுப்பினர் (பதவி வழி) | இந்திய மக்கள்தொகை கணக்கெடுப்பு ஆணையர் மற்றும் பொது தாளாளர் |
| ஆணையத்தின் செயலாளர் | கூடுதல் செயலாளர், சமூக நீதி மற்றும் மேம்பாட்டுத்துறை - சமூகநீதி மற்றும் மேம்பாட்டுத்துறை அமைச்சகம் |

- ஆணையத்திற்கு தலைவரை நியமித்ததிலிருந்து 12 வார கால அளவிற்குள் இந்த ஆணையம் இந்திய குடியரசுத் தலைவருக்கு தனது அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

## காண்ட்லா துறைமுக அறக்கட்டளை பெயர்மாற்றம்

- காண்ட்லா துறைமுக அறக்கட்டளையினை தீன்தயாள் துறைமுக அறக்கட்டளை என பெயர் மாற்றி கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சகம் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.
- குஜராத்தின் கட்ச் வளைகுடாவில் அமைந்துள்ள காண்ட்லா துறைமுகம் இந்தியாவின் 12 முக்கிய துறைமுகங்களில் ஒன்றாகும்.

- பண்டித் தீன்தயாள் உபாத்யாயா அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்திற்கான ஆண்டு விழாவின் முடிவில் ஏற்படுத்தப்பட்டிருந்த நிகழ்ச்சியின் போது மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சகத்தால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.
- இந்திய துறைமுக சட்டம் 1908 ன் படி மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சகத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி இப்பெயர் மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

***காண்ட்லா துறைமுகம்***

- 1931 ல் மஹாராவ் கேன்கார்ஜி என்பவரால் கட்டப்பட்ட படகுத்துறை கட்டுமானத்திலிருந்து இத்துறைமுக தொடக்கம் தொடங்குகிறது.
- இந்திய பாகிஸ்தான் பிரிவினையின் போது கராச்சித் துறைமுகம் பாகிஸ்தானுக்கு உரித்தான பிறகு 1950 களில் மேற்கு இந்தியாவின் முக்கிய துறைமுகமாக காண்ட்லா துறைமுகம் கட்டப்பட்டது.
- அதிக அளவு சரக்குகளை கையாளுவதில் இதுதான் இந்தியாவின் மிகப்பெரிய துறைமுகமாகும்.

## செக்யூர் திட்டம் (SECURE Project)

- ஆறு வருட கால அளவிலான செக்யூர் இமாலயா என்ற திட்டத்தை மத்திய அரசு ஆரம்பித்துள்ளது.
- இது உள்ளூர் அளவிலும் உலக அளவிலும் முக்கியத்துவம் வாய்ந்த பல்லுயிர்த்தன்மை, நில மற்றும் வன வளங்களை பாதுகாப்பதை உறுதி செய்ய ஆரம்பிக்கப்பட்டதாகும்.
- இமயமலையின் உயர் பல்லுயிர்ச் சூழல் பரவியுள்ள மாநிலங்களான இமாச்சல பிரதேசம், ஜம்மு காஷ்மீர், உத்தரகாண்ட் மற்றும் சிக்கிம் ஆகிய மாநிலங்களில் இது மத்தியச் சுற்றுச்சூழல் அமைச்சகத்தால் ஐ.நா. மேம்பாட்டுத் திட்டத்தின் உதவியுடன் உலக வனவிலங்கு திட்ட மாநாட்டிற்கான துவக்க விழாவின் போது தொடங்கப்பட்டது.
- இதனுடைய மற்றொரு நோக்கம் பனிச்சிறுத்தை மற்றும் மற்ற அருகிவரும் உயிரினங்களையும் அதன் வாழ்விடங்களை பாதுகாப்பதாகும்.
- சங்தங் (ஜம்மு-காஷ்மீர்), லாஹௌல் – பங்கி மற்றும் கின்னௌர் (ஹிமாச்சல பிரதேசம்) கஞ்சென்ஜங்கா – உயர்மட்ட டீஸ்டா பள்ளத்தாக்கு (சிக்கிம்), கங்கோத்ரி – கோவிந்த் மற்றும் தர்மா – பயன்ஸ் பள்ளத்தாக்கு போன்ற பகுதிகளை உள்ளடக்கிய குறிப்பிட்ட நிலப்பரப்புகளில் நீடித்த பயன்பாடு, வாழ்வாதார பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, இமயமலையின் உயர்பகுதிகளில் சூழியலமைப்பின் மறுசீரமைப்பு போன்றவற்றை இத்திட்டம் மையமாகக் கொண்டது.
- இந்நிலப் பகுதிகளில் உள்ள மிகவும் அழிவின் அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள மருத்துவ மற்றும் நறுமண தாவரங்களின் சட்டவிரோத வர்த்தகத்தை ஒழிப்பதும் இதன் நோக்கமாகும்.
- மேலும் இந்நிகழ்ச்சியின் போது சுற்றுப்புற அமைச்சகமானது இந்திய வனவிலங்குகள் பற்றிய அலைபேசி செயலியையும், 250 திட்டங்கள் மற்றும் 103 வனவிலங்குகள் பாதுகாப்பு செயல்பாடுகள் மூலம் நீடித்த மேம்பாடு மற்றும் வனவிலங்குகளின் மரபியர் பல்வகைத் தன்மையை பாதுகாத்தலை மையமாக கொண்ட 15 வருட கால அளவுடைய “தேசிய வனவிலங்குகள் செயல்திட்டம் 2017-2031” – ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

## பர்யதான் பார்வ்

- சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கான மத்திய அரசின் சிறப்பு முயற்சிகளின் ஒரு பகுதியாக "அனைவருக்குமான சுற்றுலா" (Tourism For All) எனும் கொள்கையை வலுப்படுத்தவும், சுற்றுலாவினால் உண்டாகும் பயன்கள் மீது கவனத்தை கொண்டு வரவும், நாட்டின் கலாச்சார பன்முகத்தன்மையை காட்சிப்படுத்தவும் "பர்யதான் பார்வ்" எனும் 21 நாள் (5th அக்டோபர் - 25 th அக்டோபர்) திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்திய அருங்காட்சியகங்கள், பிற மத்திய அமைச்சகங்கள், மாநில சுற்றுலாத் துறை அமைச்சகங்கள், விடுதிகள் மேலாண்மை நிறுவனம், பயணம் மற்றும் சுற்றுலா நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் மத்திய சுற்றுலா அமைச்சகம் இத்திட்டத்தை தொடங்கியுள்ளது.
- பர்யதான் பார்வ் திட்டத்தின் மூன்று முக்கிய கூறுகள்.
    - ✓ நம் நாட்டை காணுங்கள்.
    - ✓ அனைவருக்குமான சுற்றுலா
    - ✓ சுற்றுலா மற்றும் ஆளுகை
- ஏற்கனவே மத்திய சுற்றுலா அமைச்சகத்தால் தொடங்கப்பட்டுள்ள "புராதனங்களை தத்தெடுத்தல்" (Adopt a Heritage) திட்டம் இப்பர்யதான் பார்வ் திட்டத்தின் 21 நாட்களில் முக்கிய புராதன இடங்களில் நடைமுறைப் படுத்தப்பட உள்ளது.
- மாணவர்கள், பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் போன்றவற்றை இந்திய புராதன இடங்களைப் பராமரிப்பதில் இன்னும் துடிப்போடு ஈடுபடுவதை ஊக்குவிக்க "Adopt a Heritage" திட்டம் துவங்கப்பட்டுள்ளது.

## சிறந்த துறைக்கான விருது

- தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் அமைச்சகங்களுக்கு இடையே ஏற்படுத்தப்பட்ட தூய்மைத் திட்டமான "சுவச்சதா பாக்வதா" (Swachchata Pakhwada) தொடக்கத்திற்கு சிறந்த பங்களிப்பை வழங்கியதற்காக மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்திற்கு "சிறந்த துறைக்கான விருது" வழங்கப்பட்டுள்ளது.
- சுவச்சதா பாக்வதா திட்டமானது அனைத்து அமைச்சரக வளாகங்கள், மத்திய மற்றும் யூனியன் பிரதேசங்களிலுள்ள மத்திய அரசு மருத்துவமனைகள், பொது ஆரோக்கிய மையங்கள் அனைத்திலும் கடைபிடிக்கப்படுகிறது.

### *சுவச்சதா பாக்வதா*

- அரசு அலுவலக வளாகங்களில் தூய்மையைப் பேணி பராமரிப்பதற்காக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த மத்திய அரசால் கொண்டு வரப்பட்ட திட்டமாகும்.

## பிரதான் மந்திரி கிராமீன் டிஜிட்டல் சக்சரதா அபியான்

- Pradhanmantri Grameen Digital Saksharata Abhiyan (PMGDISHA)
- 2019-க்குள் டிஜிட்டல் கல்வியறிவு பெற்ற 6 கோடி கிராம மக்களை உருவாக்குவதை நோக்கமாக கொண்டது இத்திட்டம்.
- இது அரசினுடைய டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் ஓர் உள்ளார்ந்த பகுதியாகும்.
- இது உலகின் மிகப்பெரிய டிஜிட்டல் கல்வியறிவுக்கான திட்டங்களில் ஒன்றாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- இத்திட்டம் குடிமக்கள் தங்களிடையே டிஜிட்டல் நிதி பரிவர்த்தனைகளை மேற்கொள்ள வைத்தலையும் நோக்கமாக கொண்டது.
- தகவல்களை அணுகிட வைப்பதன் மூலமும், கணினி மற்றும் டிஜிட்டல் சாதனங்களை இயக்கிட தேவையான திறன்கள் மற்றும் டிஜிட்டல் அறிவை அளிப்பதன் மூலமும் குடிமக்களை மேம்படுத்த இத்திட்டம் உதவும்.
- டிஜிட்டல் கல்வி சார்பாக பல்வேறு பொது சேவை நிறுவனங்கள் மற்றும் கிராம அளவிலான தொழில்முனைவோர்கள் பங்குபெறும் இத்திட்டத்தின் கீழ் உள்ள டிஜிட்டல் சக்ஷரதா அபிநந்தன் சமோரா நிகழ்ச்சி அடுத்த மாதம் காந்திநகரில் நடைபெற உள்ளது.

## முதல் ஆசியான் – இந்தியா இசைத் திருவிழா

- மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகமானது மத்திய கலாச்சாரத்துறை அமைச்சகம் மற்றும் சேஹர் எனும் கலாச்சார அமைப்பின் ஒத்துழைப்போடு முதல்முறை ஆசியான் – இந்தியா இசைத்திருவிழாவை டெல்லியிலுள்ள புராணா – கிலா வில் நடத்துகிறது.
- ஆசியான் மற்றும் இந்தியாவிற்கு இடையேயான உறவின் 25வது ஆண்டு நிறைவை கொண்டாடும் விதமாக இந்த இசைத் திருவிழா ஏற்படுத்தப்பட்டு உள்ளது.
- இந்த இசைத் திருவிழாவானது இந்தியா மற்றும் ஆசியான் உறுப்பு நாடுகளின் மக்களிடையே கலாச்சார தாக்கங்களை ஊக்குவித்தலை நோக்கமாக கொண்டது.
- இந்த 25வது ஆண்டு கொண்டாட்டத்தின் கருத்துரு – "பகிரப்பட்ட நெறிகள் மற்றும் பொதுவான இலக்கு".

*ASEAN – Association for South – East Asian Nation.*

- ஆசியன் – தென் கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பு
- ஆசியான் என்பது தென் கிழக்கு ஆசியாவிலுள்ள 10 நாடுகளின் கூட்டமைப்பாகும்.
- புருனே, கம்போடியா, மியான்மர், மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், இந்தோனேசியா, தாய்லாந்து, வியட்நாம், லாவோஸ்.

## ராஷ்டிரிய சன்ஸ்கிரிதி மஹோத்சவ் 2017

- ராஷ்டிரிய சன்ஸ்கிரிதி மஹோத்சவ் நிகழ்ச்சியானது நாட்டின் செறிந்த கலாச்சார பாரம்பரியங்களை காட்சிப்படுத்த மத்திய கலாச்சார அமைச்சகத்தால் ஏற்படுத்தப்படுகின்றது.
- 2017-க்கான இந்நிகழ்ச்சி இந்தியாவின் முதல் உலக பாரம்பரிய நகரமான அகமதாபாத்தில் நடக்க உள்ளது.
- இந்த வருடம் மத்திய கலாச்சாரத் துறை அமைச்சகமானது மத்திய சுற்றுலா அமைச்சகத்தின் கூட்டிணைவுடன் ஏக் பாரத் ஷ்ரேஸ்தா பாரத் திட்டத்தின் கீழ் (ஒரே இந்தியா சிறந்த இந்தியா) இந்நிகழ்ச்சியை நடத்துகிறது.

***ஏக் பாரத் ஷ்ரேஸ்தா பாரத்***

- வெவ்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் வாழும் பல்வேறு கலாச்சாரமுடைய மக்களிடையே கலந்துரையாடலை மேம்படுத்த மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தால் இத்திட்டம் கொண்டு வரப்பட்டது.

- இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வருடமும், மக்களிடையே பரஸ்பர கலந்துரையாடலை ஏற்படுத்துவதற்காக மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் பிற மாநிலம் அல்லது யூனியன் பிரதேசத்துடன் இணைக்கப்படும்.

## “மிஷன் ரைஸ்”

- கேரளாவில் "குடும்பஸ்ரீ" திட்டத்தின் கீழ் “மிஷன் ரைஸ்” எனும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- கேரளாவிலுள்ள வயநாட்டில் அழியும் நிலையிலுள்ள ஏழு உள்நாட்டு அரிசி விதைகளை பாதுகாத்து, உற்பத்தி செய்து பெருக்குவதே இத்திட்டத்தின் நோக்கம் ஆகும்.
- கூட்டு பொறுப்பு குழுக்கள் (Joint Liability Groups) மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.
- கந்தகசாலா, ஜீரகசாலா, பல்தோண்டி, செநெல்லு, ரக்தஷாலி, வெளியன், அடுக்கன் ஆகியவை அந்த ஏழு வகைகளாகும்.
- உயிரிகலவை உருண்டை (BioSlurry Pellet Method ) முறை எனும் புத்தாக்க அரிசி உற்பத்தி முறை இதற்காகப் பயன்படுத்தப்படும்.

### *கூட்டு பொறுப்பு குழுக்கள்*

- தனிநபர் அடிப்படையில் அல்லது குழு அமைப்பு முறை மூலம் வங்கிகளிடமிருந்து கடன் பெறுவதற்காக 4 முதல் 10 தனிநபர்கள் ஒன்று சேர்ந்து அமைக்கப்படும் ஓர் முறைசாரா குழுவே கூட்டு பொறுப்புக் குழு எனப்படும்.

## உலக பல்மருத்துவ கண்காட்சி

- பல் மருத்துவத்தில் மேம்பட்டு வரும் உலக தொழில்நுட்பங்கள் மற்றும் உத்திகளைக் காட்சிப்படுத்த மும்பையில் “உலக பல்மருத்துவ கண்காட்சி” எனும் மூன்று நாள் சர்வதேச கண்காட்சி தொடங்கப்பட்டுள்ளது.
- இந்திய பல்மருத்துவச் சங்கம் (Indian Dental Association) இக்கண்காட்சியை நடத்துகிறது.

## தீவிரப்படுத்தபட்ட இந்திர தனுஷ் தடுப்பூசித் திட்டம்

- குஜராத்திலுள்ள வட்நகரில் தீவிரப்படுத்தபட்ட இந்திர தனுஷ் தடுப்பூசித் திட்டத்தை பிரதமர் தொடங்கி வைத்தார்.
- இத்திட்டத்தின் மூலம் வழக்கமான நோய்த்தடுப்பூசி திட்டங்களின் கீழ் உள்ளடங்காமல் போன கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் இரண்டு வயதிற்கு கீழுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் நோய்த்தடுப்புத் திறனூட்டல் (immunisation) மேற்கொள்ளப்படும்.
- இத்திட்டத்தின் மூலம் இந்திர தனுஷ் திட்டத்தின் கீழ் குறைந்த பட்சம் 90 % மக்களுக்கு முழு நோய்த்தடுப்புத் திறனூட்டலை 2020 க்கு முன்னரே மேற்கொள்ள வேண்டும் என்ற கால வரம்புடைய இலக்கை முன்னரே அடைய வைப்பது ( 2018-டிசம்பருக்குள் ) இத்திட்டத்தின் நோக்கம்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட குடிபெயரும் மக்கள் தொகையுடைய நகர்ப்புற குடிசைப் பகுதிகள், நகர்ப்புற பகுதிகள் மற்றும் மாவட்டங்களில் குறைந்த செயல்திறனுடைய பகுதிகளில் தீவிரப்படுத்தபட்ட இந்திர தனுஷ் தடுப்பூசித் திட்டம் மேற்கொள்ளப்படும்.
- தேசிய சுகாதார கணக்கெடுப்புகள், சுகாதார மேலாண்மை தகவல் தரவு அமைப்பு, உலக சுகாதார அமைப்பின் கண்காணிப்பு தரவுகள் போன்ற மூன்று தரவுகளின் அடிப்படையில் இத்திட்டத்திற்கான பகுதிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

- தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தில் (National Urban Health Mission) குறிப்பிடப்பட்டுள்ள நகரங்கள் மற்றும் நகர குடியேற்றப் பகுதிகளிலும் தீவிரப்படுத்தபட்ட இந்திரா தனுஷ் தடுப்பூசித் திட்டம் செயல்படுத்தப்படும்.




- PRAGATI (Proactive Governance and Timely Implementation) எனும் சிறப்பு திட்டத்தின் கீழ் இந்த தீவிரப்படுத்தப்பட்ட இந்திர தனுஷ் திட்டம் மாவட்ட, மாநில, தேசிய அளவில் கண்காணிக்கப்படும்

## MIG-21 பைசன் விமானங்களில் – பெண் போர் விமானிகள்

- அவனி சதுர்வேதி, பாவனா காந்த் மற்றும் மோகனா சிங் என்ற மூன்று பெண் விமானிகள் இந்திய விமானப் படையில் உள்ள ஆயுதக் களஞ்சியத்தின் ஒரு சக்திவாய்ந்த போர் விமானமான மிக்-21 பைசன் என்ற விமானத்தில் பறக்க உள்ளனர்.
- தற்சமயம் மூவரும் ஹாக் மேம்படுத்தப்பட்ட விமானத்தின் பயிற்சியாளர்களாக பணிபுரிகின்றனர்.



## தங்க பத்திர திட்டம் 2017-18 தொடர்வரிசை 3 – அரசு வெளியீடு

- ரிசர்வ் வங்கியின் ஆலோசனையுடன் மத்திய அரசு தங்க பத்திரத் திட்டத்தின் மூன்றாவது தொடர் வரிசையை வெளியிட்டுள்ளது.
- இந்த பத்திரங்கள் வங்கிகள், தேர்ந்தெடுக்கப்பட்ட அஞ்சல் அலுவலகங்கள், தேசிய பங்குச் சந்தை மற்றும் மும்பை பங்கு சந்தை போன்ற அங்கீகரிக்கப்பட்ட பங்குச் சந்தைகள், இந்திய பங்குகள் வைப்பு நிறுவனம் (Stock Holding Corporation of India) ஆகியவை மூலம் விற்கப்படும்.

### *தங்கப் பத்திரங்கள்*

- இப்பத்திரங்கள் நவம்பர் 2015-இல் தங்கப் பத்திரத் திட்டம் என்ற ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டன.
- கையிருப்பு தங்கத்திற்கான தேவையை குறைக்கவும், தங்கத்தை வாங்குவதற்காக வைத்துள்ள வீட்டு சேமிப்பின் ஒரு பகுதியை நிதி முதலீடுகளுக்கு மாற்றவும் இத்திட்டம் நோக்கம் கொண்டுள்ளது. மேலும் இது நாட்டின் வர்த்தகச் சமநிலையின் மீதான அழுத்தத்தை குறைக்கவும் நோக்கம் கொண்டுள்ளது.
- மேலும் தங்கத்தை பலன்தரக்கூடிய முதலீடாக மாற்றவும் நோக்கம் கொண்டுள்ளது.
- ஏனெனில் கச்சா எண்ணெய்யும் தங்கமும் இந்தியாவின் இறக்குமதியில் பெரும் ஆதிக்கம் செலுத்துகின்றன.

## தூய்மை கங்கைக்கான தேசிய இயக்கம்

- நமாமி கங்கா திட்டத்தின் கீழ் தூய்மை கங்கைக்கான தேசிய இயக்கம் (National Mission for Clean Ganga - NMCG) கங்கையை தூய்மைப்படுத்த 8 திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- ✓ மாசுபாடு குறைப்பு நடவடிக்கைகள்,
- ✓ கழிவுநீர் மேலாண்மை
- ✓ உயிரிச் சீராக்கத் தொழில்நுட்பம் மூலம் வடிகால்களை சுத்திகரித்தல்
- ✓ மாசுபாடுகளை கண்டறிதல், மதிப்பிடல் மற்றும் கண்காணிப்புத் திட்டம்

போன்றவற்றோடு தொடர்புடைய எட்டு திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

### *தூய்மை கங்கைக்கான தேசிய இயக்கம் (National Mission for Clean Ganga)*

- இது கங்கை ஆற்றின் புத்துயிர், பாதுகாப்பு மற்றும் மேலாண்மைக்கான தேசிய குழுமத்தின் (National Council for Rejuvenation, Protection and Management of River Ganga) செயல்பாட்டு பிரிவாகும்.
- தேசிய கங்கை ஆணையம் எனவும் அழைக்கப்படும் இந்த குழுமம் 1986 ஆம் ஆண்டின் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் [Environment (Protection) Act (EPA),1986] கீழ் அமைக்கப்பட்டது.
- இந்த அமைப்பு மத்திய நீர்வளம், நதி மேம்பாடு மற்றும் கங்கை புனரமைப்பு அமைச்சகத்தின் கீழ் உள்ளது.
- இந்த தேசிய இயக்கமானது சங்கங்கள் பதிவுச் சட்டம் 1860-ன் கீழ் 2011-ல் ஓர் பதிவு செய்யப்பட்ட சங்கமாக உருவாக்கப்பட்டது.
- இது ஆட்சிக் குழுமம் மற்றும் செயற்குழு என்று இரண்டு அடுக்கு நிர்வாக கட்டமைப்பை உடையது.
- கங்கையையும் அதன் துணை நதிகளையும் தூய்மைப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

## இந்திய தண்ணீர் வாரம்-2017

- இந்திய தண்ணீர் வாரம்-2017 எனும் சர்வதேச நிகழ்ச்சி இந்திய குடியரசுத் தலைவரால் புதுதில்லியில் தொடங்கி வைக்கப்பட்டது.
- இந்நிகழ்ச்சி மத்திய நீர்வளம், நதிகள் மேம்பாடு, மற்றும் கங்கை புனரைமைப்பு அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது .
- 13 நாடுகள் பங்குபெறும் 5வது இந்திய தண்ணீர் வாரத்தின் நிகழ்ச்சிகளில் பலதுறைகள் சார்ந்த மாநாடுகள் நடக்க உள்ளன.
- நீர்வள மேம்பாடு, நீர்வள மேலாண்மை, நீடித்த ஆற்றல் மேம்பாடு, நீர், உணவு மற்றும் ஆற்றல் பாதுகாப்பு போன்ற பல களங்களில் உலக நாடுகளின் திட்ட வகுப்பாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், தொழில்முனைவோர்கள் போன்றோரின் ஆலோசனை மற்றும் கருத்துகளை பெறுவதற்கான தளமாக இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- 2017ஆம் ஆண்டிற்கான இந்திய தண்ணீர் வாரத்தின் கருத்துரு - "உள்ளடக்கிய வளர்ச்சிக்காக தண்ணீர் மற்றும் ஆற்றல்"

## சர்வதேச யோகா மாநாடு

- 3வது சர்வதேச யோகா மாநாட்டை துணை குடியரசுத் தலைவர் புதுதில்லியில் தொடங்கி வைத்தார்.
- இந்த வருட யோகா மாநாட்டின் கருத்துரு- "ஆரோக்கியத்திற்காக யோகா" (Yoga for wellness).
- ஜீன் 21-ஆம் தேதியினை சர்வதேச யோகா தினமாக கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்ட முழு ஆண்டு நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியாக இம்மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சிகளை மத்திய ஆயுஷ் அமைச்சகம் ஒருங்கிணைக்கிறது

## சர்வதேச பெண் குழந்தைகள் தினம்

- சர்வதேச பெண் குழந்தைகள் தின அனுசரிப்பின் போது மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகமும், யுனிசெப் அமைப்பும் இணைந்து நடத்திய "பெண்களை மேம்படுத்துவதில் விளையாட்டுத் துறையின் பங்கு" எனும் தலைப்பின் மீதான குழு விவாத நிகழ்ச்சி டெல்லியில் நடைபெற்றது.
- இந்த குழு விவாதத்தில் யூனிப்செப்பின் நல்லெண்ண தூதரான சச்சின் டெண்டுல்கர் ,இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் கேப்டன் மித்தாலி ராஜ் போன்றோர் பங்கேற்றனர்.
- "புதிய இந்தியாவின் மகள்கள் – பேட்டி பச்சாவோ – பேட்டி படாவோ வாரம்" என்ற தேசிய வாரத்தினுடைய கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக அனுசரிக்கப்பட்ட சர்வதேச பெண் குழந்தைகள் தினத்தன்று இந்த குழு விவாதம் நடைபெற்றது.

#### *சர்வதேச பெண் குழந்தைகள் தினம்*

- 2012 ஆம் ஆண்டு முதல் அக்டோபர் 11 ஆம் தேதி அன்று சர்வதேச பெண் குழந்தைகள் தினம் கொண்டாடப்படுகிறது.
- உலகம் முழுவதும், பெண்கள் எதிர்கொள்ளும் தனித்தன்மையுடைய சவால்களையும், பெண்களின் உரிமைகளையும் அங்கீகரிக்கவும் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- பெண்கள் சந்திக்கும் நெருக்கடிகளின் போது, நெருக்கடிகளுக்கு முன்னும், பின்னும் உள்ள வாய்ப்புகள் மற்றும் சவால்களின் மேல் உலக கவனத்தையும், நடவடிக்கைகளையும் ஊக்குவிக்க யூனிசெப் அமைப்பால் இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.

***பேட்டி பச்சாவோ பேட்டி படாவோ வாரம்*** *(9th to 14th Oct)*

- ❖ அக்டோபர் 9 முதல் 14 வரையிலான நாட்களை பேட்டி பச்சாசோ பேட்டி படாவோ வாரமாக மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் கொண்டாடிவருகிறது.
- ❖ சர்வதேச பெண் குழந்தைகள் தினம் (அக்டோபர் 11) ஐ முன்னிட்டு இந்த வாரம் கொண்டாடப்படுகிறது.
- ❖ இநத் நிகழ்ச்சியின் கருத்துரு - "பேட்டி பச்சாவோ, பேட்டி படாவோ வாரம் – புதிய இந்தியாவின் மகள்கள்"

## 18 வயதுக்கும் குறைவான வயதுடைய மனைவியுடன் தாம்பத்ய உறவு குற்றம் என்று அறிவிப்பு

- ❖ 18 வயதுக்கும் குறைவான வயதுடைய மனைவியுடன் தாம்பத்ய உறவு கொள்வது தண்டனைக்குரிய பாலியல் பலாத்கார குற்றமாகும் என உச்ச நீதி மன்றம் வரலாற்றுத் தீர்ப்பளித்துள்ளது.
- ❖ ஒரு வருடத்திற்குள் அப்பெண் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தால் அவ்வுறவு பலாத்கார குற்றமாக அறிவிக்கப்படும்.
- ❖ இந்திய தண்டனையியல் சட்டம் (IPC) 375வது பிரிவின் விதிவிலக்கு கூறு (2)-ஐ எதிர்த்து சுதந்திர சிந்தனை எனும் தன்னார்வ தொண்டு நிறுவனம் தொடுத்த வழக்கில் இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
- ❖ இந்திய தண்டனையியல் சட்டம் 375 வது பிரிவின் விதிவிலக்கு கூறு 2-ஆனது (பாலியல் பலாத்காரம் தொடர்புடையச் சட்டம்) பெண்ணிற்கு திருமணம் ஆகியுள்ளது எனும் களத்தில் மட்டுமே 15 வயதுக்கு குறைவில்லாத வயதுடைய (15 முதல் 18 வயது) மனைவியுடன் அவரது கணவன் தாம்பத்யம் கொள்வதை அனுமதிக்கிறது. அது பாலியல் பலாத்காரம் ஆகாது என்கிறது.
- ❖ குற்றவியல் திருத்தச்சட்டம் 2013-ன் ஒரு பகுதியாகவும் இந்த விதிவிலக்கு கூறு உள்ளது.
- ❖ ஆனால் இவ்விதிவிலக்கு கூறு பின்வரும் சட்டங்களுக்கு முரண்பாடாக உள்ளது.
    - (i) குற்றவியல் திருத்தச்சட்டம் 2013- இச்சட்டமானது பாலின உறவு வைத்துக்கொள்வதற்கான பெண்களின் சம்மதமளிக்கும் வயதை 16 லிருந்து 18 ஆக உயர்த்தியுள்ளது.
    - (ii) 2012 – POSCO சட்டம், [Protection of Children from Sensual Offences Act - பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம்]- இச்சட்டத்தின் படி 18 வயதுக்கு குறைவான பெண்களுடனான பாலியல் உறவு பாலியல் பலாத்காரமாகும்.
    - (iii) குழந்தைகள் திருமணத் தடைச் சட்டம்- இச்சட்டத்தின் படி பெண்ணின் சட்டப்பூர்வமான திருமண வயது 18 ஆகும்.
    - (iv) சிறார்கள் பாதுகாப்பு சட்டம் 2015 - இவ்விரு சட்டங்கள் (iii,iv) ன் படி 18 வயதிற்குட்பட்ட பெண் சிறுமியாகவே கருதப்படுவர். ஆனால் IPC 375 ன் விலக்கு கூறு (2)-ன் பெண்ணிற்கு திருமணமானால் இனி அவர் சிறுமியாக கருதப்படமாட்டார் என கூறுகிறது.
- ❖ இத்தகு வழிகளில் IPC-ன் 375 பிரிவின் விதிவிலக்கு கூறு (2) பாலின உறவிற்கான சம்மதமளிக்கும் வயதின் மீது (Age of Consent) முரண்பாட்டு நிலைகளை உண்டாக்குவதோடு வற்புறுத்தப்பட்ட பாலுறவிற்கு எதிரான சட்ட பாதுகாப்பையும் தகர்க்கிறது.

- மேலும் இது பெண்களுக்கு அரசியலமைப்புச் சட்டத்தில் வழங்கியுள்ள அடிப்படை உரிமை விதிகளான கூறு 14, 15, 21-க்கு எதிரானது என்றும் பெண் குழந்தைகளுக்கு இருக்கும் உடல்ரீதியிலான இறையாண்மைக்கு எதிரானது எனவும் நீதிமன்றம் கூறியுள்ளது.

## சன்கல்ப் மற்றும் ஸ்ட்ரைவ் திட்டம்

- பிரதம மந்திரி தலைமையிலான பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு திறன் இந்தியா திட்டத்தை ஊக்குவிப்பதற்காக உலக வங்கியின் ஆதரவு உள்ள இரு திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
    - (i) சன்கல்ப் (SANKALP) – Skills Acquisition and Knowledge Awareness for livelihood Promotion)- நாடு முழுவதும் உள்ள இளைஞர்களுக்கு சந்தை சார்ந்த பயிற்சிகளை அளித்தால்.
    - (ii) ஸ்ட்ரைவ் (Strive) – Skill Strengthening for industrial values enhancement- ITI களில் வழங்கப்படும் தொழிற்கல்வியின் சந்தை சார்புடைமையையும், தரத்தினையும் அதிகப்படுத்துதல்.
- இத்திட்டங்கள் மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகத்தால் செயல்படுத்தப்படுகிறது.
- மேலும் இத்திட்டங்கள் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி அனும தொழிற்கல்விக்கானதேசிய அமைப்பை ஏற்படுத்த உதவும் (Vocational Education and Training -VET).
- தொழில் துறைக்கு திறனுடைய தொழிலாளர் படையை அளித்து அதன்மூலம் எளிதில் வணிகம் செய்யும் குறியீட்டில் இந்தியாவின் நிலையை உயர்த்த உதவும் திறன் வளர்க்கும் சூழலை உருவாக்க இத்திட்டம் உதவும்.

## ஜவுளித்துறை அமைச்சகத்தின் கைவினைப் பொருட்கள் மற்றும் பரிசுப்பொருட்கள் கண்காட்சி

- மத்திய ஜவுளித்துறை அமைச்சகம் 44வது இந்திய கைவினைப் பொருட்கள் மற்றும் பரிசுப்பொருட்கள் கண்காட்சியை நொய்டாவிலுள்ள இந்திய ஏற்றுமதி மையத்தில் தொடங்கி வைத்துள்ளது.
- இது ஆசியாவின் மிகப்பெரிய கைவினைப் பொருட்கள் மற்றும் பரிசுப்பொருட்களின் கண்காட்சிகளில் ஒன்றாகும் .
- இக்கண்காட்சி வருடத்திற்கு இருமுறை (இலையுதிர் காலம் மற்றும் இளவேனிற் காலத்தில்) கைவினைப் பொருட்களின் ஏற்றுமதி மேம்பாட்டு வாரியத்தால் (Export Promotion Council for Handicrafts - EPCH) நடத்தப்படுகிறது.

## இந்திய விமானப்படையின் “மெட் வாட்ச்”(Med Watch)

- 85வது இந்திய விமானப்படை தினத்தன்று, இந்திய விமானப்படை “மெட் வாட்ச்” எனும் உடல்நலத்திற்கான முதல் கைபேசி செயலி ஒன்றை வெளியிட்டுள்ளது.
- மெட் வாட்ச் – மூன்று ஆயுதப் படைப்பிரிவினருக்குமான உடல்நலத்திற்கான முதல் கைபேசி செயலி ஆகும்.
- இந்திய விமானப்படை ஊழியர்களுக்கு நம்பத்தகுந்த சுகாதாரத் தகவல்களை வழங்கும் பல அம்சங்களை இந்த செயலி கொண்டுள்ளது.

- இந்த செயலியானது, விமானப்படை வீரர்கள் சரியான நேரத்தில் தங்கள் குழந்தைகளுக்கு நோய் தடுப்புத் திறனூட்டலை மேற்கொள்ள ஓர் நினைவூட்டியாகவும், "இந்திர தனுஷ் திட்டத்தை" செயல்படுத்தவும் உதவும்.

## ஹரித்துவார் மற்றும் வாரணாசியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்

- கலப்பு வருடாந்திர தொகை முறையின் (Hybrid Annuity Model - HAM) கீழ் நாட்டின் முதல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை ஹரித்துவார் மற்றும் வாரணாசியில் அமைக்க தேசிய கங்கை தூய்மைக்கான திட்ட அமைப்பு (National Mission For Clean Ganga) ஒப்புதல் வழங்கியுள்ளது. கலப்பு வருடாந்திர தொகை முறை என்பது பொது மற்றும் தனியார் கூட்டிணைவு (PPP) அமைப்பின் வேறுபட்ட முறையாகும்.
- இது, நமாமி கங்கா திட்டத்திற்கு ஊக்கமளிக்கும் விதமாக, நகரங்களின் சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் கங்கையில் கலக்காமல் இருப்பதை உறுதிசெய்யும்.
- HAM அமைப்பின் கீழ் திட்டத்திற்கான செலவுகளில் 40% பங்கினை மத்திய அரசானது வருடாந்திர கட்டணமாக ஐந்து வருடங்களுக்கு தனியார் நிறுவனத்திற்கு வழங்கும்.
- மீதமுள்ள தொகையானது அத்தனியார் நிறுவனத்தின் செயல்பாடு மற்றும் ஏற்படுத்தப்பட்டுள்ள கழிவுநீர் கட்டமைப்புகளைப் பொறுத்து வழங்கப்படும்.
- இவ்வாறு கழிவுநீர் சுத்திகரிப்பு உட்கட்டமைப்புகளின் செயல்திறன் அடிப்படையில் வருடாந்திர கட்டணத் தொகை வழங்கப்படுவதால் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் தொடர்ந்த செயல்பாடு உறுதி செய்யப்படும்.
- மேலும் நிதியியல் இடர்களை (Financial Risk) அரசும், தனியார் நிறுவனமும் பகிர்ந்து கொள்ளவும் இம்முறை உதவும்.

## உலக பட்டினி குறியீடு

- வாஷிங்டனை தலைமையிடமாக கொண்டு செயல்படும் சர்வதேச உணவு கொள்கை ஆராய்ச்சி நிறுவனம் (International food policy Research Institute – IFPRI) ஆண்டுதோறும் உலக பட்டினி குறியீட்டை வெளியிடுகிறது.
- 2017 ஆம் ஆண்டிற்கான இந்த குறியீட்டில் இந்தியா 119 நாடுகளில் 100 ஆது இடத்தை பிடித்துள்ளது.
- 2016 ஆம் ஆண்டை ஒப்பிடுகையில் 97வது இடத்திலிருந்து 3 இடங்கள் பின்தங்கி 100 வது இடத்தைப் பிடித்துள்ளது.

### *உலக பட்டினி குறியீடு (GHI-Global Hunger Index)*

- GHI -உலக நாடுகளில் நிலவும் பட்டினி நிலைகளை விளக்கப் பயன்படுத்தப்படும் ஓர் பல்பரிமாண புள்ளியியல் முறை ஆகும்.
- உலக நாடுகளின் பட்டினியை அழிக்கும் நடவடிக்கைகளின் முன்னேற்றம் மற்றும் தோல்வியை 4 அளவுருக்களின் அடிப்படையில் 0 முதல் 100 புள்ளிகள் வரையிலான மொத்த மதிப்பெண் அளவீட்டில் இந்தக் குறியீடு கணக்கிடப்படுகின்றது.
- நான்கு அளவுருக்கள் வருமாறு.
    1. ஊட்டச்சத்து குறைபாடு (Undernourishment)
    2. உயரத்திற்குத் தகுந்த எடை இல்லாமை (Child Wasting)
    3. குழந்தைகள் வளர்ச்சியின்மை (Child stunting )
    4. குழந்தைகள் இறப்பு (Child mortality)

- இந்த மதிப்பெண் பட்டியலில்,
    - பூஜ்ஜியம் என்றால் சிறந்த நிலையினையும்
    - நூறு என்றால் மோசமான நிலையினையும் குறிக்கும்.
- இந்த வழிமுறையிலான கணக்கீட்டின்படி இந்தியா 31.4 மதிப்பெண்கள் பெற்று பட்டினி நிலைகளில் "தீவிரமான" (Serious) வகைப்பாட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.
- ஆசிய நாடுகளில் ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் மட்டுமே இந்தியாவை விட பின்தங்கிய இடங்களில் உள்ளன.
- கடைசி மூன்று ஆண்டுகளில் அதாவது 2014ஆம் ஆண்டை ஒப்பிடுகையில் இந்தியா 55வது இடத்திலிருந்து 45 இடங்கள் சரிந்து தற்போது 100வது இடத்தை அடைந்துள்ளது.

## பெண்கள் சபரிமலைக்குள் அனுமதி – அரசியலமைப்பு அமர்வுக்கு மாற்றம்

- பெண்களின் அடிப்படை உரிமையான தங்கள் விருப்பப்பட்ட இடத்தில் வணங்குவது எனும் உரிமையினை பெண்ணினம் எனும் பிரத்யேகமான உடல் கூறியல் காரணத்தை மட்டும் அடிப்படையாக காரணம் காட்டிப் பாரபட்சப்படுத்த அல்லது வேறுபடுத்த முடியுமா என்ற வழக்கினை ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்விற்கு உச்சநீதிமன்றம் பரிந்துரை செய்துள்ளது.
- அரசியல் சாசனம் தீர்க்கப்பட வேண்டிய கேள்விகள் இந்தியாவின் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா , நீதிபதிகள் பானுமதி மற்றும் அசோக் புஷன் ஆகியோர் அடங்கிய மூன்று பேர் அமர்வினால் நிர்ணயம் செய்யப்பட்டன.
    - பொது வழிபாட்டிற்கான கேரள இந்து தளங்கள் ( அனுமதிக்கான அங்கீகாரம்) விதிமுறைகள் (1965) 10 வயது முதல் 65 வயது வரை உள்ள பெண்கள் வழிபாட்டு தளங்களுக்கு செல்வதற்கான தடையை ஒரு மத நிறுவனம் அனுமதிக்குமா எனவும்
    - அவ்வாறு அனுமதித்தால் அது சமத்துவ மற்றும் பாலின நீதி வகையிலான அடிப்படை உரிமைகளை மீறுவதாக கணக்கில் அடங்குமா எனவும்

இந்த அரசியல் சாசன அமர்வு முடிவு செய்யும்

***அரசியல் சாசன அமர்வு***

- இந்திய அரசியலமைப்பு அர்த்தப்படுத்தும் சட்டத்தைப் பற்றிய அடிப்படையான கேள்விகள் கொண்ட வழக்கினை தீர்ப்பளிக்க குறைந்தபட்சம் உச்சநீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் கொண்டு அமைக்கப்பட்ட அமர்விற்கு அரசியல் சாசன அமர்வு என பெயரளிக்கப்பட்டுள்ளது.
- இந்த ஏற்பாடு அரசியலமைப்பு விதி 145(3) என்ற விதியின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டதாகும்.
- இந்தியாவின் தலைமை நீதிபதி அரசியலமைப்பு அமர்வை உருவாக்கவும் , வழக்குகளை அதற்கு பரிந்துரைக்கவும் சக்தி படைத்தவர் ஆவார்.

## அஞ்சல் துறையின் காப்பீட்டுத் திட்டம்

- நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் மலிவு விலையிலான காப்பீட்டு சேவையை வழங்கும் வகையில்,
    - ✓ குறிப்பாக கிராம பகுதி மக்களுக்கென சம்பூரண பீமா கிராம் யோஜனா திட்டத்தையும்

- ✓ அரசு ஊழியர்கள் அல்லாத பிற ஊழியர்களுக்கு அஞ்சல் துறையின் ஆயுள் காப்பீட்டு சேவையை வழங்கும் வகையில் PLI விரிவாக்கத் திட்டத்தையும் (PLI-Life Insurance) மத்திய தகவல் தொடர்பு அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

- ❖ சம்பூரண பீமா கிராம் யோஜனா - இத்திட்டத்தின் கீழ் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் குறைந்தபட்சம் ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு அக்கிராமத்தின் ஒவ்வொரு குடும்பத்திலும் குறைந்தபட்சம் ஒரு நபராவது கிராமப்புற அஞ்சல் ஆயுள் காப்பீட்டில் கொண்டு வரப்படுவர்.
- ❖ அஞ்சல் ஆயுள் காப்பீட்டு விரிவாக்கத் திட்டத்தின் கீழ் அஞ்சல் ஆயுள் காப்பீடானது இந்தியாவின் தேசிய பங்குச்சந்தை (NSE – National Stock Exchange) மற்றும் மும்பை பங்குச் சந்தைகளில் (BSE – Business Stock Exchange) பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் பிற அரசு அல்லாத ஊழியர்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

## ஜப்பான்-இந்தியா கூட்டு கடற்பயிற்சி

- ❖ ஜப்பானின் சசேபோவில் நடைபெற்ற PassEx (Passage Exercise) எனும் கடற்பயிற்சியில் ஜப்பானிய கடல் பாதுகாப்பு படையோடு இணைந்து இந்தியாவின் கப்பற்படை கப்பல்களான INS சாத்பூரா (INS Satpura) மற்றும் INS காத்மாட் (INS Kadmatt) கப்பல்கள் பங்கேற்றன.
- ❖ இந்தோ – பசிபிக் பிராந்தியத்தின் அமைதி மற்றும் நிலைப்பாட்டிற்கு இந்தியாவின் அர்ப்பணிப்பு உடன்பாட்டை விளக்கிடவும், இந்தியாவின் கிழக்கு நோக்கிய செயல்படுதல் கொள்கையின் (Act East Policy) பின்தொடர்தலுக்காகவும் இக்கடற்பயிற்சியில் இந்திய கப்பல்கள் பங்கேற்றன.

## மித்ர சக்தி

- ❖ இந்தியா மற்றும் இலங்கை இராணுவங்களுக்கு இடையேயேயான “மித்ர சக்தி” கூட்டுப்பயிற்சியின் 5ஆம் ஆண்டு கூட்டுப் போர் பயிற்சி புனேவில் உள்ள அவுந்த் இராணுவ நிலையத்தில் தொடங்கியது.
- ❖ அடிப்படை இராணுவ தந்திரங்கள், சிக்கலான போர் உத்திகள், ஆயுதப்பயிற்சி மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை (CTO – Counter Terrorism Operation) போன்றவற்றின் மீதான ராணுவக் கூட்டுப் பயிற்சி இரண்டு வாரங்கள் மேற்கொள்ளப்படும்.
- ❖ தெற்காசியா மற்றும் இந்திய பெருங்கடல் பகுதிகளில் செல்வாக்கை அதிகரித்து வரும் சீனாவின் முயற்சிகளுக்கு பதிலடி அளிக்கும் வகையில் 2012ஆம் ஆண்டிலிருந்து இந்தியா மற்றும் இலங்கையின் இராணுவங்களுக்கு இடையே “மித்ர சக்தி” கூட்டுப்போர் பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது.

## இந்திய தரச் சான்று நிறுவனச் சட்டம் 2016

- ❖ 2016ம் ஆண்டு மார்ச் மாதம் அறிவிக்கப்பட்ட புதிய இந்திய தரச் சான்று நிறுவனச் சட்டம் அக்டோபர் 2017முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.
- ❖ இந்த சட்டம் இந்திய தரச்சான்று நிறுவனத்தை இந்தியாவின் தேசிய தரச்சான்று நிறுவனமாக நிறுவுகிறது.
- ❖ இந்த சட்டம் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான தரத்தை உறுதி செய்து அதற்கு சான்றிதழ் அளிக்க வகைசெய்யும் வண்ணம் BIS உடன் சேர்த்து கூடுதலாக ஏதேனும் அதிகாரியையோ நிறுவனத்தையோ அனுமதிக்க மத்திய அரசிற்கு அதிகாரமளிக்கிறது.

- தேவை ஏற்படுமாயின் கட்டாய சான்றளிப்பு முறைக்கு பின்வரும் பொருட்கள் /சேவைகளை கொண்டு வர மத்திய அரசிற்கு ஆவண செய்யும் விதிமுறைகளை இந்த சட்டம் கொண்டுள்ளது. அவையாவன
    - பொதுநலம் அல்லது மனிதருக்கான பாதுகாப்பு
    - சுற்றுச்சூழல் நவீன மற்றும் பாதுகாப்பு
    - தாவர மற்றும் விலங்குகளின் நலன்
    - முறையற்ற வர்த்தக நடைமுறைகளைத் தடுத்தல்
    - தேசிய பாதுகாப்பு

## INS கில்டன்

- உள்நாட்டு தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட நீர்மூழ்கி எதிர்ப்பு மற்றும் ரேடாரில் புலப்படா திறனுடைய வழித்துணை (corvette) கப்பலான INS கில்டன் இந்திய கப்பற் படையில் இணைக்கப்பட்டுள்ளது.
- Project 28-ன் கீழ் உள்நாட்டு தொழில்நுட்பத்தில் கட்டப்படும் 4 கமோர்டா வகுப்பு வழித்துணை கப்பல்களில் INS கில்டன் மூன்றாவது கப்பலாகும்.
- பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த மினிக்காய் மற்றும் இலட்சத் தீவுகளில் உள்ள அமினித்திவி தீவுக்கூட்டத்தின் ஒரு தீவின் பெயர் இந்தக் கப்பலுக்கு சூட்டப்பட்டுள்ளது.
- கார்பன் ஃபைபர் கலப்பு பொருட்களினால் மேற்கட்டுமானமுடைய இந்தியாவின் முதல் முக்கிய போர்க்கப்பல் இதுவாகும் . இத்தகு தொழில்நுட்பத்தால் இது அதிநவீன ரேடாரில் புலப்படா அம்சத்தையும், குறைந்த மேற்பரப்பு எடையையும், குறைந்த பராமரிப்பு செலவையும் உடையது.
- INS கில்டன் கமோர்டா வகுப்பைச் சேர்ந்த பிற கப்பல்களான INS கமோர்டா, INS காத்மாட் கப்பல்களுக்கும், சிவாலிக் வகுப்பு, மற்றும் கொல்கத்தா வகுப்பு கப்பல்களுக்கும் அடுத்து இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டுள்ள புதிய உள்நாட்டு தொழில்நுட்பமுடைய போர் கப்பலாகும்.
- INS கில்டன் மாதிரி ஒட்டமாக அனைத்து முக்கிய ஆயுதங்கள் மற்றும் உணர்விகளுடன் கடற் சோதனையை மேற்கொண்டுள்ள முதல் முக்கிய போர்க்கப்பலாகும்.

## தூய்மையான காற்று பிரச்சாரம்

- தீபாவளித் திருநாளையொட்டி, காற்று மாசுபாட்டைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த மத்திய அரசு தூய்மையான காற்று பிரச்சாரத்தின் ஒருபகுதியாக மினி மராத்தான் போட்டியை நடத்த உள்ளது.
- முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் பிறந்தநாளோடு ஒத்துப்போகும் விதமாக இந்தியா கேட் பகுதியில் இந்த மினி மராத்தான் தொடங்க உள்ளது.
- காற்று மாசுபாட்டை பற்றி வெகுஜன மக்களிடையே விழிப்புணர்வை உண்டாக்க இப்பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது.
- தூய்மை இந்தியா திட்டத்தை முன்னெடுத்து செல்லும் விதமாகவும், ஹரித் தீபாவளி – சுவஸ்த் தீபாவளி திட்டத்தை விரிவுபடுத்தவும், “Swach Hawa for Swach and Swach Bharat” எனும் பிரச்சாரம் மத்திய சுற்றுச்சூல் அமைச்சகத்தால் தொடங்கப்பட்டுள்ளது.
- “தூய்மையான காற்றினுக்கான ஒட்டம்” என்பது தூய்மையான காற்றின் நேர்மறை ஆற்றலை கூறும் ஓர் கட்டியமாகும்.

## உயர் தரவரிசையிடப்பட்ட விமான நிலையங்கள்

- விமான நிலையங்களின் பன்னாட்டு குழு (ACI – Airport Council International) எனும் அமைப்பால் வெளியிடப்படும் சிறந்த விமான நிலையங்களின் தரவரிசையில் ஆண்டுக்கு 2-5 மில்லியன் பயணிகள் போக்குவரத்து உடைய விமான நிலையங்களின் வகைப்பிரிவில் ஜெய்ப்பூர் மற்றும் ஸ்ரீநகர் விமான நிலையங்கள் உலகின் சிறந்த விமான நிலையங்களில் ஒன்றாக தரவரிசை படுத்தப்பட்டுள்ளன.
- பயணிகள் போக்குவரத்து அளவில் சிறந்த விமான நிலையமாக தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக ஜெய்ப்பூர் விமான நிலையம் தரவரிசை படுத்தப்பட்டுள்ளது.
- விமான நிலைய சேவைக்கான தர விருது (ASQ-Airport Service Quality Award) விமான போக்குவரத்து துறையில் வழங்கப்படும் உயரிய மதிப்புமிக்க விருதாகும்.
- வருடாந்திர ACI – ASQ கணக்கெடுப்பில், ஜெய்ப்பூர் விமான நிலையம் முதலிடத்தையும், ஸ்ரீநகர் விமான நிலையம் இரண்டாவது இடத்தையும் பிடித்துள்ளது.
- ASQ கணக்கெடுப்பானது, விமான நிலையங்களின் தனிச்சிறப்புடைமையை அளவிடும் உலகின் முக்கிய தரவரிசை அளவீடாகும்.
- மேலும், இது விமான நிலையங்களில் பயணிகளின் விமான பயண தினத்தன்றே மேற்கொள்ளப்படும் ஒரே உலகளாவிய கணக்கெடுப்பு முறையாகும்.

## இந்திரா 2017

- “இந்திரா” என்பது இந்தியா மற்றும் இரஷ்யாவிற்கு இடையேயான கூட்டுப் போர் பயிற்சியாகும்.
- இதுவரை ஒற்றை ஆயுதப் படைகளுக்கான (Single Service exercise) கூட்டுப் போர் பயிற்சியாக இருநாடுகளின் ஆயுதப்படைகளுக்கிடையே கடந்த ஒன்பது ஆண்டுகளாக இந்தியா மற்றும் இரஷ்யாவில் மாறிமாறி நடத்தப்பட்டு வந்தது.
- இவ்வருடம் இருநாடுகளின் இராணுவத்தின் முப்படைகளும் (தரைப்படை, கடற்படை, விமானப்படை) பங்கேற்கும் விதத்தில் இக்கூட்டுப் போர் பயிற்சி மேம்படுத்தப்பட்டுள்ளது.
- இதுதான் முப்படைகளும் பங்குபெறும் உலகின் முதல் சர்வதேச கூட்டுப் போர் பயிற்சியாகும்.
- இரஷ்யாவின் விளாடிவோஸ்டாக் நகரில் நடைபெற உள்ள இக்கூட்டுப் போர் பயிற்சியின் முக்கிய நோக்கம்- பயங்கரவாத எதிர்ப்பு ஆகும்.
- 2014ஆம் ஆண்டு “Avia Indra – ஏவியா இந்திரா” எனும் விமானப் படைகளுக்கான கூட்டுப் போர் பயிற்சிகளில் இருநாட்டு விமானப்படைகளும் கலந்து கொண்டன.

## அனைத்திந்திய ஆயுர்வேத நிறுவனம் – டெல்லி

- அக்டோபர் 17 ஆம் தேதியில் இரண்டாவது தேசிய ஆயுர்வேத தினத்தன்று டெல்லியில் உள்ள சரிதா விஹார் பகுதியில் அனைத்திந்திய ஆயுர்வேத நிறுவனத்தை (All India Institute for Ayurvedha) இந்திய பிரதமர் தொடங்கி வைத்தார்.
- அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழகங்களின் வரிசையைப் போலவே நாட்டின் முதல் ஆயுர்வேத நிறுவனம் தொடங்கப்பட்டுள்ளது. நவீனகாலத்தின் நோய்கண்டறிதல் கருவிகள் மற்றும் தொழில்நுட்பங்களுக்கும், பாரம்பரிய ஆயுர்வேத மெய்யறிவுக்கும் இடையே ஒன்றிணைவை ஏற்படுத்தும் பொருட்டு மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் ஆயுர்வேதத்திற்கான உச்ச அமைப்பாக இந்நிறுவனம் தொடங்கப்பட்டுள்ளது.
- 2016 ஆம் ஆண்டிலிருந்து மத்திய ஆயுஷ் அமைச்சகத்தால் ஆண்டுதோறும் தன்வந்திரி ஜெயந்தி அன்று தேசிய ஆயுர்வேத தினம் கொண்டாட முடிவு செய்யப்பட்டது.

## சமன் திட்டம்

- ❖ தோட்டக்கலைத்துறைக்கு செயல்தந்திர மேம்பாட்டை (Strategic development) அளித்து அதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை பெருக்குவதற்காக கொண்டுவரப்பட்ட முன்னோடித் திட்டமாகும்.
- ❖ தொலை உணர்வுத் தொழில்நுட்ப பயன்பாட்டின் மூலம் மகாலநோபிஸ் தேசிய பயிர் முன்கணிப்பு மையத்தால் இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட உள்ளது. மார்ச் 2018 இல் திட்டம் முழுவதும் நிறைவு செய்யப்பட உள்ளது.
- ❖ பூகோள இடஞ்சார்ந்த ஆய்வுகளான பழத்தோட்ட புத்துயிராக்கம், பயிர் உற்பத்தியை தீவிரப்படுத்துதல், நீர்வளர்ப்பு முறையிலான தோட்டக்கலை போன்றவற்றினுடைய பயன்பாட்டின் மூலம் பயிர் உற்பத்திக்கான நம்பகமான மதிப்பீடுகள் உருவாக்கப்படும்.
- ❖ ஏழு முக்கிய தோட்டக்கலைப் பயிர்களுக்காக மேம்படுத்தப்பட்டுள்ள இந்த முறையானது அனைத்து மாநிலங்களிலும் செயல்படுத்தப்படும்.
- ❖ இவை விவசாயிகள் இலாபகரமான முறையில் தோட்டக்கலைப் பயிர்களை வளர்த்து அதன் மூலம் இரட்டிப்பு வருமானத்தை பெற உதவும்.

## காலணி வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவன சட்டம் 2017 (Footwear Design & Development Institute Act-2017)

- ❖ இந்த சட்டத்தின் விதிமுறைகள் காலணி வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாக (INI-Institute Of National Importance) உருவாக்குவதற்காக அமல்படுத்தப்பட்டுள்ளன.
- ❖ இந்த காலணி வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனம், இந்திய அரசின் வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- ❖ இவ்வாறு அறிவிக்கப்பட்ட பிறகு, தொழிற்துறையின் தேவைக்கேற்ற வகையில் தனது பயிற்சி படிப்புகளை வடிவமைப்பதற்கும் தமது பிரத்தியேகமான பட்டத்தை மாணவர்களுக்கு அளிப்பதற்கும் அந்நிறுவனம் தன்னாட்சி அதிகாரங்கள் கொண்டுள்ளது.
- ❖ காலணி, தோல்பொருட்கள் மற்றும் அது சார்ந்த துறையில் ஒரே குடையின் கீழ் வசதிகளை தரும் அமைப்பு என்ற வகையில் இந்த நிறுவனம் ஒரு புகழ்பெற்ற நிறுவனமாகும்.

## NIIF – ADIA முதல் முதலீட்டு ஒப்பந்தம்

- ❖ தேசிய முதலீடு மற்றும் உள்கட்டமைப்பு நிதிக்கு (National Investment And Infrastructure Fund) நீண்டகால முதலீடுகளை திரட்டும் பொருட்டு, முதல் முதலீட்டு ஒப்பந்தம் அபுதாபி முதலீட்டு ஆணையத்திற்குச் சொந்தமான துணை நிறுவனத்திற்கும் (ADIB-ABUDHABI investment Authority), NIIF முதன்மை நிதி (Master Fund) இடையே கையெழுத்திடப்பட்டது.
- ❖ இந்த உடன்படிக்கையின் படி ADIA ஆனது NIIF ன் Master Fund ல் முதல் நிறுவன முதலீட்டாளர் ஆவார். மேலும் NIIFன் முதலீட்டு நிறுவனத்தில் முதல் பங்குதாரர் ஆவார்.

### *தேசிய முதலீடு மற்றும் உள்கட்டமைப்பு நிதி (NIIF)*

- ❖ மத்திய அரசு தேசிய உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு தேவையான நிதியை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கவர்வதற்காக முதலீடு மற்றும் உள்கட்டமைப்பு நிதியை 2015ல் நிறுவியது.
- ❖ இது செபியின் விதிமுறைகளின் கீழ் மாற்று முதலீட்டு நிதிகளில் இரண்டாவது பிரிவு என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது.

- இது இந்தியாவின் முதல் இறையாண்மையுடைய செல்வநிதி என்றும் இதன் கீழ் உள்ள ஏராளமான நிதித் திட்டங்களுக்கு இது ஒரு குடைபோல் தலைமைநிதியாக செயல்படும் எனவும் கூறப்படுகின்றது.

## #IamThatWoman – "பெண்களுக்காக பெண்கள்" என்ற பிரச்சாரம்


- மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் பெண்களுக்கு மத்தியில் பெண்களுக்கு எதிராக காணப்படும் பாலின வேறுபாட்டை களைவதற்காக #IamThatWoman என்ற இணையதள பிரச்சாரத்தை ஆரம்பித்துள்ளது.
- இந்தப் பிரச்சாரத்தின் மூலம் பெண்களுக்கான மற்றும் பெண்கள் மூலம் ஏற்படக்கூடிய பல்வேறு அம்சங்களை முன்னிலைப்படுத்த அமைச்சகம் எண்ணுகிறது.
- சுட்டுரை மற்றும் முகநூல் பயனாளிகள் பெண்களுக்கு பெண்களால் செய்யப்பட்ட உதவிகள் பற்றிய கதைகளை புகைப்படத்துடன் #IamThatWoman என்ற அடைமொழியுடன் சேர்த்து இணையதளத்தில் பகிரவும் குறிப்பிட்டுக் காட்டவும் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

## தீபாவளிப் பண்டிகையின் போது மோசமடைந்த காற்று மாசுபாட்டு அளவு

- சென்னையின் காற்று மாசுபாட்டின் அளவு 302 என்ற நிலைக்கு உயர்ந்துள்ளது. இது டெல்லியின் காற்று மாசுபாட்டு அளவை (319) விட சற்றே குறைவு ஆகும். டெல்லி மாநகரில் பொதுவாக தீபாவளி பண்டிகைக் காலங்களில் பனிப்புகை மற்றும் காற்று மாசுபாடு அதிகமாக இருப்பது வழக்கமாகும்.
- மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் அறிக்கைபடி, இந்தபருவத்தில் சென்னையின் பனிப்புகை மற்றும் மாசுபாட்டின் தரநிலை உயர்ந்த நச்சு எல்லையை (Higher Toxic level) தொட்டுள்ளது.
- சென்னையின் காற்றின் தரமானது "திருப்திகரமான" நிலையிலிருந்து அக்டோபர் 16 அன்று "மோசம்" மற்றும் "மிகவும் மோசம்" என்ற நிலைக்கு தகுதி இறக்கம் செய்யப்பட்டுள்ளது.

### *காற்று தர குறியீடு*

- காற்று தர குறியீடு 6 தர வகைப்பாடுகள் மற்றும் வண்ண குறியீட்டின் மூலம் நாட்டின் காற்று மாசுபாட்டின் தரத்தை அளவிடும் குறியீடாகும்.
- இக்குறியீடானது நாட்டின் காற்று தரத்தை மதிப்பிட CPCB (Central pollution Control Board) ஆல் பயன்படுத்தப்படுகிறது.
- 8 முக்கிய மாசுகள் AQI இல் (Air Quality Index) கணக்கிடப்படும் அவையாவன: (PM10, PM 2.5, NO2, SO2, CO, O3, NH3, Pb)
- AQIன் 6 தர நிலைகள் - நன்று, திருப்திகரம், மோசம், மிக மோசம், கடுமை, மிதமான மாசுபாடு.




SOURCE: CPCB

- புகழ் பெற்ற மருத்துவ இதழான லான்செட்டின் புதிய ஆய்வின் படி 2015 ல் மாசுபாடுகள் சார்ந்த இறப்புகள் உடைய நாடுகளின் பட்டியலில் இந்தியா முன்னிலையில் உள்ளது. 2015 ல் காற்று நீர், மற்றும் பிற மாசுபாடுகள் காரணமாக 2.5 மில்லியன் மக்கள் முன்கூட்டியே மரணத்தை எய்தியுள்ளனர்.

## புதிய பணத்தாள்களில் தூய்மை இந்தியா திட்டத்தின் இலச்சினை

- பாதுகாப்பு காரணங்களை மேற்கொள்காட்டி, புதிய 500 மற்றும் 2000 ரூபாய் நோட்டுகளில் "தூய்மை இந்தியா திட்டத்தின்" இலச்சினையை அச்சிடுவதற்கான முடிவைப் பற்றிய தகவல்களை பகிர மத்திய ரிசர்வ் வங்கி மறுத்துள்ளது.
- தகவல் உரிமைச்சட்டம் 2005,பிரிவு 8(1) (a)-ன் கீழ் பொதுப்புழக்கத்தில் உள்ள ரூபாய் நோட்டுகளைத் தவிர வங்கிகளிலுள்ள பணத்தைப் பற்றிய வடிவம், பாதுகாப்பு அம்சங்கள், தயாரிப்பு பொருள் பற்றிய தகவல்கள் பகிர்வது விலக்களிக்கப்பட்டுள்ளது.
- 2000 மற்றும் 500 ரூபாய் நோட்டுகளில் "Ek Kadam Swachhata ki Aur" (A Step towards Cleanliness / தூய்மையை நோக்கி ஓர் அடி) எனும் செய்தியும், தூய்மை இந்தியா திட்டத்தின் இலச்சினையும் அச்சிடுமாறு வழங்கப்பட்ட ஆணையின் நகல்களை தருமாறு மத்திய ரிசர்வ் வங்கியிடம் கோரப்பட்டது.
- மத்திய நிதி அமைச்சகத்தின் கீழ் செயல்படும் பொருளாதார விவகாரத்துறையிடம் (Department Of Economic Affairs) தகவல் கோரும் விண்ணப்பம் அளிக்கப்பட்டுள்ளது.
- பொருளாதார விவகாரத்துறையானது நாணயங்கள், ரூபாய் நோட்டுகள், பாதுகாப்பு ஆவணங்கள் போன்றவையோடு தொடர்புடைய கொள்கை வரையறுப்பும், ரூபாய் நோட்டு அச்சிடல், நாணயங்கள் செய்தல் போன்றவற்றோடும் தொடர்புடைய திட்டமிடல் ஒருங்கிணைப்புகளில் உள்ள சிக்கலை தீர்க்கும் அமைப்பாகும்.
- பொருளாதார விவகாரத்துறை (DAE) இந்த விண்ணப்பத்தை ரிசர்வ் வங்கிக்கு அனுப்பியுள்ளது.
- RBI சட்டம் 1934, பிரிவு 25 ன்படி வங்கி நோட்டுகளின் தன்மை, மாதிரி, வடிவமைப்புப் பொருட்கள் ஆகியவை இந்திய ரிசர்வ் வங்கியின் மத்திய வாரியத்தினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்ட பின் மத்திய அரசின் ஒப்புதலின்படி உருவாக்கப்படும்.

## தூய்மையான காற்று பிரச்சாரம்

- தீபாவளித் திருநாளையொட்டி, காற்று மாசுபாட்டைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த மத்திய அரசு தூய்மையான காற்று பிரச்சாரத்தின் ஒருபகுதியாக மினி மராத்தான் போட்டியை நடத்த உள்ளது.
- முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் பிறந்தநாளோடு ஒத்துப்போகும் விதமாக இந்தியா கேட் பகுதியில் இந்த மினி மராத்தான் தொடங்க உள்ளது.
- காற்று மாசுபாட்டை பற்றி வெகுஜன மக்களிடையே விழிப்புணர்வை உண்டாக்க இப்பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது.
- தூய்மை இந்தியா திட்டத்தை முன்னெடுத்து செல்லும் விதமாகவும், ஹரித் தீபாவளி – சுவஸ்த் தீபாவளி திட்டத்தை விரிவுபடுத்தவும், "Swach Hawa for Swach and Swach Bharat" எனும் பிரச்சாரம் மத்திய சுற்றுச்சூல் அமைச்சகத்தால் தொடங்கப்பட்டுள்ளது.
- "தூய்மையான காற்றினுக்கான ஓட்டம்" என்பது தூய்மையான காற்றின் நேர்மறை ஆற்றலை கூறும் ஓர் கட்டியமாகும்.

## ஜகர்தாவிற்கு இந்திய கப்பல்கள் பயணம்

- இந்திய கடற்படை கப்பல்களான INS திர், INS சுஜாதா, INS சர்துல் மற்றும் கடலோர காவற்படை கப்பலான ICGS சாரதி இந்தோனேசியாவின் ஜகர்தாவிற்கு பயணம் மேற்கொள்ளது.
- கடற்படை பயிற்சியாளர்களுக்கு அந்நிய கடலில் போர்க்கப்பல்களை இயக்கிட பயிற்சியளிக்கவும், துறைமுக பழக்கப்பாடு, இரு நாட்டு நட்டுபுறவுகளை வளர்க்கவும் இந்திய கப்பல்கள் பயணம் மேற்கொண்டுள்ளது.
- இக்கப்பல்கள் கொச்சியில் உள்ள தெற்கத்திய கடற்படை பிரிவின் கீழ் செயல்படும் இந்திய கடற்படையின் முதல் பயிற்சியாளர் படையினைச் சேர்த்தவை.
    - INS திர், INS சுஜாதா, INS சர்துல்.
    - கடலோர காவற்படை கப்பலான சாரதி
    - கடற் பயிற்சி கப்பல்களான INS சுதர்சினி, INS தாரங்கினி போன்ற 6 கப்பல்கள் பயணத்தை மேற்கொண்டுள்ளது.

## சொலிசிட்டர் ஜெனரல் ராஜிநாமா

- இந்தியாவின் சொலிசிட்டர் ஜெனரலான ரஞ்சித் குமார் தன் பதவியை ராஜிநாமா செய்துள்ளார்.
- இந்தியாவின் அட்டர்னி ஜெனரலுக்கு உதவிபுரியும் சொலிசிட்டர் ஜெனரல் பதவியானது நாட்டின் இரண்டாவது உயரிய சட்ட அதிகாரிப் பணியாகும். அவருக்கு உதவியாக பல சொலிசிட்டர் ஜெனரல்கள் இருப்பர்.
- 3 ஆண்டுகள் பதவிக்காலத்திற்கு சொலிசிட்டர் ஜெனரல் நியமிக்கப்படுவார். (Appointment Committee of Cabinet)
- நியமனங்களுக்கான கேபினேட் அமைச்சரவை குழு சொலிசிட்டர் ஜெனரல் மற்றும் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல்களை நியமிக்கின்றனர்.
- இது ஓர் சட்டப்பூர்வ பதவியாகும் (Statutory Post).
- ஆனால் அட்டர்னி ஜெனரலை இந்திய குடியரசுத்தலைவர் விதி 76(1) ன் கீழ் நியமிப்பார்.

- சோலிசிடர் ஜெனரலின் பணிகள் சட்ட அதிகாரிகள் (பணி நிலைகள் ) விதி 1987 ன் படி நிர்வகிக்கப்படும். அரசியலமைப்பு சட்டத்தின் படி அல்ல.
- அனால் அட்டர்னி ஜெனரலின் அலுவலகம் மற்றும் பணிகள் அரசியலைப்பு சட்டத்தின் விதி 76 ன் படி வரையறுக்கப்படும்.

## யுஏஎன் (UAN) ஆதாருடன் ஆன்லைனில் இணைக்க புதிய வசதி

- பொது கணக்கு எண் (UAN-Universal Account number) மற்றும் அது தொடர்பான பிற விவரங்களைக் கொண்டுள்ள உறுப்பினர்கள் அவரவருடைய பொது கணக்கு எண்ணை (UAN) ஆதாருடன் நிகழ்நிலையில் இணைக்க பணியாளர் வருங்கால வைப்பு நிதியம் (EPFO-Employees Provident Fund Organisation) புதிய வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இதன் மூலம் உறுப்பினர்கள் சிறந்த மற்றும் விரைவான இபிஎஃப்ஓ (EPFO) சேவைகளை எளிதாகப் பெற முடியுமென தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

## சுரக்ஷித் பச்பன் – சுர க்ஷித் பாரத்

- கைலாஷ் சத்யார்த்தி குழந்தைகள் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த சுரக்ஷித் பச்பன் – சுரக்ஷித் பாரத்திற்கான பாரத யாத்ராவின் நிறைவு விழா ராஜ்பவனில் நடைபெற்றது. இதில் இந்திய ஜனாதிபதி ராம் நாத் கோவிந்த் கலந்துகொண்டு உரையாற்றினார்.
- சுரக்ஷித் பச்பன் – சுரக்ஷித் பாரத்திற்கான இந்த யாத்திரையானது நமது நாட்டிலுள்ள குழந்தைகளுக்குப் பாதுகாப்பான சூழலை வழங்குவதற்கான ஒரு முக்கிய அடியாகும்.
- இந்த யாத்திரையின் நோக்கங்களுடன் இணைந்து சிறந்த இந்தியாவின் சிறந்த குடிமகனாக இருக்கும் அனுபவத்தினை நமது குழந்தைகளுக்கு வழங்குவது நாட்டின் ஒவ்வொரு தனிமனிதனின் கடமையாகும்.
- “சுரக்ஷித் பச்பன் – சுரக்ஷித் பாரத்திற்கான” பாரத யாத்திரையானது பாலியல் துன்புறுத்தல், குழந்தைகள் கடத்தல் போன்றவற்றிற்கு எதிரான வன்முறையற்ற போராகும். விழாவில் ஜனாதிபதி ‘பல் சுரக்ஷா ஜோதி’ என்ற அடையாள தீபத்தினை ஏற்றி வைத்தார்.

## பெங்களுருவில் கனமழைப் பொழிவு

- கர்நாடகாவின் உட்புற பகுதிகளில் தொடர்ந்து கனமாக பெய்த தென்மேற்கு பருவமழையால், பெங்களுரு நகரம் அதிகமான மலைப்பொழிவை 115 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு அடைந்துள்ளது.
- 2005 ல் அதிகபட்ச மழைப்பொழிவு 1606.8 மில்லி மீட்டருக்கும் மேலாக பதிவானது.
- அக்டோபர் 14, 2017 ஆம் தேதி வரையில் இந்த நகரத்தின் வருடாந்திர மழைப்பொழிவு 1615.2 மில்லி மீட்டராக பதிவாகியுள்ளது . இதுவே இந்நகரத்தின் அதிகபட்ச மழைப்பொழிவு ஆகும்.

## இமாச்சல பிரதேசம் – தேர்தல் தேதி அறிவிப்பு

- இந்திய தேர்தல் ஆணையம் இமாச்சலப் பிரதேச சட்டமன்ற தேர்தல் தேதியினை அறிவித்துள்ளது. நடப்பிலுள்ள இமாச்சல பிரதேச அரசின் ஆட்சிக்காலம் ஜனவரி 7,2017 அன்று முடிவடைகிறது.

- 68 சட்டமன்ற தொகுதிகளுடைய இமாச்சலப் பிரதேசத்தின் தேர்தல் நவம்பர் 9 ஆம் தேதி நடத்தப்பட்டு, டிசம்பர் 18 ஆம் தேதிகள் முடிவுகள் அறிவிக்கப்படும்.
- தேர்தல் அட்டவணை வெளியிடப்பட்டது முதலே தேர்தல் நடத்தை விதிமுறைகள் (Mode Code Of Conduct-MCC) உடனடியாக இமாச்சல பிரதேசத்தில் அமலுக்கு வந்துள்ளன.
- கோவாவிற்கு அடுத்து இந்த ஆண்டில் 2 வது மாநிலமாக இமாச்சல பிரதேசத்தில் 100% வாக்காளர் சரிபார்க்கும் காகித தணிக்கை சோதனை முறை (VVPAT-Voters verification Paper Audit Trail ) பயன்படுத்தப்பட உள்ளது.
- வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்காக, சோதனை அடிப்படையில் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் ஓர் வாக்குச் சாவடி சமவாய்ப்பற்ற (random) முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கு VVPAT சீட்டுகள் எண்ணப்படும்.

### *தேர்தல் நடத்தை விதிமுறைகள்*

- தேர்தல் நடத்தை விதிமுறைகள் (MCC-Model Code of Conduct) தன்னார்வ "தார்மீக நடத்தை நெறிகள்" (Moral Code of Conduct) எனவும் அழைக்கப்படும்.
- இது நியாயமான மற்றும் நேர்மையான தேர்தலை உறுதி செய்ய அரசியல் கட்சிகள், தேர்தல் வேட்பாளர்கள் மற்றும் அரசாங்கத்திற்கு வெளியிடப்படும் நெறிமுறைகளின் தொகுப்பாகும். இது இந்திய தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்படுகிறது.
- இந்த தேர்தல் நடத்தை நெறிமுறைகளை நிர்வகிக்க எந்த ஒரு சட்ட அமைப்பும் கிடையாது.
- தேர்தல் அட்டவணைகள் தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்ட உடனே தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வரும்.
- தேர்தல் பிரச்சார காலத்தில் சமூகங்களுக்கிடையே பகைமையை உண்டாக்கல் போன்ற நடத்தை விதிமுறை மீறல்கள் இந்திய தண்டணையியல் சட்டம் (IPC-Indian Penal Code) உள்ளிட்ட நடப்பிலுள்ள சட்டங்களின் மூலம் தீர்க்கப்படும்.
- இந்த நடத்தை விதிமுறைகளின் கீழ் அனுமதிக்கப்பட்டவை, அனுமதிக்கப்படாதவை என வழிகாட்டுதல் இருக்கும். அவற்றின் மீதான அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் செயல்பாடுகளை இந்திய தேர்தல் ஆணையம் அல்லது மாநிலத் தேர்தல் ஆணையம் தீர்ப்பாளராக இருந்து கையாளும்.

## கிராம் சம்ரிதி இவம் சுவச்சதா பாக்வதா- Oct 1 to Oct 15

- மாநில அரசாங்கள் மற்றும் பிற துறைகளுடன் இணைந்து ஊரக வளர்ச்சித் துறையானது நடப்பு ஆண்டில் அக்டோபர் 1 முதல் அக்டோபர் 15 வரை கிராம் சம்ரிதி இவம் சுவச்சதா பாக்வதா என்ற நிகழ்ச்சியை நடத்தியுள்ளது.
- கிராம சபை கூட்டமானது நாட்டின் அனைத்து கிராம பஞ்சாயத்துகளிலும் அக்டோபர் 2 தேதி அன்று நடத்தப்பட்டது.
- பாக்வதா தனிச்சிறப்பு வாய்ந்த இரு கூறுகளை உடையது,
    - கிராம சபை சந்திப்பை ஏற்படுத்துதல், தூய்மைக்கான பிரச்சாரம் மேற்கொள்ளுதல், நாடு முழுவதும் உள்ள பஞ்சாயத்துகளில் அமல்படுத்தப்பட உள்ள அரசின் பல்வேறு திட்டங்களைப் பற்றிய பொதுத் தகவல்களை எடுத்து கூறுதல்.
    - அந்தோதயா திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய 50,000 கிராம பஞ்சாயத்துகளை அடிப்படை தரவரிசைப்படுத்துதல்.
- இந்த காலத்தில் திசா கண்காணிப்பு இணைவாயில் மற்றும் கிராம் சம்வாத் கைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- திசா கண்காணிப்பு இணையவாயில் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய தொகுதியில் அமல்படுத்தப்பட்டுள்ள பல்வேறு மத்திய நிதியுதவி திட்டங்களின் செயல்பாட்டு முன்னேற்றங்களைக் கண்காணிக்க உதவும்.
- கிராம் சம்வாத் கைபேசி செயலியானது குடிமக்கள் பஞ்சாயத்து அளவிலான ஊரக வளர்ச்சி திட்டங்கள் பற்றியும் அவற்றின் நடைமுறை செயல்படுத்துகைப் பற்றியும் தகவல்களை அறிய உதவும்.

***கிராம் சம்ரிதி இவம் சுவச்சதா பாக்வதா***

- அனைத்து சமூகத்தினுடைய பங்கேற்போடு குறிப்பாக பெண்கள் மற்றும் இளையோர்களின் பங்கேற்போடு கிராம பஞ்சாயத்து வளர்ச்சித் திட்டத்தை உருவாக்க மேற்கொள்ளப்படும் ஓர் அவை முயற்சியே கிராம சம்ரிதி இவம் சுவச்சதா பாக்வதா ஆகும்.
- பல்வேறு அமைச்சரகங்கள் மற்றும் துறைகளால் மேற்கொள்ளப்படும் அனைத்து திட்டங்களினுடைய வருடாந்திர செயல் திட்ட இறுதி தயாரிப்பில் கிராம சபைகளால் உருவாக்கப்பட்ட இந்த திட்டங்களின் பரிந்துரைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

## குஜராத்தில் ரோ-ரோ படகு சேவை

- காம்பட் வளைகுடாவிலுள்ள சௌராஷ்டிராவின் கோஹாவிற்கும் தென் குஜராத்தின் தஹேஜ் நகருக்கும் இடையேயான ரோல் ஆன்-ரோல் ஆப் (ரோ ரோ) எனும் படகு திட்டத்தின் முதல் கட்டப் போக்குவரத்து சேவையை பிரதமர் தொடக்கிவைத்தார்.
- இதுதான் தெற்கு ஆசியாவின் முதல் உலகத்தரம் வாய்ந்த ரோ-ரோ படகுப் போக்குவரத்து சேவை ஆகும்.
- இப்போக்குவரத்து திட்டமானது இரு நகரங்களுக்கிடையேயான பயண நேரத்தை 8 மணியிலிருந்து ஒரு மணிநேரமாக குறைக்கும்.
- இரு நகரங்களுக்கு இடையேயான நில வழித் தொலைவு 360 km ஆகும். ஆனால் கடல் வழி பயணத்தால் இந்த தொலைவு 31 Km ஆக குறையும்.
- ரோ-ரோ பயணச் சேவையில், போக்குவரத்து படகானது உட்கட்டப்பட்ட (அல்லது) கரை தாழ்ந்த சாய்வு பாதைகளை உடையதால் படகுகள் துறைமுகங்களில் இருக்கும்போது எளிதாக சரக்குகளை ஏற்றி இறக்க முடியும்.
- இந்த ரோ-ரோ தொழில்நுட்ப வாகனமானது லோ-லோ வகை வாகனங்களின் செயல்பாட்டிற்கு எதிர்மாறானது. லோ-லோ (life – on and lift out) வகை வாகனங்களில் பளுதூக்கி இயந்திரங்கள் சரக்குகளை ஏற்ற-இறக்கப் பயன்படுத்தப்படும்.

## ஜம்மு மற்றும் காஷ்மீர் பேச்சுவார்த்தைகளுக்கான மத்திய அரசின் பிரதிநிதி

- ஜம்மு மற்றும் காஷ்மீரில் உள்ள நெருக்கடிகள் தொடர்பான பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கும். பிரிவினைவாதிகள் உள்ளிட்ட பங்குதாரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் அரசாங்கத்தின் பிரதிநிதியாக தினேஷ்வர் ஷர்மா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் உளவுத்துறையின் முன்னாள் தலைவர் ஆவார்.
- அமைச்சரவைச் செயலாளருக்கு நிகரான படிநிலையில் இவர் பணியமர்த்தப் படுகிறார். பிரிவினைவாதிகள் உடனான பேச்சுவார்த்தையில் யார் பங்கு பெறலாம் என்பதை முடிவு செய்யும் உரிமையும் அதிகாரமும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- இத்தகைய அரசு ரீதியான உரையாடல்கள் காஷ்மீர் அரசு மற்றும் அதிருப்தியாளர்கள் இடையே மத்திய அரசு மீதான நம்பிக்கையை வளர்க்க உதவும்.

- இதற்குமுன் தினேஷ்வர் ஷர்மா அசாம் ஐக்கிய விடுதலை முன்னணி போன்ற அசாம் மாநிலத்தின் கிளர்ச்சியாளர்கள் குழுக்களுடன் மத்திய அரசின் பிரதிநிதியாக முன் நின்று பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார். 2014 முதல் 2016 ஆம் ஆண்டு வரை உளவுத்துறையின் இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார்.

## தேசிய கீதத்திற்கு திரையரங்குகளில் எழுந்து நிற்பது அவசியமில்லை – உச்சநீதிமன்றம்

- தேசப் பற்றை நிரூபிக்க, திரையரங்குகளில் தேசிய கீதம் இசைத்து மக்கள் எழுந்து நிற்க வேண்டிய அவசியம் இல்லை என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.
- “மக்கள் தேசப்பற்றினை உணர்வதற்கு திரையரங்குகளில் நிற்க வேண்டும் என்பது அவசியமும் இல்லை, தேசிய கீதத்திற்கு எழுந்து நிற்காதவர்கள் தேசத்தின் மீது பற்று குறைந்தவர்கள் என்றும் பொருள் இல்லை” என்பது உச்சநீதிமன்றத்தின் கருத்து ஆகும்.
- தேசியக்கொடி நெறிமுறைகளை அரசாங்கம் ஏன் திருத்தியமைக்கவில்லை என்றும், எங்கு தேசிய கீதத்தை இசைக்கலாம் எங்கு இசைக்கக் கூடாது என்பதையும் ஏன் அரசாங்கம் வரையறுக்கவில்லை என்று நீதிபதி சந்திராசூட் கேள்வி எழுப்பியுள்ளார்.
- சுவரன் சிங் குழுவின் பரிந்துரைகளின் படி 1976 ஆம் ஆண்டில், 42-ஆவது சட்டத் திருத்தத்தில் குடிமக்களின் அடிப்படை கடமைகள் இணைக்கப்பட்டது.
- “நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் / குடிமகளும் அரசியலமைப்புச் சட்டத்தை பின்பற்ற வேண்டும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கருத்துகளையும், நிறுவனங்களையும், தேசிய கீதம் மற்றும் தேசியக் கொடியினை மதிக்க வேண்டும்”.
- தேசிய கீதத்தை இசைத்துப் பாடுவதும் இந்தியா போன்ற பரந்த தேசத்தின் வேற்றுமைகளில் ஒற்றுமையினை வளர்ப்பதாகவும், அரசியலமைப்புச் சட்டம் வழங்கும் அடிப்படை கடமைகளை நினைவுகூர்ந்து குறிக்கும் விதமாகவும் இருக்கிறது. அதை மாற்றும் விதமாக உச்சநீதிமன்றம் ஆணை பிறப்பித்துள்ளதற்கு இந்திய அரசுத் தலைமை வழக்குரைஞர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

## பிலிப்பைன்ஸில் நான்காவது ஆசியான்-பிளஸ் பாதுகாப்பு அமைச்சர்களின் மாநாடு

- நான்காவது ஆசியான்-பிளஸ் பாதுகாப்பு அமைச்சர்களுக்கான மாநாடு பிலிப்பைன்ஸில் நடந்தது.
- மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் இந்தியாவின் சார்பாக கலந்துகொண்டார். இதுவே அவருக்கு பாதுகாப்பு அமைச்சர் என்ற முறையில் முதல் வெளிநாட்டுப் பயணமாகும்.
- ஆசியான்-பிளஸ் என்பது தென்கிழக்கு ஆசியப் பகுதியில் அமைதி, நிலைத்தன்மை மற்றும் வளர்ச்சி ஆகியவற்றிற்காக பத்து ஆசியான் உறுப்பு நாடுகள் மற்றும் அதன் எட்டு பேச்சுவார்த்தை உறுப்பினர்கள் இடையே பாதுகாப்பை பலப்படுத்தவும் இராணுவ ஒத்துழைப்பு நடவடிக்கையை மேம்படுத்தவும் உதவும் ஒரு அமைப்பு ஆகும்.
- இதன் நோக்கம் யாதெனில் சீரிய பேச்சுவார்த்தை மற்றும் வெளிப்படைத்தன்மை மூலம் இராணுவ அமைப்புகளிடையே பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்துவது ஆகும்.

### *ஆசியான் பாதுகாப்பு அமைச்சர்களின் மாநாடு*

- ஆசியான் பாதுகாப்பு அமைச்சர்களின் மாநாடு என்பது ஆசியான் நாடுகளிடையே பாதுகாப்பு விஷயத்தில் ஒத்துழைப்பை ஏற்படுத்தும் ஒரு உயர்மட்ட ஆலோசனை மற்றும் ஒத்துழைப்பு அமைப்பாகும்.
- இதன் குறிக்கோள்கள்கள் 2006ம் ஆண்டு மே மாதம் 9ம் தேதி அன்று நடந்த துவக்க மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டன.
- ஏசியான் பிளஸ் நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களுக்கான மாநாட்டின் துவக்க கூட்டம் 2010ம் ஆண்டு அக்டோபர் 10ம் தேதி அன்று அயல்நாடின் ஹனோயில் நடத்தப்பட்டது. அன்று பாதுகாப்பு அமைச்சர்கள், இந்த புதிய ஏற்பாட்டின் கீழ் ஐந்து முக்கிய விஷயங்களில் யதார்த்தமான ஒத்துழைப்பினை தொடர ஒத்துக் கொண்டனர். அவையாவன கடல்வழிப் பாதுகாப்பு, தீவிரவாதத் தடுப்பு, மனிதாபிமான அடிப்படையில் உதவி, மற்றும் பேரிடருக்கான தீர்வுகள், அமைதிகாப்பு நடவடிக்கைகள், இராணுவ மருத்துவம் ஆகியவையாகும்.
- இந்த அமைப்பு (ADMM PLUS) புருனை தாருசலேம், கம்போடியா, இந்தோனேசியா, லாவோஸ், மலேசியா, மியான்மர், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்நாம் ஆகிய பத்து ஏசியான் உறுப்பு நாடுகளையும், ஆஸ்திரேலியா, சீனா, இந்தியா ஜப்பான், நியூசிலாந்து, தென் கொரியக் குடியரசு, ரஷ்ய கூட்டமைப்பு மற்றும் அமெரிக்கா ஆகிய எட்டு நாடுகளையும் உள்ளடக்கியது.

## நீடித்த தொலைத்தொடர்பு வளர்ச்சிக்காக கார்பன் வெளியீட்டை குறைக்க டிராயின் பரிந்துரைகள்

- இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம், 2011-12 காலத்தை அடிப்படை ஆண்டாக கணக்கிட்டு, 2019-20 ஆண்டிற்குள் 30 சதவிகித அளவிலும், 2022-23 ஆண்டிற்குள் 40 சதவிகித அளவிலும் தொலைத் தொடர்பு துறைகளில் கார்பன் வெளியீட்டை குறைக்க இலக்குகளை நிர்ணயிக்க பரிந்துரைத்துள்ளது.
- தொலைத்தொடர்பு துறையை பசுமையாக்க அத்துறைக்கு டிராய் அனுப்பிய நீடித்த மற்றும் நிலையான தொலைத் தொடர்பிற்கான அலைமுறை என்பதற்கான பரிந்துரையில் இது குறிப்பிடப்பட்டுள்ளது.
- தொலைத் தொடர்பு துறையில் டிராய் என்பது ஒரு சுதந்திரமான ஒழுங்குமுறை அமைப்பாகும்.
- இது 1997-ல் பாராளுமன்றத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்டு நடைமுறைக்கு வந்தது.
- இதனுடைய முக்கியமான நோக்கம் தொலைத் தொடர்பு துறையில் நியாயமான மற்றும் வெளிப்படையான சூழலை ஏற்படுத்தித் தருவதாகும்.
- மேலும் டிராய் ஆனது தொலைத் தொடர்பு சேவைகளுக்கான கட்டணங்களை வரையறுத்து அதனை திருத்தியமைக்கவும் செய்கிறது.

## 56வது இந்தோ-திபெத்திய எல்லைக் காவற்படையின் நிறுவிய தினம்

- மத்திய உள்துறை அமைச்சர் , பெரும் நொய்டாவின் சூரஜ்பூரில் ITBP யின் 39 ஆவது படைப்பிரிவு அமைந்துள்ள லக்னவாலி முகாமில் நடைபெற்ற ITBP யின் 56 வது துவக்க நினைவு விழாவில் கலந்துகொண்டார்.
- லடாக்கின் காரகோரம் கணவாயிலிருந்து அருணாச்சலப் பிரதேசத்தில் ஜாசெப் லா வரையிலான 3488 கி.மீ நீளமுடைய இந்தோ-சீன சர்வதேச எல்லையை பாதுகாப்பதற்காக 1962 ஆம் ஆண்டு அக்டோபர் 24ஆம் தேதி இந்தோ-திபெத்திய எல்லைக்காவல் படை (Indo-Tibetan Border Police - ITBP) தோற்றுவிக்கப்பட்டது.

- 1962ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தோ-சீன போரின் விளைவாக மத்திய ரிசர்வ் போலீஸ் சட்டத்தின் கீழ் 1962ல் அக்டோபர் 24ஆம் தேதி ஐந்து ஆயுதக் காவல் படைகளில் ஒன்றாக ITBP தோற்றுவிக்கப்பட்டது.
- 1992ல் இந்தோ-திபெத்தியன் எல்லைக் காவல் படைச்சட்டம் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டு முழு தன்னாட்சி அதிகாரம் ITBPக்கு வழங்கப்பட்டது.
- இந்த காவல்படை மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.

## “சாத்தி” – புதிய முயற்சிக்காக மின்சக்தி மற்றும் ஜவுளித்துறை அமைச்சகங்கள் கைகோர்ப்பு

- மின்சக்தி அமைச்சகமும் ஜவுளித்துறை அமைச்சகமும் சாத்தி என்ற புதிய முயற்சிக்காக கைகோர்த்துள்ளன.
- சாத்தி/SAATHI என்பது Sustainable and Accelerated Adoption of Efficient Textile Technologies என்பதன் சுருக்கமாகும்.
- இதன் அர்த்தம் சிறு தொழிற்சாலைகளுக்கு உதவிட நீடித்த மற்றும் மேம்படுத்தப்பட்ட சக்திவாய்ந்த ஜவுளித் தொழில் நுட்பங்களை ஏற்றுக் கொள்ளுதல் என்பதாகும்.
- இம்முயற்சியின் மூலம் மத்திய மின்சக்தி அமைச்சத்தைச் சேர்ந்த பொதுத்துறை அமைப்பான ஆற்றல் செயல்திறன் சேவைகள் நிறுவனம் (Energy Efficiency Services Ltd - EESL) அதிக அளவில் ஆற்றல் திறன்வாய்ந்த விசைத்தறிகள், இயந்திரங்கள் மற்றும் வாள் உபகரணங்களை கொள்முதல் செய்து அவற்றை சிறிய மற்றும் நடுத்தரமான விசைத்தறி கூடங்களுக்கு வெளிப்படையான நியாயமான விலையில் வழங்க உதவும்.
- அரசின் இந்த முயற்சி, இந்தியா முழுவதும் ஜவுளி ஆணையகத்தாலும், ஆற்றல் செயல்திறன் சேவைகள் நிறுவனத்தாலும் இணைந்து செயல்படுத்தப்படும்.
- இந்த சக்தி வாய்ந்த உபகரணம் மூலம் விசைத்தறி கூடங்களுக்கு ஆற்றல் சேமிப்பும் செலவு கட்டுப்பாடும் ஏற்படும்.
- மொத்த கொள்முதலும் மொத்த திரண்ட தேவைகளும் மூலதன செலவுகளை குறைப்பதற்கு உதவி, அதன் பயன்கள் விசைத்தறிக் கூடங்களுக்கு சென்றடைந்து அதன் மூலம் அக்கூடங்கள் தங்கள் கடன் தொகையையும் அதன் கால அளவையும் குறைக்க முடியும்.
- இந்தியாவில் விசைத்தறிக் கூடம் பெரும்பான்மையாக அமைப்புசாரா தொழிலாகவும் நாட்டின் துணி உற்பத்தி துறையில் 57 சதவிகித உற்பத்தி அளவிற்கு பங்களிக்கும் அதிக அளவிலான குறு மற்றும் சிறு தொழிற்சாலைகளை கொண்டதாகவும் உள்ளது.

## தேர்தல் ஆணையர்களை பதவிநீக்கத்திலிருந்து பாதுகாக்க உச்ச நீதிமன்றத்தில் (சுப்ரீம் கோர்ட்டில்) மனு

- தேர்தல் ஆணையர்களை பதவி நீக்கம் செய்யும் நடைமுறையானது தெளிவற்ற முறையில் இருப்பதைச் சுட்டிக் காட்டியும் மேலும் இது தேர்தல் ஆணையத்தின் தன்னாட்சித் தன்மையும் பாதிப்பதாகக் கூறி உச்ச நீதிமன்றத்தில் (சுப்ரீம் கோர்ட்டில்) மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
- 324வது சட்டப்பிரிவின் உட்பிரிவு 5 இன் படி தலைமைத் தேர்தல் ஆணையர் உச்ச நீதிமன்ற (சுப்ரீம் கோர்ட்) நீதிபதிகளின் நீக்கத்தைப் போலவே ஜனாதிபதியால் பதவி நீக்கம் செய்யப்படுவார்.
- ஆனால் சட்ட விதியானது தேர்தல் ஆணையர்களை பதவிநீக்கம் செய்யும் நடைமுறை பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. தேர்தல் ஆணையர்களை தலைமைத் தேர்தல் ஆணையத்தின் பரிந்துரை இல்லாமல் பதவிநீக்கம் செய்ய முடியாது என்பதை மட்டும் குறிப்பிட்டுள்ளது.

- அரசியல் சட்ட அமைப்பான இந்தியத் தேர்தல் ஆணையம் தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் இரண்டு தேர்தல் ஆணையர்களைத் தலைமையாகக் கொண்டுள்ளது.
- அவர்கள் பிரதமர் மற்றும் அமைச்சர்கள் குழுவின் பரிந்துரையின்படி ஜனாதிபதியால் நியமிக்கப்படுகிறார்கள்.
- தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் தேர்தல் ஆணையரின் பதவிக் காலமானது 6 வருடம் அல்லது 65 வயது வரை ஆகும். இவர்களும் உச்ச நீதிமன்ற நீதிபதிக்கு நிகரான சம்பளம் மற்றும் சலுகைகளைப் பெறுவார்கள்.
- அவர்கள் அனைவருக்கும் ஒரே பதவிக்காலம், சம்பளம் மற்றும் ஒரே முறையில் நியமனம் இருந்தாலும் பதவிநீக்க முறை மட்டும் வேறுபடுகிறது.
- இவ்விதமான பாகுபாடு தெளிவின்மையை ஏற்படுத்துவதோடு தன்னாட்சித் தன்மையையும் பாதிப்பதாக மனுதாரர் குற்றம் சாட்டினார்.

## பாரத்மாலா பரியோஜனா

- நாடு முழுவதும் உள்ள பொருட்கள் மற்றும் மக்களின் பயணத்தை மேலும் மேம்படுத்துவதற்காக 83,677 கி.மீ மொத்த நீளம் கொண்ட சாலைகள், நெடுஞ்சாலைகள், பசுமைவெளி விரைவு வழிப்பாதைகள் மற்றும் பாலங்கள் 2022 க்குள் கட்டப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.
- இது 34,800 கி.மீ நெடுஞ்சாலையை 2022 க்குள் கட்டும் திட்டத்தைக் கொண்ட ஒரே குடையின் கீழ் உள்ள திட்டமான பாரத்மாலா பரியோஜனாவின் முதல் கட்டப் பணிகளை உள்ளடக்கியது.
- இது சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் பல திட்டங்களின் தலைமை திட்டமாகும். இதில் தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிறைவுபெறாத பகுதிகளும் உட்படுத்தப்படும்.




- இது எல்லை மற்றும் சர்வதேச இணைப்புச் சாலைகள், கடற்கரை மற்றும் துறைமுக இணைப்புச் சாலைகள், தேசியப் பெருவழித் தடங்களின் செயல்திறன் மேம்பாடுகள், பொருளாதாரத் தடங்களின் மேம்பாடு போன்ற புதிய முயற்சிகளிலும் கவனம் செலுத்துகிறது.

- பாரத்மாலா பரியோஜனா முதல்கட்ட திட்டத்திற்கு மந்திரிசபை ஒப்புதல் அளித்துள்ளது.

## நுகர்வோர் பாதுகாப்பிற்கான சர்வதேச கருத்தரங்கம்

- கிழக்கு, தெற்கு மற்றும் கிழக்காசிய நாடுகளின் நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான சர்வதேசக் கருதரங்கை இந்தியப் பிரதமர், புது டெல்லியில் துவக்கி வைத்தார். இதன் கருத்துரு “புதிய சந்தைகளில் நுகர்வோரை அதிகாரப்படுதுதல்” என்பதாகும்.
- பிராந்திய நாடுகளுக்கான சர்வதேச நுகர்வோர் பாதுகாப்பு மாநாடு ஒன்றினை இந்தியா நடத்துவது இதுவே முதல்முறையாகும்.
- இந்த மாநாடு, ஆசிய நாடுகள் ஐ.நா-வின் நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகளை நடைமுறைப்படுத்தவும், நிதிச்சேவைகள் மற்றும் மின்-வர்த்தகம் ஆகியவற்றால் நுகர்வோர்கள் சந்திக்கும் பிரச்சனைகள் ஆகியவற்றை பற்றியும் விவாதித்தது.
- தெற்கு, கிழக்கு, தென்கிழக்கு ஆசியாவிலிருந்து சுமார் 22 நாடுகள் இந்த மாநாட்டில் பங்கேற்றன. சீனா, தென்கொரியா, சிங்கப்பூர், வங்கதேசம், மற்றும் இலங்கை ஆகிய நாடுகளும் இதில் அடங்கும்.
- இந்த மாநாட்டு, இந்தியாவின் நுகர்வோர் விவகாரங்கள் துறையோடு வர்த்தகம் மற்றும் மேம்பாடு மீதான ஐ.நா. கருத்தரங்கம் என்ற அமைப்புடன் இணைந்து நடத்தப்பட்டது.

### *புதிய நுகர்வோர் பாதுகாப்பு மசோதா*

- இதன் முக்கிய நோக்கம், நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாத்தல் ஆகும்.
- இது நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ஐ மறுபதிலீடு செய்து, 2015 ஐ.நா நுகர்வோர் பாதுகாப்பு வழிகாட்டு நெறிமுறைகளை சேர்த்துள்ளது.
- இது நுகர்வோர் சச்சரவு குறைதீர் குழு ஒன்றினை, மாவட்ட, மாநில, தேசிய அளவில் அமைக்க வேண்டும் என பரிந்துரைக்கிறது.
- மேலும் இது கீழ்க்காணும் அம்சங்களைப் பரிந்துரைக்கிறது,
    - விரைவான தீர்வுகளை வழங்குவதற்கு செயல்படுத்தும் அதிகாரங்களைக் கொண்ட மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் ஒன்றினை நிறுவ வேண்டும்.
    - உயர்தர தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை அணுகக் கூடிய விலையில் வழங்குதல்.
    - ஆபத்தான சரக்குகளில் இருந்து நுகர்வோரைப் பாதுகாத்தல். முழுமையான விவரங்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் அடங்கிய கையேட்டினை நுகர்வோருக்கு வழங்குதல்
    - அடையாளத் திருட்டினை ஒழுங்குப்படுத்தல் மற்றும் தரவுப் பாதுகாப்பு அளித்தல்.
    - தவறான வழிகாட்டுதல்களை உடைய விளம்பரங்களை தடுத்தல்.

## மத்திய கண்காணிப்புக் குழுவின் நாணயத்தன்மை குறியீடு

- மத்திய கண்காணிப்புக் குழு (Central Vigilance Commission) 25 நிறுவனங்களுக்கான நாணயத்தன்மை குறியீட்டினை (Integrity Index) உருவாக்கவிருக்கிறது.
- பொதுத்துறை நிறுவனங்கள், பொதுத்துறை வங்கிகள், நிதி நிறுவனங்கள், அமைச்சகங்கள் மற்றும் அதன் துறைகளுக்கு, மத்திய கண்காணிப்புக் குழு, நாணயத்தன்மை குறியீட்டினை உருவாக்க உள்ளது.

- கண்காணிப்பிற்கான கூறுகளின் அடிப்படையில், மத்திய கண்காணிப்புக் குழுவானது பொது நிறுவனங்களின் மதிப்பெண்களை கணக்கிடும். இந்தக் கூறுகள், நீண்டகால திறன், லாபம், நிலைத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் அமையும்.
- இது உள்ளார்ந்த மற்றும் புறவெளி சூழல் அமைப்பினை உருவாக்கி, பொதுத்துறை நிறுவனங்களின் நம்பகத்தன்மையை அதிகரிக்க உதவும்.
- துவக்கத்தில் 25 நிறுவனங்கள், இக்குறியீட்டின் உருவாக்கத்திற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளன.

***மத்திய கண்காணிப்புக் குழு (Central Vigilance Commission)***

- மத்திய கண்காணிப்பு ஆணையம் (CVC) என்பது ஓர் தன்னிச்சையான சட்டப்பூர்வ அமைப்பாகும். இது அரசாங்கத்தின் ஊழல்களை களைவதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்பாகும்.

## உயிருடன் இருப்பவர்களின் புகைப்படம் பொருந்திய விளம்பரப் பலகைகளை வைக்க தடை

- உயிருடன் இருப்பவர்களின் புகைப்படம் அல்லது படங்களை, விளம்பரப் பலகைகள் மற்றும் டிஜிட்டல் பலகைகள் போன்றவற்றில் பயன்படுத்த, சென்னை உயர்நீதிமன்றம், மாநிலம் முழுதும் தடை விதித்துள்ளது.
- மேலும், தமிழ்நாடு திறந்த வெளி நிலங்கள் (உருச்சிதைவு தடுப்பு) சட்டம் 1959-ன் கூறுகளின் நடைமுறைப்படுத்தலை உறுதிப்படுத்தவும், மாநில தலைமைச் செயலாளருக்கு அறிவுரை வழங்கியுள்ளது.

## இந்தியன் ரயில்வேயின் முதல் கட்ட சூரியசக்தி ஆலைகள்

- இந்தியன் ரயில்வேயின் முதல் கட்ட சூரிய ஆலைகளை ரயில்வே அமைச்சர் பியூஷ் கோயல் துவங்கிவைத்தார். இது 5 மெகாவாட் உச்சநிலைத் திறனுடையது.
- இத்திட்டம், மத்திய அரசின் "தேசிய சூரிய சக்தி இயக்கத்தின்" ஒரு பகுதியாக நிறுவப்பட்டுள்ளது. இதன்படி தனது வலையமைப்பு முழுவதிலும் 1000 மெகாவாட் திறனுடைய சூரிய சக்தி ஆலைகளை நிறுவ இந்தியன் ரயில்வே முடிவு செய்துள்ளது.
- "பசுமை முன் முயற்சிகளும், இரயில்வே மின்மயமாக்கலும்" என்பதன் மீதான சர்வதேச கருத்தரங்கின் துவக்க நிகழ்ச்சியில், ரயில்வே அமைச்சர் இதற்கான அறிவிப்பை வெளியிட்டார்.
- இந்த மாநாடு, தேசியப் போக்குவரத்தான ரயில்வேயில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை பயன்படுத்துவதற்கான புதிய வழிகளைக் கண்டறிவதன் மீதானதாகும்.

## 'பாரம்பரியத்தை ஏற்றுக்கொள்ளுதல்' திட்டம்

- மத்திய சுற்றுலாத்துறை அமைச்சகத்தின் பாரம்பரியத்தை ஏற்றுக்கொள்ளும் திட்டத்தின் (Adopt a Heritage Scheme) கீழ் 14 புராதனச் சின்னங்களுக்கான கருத்தியல் கடித வழங்கலுக்காக, 7 நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதற்கான அறிவிப்பு புதுடெல்லியில், ராஜ்பாத் லான் பகுதியில் நடைபெற்ற "பர்யதன் பர்வ்" அல்லது "கலாச்சார சின்னங்களின் நண்பன்" விழாவின் நிறைவு நிகழ்ச்சியில் வெளியிடப்பட்டது.
- இனி இந்நிறுவனங்கள் "மோனுமென்ட் மித்ரா" (Monumet Mitra) என அழைக்கப்படும். இவற்றின் சமூக பொறுப்புணர்வு நடவடிக்கைகள் (CSR) துணையுடன் இச்சின்னங்கள் பராமரிக்கப்படவிருக்கிறது.

| **மோனுமென்ட் மித்ரா** | **ஏற்றுக்கொள்ளப்பட்ட புராதனச் சின்னங்கள்** |
|---|---|
| SBI பவுண்டேஷன் | • ஜந்தர்மந்தர் – டெல்லி |
| TK இன்டர்நேஷனல் லிட் | • கோனார்க் சூரியக் கோயில்<br>• ராஜா ராணி கோவில், புவனேஸ்வர்<br>• ரத்னகிரி சின்னங்கள், ஜெய்பூர் மற்றும் ஒடிஸா |
| யாத்ரா ஆன்லைன் பிரைவேட் லிட் | ஹம்பி, கர்நாடகா<br>லே மாளிகை, ஜம்மு காஷ்மீர்<br>குதூப்மினார், டெல்லி<br>அஜந்தா குகைகள், மகாராஷ்டிரா |
| ட்ராவல் கார்போரேஷன் ஆப் இந்தியா லிட் | மட்டஞ்சேரி மாளிகை அருங்காட்சியகம், கொச்சி<br>ஸப்தர்ஜங் சவாதி, டெல்லி |
| அட்வென்சர் டூர் ஆப்ரேட்டர் அஸோசியேஷன் ஆப் இந்தியா | கங்கோத்ரி கோவில் பகுதி, மற்றும் கோமுக் பகுதி<br>ஸ்டோக்கன்கிரி மலை, லடாக், ஜம்மு மற்றும் காஷ்மீர் |
| ஸ்பெஷல் ஹாலிடேஸ் டிராவல் பிரைவேட் லிட் (டெல்லி ரோட்டரி சங்கத்துடன்) | அகர்ஸன் கி போலி, டெல்லி |
| NBCC | புரானா கிலா, டெல்லி |

## நீதித்துறை நியமனங்களில் ஏன் தாமதம் என மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் கேள்வி

- ❖ மத்திய அரசின் மிக உயர்ந்த சட்டப்பதவியான இந்திய தலைமை வழக்குரைஞருக்கு, நீதிபதிகள் A.K. கோயல் மற்றும் U.U. லலித் அடங்கிய அமர்வானது, நீதிமன்ற நியமனங்களில் தொடர்ந்து தாமதம் ஏன் எனவும், உச்ச நீதிமன்றம், உயர்நீதிமன்றங்களின் நீதிபதிகள் நியமனங்களை புரிந்துணர்வு செயல்முறை (MoP) அடிப்படையில் நிரப்பாதது ஏன் எனவும் விளக்கம் கேட்டு அறிக்கை அனுப்பியுள்ளது.
- ❖ முன்னதாக அக்டோபர் 2015-ல், அரசியலமைப்பு அமர்வானது, அரசின் தேசிய நீதிபதிகள் நியமன ஆணையச் சட்டத்தினை ரத்து செய்தது.
- ❖ டிசம்பர் 2015ல், உச்சநீதிமன்றமானது, மத்திய அரசிற்கு, உச்சநீதிமன்ற / உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் செய்யவேண்டிய மற்றும் செய்யக்கூடாத செயல்கள் என்ற பட்டியல் ஒன்றினைத் தயாரித்து வழங்க அறிவுரை வழங்கியது.
- ❖ மேலும், உயர்நீதிமன்றங்களுக்கு தற்காலிக தலைமை நீதிபதி பொறுப்பில் நீதிபதிகளை அமர்த்துகின்ற செயலினை, ஒரு மாதத்திற்கு மேல் நீட்டிப்பு செய்யக் கூடாது எனவும் உச்ச நீதிமன்றம் வலியுறுத்தியுள்ளது.

- 24 உயர்நீதிமன்றங்களில், 6 உயர்நீதிமன்றங்களின் தலைமை நீதிபதி பொறுப்புகள் மாதக் கணக்கில் நிரப்பப்படவில்லை.

## புளூ வேல் விளையாட்டின் ஆபத்துக்கள் பற்றிய நிகழ்ச்சி


- புளூவேல் ஆன்லைன் விளையாட்டானது வாழ்க்கைக்கான ஓர் அச்சுறுத்தலாக கருதப்படுகிறது. இது பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் ஓர் கற்பித்தல் நிகழ்ச்சியை நடத்துமாறு தூர்தர்ஷன் நிறுவனத்திற்கு உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.
- மேலும் இது தொடர்பாக உச்சநீதிமன்றம், தூர்தர்ஷன் இந்த நிகழ்ச்சிக்கான திட்டத்தை உள்துறை அமைச்சகம், பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறை, மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், தகவல், ஒலிபரப்பு மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் ஆகியனவற்றுடன் கலந்தாலோசித்து தயாரிக்குமாறும் அறிவுறுத்தியுள்ளது.

## கூடுதல் நீதிபதிகளின் உத்தரவுகளைப் பரிசீலனை செய்ய குழு

- உயர் நீதிமன்ற கூடுதல் நீதிபதிகளை நிரந்தரமாக்குவதற்கு , உச்ச நீதிமன்றத்தில் இரண்டு நீதிபதிகள் கொண்ட குழுவை அமைத்து கூடுதல் நீதிபதிகளின் தீர்ப்புகளை மதிப்பிட நீதிபதிகள் நியமனக் குழு முடிவெடுத்துள்ளது.
- உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ராவை தலைமையில் நீதிபதிகள் நியமனக் குழு இயங்குகின்றது.
- கூடுதல் நீதிபதிகளின் நீதித்துறை செயல்பாட்டை மதிப்பிடும் நடைமுறையை முடிவுக்கு கொண்டு வருவதற்கான திட்டத்தை மறுபரிசீலிக்க சமீபத்தில் நீதிபதிகள் நியமனக் குழுவிற்கு அரசாங்கம் அறிவுறுத்தி இருந்தது..
- ஒரு வேட்பாளர் முதலில் உயர்நீதிமன்றத்தின் கூடுதல் நீதிபதியாக நியமிக்கப்படுகிறார்.
- நிரந்தர நீதிபதியாக நியமிக்கப்படுவதற்கு முன்பாக அவர் தகுதிகாண் காலத்தில் பணி செய்வர்.

## சென்னை துறைமுகத்தில் இருந்து வங்கதேசத்தின் மோங்லா துறைமுகத்திற்கு ரோரோ கப்பல் பயணம்

- பொதுவகை சரக்கு கப்பலும் 'ரோரோ'(Ro-Ro) (Ro-Ro) வகையினையும் சேர்ந்த எம்.வி.ஐ,டி,எம் டூடுள் (M.V. IDM DOODLE ) என்ற கப்பலின் சென்னை துறைமுகத்திலிருந்து வங்கதேசத்தின் மோங்லா துறைமுகத்திற்கான பயணத்தை, மத்திய நீர்வளத்துறை அமைச்சரான நிதின்கட்கரி இலக்கமுறையில் தொடங்கிவைத்தார்.
- இந்தியா மற்றும் வங்கதேசம் இடையேயான கடல்வழி கப்பல் போக்குவரத்து ஒப்பந்தமானது (Coastal Shipping Agreement) ஜீன் 2015ல் பிரதமர் நரேந்திர மோடியின் வங்கதேசப் பயணத்தின் போது கையெழுத்திடப்பட்டது.




- இந்தியத் துறைமுகங்களிலிருந்து வங்கதேசத்தின் துறைமுகங்கள் வரையிலான கடல்வழிப் போக்குவரத்தானது உடன்படிக்கையின் அடிப்படையில் உள்நாட்டு கடலோரப் போக்குவரத்துக்கு இணையாக கருதப்படுவதால், கப்பல் மற்றும் சரக்கு தொடர்பான கட்டணங்களில் 40% சலுகைகள் வழங்கப்படுகின்றன.
- இந்திய துறைமுகங்களில் ரோரோ கப்பல்கள் மூலமான கடல்வழிப் போக்குவரத்துக்கு, சரக்கு மற்றும் கப்பல் தொடர்பான கட்டணங்களில் 80% சலுகைகள் வழங்கப்படுகிறன.
- கடல்வழிப் போக்குவரத்தில் ஒரு டன் சரக்குகளுக்கான எரிபொருள் செலவு மிகவும் குறைவாக உள்ளதால் கடல்வழிப் போக்குவரத்தானது சுற்றுச்சூழலில் கரிமத்தின் அடிச்சுவட்டை (Carbon Footprint) குறைக்க உதவும்.

## மூன்றாவது சர்வதேச முதலீட்டாளர்களுக்கான இந்திய மன்றம்

- மூன்றாவது சர்வதேச முதலீட்டாளர்களுக்கான இந்திய மன்றத்தின் கூடுகை புதுடெல்லியில் நடந்தது.
- முதலீட்டாளர்கள் மற்றும் முதலீடு பெறுபவர்கள் பங்குபெறும் இந்த சர்வதேச நிகழ்வை இந்தியாவின் பழமையான வர்த்தக மற்றும் தொழிற்துறை உச்ச அமைப்பான அசோசேம் (ASSOCHAM) ஒருங்கிணைக்கிறது.
- இந்த நிகழ்வு மத்திய வெளியுறவு அமைச்சகம், தொழிற் கொள்கை உருவாக்கல் துறை (DIPP-Department of Industrial Policy and Promotion) மற்றும் மத்திய வணிக மற்றும் தொழிற்துறை அமைச்சகம் ஆகியவற்றின் அதிகாரப்பூர்வ ஆதரவோடு நடத்தப்படுகிறது..
- 2015 ஆம் ஆண்டு இந்த மன்றம் தொடங்கப்பட்டது.
- இந்த (2017) ஆண்டிற்கான மன்றத்தின் கருப்பொருள் – “கருத்தாக்கு, புத்தாக்கு, செயல்படுத்து மற்றும் இந்தியாவில் முதலீடு செய்”.

## சாபஹார் துறைமுகம் வழியாக ஆப்கனுக்கு கோதுமை கப்பலை அனுப்பி வைத்தது இந்தியா

- 1.1 மில்லியன் டன் எடையுடைய கோதுமையை ஈரானின் சாபஹார் துறைமுகம் வழியாக ஆப்கானிஸ்தானுக்கு இந்தியா அனுப்பி வைத்துள்ளது.

- ❖ சர்வதேச போக்குவரத்து மற்றும் பரிமாற்று வழித்தடத்தை ஏற்படுத்துவதற்கான முத்தரப்பு ஒப்பந்தம் கையெழுத்தான பிறகு, ஆப்கானிஸ்தானுக்கு சாபஹார் துறைமுகம் வழியாக புதிய வழித்தடத்தில் அனுப்பப்படும் முதல் சரக்கு இதுவேயாகும்.
- ❖ இந்த சரக்குக் கப்பலை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் மற்றும் ஆப்கன் வெளியுறவுத்துறை அமைச்சர் சலாஹீதீன் ரப்பானி ஆகியோர் காணொலிக் காட்சி மூலம் கொடியசைத்து தொடங்கி வைத்தனர்.




- ❖ 2003ல் பாகிஸ்தான், ஆப்கனை அடைவதற்கு தனது நிலப்பகுதியை பயன்படுத்தக்கூடாது என தடை விதித்ததால் இந்தியா ஈரானின் பந்தர் அப்பாஸ் துறைமுகம் வழியாக சரக்குகளை அனுப்பியது.

## ஊழல் கண்காணிப்பு விழிப்புணர்வு வாரம்

- ❖ இந்தியாவின் இரும்புமனிதர் என்றழைக்கப்படும், நாட்டின் முதல் உள்துறை அமைச்சரான சர்தார் வல்லபாய் பட்டேலின் 147 வது பிறந்த நாளை முன்னிட்டு புதுதில்லியில் "ஊழல் கண்காணிப்பு விழிப்புணர்வு வாரத்தை" துணை குடியரசுத் தலைவர் வெங்கையா நாயுடு தொடங்கிவைத்தார்.
- ❖ ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 30 முதல் நவம்பர் 4 ஆம் தேதி வரையிலான நாட்கள் ஊழல் கண்காணிப்பு விழிப்புணர்வு வாரமாக மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையத்தால் (CVC-Central Vigilance Commission) கடைப்பிடிக்கப்படுகிறது.
- ❖ 2017 ஆம் ஆண்டிற்கான ஊழல் கண்காணிப்பு விழிப்புணர்வு வாரத்தின் கருத்துரு – “என் தொலைநோக்கு – ஊழல் இல்லா இந்தியா”
- ❖ ஊழல் தொடர்பான நடைமுறைகளையும், அவற்றை எப்படி முறையிட வேண்டும் என்பதைப் பற்றியும் பெருமளவில் மக்களிடம் கற்பித்தலை உருவாக்க இந்த ஊழல் கண்காணிப்பு விழிப்புணர்வு வாரம் கடைப்பிடிக்கப்படுகிறது.

***மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம்-*** *CVC- Central Vigilance Commission*

- ❖ அரசாங்க ஊழல் தொடர்பான விவகாரங்களை விசாரிக்க உருவாக்கப்பட்ட ஓர் தன்னாட்சி சட்ட அமைப்பே மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம் ஆகும்.

- எந்த ஒரு நிர்வாக அதிகாரிகளின் இடையூற்றுக் கட்டுப்பாடுகளும் இன்றி இந்திய அரசாங்கத்தின் கீழ் அனைத்து லஞ்ச ஒழிப்பு கண்காணிப்பு நடவடிக்கைகளையும் கண்காணிக்கும் அமைப்பாக மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம் செயல்படுகிறது.
- இந்த ஆணையம்,
    - ✓ தலைவராக - ஒரு மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையரையும்,
    - ✓ உறுப்பினராக – இரண்டுக்கு மேல் அல்லாத கண்காணிப்பு ஆணையர்களையும் கொண்டது.
- இவர்களது பதவிக்காலம் – 4 ஆண்டுகள் அல்லது 65 வயது வரை.
- பிரதமரை தலைவராகக் கொண்ட, உள்துறை அமைச்சர் மற்றும் மக்களவை எதிர்க்கட்சி தலைவர் உள்ளடங்கிய 3 பேருடைய குழுவின் பரிந்துரையின் பேரில் குடியரசுத்தலைவரால் இவர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

## உள்துறை அமைச்சகத்தின் முன்மொழிவு

- நடப்பில், மத்திய சிவில் போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் செயல்படும் விமானப் போக்குவரத்து பாதுகாப்பு ஆணையத்தை (BCAS-Bureau Of Civil Aviation Security ) தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர மத்திய உள்துறை அமைச்சகமானது பாதுகாப்பிற்கான அமைச்சரவைக் குழுவிடம் ஓர் முன் மொழிவை அளித்துள்ளது.
- உள்துறை அமைச்சகத்தின் இந்த செயல்பாட்டிற்கு மத்திய சிவில் விமானப்போக்குவரத்து அமைச்சகம் எதிர்ப்பினை தெரிவித்துள்ளது.
- உள்துறை அமைச்சகம், புலனாய்வுப் பிரிவு (IB-Intelligence Bureau), மத்திய தொழிற்சாலை பாதுகாப்புப் படை (CISF) ,BCAS ஆகியவற்றின் நிபுணர்கள் அடங்கிய குழுவால் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்புத் தணிக்கையின் அடிப்படையில் இந்த மாற்றத்திற்கான பரிந்துரைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### *விமானப் போக்குவரத்து பாதுகாப்பு ஆணையம்*

- விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு ஆணையம் மத்திய விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் செயல்படும் ஓர் நிறுவனமாகும்.
- தலைமையகம் - புதுதில்லி
- பிராந்திய அலுவலகங்கள் - 4. (டெல்லி, சென்னை, கொல்கத்தா, மும்பை)
- 1976 செப்டம்பரில், இந்தியன் ஏர்லைன்சின் விமானம் கடத்தப்பட்ட பின்பு, விமானப் போக்குவரத்தின் பாதுகாப்பிற்காக சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகத்தின் )DGCA-Directorate General of Civil Aviation( கீழ் செயல்படும் ஒரு பிரிவாக விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு ஆணையம் உருவாக்கப்பட்டது.
- 1989-ல் கனிஷ்கா வெடிகுண்டு நிகழ்வைத் தொடர்ந்து மத்திய விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் சுதந்திரமான துறையாக மத்திய விமானப் போக்குவரத்து பாதுகாப்பு ஆணையம் மாற்றியமைக்கப்பட்டது.
- விமான போக்குவரத்து பாதுகாப்பு ஆணையர் இதன் தலைவராவார்.
- அனைத்து வர்த்தக விமானங்களின் பாதுகாப்பு தொடர்பான தரநிலைகள், கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளை உருவாக்குவதே BCAS ன் முக்கிய பொறுப்பாகும்.

- விமான நிலையங்களில் பணிபுரியும் பல்வேறு அரசு நிறுவன பணியாளர்களான புலனாய்வு பணியக அதிகாரிகள், குடியேற்ற அதிகாரிகள், பாதுகாப்பு அலுவலர்கள், உள்ளூர் காவலர்கள் BCAS ஆல் வழங்கப்படும் நெறிமுறைகளுக்கு உட்பட்டு செயல்படுகின்றனர்.

## சாட்சிகள் பாதுகாப்பு மையம்

- நீதிபதிகள் A.K கோயல் மற்றும் யூ.யூ லலித் ஆகியோர் அடங்கிய உச்சநீதிமன்ற அமர்வானது ஒவ்வொரு உயர்நீதிமன்றத்தின் அதிகார வரம்பின் கீழும் குறைந்த பட்சம் இரண்டு பாதிப்பிற்கு உள்ளாகக் கூடும் சாட்சியங்களின் பாதுகாப்பு மையத்தை மூன்று மாதங்களுக்குள் அமைக்க உத்தரவிட்டுள்ளது.
- கற்பழிப்பு கொடுமைகளுக்குட்பட்டு உயிர்பிழைத்தவர்கள், பாலியல் துன்புறுத்துதலால் பாதிக்கப்பட்டவர்கள் போன்ற பல்வேறு குற்றவியல் வழக்குகளின் சாட்சியங்களுக்கு எத்தகு பயமும், அச்சுறுத்தலும் இல்லாத உகந்த சூழலில் வாக்குமூலம் அளிக்க உதவிபுரிவதே இந்த மையத்தின் முதன்மை நோக்கமாகும்.
- சாட்சியங்களின் பாதுகாப்பு தொடர்பான சர்வதேச விதிமுறைகளுக்கு ஒருங்கமையும் வகையிலும், நீதிமன்றத்தில் சாட்சி கூறும் போது பாதிப்பிற்கு உள்ளாகக் கூடிய சாட்சியங்களின் பாதுகாக்கப்பட வேண்டிய உரிமைகளையும் நிலைநிறுத்தும் பொருட்டு இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது
- தற்போது நடப்பில் , டெல்லியில் டெல்லி உயர்நீதி மன்றத்தினால் வரையறுக்கப்பட்ட நெறிமுறைகளின் வழிகாட்டலின் கீழ், நான்கு பாதிப்பிற்கு உள்ளாகக் கூடும் சாட்சியங்களின் பாதுகாப்பு மையங்கள் அமைந்துள்ளன.
- டெல்லி நீதிமன்றமானது பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் குற்ற வழக்குகளின் சாட்சியங்கள் உள்ளடங்கிய வழக்குகளின் நீதி மீதான ஐ.நா வின் மாதிரி சட்டத்தின் (UN Model Law on Justice in Matters involving Child Victims and Witnesses of Crime) மூலம் ஊக்கமடைந்து இந்த நெறிமுறைகளை வழங்கியுள்ளது.

## அரசியல் சாசன அமர்வு

- நீதிபதிகள் தீபக் மிஸ்ரா, A.M கன்வில்கர், D.Y சந்திரசூட் அடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வானது சமூக நலத்திட்டங்களைப் பெற ஆதார் எண்ணை கட்டாயம் இணைக்கப்பட வேண்டியது தொடர்பான வழக்கில் ஆதார் எண்ணின் செல்லுபடித்தன்மையை விசாரிக்க 5 நீதிபதி அடங்கிய அரசியல் சாசன அமர்வை அமைக்க முடிவு செய்துள்ளனர்.
- அண்மையில், 9 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு அரசியலமைப்பின் கீழ் தனிநபர் ரகசியம் காப்பது (Right to Privacy) அரசியலமைப்பு விதி 21-ன் கீழ் மக்களின் அடிப்படை உரிமை என தீர்ப்பளித்தது.

## செயற்கை நுண்ணறிவு ஆலோசனை வழங்குவதற்காக நிபுணர் குழு அமைப்பு

- மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் செயற்கை நுண்ணறிவு குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்க ஒரு குழுவை அமைத்துள்ளது. இதன் முக்கிய நோக்கம் செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தி இணைய தாக்குதலை தடுப்பதாகும்.
- செயற்கை நுண்ணறிவு வேலைவாய்ப்பை உருவாக்குவதில் பெரிய சவாலாக பார்க்கப்படுகின்ற அதே வேளையில் பல்வேறு தொழில் நிறுவனங்கள் ஆட்குறைப்பை பின்பற்றும் நிலையில் செயற்கை நுண்ணறிவு மிக முக்கியத்துவம் பெறுகிறது.


- இந்தியாவின் யுக்திசார்ந்த திட்டத்திற்கு செயற்கை நுண்ணறிவை பயன்படுத்த மத்திய அரசு 7 அம்ச உக்தியை சமீபத்தில் வரையறுத்துள்ளது. இவைகளில் முக்கியமானவையாக மனித இயந்திர தொடர்பு, செயற்கை நுண்ணறிவு சாதனங்களின் பாதுகாப்பை உறுதி செய்தல், செயற்கை நுண்ணறிவு மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டு வசதிகளுக்கான தேவைகளுக்கேற்றபடி தகுதியான பணியாளர் அமைப்பை உருவாக்குதல், செயற்கை நுண்ணறிவை பயன்படுத்துவதால் ஏற்படும் நீதி நெறிமுறை, சட்டம் மற்றும் சமூகம் சார்ந்த விளைவுகளை ஆராய்தல், தரஅளவுகளை நிர்ணயித்து செயற்கை நுண்ணறிவை மதிப்பீடு செய்தல் போன்றவை ஆகும்.

### *இயந்திர நுண்ணறிவு*

- இயந்திர நுண்ணறிவு அல்லது செயற்கை நுண்ணறிவு என்பது ஏறக்குறைய மனிதர்கள் மற்றும் விலங்குகளின் இயற்கையான நுண்ணறிவைக் காட்டிலும் இயந்திரங்களின் புத்திக் கூர்மையான செயல்பாடாகும்.
- கணினி அறிவியல் துறையில் செயற்கை நுண்ணறிவிற்கான ஆராய்ச்சி என்பது புத்திச்சாலித்தனத்தின் முகவரை ஆய்வு செய்வது எனப் பொருள்படுகிறது.
- பொதுவாக செயற்கை நுண்ணறிவு என்ற வார்த்தை எப்பொழுது மனிதன் மற்ற மனித மனங்களோடு கல்வி கற்றல் மற்றும் பிரச்சினைகளை தீர்த்தல் போன்ற விஷயங்களில் இணைந்து செயல்படுகின்றானோ அப்பொழுது இயந்திரமும் அதைப் போலவே அறிவாற்றல் மிக்க விஷயங்களில் செயல்படுவது போன்று தோற்றமளித்து செயல்படவேண்டிய சமயங்களில் பயன்படுத்தப்படுகிறது.

## சாகர் வானி

- கடல் சார் செயல்பாடுகளின் போது வேண்டிய பாதுகாப்பு தொடர்பான எச்சரிக்கைகள் மற்றும் ஆலோசனை அறிவுறுத்தல்களை கடலோரப் பகுதி மக்களுக்கு குறிப்பாக மீனவ சமுதாயத்திற்கு வழங்குவதற்காக மத்திய புவி அறிவியல் அமைச்சகம் 'சாகர் வானி' எனும் தொழிற்நுட்பத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- நாட்டின் முதல் ஒருங்கிணைக்கப்பட்ட தகவல் பரப்பும் அமைப்பான சாகர் வானி, மத்திய புவி அறிவியல் அமைச்சகத்தின் 11வது நிறுவன தினத்தன்று தொடங்கி வைக்கப்பட்டது.
- கடல் சார் தகவல்களின் சேவைக்கான இந்திய தேசிய மையத்தால் இந்த மேம்பட்ட தகவல் பரப்பு அமைப்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



- மீன் பிடிப்பு வளமுள்ள மண்டலத்தின் (PEZ – Potential Fishing Zone) அறிவுறுத்தல்கள், பெருங்கடல் நிலை குறித்த முன்னறிவிப்புகள் (OSF – Ocean State Forecast) உயர் அலை எச்சரிக்கைகள், முன் கூட்டிய சுனாமி எச்சரிக்கை போன்றவை உள்ளடங்கிய பல்வேறு கடல் சார் பாதுகாப்பு தொடர்பான தகவல்கள் மற்றும் அறிவுறுத்தல் சேவைகளை சரியான காலத்தில் மின்னஞ்சல், கைபேசி செயலி, சமூக வலைதளம், அலைபேசி குறுஞ்செய்திகள், தொலைக்காட்சி, ரேடியோ, போன்ற பல தொழிற்நுட்ப தளங்களின் வழியே பிராந்திய மொழிகளில் மீனவர்களுக்கு அனுப்ப இந்த ஒருங்கிணைக்கப்பட்ட தகவல் பரப்பு அமைப்பான சாகர்வானி உதவும்.

## 'பரிவார் விகாஸ்' திட்டத்தின் கீழ் புதிய இலவச கருத்தடை மருந்துகள் மத்திய அரசு அறிமுகம்

- பொதுமக்களின் குடும்பக் கட்டுப்பாட்டுத் தேவைகளை நிறைவு செய்வதற்கு வசதியாக, அந்தாரா, சய்யா என்ற இரு இலவச கருத்தடை மருந்துகளை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இவற்றில் அந்தாரா மருந்து ஊசி மூலம் உட்செலுத்தக் கூடியதும், சய்யா மருந்து மாத்திரை வடிவில் உட்கொள்ளக் கூடியதும் ஆகும்.
- மத்திய அரசின் 'பரிவார் விகாஸ்' திட்டத்தின்கீழ் இந்த மருந்துகள் முக்கியத்துவம் வாய்ந்த 146 மாவட்டங்களில், நாட்டின் 44 சதவீத மக்களிடையே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இம்மருந்தானது, உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், கர்நாடகா, ஹரியாணா, மேற்கு வங்கம், ஒடிஸா, தில்லி, கோவா ஆகிய மாநிலங்களில் முதல்கட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
- கருவுறுதலை தள்ளிப் போடவும், தடுக்கவும் பெண்களுக்கு உதவும் வகையில் இந்த இரு மருந்துகளும் இலவசமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
- வரும் 2025-ஆம் ஆண்டுக்குள் கருவுறுதல் விகித்தை 2.1-ஆகக் குறைப்பதே 'பரிவார் விகாஸ்' திட்டத்தின் நோக்கமாகும் .

# சர்வதேசச் செய்திகள்

## கனடாவின் புதிய ஜனநாயகக் கட்சியின் வெள்ளையர் அல்லாத புதிய தலைவர்

- புதிய ஜனநாயகக் கட்சி ஆனது கனடாவில் உள்ள மிகப்பெரிய தேசிய கட்சியாகும்.
- இதன் புதிய தலைவராக ஜெக்மீத் சிங் எனும் சீக்கிய வழக்குரைநர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- கனடாவில் மிகப்பெரும் தேசிய கட்சிக்கு வெள்ளையர் அல்லாத ஒருவரை தலைவராக நியமிப்பது இதுவே முதன்முறை ஆகும்.

## கேட்டலோனியா இயக்கம்

- சமீபத்தில் கேட்டலோனியாவின் சுதந்திரத்திற்கான வாக்கெடுப்பு நடைபெற்றது.
- வாக்கெடுப்பின் ஆரம்பகட்ட முடிவுகள் 90 சதவீதம் கேட்டலோனியாவின் சுதந்திரத்திற்கு ஆதரவாக இருப்பதை தெரிவித்துள்ளது.. இதற்கு ஸ்பெயின் அரசாங்கத்தால் கடுமையாக எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த வாக்கெடுப்பிற்கு ஸ்பெயினின் அரசியலமைப்பு நீதிமன்றம் தடை விதித்துள்ளதால் இதற்கென சட்ட அங்கீகாரம் எதுவும் கிடையாது.

- மேலும் இந்த வாக்கெடுப்பு சட்ட விரோதமான வாக்கெடுப்பு என்று ஸ்பெயினின் மத்திய அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

***கேட்டலோனியாவின் பின்னணி***

- கேட்டலோனியா என்பது வரலாற்று நீதியாக ஸ்பெயினின் வடகிழக்கில் ஐபீரியன் தீபகற்பத்தில் உள்ள முக்கியத்துவம் வாய்ந்த தன்னாட்சி பெற்ற பகுதியாகும். இதன் தலைநகரம் பார்சிலோனா ஆகும்.
- இதற்கென்று புகழ்பெற்ற வரலாறு, கலாச்சாரம், மொழி, சட்டங்கள் மற்றும் பழக்க வழக்கங்கள் இருந்தபோதிலும் இதன் கலாச்சார தனியம்சம் ஒருபோதும் அங்கீகரிக்கப்படவில்லை.
- முன்சென்ற அனைத்து அரசுகளும் கலாச்சார ரீதியாக ஸ்பானிய அரசுடன் கேட்டலோனியாவை ஒருங்கிணைப்பதற்காக அதன்மேல் ஸ்பானிய மொழியையும் சட்டங்களையும் திணித்தனர்.
- இதுவே கேட்டலோனியாவின் பிரிவினைக்கான கோரிக்கைக்கு முதன்மை காரணமாகும். மேலும் இப்பிரிவினை கோரிக்கை ஜெனரல் பிரான்சிஸ்கோ பிராங்கோ என்ற சர்வாதிகாரியின் கீழ் 1940-களில் நசுக்கப்பட்டது.
- சுதந்திர கேட்டலோனியாவின் ஆதரவாளர்கள் கேட்டலோனியா ஸ்பெயினின் வளமான பகுதிகளுள் ஒன்று எனவும், மாட்ரிட்டிலுள்ள மத்திய அரசிடமிருந்து பெறும் உதவியை விட கேட்டலோனியா அதிகம் பங்களிக்கிறது (20 % பொருளாதார பங்களிப்பு) எனவும் தெரிவித்துள்ளனர்.
- பார்சிலோனாவின் வருமானம் மற்றும் சொத்துக்கள் மற்ற ஏழை மாகாணங்களுக்கு பிரித்துக் கொடுக்கப் படுவதாக பிரிவினைவாதிகள் உணர்வதால் பிரிவினை கோரி வருகின்றனர்.




## ஜனாதிபதியின் டிஜிபோடி பயணம்

- ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் அலுவல் ரீதியில் தனது முதல் பயணமாக டிஜிபோடி சென்றார்.
- ஆப்பிரிக்காவின் கொம்புப் பகுதியில் உள்ள டிஜிபோட்டிற்குச் செல்லும் முதல் இந்திய ஜனாதிபதி மற்றும் முதல் இந்திய தலைவர் இவரே ஆவார்.
- இந்தியாவிற்கென்று டிஜிபோட்டில் தூதரகம் எதுவுமில்லை.
- ஆப்பிரிக்காவின் கொம்புப் பகுதியில் உள்ள நாடுகளாவன – சோமாலியா, எத்தியோப்பியா, எரித்ரியா, டிஜிபோடி.
- புவியியல் ரீதியாக டிஜிபோடி முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில்,

- ✓ இது ஆப்பிரிக்கா, ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளை இணைக்கும் சந்திப்பில் உள்ளது.
- ✓ இந்தியப் பெருங்கடல் செங்கடலைச் சந்திக்குமிடத்தில் உள்ளது.

❖ சீனா தனது யுக்திவாய்ந்த நிலையை டிஜிபோடியில் பின்வரும் நடவடிக்கைகள் மூலம் அதிகரித்து வருகிறது

- ✓ ஆப்பிரிக்காவின் கொம்புப் பகுதியில் உள்கட்டமைப்பு மேம்பாடு
- ✓ ஒரு பட்டை ஒரு சாலை திட்டம்
- ✓ டிஜிபோடியில் சீனாவின் சமீபத்திய முதல் வெளிநாட்டு ராணுவத் தளம்
- ✓ நிலத்தால் சூழப்பட்ட எத்தியோப்பியாவிற்கும் டிஜிபோட்டிற்கும் இடையே இரயில் இணைப்புத் திட்டம்.

❖ கூடுதலாக, ஜப்பான், பிரான்ஸ், இத்தாலி, அமெரிக்கா மற்றும் பிராந்திய சக்திகளான ஐக்கிய அரபு எமீரகம், சவூதி அரேபியா, கத்தார் ஆகிய நாடுகள் தங்கள் இராணுவ செல்வாக்கை டிஜிபோட்டில் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன.

## குற்றவாளிகளை ஒப்படைக்கும் உடன்படிக்கை ஒப்பந்தம்

- ❖ இந்தியா மற்றும் லிதுவேனியாவிற்கு இடையேயான குற்றவாளிகளை ஒப்படைக்கும் உடன்படிக்கையை கையெழுத்திட மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
- ❖ தீவிரவாதிகள், பொருளாதாரக் குற்றவாளிகள் மற்றும் பிற குற்றவாளிகளை நாடு கடத்த தேவையான பரஸ்பர சட்ட கட்டமைப்பை இந்த ஒப்பந்தம் வழங்கும்.
- ❖ இதுவரை இந்தியா 37 நாடுகளுடன் குற்றவாளிகளை ஒப்படைக்கும் உடன்படிக்கையையும் ,8 நாடுகளுடன் குற்றவாளிகளை ஒப்படைக்கும் ஏற்பாடுகளையும் ஏற்படுத்தியுள்ளது.

### *குற்றவாளிகளை ஒப்படைக்கும் உடன்படிக்கை*

- ❖ குற்றவாளிகளை ஒப்படைக்கும் உடன்படிக்கை என்பது இரு நாடுகளின் பரஸ்பர ஒப்புதலுடன் கையெழுத்திடப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்ட சரணடைப்பு சார்ந்த ஓர் ஒப்பந்தமாகும்.

### *குற்றவாளிகளை ஒப்படைக்கும் ஏற்பாடு*

- ❖ குற்றவாளிகளை ஒப்படைக்கும் ஏற்பாடு என்பது இரு நாடுகளுக்கிடையே குற்றவாளிகளை ஒப்படைக்கும் உடன்படிக்கை இல்லாத நிலையில் உறுதியான பரஸ்பர பரிமாற்ற ஒத்துழைப்புடன் ஓர் சர்வதேச உடன்படிக்கையின் கீழ் மேற்கொள்ளப்படும் ஓர் சரணடைப்பு சார்ந்த ஏற்பாடாகும்.
- ❖ இந்த ஏற்பாட்டின் கீழ் சரணடைப்பு வேண்டும் குற்றத்தோடு பொருந்தக்கூடிய சர்வதேச உடன்படிக்கையை ஒப்படைப்புக்கான அடிப்படை சட்டமாக கொண்டு இருநாடுகளும் குற்றவாளிகள் ஒப்படைப்பை மேற்கொள்ளும்.
- ❖ இது அனைத்து வித குற்றங்களுக்கும் பொருந்தாது.

### *எடுத்துக்காட்டு*

- ❖ இந்தியா மற்றும் இத்தாலி இடையே குற்றவாளிகளை ஒப்படைக்கும் ஏற்பாடு கையெழுத்திடப்பட்டுள்ளது.
- ❖ இரு நாடுகளும் 1988-ஆம் ஆண்டின் போதை பொருட்கள் மற்றும் மூளையின் செயல்பாட்டை பாதிக்கும் மருந்துகளின் சட்டவிரோத வர்த்தகத்திற்கு எதிரான ஐநா உடன்படிக்கையில் (UN Convention Against illicit Trafficking in Narcotic Drags and Psychotropic Substances) கையெழுத்திட்டுள்ளனர்.

- மேலும் இந்த உடன்படிக்கையை இந்திய அரசு தமது குற்றவாளிகள் ஒப்படைப்பு சட்டத்தில் குறிப்பிட்டுள்ளது.
- எனவே இந்த உடன்படிக்கையை அடிப்படை சட்ட மூலமாக கொண்டு போதை பொருள் கடத்தல் குற்றவாளிகளின் சரணடைப்பை இரு நாடுகளும் மேற்கொள்ளலாம்.

## மியான்மருக்கான இந்தியா உதவி

- மியான்மரில் யமேதின் எனும் இடத்திலுள்ள பெண் காவலர்கள் பயிற்சி மையத்தை மேம்படுத்த இந்தியா மற்றும் மியான்மருக்கு இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.
- இந்திய புரித்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் இந்திய அரசு யமேதின் பெண் காவலர்கள் பயிற்சி மைய மேம்பாட்டிற்கு தொழில்நுட்ப மற்றும் நிதியியல் உதவியை அளிக்க உள்ளது.

## உலக விண்வெளி வாரம் (அக்டோபர் 4-10)

- மனித நிலைகளின் மேம்பாட்டிற்கு பெரும் பங்களிக்கும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தினைப் போற்றும் வகையில் ஐ.நா சபையின் பொது அவையானது அக்டோபர் 4 முதல் 10 வரையிலான நாட்களை வருடாந்திர உலக விண்வெளி வாரமாக அறிவித்துள்ளது.
- விண்வெளி வரலாற்றின் இரு முக்கிய தினங்களின் அங்கீகரிப்பை அடிப்படையாக கொண்டு இந்த விண்வெளி வாரம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
    1. அக்டோபர் – 4, 1957 – மனிதனால் முதன்முதலில் உருவாக்கப்பட்ட செயற்கைக்கோளான ஸ்புட்னிக் – 1 ஏவப்பட்ட நாள்.
    2. அக்டோபர் 10, 1967 – வெளி மண்டல உடன்படிக்கை கையெழுத்திடப்பட்ட நாள்.
- இவ்வருடத்தின் விண்வெளி வாரத்தின் கருத்துரு – "விண்வெளியில் புதிய உலகங்களை கண்டுபிடித்தல்".
- உலக விண்வெளி வாரமானது உலகின் மிகப்பெரிய வருடாந்திர விண்வெளி நிகழ்ச்சியாகும்.

## உலகின் மிக உயரமான மின்சார கோபுரம்

- சீனாவில் ஜவ்ஷான் மற்றும் நிங்போ நகரங்களுக்கு இடையேயான தீவிர உயர் மின்னழுத்த மின்வழித் திட்டத்தின் ஒரு பகுதியாக உலகிலேயே மிக உயரமான மின்சார கோபுரம் அமைக்கப்பட்டு வருகின்றது.
- 380 மீட்டர் உயரமுடைய இந்த மின்கோபுரம் லண்டனின் பிக்-பென் கோபுரத்தை விட நான்கு மடங்கு உயரமானது.
- இம்மின்சார கோபுரம் கட்டிமுடிக்கப்பட்டால் இதுவரை உலகிலேயே உயரமான கோபுரம் என்றழைக்கப்பட்ட 370 மீட்டர் உயரமான சீனாவின் தமோஷன் மின்கோபுரத்தின் சாதனையை முறியடிக்கும்.

## பிம்ஸ்டெக் பேரிடர் மேலாண்மை பயிற்சி

- முதலாவது பிம்ஸ்டெக் பேரிடர் மேலாண்மை பயிற்சி (BIMSTEC Disaster Management Exercise-2017) புதுதில்லியில் நடைபெற்றது. மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய

பேரிடர் மேலாண்மை ஆணையம் (NDRF – National disaster Response Force) இப்பயிற்சியினை நடத்தியது.

- ❖ பேரிடர் ஆபத்துக் குறைப்பு (DRR – Disaster Risk Reduction), பிராந்திய ரீதியிலான பேரிடர் மேலாண்மை ஒருங்கிணைப்பு மற்றும் பேரிடர்களை எதிர்கொள்ளும் திறன்களை பிம்ஸ்டெக் நாடுகளிடையே பகிர்வதற்கான தளமாக இப்பயிற்சி நடத்தப்படுகிறது.

### *பிம்ஸ்டெக்*

- ❖ தெற்கு ஆசியா மற்றும் தென் கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த ஏழு நாடுகளின் துணை பிராந்திய கூட்டமைப்பே பிம்ஸ்டெக் ஆகும்.
- ❖ பிம்ஸ்டெக் உறுப்பினர் நாடுகள்:
  - ✓ இந்தியா
  - ✓ இலங்கை
  - ✓ வங்கதேசம்
  - ✓ பூடான்
  - ✓ நேபாளம்
  - ✓ மியான்மர்
  - ✓ தாய்லாந்து

## ஜப்பானின் நிலவியல் புவியிடங்காட்டி பிணையம்

- ❖ ஜப்பான் தனது நிலவியல் புவியிடங்காட்டி பிணையத்தின் (Terrestrial Positioning Network System) நான்காவது மற்றும் கடைசி செயற்கை கோளை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது.
- ❖ ஜப்பான் விண்வெளி ஆய்வு நிறுவனம் (JAXA – Japan Aerospace Exploration Agency) மிச்சிபிகி – 4 எனும் இந்த செயற்கைக் கோளை H-II A ராக்கெட்டின் மூலம் ஜப்பானின் காகோஷிமாவில் அமைந்துள்ள தனே காஷிமா தீவின் விண்வெளி மையத்திலிருந்து செலுத்தியுள்ளது.
- ❖ Quasi – Zenith என்பது ஜப்பானின் பிராந்திய நிலவியல் புவியிடங்காட்டி பிணையமாகும் (Regional terrestrial positioning network system)
- ❖ இப்பிணைப்பானது 4 செயற்கைக்கோள்களை கொண்டது. இவை பூமியிலிருந்து 30,000 km லிருந்து 39000 km க்கு இடைப்பட்ட உயரத்தில் புவியிணக்கச் சுற்றுப்பாதையில் (Geo Synchronous) நிலைநிறுத்தப்பட்டு செயல்படுத்தப்படும்.
- ❖ இயற்கை பேரழிவுகளின் காரணமாக வழக்கமான தகவல் தொடர்பு பிணையங்கள் செயலிழக்கும் போது தகவல் தொடர்பை ஏற்படுத்த இந்த செயற்கை கோள்கள் உதவும்.
- ❖ திறன்பேசிகள் மற்றும் வாகன வழிகாட்டு அமைப்பிகளில் GPS தரவுகளின் துல்லியத்தை மேம்படுத்துவதற்கும், GPS ன் பயன்பாட்டை முழுமைப்படுத்துவதற்கும் உதவும் வகையில் இச்செயற்கைக் கோள்கள் செயல்படும்.

## இந்தியா ஜப்பான் திரவ இயற்கை எரிவாயு சந்தை

- ❖ மத்திய அமைச்சரவையானது இந்தியா மற்றும் ஜப்பானுக்கிடையே எளிதில் மாற்றியமைக்கக் கூடிய திரவமாக்கப்பட்ட சர்வதேச இயற்கை எரிவாயு (LNG) சந்தையை நிறுவுவதில் புரிந்துணர்வு கூட்டு ஒத்துழைப்பு ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளித்திருக்கிறது.

- இலகுவாக்கும் தன்மையை எளிதாக்க ஒத்துழைக்கும் வகையில் உள்ள கட்டமைப்பை இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் வழங்குகிறது.

  - ✓ LNG ஒப்பந்தம்
  - ✓ இலக்கு கட்டுப்பாட்டு விதியை ஒழிப்பது.
  - ✓ உண்மையான LNG தேவை மற்றும் வழங்குதலை பிரதிபலிக்கும் வகையிலான நம்பகமான களவிலைக் குறியீட்டை நிறுவுவதில் ஒத்துழைக்கும் சாத்தியக்கூறுகளை ஆராய்வது.

- இந்தியா மற்றும் ஜப்பான் முறையே உலகின் மிகப்பெரிய எரிசக்தி நுகர்வோர்கள் ஆவார்கள். LNG பிரிவில் உலகின் பெரிய இறக்குமதி நாடாக ஜப்பானும், நான்காவது பெரிய இறக்குமதி நாடாக இந்தியாவும் உள்ளது.
- எரிசக்தி துறையில் இந்தியா மற்றும் ஜப்பானுடனான இருநாட்டு உறவை இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் உயர்த்தும். இது இந்தியாவிற்கு எரிவாயு வழங்குபவர்களை பல்வகைப்படுத்துதலுக்கு பங்களிப்பதோடு மட்டுமல்லாமல் எரிசக்தி பாதுகாப்புத் திறனையும் பலப்படுத்தும்.

## யுனெஸ்கோ அமைப்பிலிருந்து அமெரிக்கா விலகல்

- யுனெஸ்கோ அமைப்பிலிருந்து விலகுவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. 2018 ஆம் ஆண்டின் கடைசியில் இவ்வெளியேற்றம் நடைமுறைக்கு வருகிறது.
- இஸ்ரேலுக்கு எதிரான நிலைப்பாட்டோடு யுனெஸ்கோ தொடர்ந்து செயல்படுவதே இந்த விலகலுக்கு காரணமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இதற்குமுன் 1984ல் யுனெஸ்கோ அமைப்பு இரஷ்யாவிற்கு சாதகமாக உள்ளது எனக் கூறி அமெரிக்கா வெளியேறியது. பின் 2002ல் மீண்டும் யுனெஸ்கோவில் இணைந்தது.

***UNESCO – United Nations Educational, Scientific and Cultural Organization.***

- யுனெஸ்கோ – ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பு
- கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார திட்டங்களில் சர்வதேச ஒத்துழைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் உலகில் அமைதி, சமூக நீதி, மனித உரிமைகள், மற்றும் சர்வதேச பாதுகாப்பை மேம்படுத்துவது இதன் பொறுப்பாகும்.
- யுனெஸ்கோ 195 உறுப்பினர்களை கொண்டது.
- இதன் தலைமையகம் – பாரிஸ், பிரான்ஸ்
- உலகம் முழுவதும் உள்ள இயற்கை மற்றும் கலாச்சார பாரம்பரிய இடங்களை பாதுகாப்பதற்காக உலக நாடுகளை ஊக்குவிக்க "உலக பாரம்பரிய திட்டத்தை (World Heritage Mission) யுனெஸ்கோ செயல்படுத்துகிறது.
- இது பாலின சமத்துவக் குறியீட்டையும் (Gender Parity Index), உலகளாவிய கல்வி கண்காணிப்பு அறிக்கையையும் (Global Education Monitoring Report) வெளியிடுகின்றது.
- உலகம் முழுவதும் உள்ள உயிர்க்கோள இருப்புகளை (Biosphere Reserve) பாதுகாக்க மனிதன் மற்றும் உயிர்கோளத் திட்டத்தை (MAB – Man and Biosphere Programme) யுனெஸ்கோ செயல்படுத்தி வருகிறது.

## மியான்மருக்கு உயவுப்பொருள் வர்த்தகம்

- பொதுத்துறை எண்ணெய் நிறுவனமான இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேசன் லிமிடேட் (HPCL- Hindustan Petroleum Corporation Ltd) நிறுவனம் மியான்மருக்கு உயவுப்பொருள்களை வர்த்தகம் செய்யும் முதல் இந்திய எண்ணெய் நிறுவனமாக உருவாகியுள்ளது.
- மியான்மரின் வர்த்தக முனையங்களான யாங்கூன் மற்றும் மாண்டலேவில் HPCL தனது வர்த்தக நடவடிக்கைகளை தொடங்கியுள்ளது.

## பாலஸ்தீனத்தின் சமரச உடன்படிக்கை

- நீண்டகாலமாக நிலவி வரும் மோதல் போக்கை முடிவுக்கு கொண்டுவரும் விதமாக பாலஸ்தீனத்தின் முக்கிய எதிரெதிர் அரசியல் கட்சிகளான ஹமாஸ் மற்றும் பதாஹ் இரண்டும் எகிப்தின் மத்தியஸ்தத்துடன் சமரச உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளன.
- ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட ஒரு வருடத்திற்குள் தேசிய பேரவை, சட்டமன்றம் மற்றும் அதிபர் பதவி போன்றவற்றிற்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதை இந்த உடன்படிக்கை முன்மொழிகிறது.
- 2011 ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்டு செயல்பாட்டில் இல்லாமல் உள்ள ஒற்றுமை ஒப்பந்தத்தை (Unity agreement) அமல்படுத்துவதற்காக இந்த சமரச உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தில் பாகிஸ்தானிற்கு இடம்

- மூன்றில் இரண்டு பங்கிற்கு அதிகமான வாக்குகள் பெற்று ஐ.நா மனித உரிமைகள் கவுன்சிலில் (UNHRC-United Nations Human Rights Council) உறுப்பினர் இடத்தை பாகிஸ்தான் வென்றுள்ளது.
- 2018 லிருந்து 2020 வரை 3 ஆண்டுகள் பதவிக்காலத்திற்கு பாகிஸ்தான் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- 193 உறுப்பினர்கள் கொண்ட இந்த அவையின் தேர்தலானது எளிய பெரும்பான்மைத் தேவையோடு இரகசிய வாக்கு முறையில் (Secret Ballot) நடத்தப்படும்.
- ஆசிய- பசுபிக் பிராந்தியத்தின் நான்கு இடங்களுக்கு ஐந்து நாடுகள் போட்டியிட்டன. பாகிஸ்தானோடு, ஆப்கானிஸ்தான், கத்தார் மற்றும் நேபாளம் போன்ற நாடுகளும் இதில் இடம்பெற்றுள்ளன.
- ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கவுன்சிலானது (UNHRC – United Nations Human Rights Council) உலகெங்கிலும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் மேம்படுத்துவதற்காகவும் உருவாக்கப்பட்ட ஐ.நா வின் உறுப்பு நாடுகளுக்கிடையேயான ஓர் சர்வதேச அமைப்பாகும்.
- இவ்வமைப்பிலுள்ள 47 இடங்களுக்கு உறுப்பு நாடுகள் 3 ஆண்டுகளுக்காக தேர்ந்தெடுக்கப்படுகின்றன.
- ஐக்கிய நாடுகளின் பிராந்திய குழுக்களுக்கிடையே இந்த 47 இடங்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.
    - ஆப்ரிக்காவிற்கு 13 இடங்கள்
    - ஆசியாவிற்கு 13 இடங்கள்
    - கிழக்கு யூரோப்பாவிற்கு 6 இடங்கள்
    - லத்தின் அமெரிக்கா மற்றும் கரிபியன் குழு (GRULAC – Latin America and Caribbean Groups) - 8 இடங்கள்

- மேற்கு ஐரோப்பா மற்றும் பிற குழுக்கள் (WEOG – Western European and other Groups) – 7 இடங்கள்

## இந்திய அமைதிப்படையினருக்கு ஐ. நா பதக்கம்

- தெற்கு சூடானில் நிலை நிறுத்தப்பட்டுள்ள 50 இந்திய அமைதிப் படையினருக்கு ஐநா பதக்கம் (UN Medal) வழங்கப்பட்டுள்ளது.
- மோதல்கள் நிறைந்த நாடான தெற்கு சூடானில் அமைதியின் கட்டுமானத்திற்கும், மக்களை பாதுகாப்பதில் வீரர்கள் புரிந்த சேவைக்காகவும், வீரர்கள் கொண்டுள்ள பணி சார்ந்த மனப்பான்மைக்காகவும் (Professionalism ) இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.
- UNMISS எனப்படும் ஐநா தெற்கு சூடானிய மிஷனின் ஒரு பகுதியாக இந்திய அமைதி காவல்படையினர் தெற்கு சூடானின் ஜோங்லேய் பிராந்தியத்தின் போர் (Bor) பகுதியில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.
- அமைதிகாத்தல், மனிதாபிமான முயற்சிகள், பேரிடர் நிவாரணம் போன்றவற்றின் மீதான சர்வதேச இராணுவ மற்றும் காவற்படையினரின் கூட்டு செயல்பாடுகளுக்கு பங்களிப்பினை தரும் பல்வேறு உலக நாடுகளின் இராணுவத்திற்கு ஐநா அவையால் இந்த சர்வதேச விருது வழங்கப்படுகிறது.
- இப்பதக்கம் ஐநா-வால் கொரியப் போரின் போது (1950 – 53) முதன் முதலாக வழங்கப்பட்டது.

## தென் ஆப்ரிக்காவில் காந்தி அருங்காட்சியகம்

- தென் ஆப்பிரிக்காவின் கடற்கரை நகரமான டர்பனில் முன்பு காந்தி சொந்தமாக இருந்த ஒரு சிறிய நிலத்தில் ஒரு அருங்காட்சியகம் தொடங்கப்பட்டுள்ளது.
- மகாத்மா காந்தியின் வாழ்க்கையும் அறப்போராட்டமும் சர்வதேச அளவில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது என விளக்கும் வகையில் இந்த அருங்காட்சியம் தொடங்கப்பட்டுள்ளது.
- மகாத்மா காந்தி நினைவு அறக்கட்டளையின் ஆலோசனையுடன் டர்பன் உள்ளூர் வரலாற்று அருங்காட்சியகமானது புதிதாக கட்டப்பட்டுள்ள இந்த அருங்காட்சியகத்தில் "டர்பனில் காந்தி" எனும் கண்காட்சியை தொடங்கியுள்ளது.
- தென்னாப்பிரிக்காவில் காந்தி வசித்து வந்த போது இந்தியர்கள் மீது காட்டப்பட்ட பாரபட்சத்தை எதிர்த்து பொது போராட்டங்களை நடத்த இந்த நிலத்தை 1897 ல் காந்தி வாங்கினார்.
- நேட்டால் இந்திய காங்கிரஸ் (Natal Indian Congress) தென் ஆப்பிரிக்காவின் நேட்டால் பகுதியில் இந்தியர்கள் மீது வெள்ளையர்கள் காட்டிய பாரபட்சத்திற்கு எதிராகப் போராட உருவாக்கப்பட்ட அமைப்பாகும்.
- 1914 ஆம் ஆண்டு டர்பன் நகரை விட்டு வெளியேறியபோது அந்த நிலத்தை நேட்டால் இந்திய காங்கிரசுக்கு வழங்கிவிட்டார்.

## வங்கதேசம் மற்றும் மியான்மரில் வடகிழக்கு பொருட்கள்

- வங்கதேசம் மற்றும் மியான்மரில் வடகிழக்கு இந்திய உற்பத்திப் பொருட்களை ஊக்குவிப்பதற்காக வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு வாரியம் ஊக்குவிப்பு திட்டத்தை துவங்கியுள்ளது.

- டாக்கா மற்றும் யாங்கூனில் முறையே உள்ள இந்திய உயர் ஆணையம் மற்றும் தூதரகத்தின் ஒத்துழைப்புடன் வங்கதேசம் மற்றும் மியான்மரின் ஊக்குவிப்பு திட்டத்திற்கான நிகழ்ச்சியை APEDA (Agricultural and Processed Food Products Export Development Authority) நடத்த உள்ளது.
- இது அனைத்து வேளாண் உற்பத்தி பொருட்களையும் உள்ளடக்கியுள்ள அட்டவணைப் பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காகவும் மேம்படுத்துவதற்காகவும் ஏற்படுத்தப்பட்ட சட்டப்பூர்வ உச்ச ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையமாகும்.
- APEDA மத்திய வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.

## நியுசிலாந்தின் இளம் வயது பிரதமர்

- ஜெசின்டா ஆர்டெம் நியுசிலாந்தின் புதிய பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- கடந்த 150 ஆண்டுகளில் ஜெசின்டா அர்டெம் (Jacinda Ardem) தான் நியுசிலாந்தின் இளம்வயது பிரதம மந்திரி ஆவார். நியுசிலாந்தை கடந்த 10 ஆண்டுகளாக மற்றொரு முக்கிய கட்சியான தேசியக் கட்சி ஆண்டு வந்தது.
- தேசியவாத நியுசிலாந்து முதல்கட்சியானது (Nationalist Newzealand First Party) தொழிலாளர் கட்சியின் தலைவரான ஜெசின்டா அர்டெம் உடன் சேர்ந்து புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கு ஒத்து கொண்டுள்ளது.

## அடையாளத் திட்ட அமைப்பின் அறிக்கை

- உலக வங்கியின் ID4D எனும் அடையாளத் திட்ட அமைப்பானது (Identification for development – ID4D) உலகம் முழுவதும் எந்த அடையாளப் பதிவுகளும் இன்றி சுமார் 1.1 பில்லியன் மக்கள் வாழ்கின்றனர் என அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- அதாவது உலக மக்கள் தொகையில் ஏழில் ஒருவர் தங்களது அடையாளப் பதிவை நிரூபிக்க இயலாமல் உள்ளனர்.
- இந்த மக்கள் எந்த ஒரு கல்வி, சுகாதார வசதிகளும் இல்லாமல் உள்ளனர்.
- அத்தகையோரில் பெரும்பாலானோர் ஆப்பிரிக்காவையும், ஆசியாவையும் சேர்ந்தவர்கள்.
- இவர்களுள் பிறப்புகள் பதிவு செய்யப்படாத குழந்தைகளில் )18 வயதிற்கு குறைவானோர்( மூன்றில் ஒரு பங்கிற்கு அதிகமானோர் வன்முறை பாதிப்பிற்கு உள்ளாகும் நிலையில் உள்ளனர்.
- வறுமை, பாகுபாடு, நோய்ப்பரவல், ஆயுத வன்முறை ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் நிலவியல் பகுதிகளில் இந்தப் பிரச்சனை மிகவும் அதிகமாக காணப்படுகின்றது.
- அத்தகைய குழந்தைகள் சட்ட விரோதமான செயல்கள் மற்றும் வன்முறைக்கு இலக்காவதாகவும், சிறுவர்கள் கட்டாயத்தொழிலுக்கும், சிறுமிகள் குழந்தை திருமணத்திற்கும் உட்படுத்தப்படுவதாகவும், யூனிசெப் அமைப்பின் 2013 ஆம் ஆண்டு அறிக்கை கூறுகிறது. அதோடு அவர்கள் ஆள் கடத்தலுக்கும் உள்ளாவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சுரக்ஷா கடற்ரோந்து கப்பல்

- இந்திய கடலோரக் காவற்படையினால் இலங்கை கடலோர காவற்படைக்கு வழங்கப்பட்டுள்ள CG60 எனும் கடற்ரோந்து கப்பல் SLCG சுரக்ஷா என பெயரிடப்பட்டு கொழும்பு துறைமுகத்தில் நடைபெற்ற விழாவின் போது இலங்கை கடற்படையில் இணைக்கப்பட்டுள்ளது.

## மீண்டும் ஜப்பான் பிரதமராகிறார் ஷின்ஸோ அபே

- ❖ அபே நீண்ட காலமாக ஜப்பான் நாட்டின் அரசியலமைப்பின் ஒன்பதாம் பிரிவினை திருத்தியமைக்க முயற்சித்து வருகிறார்.
- ❖ ஜப்பான் அரசியலமைப்புச் சட்டத்தில் ஒன்பதாவது பிரிவு போர் வழிமுறையை சட்டவிரோதம் என்று குறிப்பிடுகிறது. இருப்பினும், ஜப்பான் தன் இராணுவத்தை "தற்காப்புப் படைகள்" என்ற பெயரால் அமைத்து, பயிற்சியளித்து வருகிறது.
- ❖ நான்கு வருட ஆட்சி காலத்தை ஷின்ஸோ அபே முழுமையாக நிறைவு செய்தால், ஜப்பான் நாட்டின் நீண்ட காலம் ஆட்சியில் இருந்த பிரதமர் என்ற பெருமையை அடைவார். மேலும் 2020 ஆம் ஆண்டு ஜப்பானில் நடக்கவிருக்கும் ஒலிம்பிக் விளையாட்டுகளின் பொழுதும் இவர் நாட்டின் பிரதமராக பொறுப்பு வகிப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

## முகாபேயின் நல்லெண்ணத் தூதர் நியமனம் ரத்து

- ❖ உலக சுகாதார அமைப்பின் நல்லெண்ணத் தூதராக ஜிம்பாப்வே அதிபர் ராபர்ட் முகாபே அறிவிக்கப்பட்டிருந்தார். இந்த அறிவிப்பை உலக சுகாதார அமைப்பு திரும்பப் பெற்றுள்ளது.
- ❖ உருகுவே நாட்டில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் உலக சுகாதார அமைப்பின் தலைவர் டேட்ரோஸ் அதனோம் கேப்ரியேசஸ், முகாபேவின் நியமனத்தை அறிவித்திருந்தார்.
- ❖ பொது சுகாதார நிபுணர்கள் மற்றும் உலக சுகாதார நிறுவனத்தின் முக்கிய கொடையாளர்களான இங்கிலாந்து, கனடா மற்றும் அமெரிக்கா ஆகியோர் இந்த நியமனத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்தனர். முகாபேவின் 37 வருட அதிகாரத்துவ அரசியலில் ஜிம்பாப்வே நாட்டின் சுகாதாரம் மற்றும் நலத்திற்கான கட்டமைப்பு மோசமடைந்துள்ளது என்று அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

## INS சுகன்யா கூட்டு கடற் பயிற்சிக்காக இந்தோனேஷியா சென்றடைந்தது

- ❖ ஒருங்கிணைந்த ரோந்தின் (CORPAT – Coordinated patrol) 30வது பதிப்பு மற்றும் இந்தியா – இந்தோனேசியா கடற்படைகளுக்கு இடையேயான 3வது இருதரப்புப் பயிற்சியில் கலந்து கொள்வதற்காக INS சுகன்யா இந்தோனேஷயாவின் பெலவான் வந்தடைந்தது.
- ❖ அக்டோபர் 24 முதல் நவம்பர் 5 வரை திட்டமிடப்பட்டுள்ள இருதரப்புப் பயிற்சியானது இந்தியப் பெருங்கடலின் விளிம்பில் அமைந்துள்ள நாடுகளுடன் நெருக்கமான கடல்வழி உறவுகளை வளர்ப்பதற்கான இந்தியாவினுடைய அர்ப்பணிப்பின் செயல்விளக்கம் ஆகும்.
- ❖ 2002 ஆம் ஆண்டிலிருந்து இரண்டு கடற்படைகளும் வருடத்திற்கு இரண்டு முறை சர்வதேசக் கடல் எல்லைக்குட்பட்ட (IMBL) எல்லைக்குச் சம்பந்தப்பட்ட பக்கங்களில் ஒருங்கிணைந்த ரோந்தை (CORPAT) நடத்திவருகின்றன.
- ❖ கடற்படைகளுக்கு இடையே பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் இடைத்தொடர்பை மேம்படுத்துவது, சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட கப்பல்களின் மீது சட்டரீதியாக நடவடிக்கை எடுத்தல், தேடல் மற்றும் மீட்பு நடிவடிக்கைகளை நடத்துதல் மற்றும் கடல் மாசுபாட்டுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்றவையே ஒருங்கிணைந்த ரோந்தின் (CORPAT) நோக்கமாகும்.
- ❖ சுகன்யா வகுப்பு ரோந்து கப்பலானது பெரியவகை கப்பலாகும். இது இந்திய கடற்படையிடம் செயலில் உள்ள கடல்ரோந்து கப்பலாகும்.
- ❖ தற்போது இந்த வகுப்பின் கீழ் 3 முன்னணிக் கப்பல்கள் உள்ளன. அவை INS சுகன்யா, INS சுபத்ரா மற்றும் INS சுவர்ணா ஆகும்.

## சர்வதேச சக்திவாய்ந்த கடவுச்சீட்டுகளின் தரவரிசை-2017

- ❖ சர்வதேச அளவில் அதிக சக்திவாய்ந்த கடவுச்சீட்டாக, சிங்கப்பூரின் கடவுச்சீட்டு அறிவிக்கப்பட்டுள்ளது. முதன்முறையாக, ஆசிய நாடு ஒன்று வலிமையான கடவுச்சீட்டுத் தரவரிசைப் பட்டியலில் முதலிடம் பிடித்திருக்கிறது.
- ❖ இந்தியாவின் கடவுச்சீட்டு, இப்பட்டியலில் 75வது இடத்தில் உள்ளது. இதில் மொத்தம் 94 நாடுகள் இடம்பெற்றிருக்கின்றன. கடந்த ஆண்டினை விட இந்த ஆண்டு 3 இடங்கள் முன்னேறி இருக்கிறது இந்தியா.
- ❖ இக்குறியீட்டுத் தரவரிசையானது, உலக அளவில் எல்லைகள் தாண்டிய பயன்பாட்டின் அடிப்படையில் அளவிடப்படுகிறது.
- ❖ இந்தக் குறியீடு கனடாவின் உலகளாவிய ஆலோசனை நிறுவனமான ஆர்டன் கேபிடல் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது.
- ❖ தமது குடிமக்கள் 158 நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் வகையில் ஜெர்மனி இரண்டாம் இடத்தில் உள்ளது.

## பாரம்பரிய மருத்துவம் - பிம்ஸ்டெக் செயற்படை மாநாடு

- ❖ இந்திய அரசின் ஆயுஷ் அமைச்சகம், பிம்ஸ்டெக்கின் பாரம்பரிய மருத்துவச் செயற்படையின் முதல் மாநாட்டை புதுடெல்லியில் உள்ள பிரவாசி பாரதீய கேந்திராவில் நடத்தியது.
- ❖ பாரம்பரிய மருத்துவத் துறையில் இந்தியாவின் பங்களிப்பு முக்கியமானது ஆகும். பிம்ஸ்டெக்கின் பாரம்பரிய மருத்துவத்திற்கான குழுவில், கொள்கைகள் மற்றும் தொழில்நுட்பங்கள் தொடர்பான முக்கிய முடிவுகளில் இந்தியா இன்றியமையாத பங்கினை வகிக்கின்றது.

### *பிம்ஸ்டெக் (BIMSTEC)*

- ❖ பிம்ஸ்டெக் (BIMSTEC – Bay of Bengal Initiatives for Multi-Sectoral Technical and Economic Cooperation) என்ற துணைப் பிராந்தியக் குழுவானது தெற்கு ஆசியா மற்றும் தென் கிழக்கு ஆசியாவின் ஏழு நாடுகளை உள்ளடக்கியது. (அந்நாடுகள்: வங்கதேசம், இந்தியா, மியான்மர், இலங்கை, தாய்லாந்து, பூடான் மற்றும் நேபாளம்).
- ❖ 1997 ஆம் ஆண்டு ஜூன் 6 ஆம் தேதி பாங்காக்கில் பிஸ்டெக் (BIST-EC என்ற பங்களாதேஷ், இந்தியா, இலங்கை மற்றும் தாய்லாந்து நாடுகளின் பொருளாதாரக் கூட்டிணைவு) என்கிற புதிய துணைப் பிராந்தியக் குழு தொடங்கப்பெற்றது. பின்னர் இதில் மியான்மரும், நேபாளமும் இணைந்து பிம்ஸ்டெக் என்று ஆயிற்று.
- ❖ இந்த பிம்ஸ்டெக் (BIMSTEC) அமைப்பிற்கு நேபாளம் தற்போது தலைமை வகிக்கிறது. இதன் செயலகம் டாக்காவில் அமைந்திருக்கிறது.

## அம்பாந்தோட்டை பகுதியில் வீட்டு வசதித்திட்டத்தை நடைமுறைப்படுத்த இந்தியா – இலங்கை ஒப்பந்தம்

- ❖ தென் துறைமுக நகரில் நடைபெற்ற பொதுநிகழ்வு ஒன்றில், 1200 வீடுகள் கட்டுவது தொடர்பான ஒப்பந்தத்தில் இந்தியாவும் இலங்கையும் கையெழுத்திட்டன.
- ❖ கட்டப்படவுள்ள வீடுகள் 1200-ல், 600 வீடுகள் தென்பகுதி மாகாணத்திலும், மீதமுள்ளவை இலங்கையின் பிற பகுதிகளிலும் கட்டப்படவுள்ளன. இதில் 25 மாவட்டங்களில் அமைக்கப்பட உள்ள மாதிரி கிராமங்களிலும் வீடுகள் அமையவுள்ளன.

- அம்பாந்தோட்டை இலங்கையின் தென் மாகாணத்தின் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இலங்கையின் தெற்கு கரையோரம் அமைந்துள்ள நகரசபை ஆகும்.
- இந்தியப் பெருங்கடலினுள் மத்தியக்கிழக்குப் பகுதிக்கும், கிழக்கு ஆசியப் பகுதிக்கும் இடையேயான எரிசக்தி கடல்வழிப் பாதையின் நடுவே இது அமைந்திருக்கின்றது.
- இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது தற்போதைய காலகட்டத்தில் முக்கியமான செயலாகும். மேலும் சிங்கள பெரும்பான்மையினர் அதிகம் வசிக்கும் தெற்கு மாகணப்பகுதியில் இந்தியாவின் வீட்டு வசதித்திட்டத்தினை நடைமுறைபடுத்துவது என்பதும் முக்கியமான நிகழ்வாகும்.
- இந்தியப் பெருங்கடல் பகுதியில் அதிகரித்துவரும் சீனாவின் ஆதிக்கத்தினை தடுக்கும் வகையில் அமெரிக்கா மற்றும் ஜப்பானுடன் இணைந்து இந்தியா செயல்படுகிறது.

## உலகின் மிகப்பழமையான சூரியதிசைமானி

- ஓமன் கடற்கரைப் பகுதியில், விபத்தில் சிக்கிய மூழ்கிய கப்பலின் சேதப் பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்ட சூரிய திசைமாணி, உலகின் மிகப்பழமையான கடல்வழி திசைகாட்டும் கருவி என மதிப்பிடப்பட்டுள்ளது.
- கடற்சார் தொல்லியளாளர்களைப் பொருத்து, இக்கருவி, கடற்பயணிகளால், சூரியனின் தொலைவினை கணிக்க உதவியது.
- இது 1495 முதல் 1500 வரையிலான காலத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம். இதனைப் பயன்படுத்தி 16-ம் நூற்றாண்டில் போர்ச்சுக்கீசியர்கள் இந்தியாவிற்கு கடற்பயணங்களை மேற்கொண்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.
- சூரிய திசைமானி என்பது பண்டைய காலத்தொட்டே பயன்பட்டுவரும் கருவி. ஆனால் போர்ச்சுக்கீசிய கடல்வழி மாலுமிகள் இதனை கடற்பயணத்திற்காக மேம்படுத்தி வடிவமைக்கின்றனர். சூரியன் மற்றும் நட்சத்திரங்களின் தொலைவு, திசையைக் கொண்டு, கடற்பயணங்களில் கப்பலின் திசையை தீர்மானித்தனர்.
- எஸ்மேரால்டா என்பது இக்கப்பலின் பெயராகும். இது ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்கு முதன் முதலாக கடல் வழியில் பயணித்த போர்ச்சுகீசிய பயணியான வாஸ்கோடகாமா பயணித்த கடற்பயணப் படையின் ஒரு பகுதியாகும்.
- இந்தத் திசைமானி, வெண்கல தகடுகளால் ஆனது. இதில் இரு முத்திரைகள் உள்ளன. முதலாவது போர்ச்சுக்கீசிய ஆயுதமும், இரண்டாவது, அரசர் முதலாம் மானுவேல்லின் தனிப்பட்ட முத்திரையும் ஆகும். இவர் 1495-ம் ஆண்டு பட்டம் சூட்டிக்கொண்டவர் ஆவார் .

## கேட்டலோனியா அரசின் சுதந்திரப் பிரகடனம் நிராகரிப்பு

- 40 வருடங்களுக்கு பிறகான ஸ்பெயினின் தைரியம்மிக்க அரசியல் நெருக்கடியாக உருவானது கேட்டலோனியா தனிநாடு கோரிக்கை. இதன் அதிபர் தேர்வினையும், சுதந்திரப்பிரகடனத்தையும், அறிவிக்கப்பட்ட சிலமணி நேரத்திலேயே ஸ்பெயின் அரசு இதனை நிராகரித்தது.
- 1-அக்டோபர்-2017 அன்று கேட்டலோனியா தனது சுதந்திரபிரகடனத்தை வெளியிட்டது. இது மேட்ரிட்டினால் (ஸ்பெயினின் தலைநகரம்), சட்டப்பூர்வமற்றது என அறிவிக்கப்பட்டது.
- மேலும் ஆயுதம் தாங்கிய காவல் படையும் அங்கு நிறுத்தப்பட்டது.
- கேட்டலோனியா, ஸ்பெயினின் முக்கிய, வளமிகு பகுதி. ஏற்கனவே அதிக அளவு தன்னிச்சை அதிகாரங்களைப் பெற்றது ஆகும். 1939-1975 வரையிலான சர்வாதிகாரி பிரான்கோவின் தலைமையிலான காலத்தில் இதன் கலாச்சார மற்றும் அரசியல் வளர்ச்சி ஒடுக்கப்பட்டது.

## ஆஸ்திரேலிய நீதிமன்றம் இரட்டை குடியுரிமைக்காக துணைப் பிரதமரை தகுதி நீக்கியது

- ஆஸ்திரேலிய உச்சநீதிமன்றம் துணைப் பிரதமர் பார்னபி ஐய்ஸையும் அவருடன் சேர்த்து நான்கு ஆட்சிப்பேரவை உறுப்பினர்களையும் இரட்டை குடியுரிமை கொண்டுள்ளதற்காக பாராளுமன்றத்தில் இருந்து தகுதி நீக்கம் செய்துள்ளது.
- ஆஸ்திரேலியா நாட்டின் அரசியலமைப்பானது நாடாளுமன்றத்தில் இரட்டை குடியுரிமை கொண்டவர்களைத் தடை செய்கிறது. இந்தத் தடையானது காலங்கடந்த ஒன்று எனவும் நாட்டின் பாதி மக்கள் குடியேறியவர்களாகவும் அல்லது வெளிநாட்டில் பிறந்த பெற்றோர்களையும் கொண்டுள்ளதாகவும் விமர்சகர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

## சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தை (ICC) விட்டு வெளியேறிய முதல் நாடாகிறது புருண்டி

- உலகின் மோசமான குற்றச்சம்பவங்களுக்கு தீர்ப்பு வழங்கும் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தை விட்டு வெளியேறிய முதல் நாடு புருண்டி ஆகும். கடந்த வருடம் மூன்று ஆப்ரிக்கா நாடுகள் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தை விட்டு வெளியேறப் போவதாக ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளரிடம் தெரிவித்திருந்தன.
- வெளியேறும் முடிவெடுத்திருந்து ஒரு வருடம் ஆன நிலையில், மூன்று ஆப்பிரிக்க நாடுகளில் அதிகாரப் பூர்வமாக வெளியேறிய முதல் நாடு புருண்டி ஆகும்.
- ஜனாதிபதி பியரி குருன்சிசா மூன்றாம் முறை ஆட்சிக்கால நீட்டிப்புக்கான தேர்தலில் வெற்றி பெற்றார்.இது குறித்த அறிவிப்பை ஏப்ரல் 2015ல் வெளியிட்டிருந்தார். அது தொடங்கி புருண்டி நாடு தொடர்ந்து கொந்தளிப்புகளை சந்தித்து வருகிறது.

## இலங்கையில் நடைபெற்ற 14வது சார்க் சட்ட மாநாடு

- 14வது தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பின் சட்ட மாநாடு (South Asian Association for Regional Co-operation in Law - SAARCLAW) மற்றும் 11வது தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பின் தலைமை நீதிபதிகளின் மாநாடு (SAARC Chief Justices Conference) ஆகியவை இலங்கையின் கொழும்புவில் இணைந்து நடைபெற்றன.
- தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பின் சட்டமாநாடு (SAARC LAW) 1991ல் இலங்கையில் நிறுவப்பட்டது.
- இந்த மாநாடானது, தெற்காசிய பிராந்தியத்திலிருந்து பணியாற்றும் சட்ட வல்லுனர்கள் அனைவரும் சந்தித்து நீதி மற்றும் சட்ட சீர்திருத்தங்கள், நல்ல ஆளுகை மற்றும் அமலாக்கம் தொடர்பான பரஸ்பர நலன்களைப் பற்றி விவாதிப்பதற்கான தளத்தை வழங்குகிறது.

## புலம்பெயர் உயிரினங்களுக்கான கருத்தரங்கின் (CMS) 12வது குழுக் கூட்டம்

- CMS-Convention on the Conservation of Migratory Species of Wildlife
- பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகரான மணிலாவில் புலம்பெயர் உயிரினங்களுக்கான பான் உடன்படிக்கையின் (Bonn Convention) உறுப்பு நாடுகளின் 12வது குழுக் கூட்டம் நடைபெற்றது.
- இம்மாநாட்டின் கருப்பொருள் – "அவர்களின் எதிர்காலமே நமது எதிர்காலம் – வனஉயிர் மற்றும் மக்களுக்கான நீடித்த வளர்ச்சி".
- இம்மாநாடு நீடித்த வளர்ச்சி இலக்குகளோடு (SDG- Sustainable Development Goal ) தொடர்புடையது ஆகும்.

- இம்மாநாட்டின் படி பின்வரும் நான்கு ஆசியவகை கழுகினங்கள் அதிகப் பாதுகாப்பினைப் பெற உள்ளன.

  1. செந்தலைக் கழுகு (Red Headed vulture)
  2. பிணந்தின்னிக் கழுகு (White Rumped Vulture)
  3. இந்தியவகைக் கழுகு (Indian Vulture)
  4. மெல்லிய அலகினக் கழுகு (Slender Billed Vulture)

- இந்தியப் பெருங்கடலில் வாழும் பெருஞ்சுறாவும் (Whale Shark) சர்வதேசப் பாதுகாப்பினைப் பெற்றிருக்கிறது.
- உலகின் மிகப்பெரிய உள்நிலக் கடலில் வாழும் ஒரே கடற்பாலூட்டியான காஸ்பியன் நீர்நாயை (Caspian Seal) பாதுகாப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
- இந்த உடன்படிக்கை மீதான மாநாட்டின் அடுத்தக் கூட்டம் 2020ல் இந்தியாவில் நடைபெறவிருக்கிறது.
- பான் உடன்படிக்கையின் உறுப்பினர்கள் மாநாடு (COP) ஆசியாவில் நடைபெறுவது இதுவே முதன்முறையாகும்.

***பான் உடன்படிக்கை (Bonn Convention)***

- புலம்பெயரும் வன விலங்குகளைப் பாதுகாப்பதற்கான உடன்படிக்கையே பான் உடன்படிக்கை எனப்படும்.
- இது ஒரு ஐக்கிய நாடுகள் சுற்றுச் சூழல் திட்டத்தின் (UNEP-United Nations Environment Programme) கீழ் வரக்கூடிய சுற்றுச்சூழல் ஒப்பந்தமாகும்.
- இந்தியா இந்த உடன்படிக்கையின் உறுப்பு நாடாகும்.
- சீனா, ரஷ்யா, அமெரிக்கா, கனடா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் இந்த உடன்படிக்கையின் உறுப்பு நாடுகளாக இல்லை.

## புதிய காச நோயாளிகள் பட்டியல்- இந்தியா முதலிடம்

- உலக சுகாதார அமைப்பின் புதிய அறிக்கையின்படி, 2016ஆம் ஆண்டில் உலகம் முழுவதுமுள்ள 10.4 மில்லியன் புதிய காசநோயாளிகளில் 64 சதவீதத்தினரைக் கொண்டு, 7 நாடுகளின் பட்டியலில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.
- மைக்கோ பாக்டீரியம் டியூபர்குலோசிஸ் என்ற பாக்டீரியாவால் ஏற்படும் காசநோயானது பெரும்பாலும் நுரையீரலைப் பாதிக்கிறது.
- இது குணப்படுத்தக்கூடிய மற்றும் தடுக்கக்கூடிய நோயாகும். இது ஒரு நபரிலிருந்து மற்றொரு நபருக்கு காற்றின் மூலம் பரவக்கூடிய தொற்று நோயாகும்.
- உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள 2017ஆம் ஆண்டிற்கான உலக காசநோய் அறிக்கையின்படி, இந்தியாவைப் பின் தொடர்ந்து இந்தோனேஷியா, சீனா, பிலிப்பைன்ஸ், பாகிஸ்தான், நைஜீரியா மற்றும் தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகள் இடம்பிடித்துள்ளன.
- சீனா மற்றும் ரஷியாவோடு சேர்ந்து இந்தியா, 2016-ல் பதிவு செய்யப்பட்ட 4,90,000 பல்வகை மருந்துகளை எதிர்க்கும் தன்மை கொண்ட காசநோய் பாதிப்புடையவர்களில் பாதியைக் கொண்டுள்ளது.
- பல்வகை மருந்துகளை எதிர்க்கும் தன்மை கொண்ட காசநோய் (MDR-TB) என்பது குறைந்தபட்சம் ஐசோநியாசிட் மற்றும் ரிஃபாம்பின் போன்ற மிகவும் சக்திவாய்ந்த முதல் வரிசை காசநோய் தடுப்பு மருந்துகளின் சிகிச்சைக்கு எதிர்ப்புத் தன்மை கொண்ட பாக்டீரியாவால் ஏற்படுத்தப்படுகின்ற ஒரு வகை காச நோய்த் தொற்றாகும்.

## சாங்காய் தொழிற்சாலையில் டெஸ்லா நிறுவனம் உற்பத்தி

- சிலிக்கான் பள்ளத்தாக்கை சேர்ந்த எலக்ட்ரிக் கார் உற்பத்தி நிறுவனமான டெஸ்லா நிறுவனம் சாங்காய் அதிகாரிகளுடன் செய்துள்ள ஒப்பந்தத்தால் சீனாவில் எலக்ட்ரிக் கார்களை தயாரிக்க சொந்தமாக உற்பத்தி ஆலையை தொடங்கும் முதல் வெளிநாட்டு நிறுவனமாக பெயர் பெற உள்ளது.
- சீனாவின் எலக்ட்ரிக் கார் சந்தையானது உலகின் மிகப்பெரிய சந்தையாக கருதப்படுகிறது
- சாங்காய் நகரத்தின் தடையற்ற வர்த்தக மண்டலத்தில் சொந்தமாக நிறுவனம் அமைத்து உலகின் மிகப்பெரிய எலக்ட்ரிக் கார் சந்தையை தன் கட்டுப்பாட்டில் கொண்டு வர டெஸ்லா திட்டம் வகுத்துள்ளது.
- பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு அடுத்தபடியாக சீனாவும் 2040 ம் ஆண்டிற்கு பின்பு கார்பன் வெளியீட்டினைக் குறைக்க டீசல் மற்றும் பெட்ரோல் கார்களை தடைசெய்ய முடிவெடுத்துள்ளது.

## சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய மாநாடு

- அக்டோபர் 18-ம் தேதி சீன தலைநகர் பீஜிங்கில் சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய மாநாடு தொடங்கியது. இம்மாநாடு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும். இந்த மாநாடானது அக்டோபர் 24 அன்று நிறைவு பெறும். அப்போது புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.
- 370 முழு மற்றும் மாற்று உறுப்பினர்களை கொண்ட மத்திய உயர்மட்ட குழு இம்மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்படும். முழு நேர உறுப்பினர்கள் ஓட்டளிக்கும் உரிமையை பெற்றிருப்பர். இவர்கள் பல்வேறு துறைகளிலிருந்து செயல்படும் 2287 பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்படுவர். இவர்களுள் விவசாயிகள், கல்வியாளர்கள், சிறப்பு தொழில் செய்பவர்கள் ஆகியோர் அடங்குவர். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் முழுநேர உறுப்பினர்கள் இம்மாநாட்டிற்கு முன்பாகவே அவர்களின் பின்புலத்தை சரிபார்த்து கம்யூனிஸ்ட் கட்சியின் மீது மிகுந்த பற்று மற்றும் சரியான அரசியல் பார்வை மற்றும் நேர்மை போன்றவற்றை பரிசீலித்த பின்பு தேர்தலில் அனுமதிக்கப்படுவர்.
- சீன கம்யூனிஸ்ட் கட்சியானது 89 மில்லியன் உறுப்பினர்களை கொண்டது. கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்மட்டத்தில் உள்ள இந்த அமைப்புகள் கட்சியின் கட்டமைப்பில் காலத்திற்கு ஏற்ப மாற்றங்களை ஏற்படுத்தும். இவற்றுள் 25 உறுப்பினர்களை கொண்ட கட்சியின் அரசியல் விவகாரக்குழு (Politburo) , 7 உறுப்பினர்கள் கொண்ட அரசியல் விவகாரத்தின் நிலைக்குழு (Politburo Standing Committee), 2012 இல் ஆரம்பிக்கப்பட்டு அரசியல் நடைமுறைக்கு வந்த மத்திய ஒழுங்கு நடவடிக்கை கண்காணிப்பு குழு போன்றவை அடங்கும்.
- அரசியல் விவகாரக்குழுவின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு அரசியல் விவகாரக்குழுவானது சீனாவின் உயர்மட்ட தலைவர்களை அரசியல் விவகார நிலைக்குழுவிற்கு தேர்ந்தெடுக்கும்.
- இந்த மாநாடு கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கையை விட சித்தாந்தத்தை அதிகமாக பின்பற்றுகிறது. மேலும் சீன வளர்ச்சிக்கு தேவையான எதிர்கால திட்டங்களை இது வகுக்கிறது.
- 1982ம் ஆண்டு நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சியின் 12-வது மாநாட்டில் புகழ்பெற்ற தலைவரான டங் சியாவுபிங்கின் (Deng Xiaoping) பொதுவுடைமை சார்ந்த தாராள பொருளாதாரம் மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது.
- 2007ம் ஆண்டு நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சியின் 17வது மாநாட்டில் ஜி சின்பிங் (Xi Jinping) அரசியல் விவகார நிலைக்குழுவிற்கு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 5 ஆண்டுகளுக்கு

பின்பு கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக பொறுப்பேற்று கொண்டார். இது அவர் நாட்டின் அடுத்த தலைவர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட உள்ளதாக உலகிற்கு கட்டியம் கூறியது.

- 2013ம் ஆண்டு இவர் சீன அதிபராக பதவியேற்றார்.

*2017 **மாநாட்டின் முடிவுகள்***

- சீனாவின் ஆளும் கட்சியான கம்யூனிஸ்ட் கட்சி சீன அதிபர் ஜி சின்பிங்கிற்கு 2-வது முறையாக 5 ஆண்டு பதவிக்காலம் வழங்கியுள்ளது. மேலும் கட்சியின் அரசியல் சாசனம் திருத்தம் செய்யப்பட்டு அவரின் பெயரையும், கொள்கையையும் அரசியல் சானத்தில் சேர்த்துள்ளது. இதற்கு முன்பு மா சே துங் (Mao Zedong) மற்றும் டங் சியாவுபிங் ஆகியோரின் கொள்கைகள் மட்டுமே இதில் இடம் பெற்றிருந்தன.
- 5 ஆண்டுகளுக்கு பிறகு ஒரு வாரம் நடைபெற்ற மாநாட்டின் முடிவில் ஜி சின்பிங்கிற்கு கொள்கையான புதிய அத்தியாயத்திற்கான சீன பண்புகளை கொண்ட பொதுவுடைமை என்பது அரசியல் சாசனத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இதை சேர்ப்பதற்காக அரசியல் சாசனத்தில் திருத்தம செய்வதற்கான தீர்மானம் இயற்றப்பட்டது.
- சீன கம்யூனிஸ்ட் கட்சியில் அடுத்த 5 ஆண்டுக்கான புதிய மத்தியக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்த மத்தியக் குழுவானது முதல் ஆண்டு கூட்டத்தில் அரசியல் விவகாரக்குழு உறுப்பினர்களையும், அரசியல் விவகார நிலைக்குழு உறுப்பினர்களையும், கட்சியின் பொதுச் செயலாளரையும் தேர்ந்தெடுக்கும்.
- கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக உள்ள சீன அதிபர் ஜின் பிங் தலைமையில் அமைந்துள்ள இந்த குழு மாநாட்டிற்குப் பின் புதிதாக வெளி உலகிற்கு முழுமையாக அறிமுகப்படுத்தப்படும்.

## இந்தியா-மியான்மர் இடையே 11 ஒப்பந்தங்கள் கையெழுத்து

- மியான்மர் சென்றுள்ள இந்தியப் பிரதமர் அந்நாட்டுடன் பல்வேறு துறைகளில் இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்தும் வகையில், ஒப்பந்தங்களை ஏற்படுத்தியுள்ளார்.
- இந்தியா-மியான்மர் இடையே கடல்சார் பாதுகாப்பில் ஒத்துழைப்பு அளிப்பது, இரு நாடுகளும் தங்கள் நாட்டு கடற்பகுதியில் அனுமதிக்கப்பட்டுள்ள வர்த்தக மற்றும் சரக்கு கப்பல்கள் பற்றிய விவரங்களைப் பகிர்ந்து கொள்வது, இந்தியா-மியான்மர் இடையே, வரும் 2020-ஆம் ஆண்டு வரை கலாசார பரிமாற்ற நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்வது, தேர்தல் பணிகளில் தொழில்நுட்ப ஒத்துழைப்பைப் பெறுவதற்காக, இந்தியத் தேர்தல் ஆணையம் - மியான்மர் தேசியத் தேர்தல் ஆணையம் இடையேயான ஒப்பந்தம், இந்திய பிரஸ் கவுன்சில் - மியான்மர் பிரஸ் கவுன்சில் இடையான ஒப்பந்தம், மியான்மரின் யாமேதின் நகரில் உள்ள பெண் காவலர்கள் பயிற்சி மையத்தை மேம்படுத்துவது தொடர்பான ஒப்பந்தம், மருத்துவத் துறையில் ஒத்துழைப்பு உள்பட 11 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன.

## 'ஸ்பேஸ் கிட்ஸ் இந்தியா' - ரஷியா கூட்டு செயற்கைக்கோள் திட்டம்

- 'ஸ்பேஸ் கிட்ஸ் இந்தியா' அறிவியல் அமைப்புடன் இணைந்து ரஷியா கூட்டு செயற்கைக்கோள் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக ரஷிய துணைத் தூதரக இயக்குநர் மிக்கேல் கோர்போடா தெரிவித்தார்.
- மாஸ்கோ விமான நிறுவனம் விண்வெளி தொழில்நுட்பத்தில் முன்னணியில் உள்ளது. 'ஸ்பேஸ் கிட்ஸ் இந்தியா' மற்றும் மாஸ்கோ விமான நிறுவனம் விண்வெளி ஆராய்ச்சியை பொருளாதார மயமாக்கும் நோக்கத்தில் செயல்படவுள்ளது. இந்தியாவிற்கும் ரஷியாவுக்கும் இடையேயான உறவின் 70-ஆவது ஆண்டு தினத்தை நினைவு கூறும் வகையில் கூட்டு செயற்கைக்கோள் திட்டம் செயல்படவுள்ளது.

- இந்தக் கூட்டு செயற்கைக்கோள் இரண்டு மாதங்கள் சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருக்கும். பின்னர், இது விண்வெளியில் நிலை நிறுத்தப்படும். செயற்கைக்கோள் சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருக்கும்போது, அதன் தொடர்பின் மூலம் பல்கலைக்கழக மற்றும் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு பல்வேறு போட்டிகள் நடத்தப்படும். மேலும் இரண்டு நாடுகளின் தேசியக் கீதமும் இசைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## இந்திய பொருளாதார உச்சி மாநாடு

- உலக பொருளாதார மன்றத்தின் 33 ஆவது இந்திய பொருளாதார உச்சி மாநாடு (India Economic Summit) புது தில்லியில் நடைபெற்றது. இம்மாநாட்டை இந்திய தொழிலாக கூட்டமைப்பானது (Confederation of Indian Industry - CII) உலக பொருளாதார மன்றத்துடன் (World Economic Forum) இணைந்து நடத்தியது.
- இவ்வருட மாநாட்டின் கருத்துரு “சர்வதேச சவால்களில் இந்தியாவின் தடங்களை உருவாக்குதல்”
- பணமதிப்பு நீக்கம் . சரக்கு மற்றும் சேவை வரி போன்றவற்றோடு பாலின சமத்துவம் , சுற்றுலா, கல்வி , திறன் , உள்கட்டமைப்பு , பருவநிலை மாற்றம் போன்ற முக்கிய விவகாரங்கள் குறித்து 35 நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் ஆலோசித்தனர்.

## சர்வதேச செலாவணி நிதியத்தின் பொருளாதாரப் பார்வை

- சர்வதேச செலாவணி நிதியம் அதனுடைய அக்டோபர் மாத உலக பொருளாதாரப் பார்வையில் (World Economic Outlook - WEO) இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை 2017ல் 6.7 சதவீதமாகவும் 2018ல் 7.4 சதவீதமாகவும் குறைத்து கணித்துள்ளது.
- இது முந்தைய சர்வதேச செலாவணி நிதியத்தின் கணிப்பை விட 0.5 மற்றும் 0.3 சதவீதப் புள்ளிகள் குறைவாகும்.

## இந்திய தொழிலக உற்பத்தி விகிதம் குறியீடு – ஆகஸ்டு

- மத்திய புள்ளியியல் நிறுவனம் வெளியிட்டுள்ள தகவலின் படி, இந்திய தொழிலக உற்பத்தி விகிதத்தின் (Index of Industrial production - IIP) அடிப்படையில் அளக்கப்பட்ட தொழிற்சாலை உற்பத்தி ஒன்பது மாதத்திலேயே அதிக அளவாக ஆகஸ்ட் மாதத்தில் 4.3 சதவீதமாக உயர்ந்துள்ளது.
- இதற்கு முக்கிய காரணம் மூலதன பொருட்களின் அதிக அளவிலான உற்பத்தியோடு, வலுவான வகையில் சுரங்கத்துறை மற்றும் மின்சக்தித் துறையின் செயல்திறன் இணைந்து பங்களித்ததே ஆகும்.

### *இந்திய தொழிலக உற்பத்தி விகிதம்*

- இது இந்தியாவிற்கென உள்ள உற்பத்தி விகிதப் பட்டியல் ஆகும். இதில் தாதுச் சுரங்கம், மின்சக்தி மற்றும் உற்பத்தி ஆகிய பொருளாதாரத்தின் முக்கியத் துறைகளின் வளர்ச்சி பற்றிய விவரங்கள் பட்டியலிடப்படுகின்றன.

- இது அகில இந்திய அளவிலான ஒரு முழுமையான மற்றும் குறுகிய காலத்தில் ஏற்படும் உற்பத்தி மாற்றங்களை சுட்டிக்காட்டும் ஒரு குறியீடு ஆகும். சில முக்கியமான தொழிற்துறை பொருட்களின் உற்பத்தி அளவிலான மாற்றம் தேர்ந்தெடுக்கப்பட்ட கால அளவோடு தற்போது வரை குறிப்பிட்ட கால அளவோடு ஒப்பிடப்பட்டு வெளியிடப்படும். இது மத்திய புள்ளியியல் நிறுவனத்தால் தொகுக்கப்பட்டு குறிப்பிட்ட மாதம் முடிந்த ஆறு வாரத்திற்குப் பிறகு மாதந்தோறும் வெளியிடப்படுகின்றது.

## பணப்பைகளுக்கிடையே (Wallet) இணைந்து செயலாற்றும் தன்மை- ரிசர்வ் வங்கி அனுமதி

- வங்கிகளும், வங்கியல்லாத நிதி நிறுவனங்களும் ஆறுமாதங்களுக்குள் தங்களது பணப்பைகள் அல்லது முன்செலுத்தப்பட்ட கட்டண செலுத்து முறைகளை (Prepaid Payment instrument) ஒருங்கிணைந்த செலுத்து இடைதள வசதி (UPI-Unified Payment Interface) மூலமாக மின்னணுசார் செலுத்துமுறைகளை (Electronic Payments) இடையூறில்லாமல் மேம்படுத்தும் பொருட்டு இணைந்து செயலாற்றும் முறையை (Interperability) ஏற்படுத்த வேண்டும் என மத்திய ரிசர்வ் வங்கி அறிவுறுத்தியுள்ளது.
- இதன் முதற்கட்டமாக, ஒருங்கிணைந்த செலுத்து இடைதள வசதி மூலம் வாடிக்கையாளர் தகவல் நிரப்பப்பட்ட அனைத்து முன்செலுத்தப்பட்ட கட்டண செலுத்துமுறைகளும் வங்கிகளுக்குள்ளாக இணைந்து செயலாற்றும் முறையில் அமைக்கப்பட வேண்டும்.
- அடுத்த கட்டத்தில், இணைந்து செயலாற்றும் முறை பணப்பைகளுக்கும் வங்கிக் கணக்குகளுக்குமிடையே ஒருங்கிணைந்த செலுத்து இடைதள வசதி மூலம் செயல்படுத்தப்பட வேண்டும்.

## உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து ஆணையம் – 660 கோடிகளைப் பத்திரங்கள் வழியாக திரட்டியது


- இந்திய உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து ஆணையம் "இந்திய அரசால் முழுமையாக சான்றளிக்கப்பட்ட பத்திரங்கள்" என்ற வகையில் 660 கோடி ருபாய் திரட்டியுள்ளது.
- இந்தப் பத்திரங்கள் மூலம் கிடைக்கும் வருமானம் முழுவதும் தேசிய நீர்வழிகளை மேம்படுத்துவதற்கு தேவைப்படும் மூலதனச் செலவிற்காக உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து ஆணையத்தால் பிரத்யேகமாக பயன்படுத்தப்படும்.

### *உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து ஆணையம்*

- இந்தியாவில் நீர்வழிப் போக்குவரத்திற்கு பொறுப்பானதாக ஆரம்பிக்கப்பட்ட சட்டப்பூர்வ அமைப்பு இதுவாகும். இதன் தலைமையகம் உத்திரப் பிரதேசத்தின் நொய்டாவில் அமைந்து உள்ளது.

## சுதந்திரமான இயக்குநர்களை நியமிப்பதற்கான விதிமுறைகள்

- செபியினால் (SEBI) அமைக்கப்பட்ட பெருநிறுவன நிர்வாகத்திற்கான கோடக் தலைமையிலான குழு சமீபத்தில் இயக்குநர்களை நியமிப்பதற்கான புதிய விதிமுறைகளை வெளியிட்டுள்ளது.



CORP GOVERNANCE BOOST

- Sebi has mandated that an independent director can have a maximum of two consecutive terms of five years each with any company
- The market regulator has said all independent directors of a company should hold at least one meeting in a year, without the attendance of non-independent directors and members of the management
- Sebi notified these changes to the clause 49 of the listing agreement subsequent to the notification of the Companies Act, 2013

- ❖ சாதாரண பங்குதாரர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சுதந்திரமான மற்றும் தன்னிச்சையான இயக்குநர்கள் பங்குதாரர்களால் தேர்ந்தெடுக்கப்படாமல் நிர்வாகத்தாலேயே பெருமளவு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- ❖ இந்த குழு மிகுதியான அளவில் இயக்குநர்களும், சுதந்திரமான இயக்குநர்களும் வேண்டுமென்றும் அவர்களது சேர்க்கை மற்றும் தேர்விற்கான அடிப்படைத் தகுதிகள் பற்றியும் கூறுகின்றது.
- ❖ மேலும் இக்குழு குறைந்த பட்ச நிர்வாகக் கூட்டங்கள், அக்கூட்டங்களில் பங்கேற்கும் குறைந்தபட்ச வருகைப் பதிவுகள் ஆகியவற்றுக்கான விதிமுறைகள் பற்றியும் கூறுகின்றது.
- ❖ இது தன்னிச்சையான இயக்குநர்களுக்கான குறைந்தபட்ச ஊதியம் பற்றியும் குறிப்பிடுகின்றது.

## IBSA அறக்கட்டளை நிதியம்

- ❖ வளரும் நாடுகளில் வறுமை எதிர்த்து போராடுவதற்காக இந்தியா, பிரேசில், தென்ஆப்ரிக்கா நாடுகள் “IBSA Trust Fund” எனும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- ❖ தென்ஆப்ரிக்காவின் டர்பனில் நடந்த இப்சாவின் 8வது முத்தரப்பு அமைச்சரவை ஆணையத்தின் சந்திப்பில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.
- ❖ மூன்று நாடுகளும் ஆண்டுதோறும் பத்து லட்சம் (1 மில்லியன்) அமெரிக்க டாலர்களை (USD) இந்நிதிக்கு வழங்க உள்ளது. ஐநா வளர்ச்சி திட்டத்தின் தெற்கு ஒத்துழைப்பிற்கான சிறப்பு பிரிவு இந்நிதியை நிர்வகிக்க உள்ளது.
- ❖ இந்தியா, பிரேசில், தென் ஆப்பிரிக்க நாடுகளுக்கிடையே சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட சர்வதேச முத்தரப்பு பேச்சு வார்த்தை மன்றமாகும்.
- ❖ இது "பிரேசிலியா பிரகடத்தின்" ஏற்பினை அடுத்து 2003 ல் செயல்முறைக்கு வந்தது.

## வங்கிகளுக்கு சிறுசேமிப்புத் திட்டத்திற்கான அனுமதி

- ❖ அனைத்து பொதுத்துறை வங்கிகள் மற்றும் முன்னணி தனியார் வங்கிகளான ஐசிஐசிஐ, ஹெச்.டி.எப்.சி மற்றும் ஆக்ஸிஸ் வங்கிகள் பல்வேறு சிறு சேமிப்பு திட்டங்களின் கீழ் வைப்புகளை பெற மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.
- ❖ தேசிய சேமிப்பு பத்திரம் (National Saving Certificate) தொடர் வைப்பு சேமிப்பு திட்டம், மாதாந்திர வருவாய் அடிப்படையிலான சேமிப்பு திட்டம் போன்றவை போல பல்வேறு திட்டங்கள் மூலம் மக்களிடைய சிறு சேமிப்பை ஊக்குவிக்க இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- இதுவரை பொது வருங்கால வைப்பு நிதி, கிஷான் விகாஸ் பத்திரம் – 2014, பெண் குழந்தைகளுக்கான சுகன்யா சம்ரித்தி சேமிப்பு, 2014ஆம் ஆண்டின் மூத்த குடிமகன்கள் சேமிப்பு திட்டம் போன்றவற்றின் கீழ் மட்டுமே சந்தாக்கள் பெற வங்கிகள் அனுமதிக்கப்பட்டன. பெரும்பாலான சிறு சேமிப்பு திட்டங்கள் அஞ்சல் நிலையங்களிலே செயல்படுத்தப்பட்டு வந்தன.
- இத்திட்டத்தின் மூலம் சிறுசேமிப்பு திட்டங்களுக்கான சேவை விற்பனை நிலையங்களை அதிகரிப்பதன் மூலம் நிதி திரட்டலை மேற்கொள்ள இயலும்.
- அரசாங்கத்தின் முடிவின் அடிப்படையில் கடந்த 2016 ஏப்ரல் மாதத்திலிருந்து சிறு சேமிப்புகளுக்கான வட்டி விகிதங்கள் காலாண்டுக்கு ஒருமுறை மாற்றியமைக்கப்படுகின்றன.

## வங்கிக் கணக்குடன் ஆதார் இணைப்பு கட்டாயம்: ரிசர்வ் வங்கி


- சட்டவிரோத பண பரிமாற்ற தடுப்புச் சட்டத்தின் படி, வங்கிக் கணக்குடன் ஆதார் எண்ணை இணைப்பது கட்டாயமாகும் என்று ரிசர்வ் வங்கி விளக்கமளித்திருக்கிறது.
- சட்டவிரோத பண பரிமாற்ற தடுப்பு சட்டத்தில் கொண்டு வரப்பட்ட திருத்தங்கள், 2017 ஜூன் 1 முதல் அமலுக்கு வந்துள்ளது. இதில் எந்த மாற்றமும் செய்யப்பட வில்லை. அந்த விதிமுறைகள் அப்படியே அமலில் உள்ளன. இந்த விதியை, வங்கிகள் அமல்படுத்த வேண்டும். இதை பின்பற்றும்படி, ரிசர்வ் வங்கி தனியாக உத்தரவிடத் தேவையில்லை.
- டிச., 31க்குள், ஆதாரை இணைக்காதவர்களின் வங்கிக் கணக்கு முடக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## அசல் அடையாள அட்டை கட்டாயம்

- மத்திய நிதி அமைச்சகத்தின் கீழ் செயல்படும் வருமான வரித்துறையானது கருப்பு பணம் மற்றும் கள்ளப் பணப்புழக்கத்தை களைய அனைத்து வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு 50,000 ரூபாய்க்கு மேற்பட்ட வங்கியியல் கையாடலின் போது தனிநபர்களின் உண்மையான அடையாள அட்டையை சரி பார்க்க வேண்டியது கட்டாயம் என உத்தரவிட்டுள்ளது.
- இதற்காக வருமான வரித்துறையானது பணமோசடி தடுப்பு (ஆவண பராமரிப்பு) விதிகளில் திருத்தத்தைக் கொண்டுவந்துள்ளது..
- பண மோசடி தடுப்பு (ஆவண பராமரிப்பு) சட்டம் மற்றும் அவற்றின் விதிகளானது வங்கிகள், நிதியியல் நிறுவனங்கள் மற்றும் பிற இடைப்பரிவர்த்தனை நிறுவனங்கள் தங்கள் வாடிக்கையாளர்களின் அடையாளங்களை சரிபார்த்து, ஆவணமிட்டு பராமரித்து அத்தகவல்களை இந்திய நிதியியல் நுண்ணறிவு பிரிவிடம் Financial Intelligence Unit of India (FIU-IND) அளிக்க வேண்டியதை கட்டாயமாக்கியுள்ளது.

## மெல்பர்ண் மெர்சர் உலகளாவிய ஓய்வூதியக் குறியீடு

- 2017 ஆம் ஆண்டிற்கான மெல்பர்ண் மெர்சர் உலகளாவிய ஓய்வூதியக் குறியீட்டில் தொடர்ந்து ஆறாவது வருடமாக டென்மார்க் முதலிடத்தைப் பிடித்துள்ளது. 30 நாடுகளைக் கொண்ட இந்த தரவரிசையில் இந்தியா 28 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.
- ஒட்டுமொத்த குறியீட்டு மதிப்பில் (இந்தியா) சென்ற ஆண்டு 43.4 புள்ளிகளைப் பெற்றிருந்தது. இவ்வாண்டின் அறிக்கையில் இது 44.9 ஆக உயர்ந்துள்ளது. போலந்து, ஜெர்மனி, பிரான்சு, ஜப்பான், இத்தாலி, ஆஸ்திரியா, பிரேசில், சீனா மற்றும் அர்ஜென்டீனா நாடுகளை விட இந்தியாவின் ஓய்வூதிய திட்டம் நிலைத்தன்மையுடன் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.




- மெல்பர்ன் மெர்சர் உலகளாவிய ஓய்வூதியக் குறியீடானது, உலகம் முழுவதும் உள்ள நாடுகளில் பணி ஓய்வு பெற்றபின் வருமானம் அளிக்கும் திட்டங்களை ஒப்பிட்டு தரவரிசைப் படுத்துகிறது. தரவரிசைக்கு கணக்கில் கொள்ளப்படும் அளவீடுகள்:

    1. நிறைவுத் தன்மை
    2. நிலைத்தன்மை
    3. நேர்மைத் தன்மை

- இந்தக் குறியீடு அமெரிக்க, ஐரோப்பிய மற்றும் ஆசிய பசிபிக் பிராந்தியத்தைச் சேர்ந்த 27 நாடுகளின் ஓய்வூதிய வருமான திட்டங்களை மதிப்பிட்டு வந்தது. இந்த வருடம் கொலம்பியா, நியூசிலாந்து மற்றும் நார்வே ஆகிய நாடுகள் இணைக்கப்பட்டு 30 நாடுகள் இந்த மதிப்பீட்டில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.

## இந்திய பொதுக்கடன் பதிவேட்டிற்கான தனி நிபுணர்குழு (Public Credit Registry - PCR) – ரிசர்வ் வங்கி

- கடன் தகவலமைப்பு முறையை உருவாக்குதலுக்காக ரிசர்வ் வங்கி பொதுக்கடன் பதிவேட்டிற்கான ஒரு உயர்மட்ட நிபுணர் குழுவை ஏற்படுத்தியுள்ளது.
- இந்த பதிவேடு அனைத்து பங்குதாரர்களும் எளிதில் அணுகும் வகையில் ஒரு பரந்த வங்கி கடன்களுக்கான மத்திய தகவல் மையமாக இருக்கும்.
- வங்கிகளின் கடன் அபாயங்கள் பற்றிய மதிப்பீட்டினை மேம்படுத்தவும், வாராக்கடன்களை முன்கூட்டியே கணிக்கவும், கடன்களை மீட்கவும் உதவிடும் வகையில் இப்பதிவேடு அனைத்து வித கடன்களின் தரவுகளையும் பதிவு செய்யும்.
- ஆரம்பத்தில் இப்பதிவேடு வங்கி வாடிக்கையாளர்களுக்கு உதவிடும். பின்னாளில் இந்த சேவை மற்ற வங்கி சாரா நிதிநிறுவனங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

- ❖ மத்திய வங்கியைப் போல இது ஒரு அரசு நிறுவனமாக நடத்தப்படும்.

## டிராக்டர்கள் கொள்முதலுக்கு நிதியளிக்க எஸ்கார்ட்ஸ் நிறுவனத்துடன் பாரத ஸ்டேட் வங்கி கைகோர்ப்பு

- ❖ நாட்டின் மிகப் பெரிய பொதுத்துறை மற்றும் கடனளிப்பு வங்கியான பாரதஸ்டேட் வங்கி, விவசாயிகள் எஸ்கார்ட்ஸ் டிராக்டர்கள் வாங்குவதற்கு நிதியளிக்க எஸ்கார்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்துடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- ❖ சந்தைகளை ஊக்குவிப்பது மற்றும் அணுகத்தக்க முறையில் அமைப்பது, எஸ்கார்ட்ஸ் மூலம் தயாரிக்கப்பட்ட பவர்டிராக் (Power Trac) மற்றும் (Farmtrac) ஃபார்ம்டிராக் டிராக்டர்களை வாங்க விரும்பும் நாடு முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு போட்டித்தன்மை கொண்ட வட்டி விகிதங்களில் உயர்ந்த அம்சங்களுடன் கூடிய ஒழுங்குபடுத்தப்பட்ட நிதிய வசதிகளை அளிப்பது ஆகியன எஸ்கார்ட்ஸ் உடனான கூட்டு ஒப்பந்தத்தின் நோக்கங்களாகும்.
- ❖ எஸ்கார்ட்ஸ் ஹரியானாவில் உள்ள ஃபரிதாபாத்தின் ஒரு முன்னணி டிராக்டர் மற்றும் கட்டுமானக் கருவி தயாரிப்பு நிறுவனமாகும்.

## வங்கி மறுமுதலீட்டுத் திட்டத்தை அரசு அறிவித்துள்ளது.

- ❖ அடுத்த இரண்டு ஆண்டுகளில் 2.11 லட்சம் கோடி மூலதனத்தை பொதுத்துறை வங்கிகளில் (PSB's) முதலீடு செய்வதற்கான லட்சியத் திட்டத்தை மத்திய அரசு அறிவித்துள்ளது. இது சிறு குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான (MSMEs) நிதி உதவியை 50 தரவுகளாக அளிக்க முன்னுரிமை தரப்பட்டுள்ளது.
- ❖ மறுமுதலீட்டுப் பத்திரங்களின் தன்மை வரவிருக்கும் மாதங்களில் முடிவு செய்யப்படும். மூலதன உட்செலுத்துதலைத் தொடர்ந்து வங்கித்துறை சீர்திருத்தங்கள் இருக்கும்.
- ❖ இது பொதுத்துறை வங்கிகளின் கடன்திறனை அதிகரிக்கும், தனியார் துறை முதலீட்டை மேம்படுத்துவதோடு பொருளாதாரத்தையும் அதிகரிக்கும்.

## துருப்பிடிக்காத இரும்பு இறக்குமதியின் மீது எதிர்குவிப்பு தடுப்பு வரி

- ❖ துருப்பிடிக்கா சில குளிர் உருளை எஃகு தயாரிப்புகள் மீது சீனா, அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகளிலிருந்து குறைந்த விலையில் இறக்குமதி செய்வதை தடுக்கும் பொருட்டு எதிர் குவிப்பு தடுப்பு வரியினை (Anti-Dumping Duties), உள்ளூர் தயாரிப்பாளர்களை கருத்தில் கொண்டு, இந்தியா சுமத்தியுள்ளது.
- ❖ இந்த புதிய வரி விதிப்பு, 10-டிசம்பர்-2020 வரை நடைமுறையில் இருக்கும். சில ரக துருப்பிடிக்காத இரும்பிற்கு வரிவிலக்கு உண்டு.
- ❖ வெப்ப உருளை மற்றும் குளிர் உருளை துருப்பிடிக்காத எஃகு தயாரிப்புகளின் மீது கடந்த மாதம் அரசு கூடுதலாக 18.95% ஈடுசெய் வரியினை விதித்துள்ளது. இதுவே இரும்புத் தயாரிப்புகளின் மீதான முதலாவது வரிவிதிப்பாகும்.

### *ஈடுசெய் வரி (Countervailing Duty)*

- ❖ இது ஓர் கூடுதல் இறக்குமதி வரிவிதிப்பாகும். இது ஏற்றுமதி செய்யும் நாட்டில் அப்பொருள்கள் ஏற்றுமதி மானியங்கள் மற்றும் வரிவிலக்குகள் பெற்றிருப்பின், அதன் மீது இறக்குமதி செய்யப்படும் நாட்டினால் வரி விதிக்கப்படுகிறது.

### *எதிர்குவிப்பு தடுப்பு வரி (Anti-Dumping Duty)*

- ❖ எதிர் குவிப்பு தடுப்பு வரி என்பது, உள்நாட்டு அரசினால் விதிக்கப்படும் ஓர் பாதுகாப்பு வரியாகும். இதன் மூலம் நியாயமான சந்தைவிலை நிர்ணயிக்கப்படும் என நம்பப்படுகிறது.

- குவித்தல் என்பது பொதுவாக ஏற்றுமதி செய்யும் நாடு, சரக்குகளை இறக்குமதி செய்யும் நாட்டின் சந்தை விலையைவிட மிகக் குறைந்த விலைக்கு சரக்குகளை தருவதாகும்.
- உள்ளூர் சந்தைகளை பாதுகாக்க, பல்வேறு நாடுகள் எதிர் குவிப்புத் தடுப்பு வரியினை விதித்துள்ளன. அவற்றின் மூலம் சொந்த நாடுகளின் தேசியச் சந்தைகள் காக்கப்படும் என நம்பப்படுகிறது.

## நலத்திட்ட நிதிகளை கண்காணிப்பதற்கு உதவ, பொது நிதி நிர்வாக அமைப்பு

- பல்வேறுபட்ட, அரசு நலத்திட்டங்களுக்கான நிதி அளித்தலை கண்காணிக்க பொது நிதி நிர்வாக அமைப்பினை (Public Financial Management System - PFMS) கட்டாயமாக்கப் பயன்படுத்த வேண்டும் என நிதியமைச்சர் அருண் ஜேட்லி தெரிவித்துள்ளார்.
- PFMS, மூலவளங்களின் கிடைக்குமளவு, நிதிப்பாய்வு மற்றும் அசல் பயன்பாடு ஆகியவை தொடர்பான தகவல்களை உடனுக்குடன் தரும்.
- இது நிதி நிர்வாகத்தை சீர்படுத்தும் திறன் மிகு திட்டமாகும். இதன் மூலம் நிதிஅமைப்புகளின் மிதவைத்தன்மை பெருமளவு குறைந்து, நேரத்திற்கேற்ப விடுவிப்பு வசதியை ஏற்படுத்தும். மேலும் அரசின் கடன்கள் மீதான வட்டிச் செலவால் அரசிற்கு ஏற்படும் நேரடி தாக்கத்தையும் குறைக்கும்.
- PFMS ஆனது அரசினை, பிணைக்கப்பட்ட நிதி நிர்வாக அமைப்பு (The Government Integrated Financial Management Information System - GIFMIS) நோக்கி செலுத்தும். இது ஓர் ஒட்டு மொத்த வரவு செலவு மற்றும் கணக்கியல் திட்டமாகும்.

## 34 பொதுத்துறை பங்குகளை உத்திசார்ந்து விற்பதற்கு நிதி ஆயோக் பரிந்துரை

- 34 பொதுத்துறையின் பங்குகளை உத்திசார் முறையில் விற்பதற்கு அரசின் கருத்தாளர் குழுவான நிதி ஆயோக் பரிந்துரைத்துள்ளது.
- நஷ்டத்தில் இயங்கும் பொதுத்துறை நிறுவனங்களை விற்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய கருத்தாளர் குழுவை பிரதமர் அலுவலகம் கேட்டுக் கொண்டது.

## மத்திய அமைச்சரவை குழு பொதுத்துறை நிறுவன நிதி அமைக்க ஒப்புதல்

- மத்திய நிதியமைச்சர் அருண் ஜெட்லியின் தலைமையிலான மத்திய அமைச்சரவை குழு 22 பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளோடு ஆக்சிஸ் வங்கி, ITC ,எல் & டி ஆகிய நிறுவனங்களின் பங்குகளும் உள்ளடங்கிய புதிய பங்குச்சந்தை வர்த்தக நிதி (Exchange Traded Fund - ETF ) ஒன்றை உருவாக்க அனுமதி அளித்துள்ளது.
- இந்த நிதியானது பரஸ்பர நிதிகளைப் போன்றவை. மேலும் பல பங்குகளை உள்ளடக்கியவை . பாரத்-22 என்பது அரசால் சமீபத்தில் ஏற்படுத்தப்பட்ட பங்குச்சந்தை வர்த்தக நிதியாகும் . இது பங்கு விலக்கல் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

## தளவாட தரவு வங்கி (LDB) சேவை

- இந்தியாவில் அனைத்து முக்கிய துறைமுகங்களிலும் தளவாட தரவு வங்கி (The Logistics Data Bank) சேவை அமைக்கப்பட உள்ளது. தகவல் தொழில் நுட்பங்களை பயன்படுத்தி நாட்டிலுள்ள தளவாடங்கள் துறையின் செயல்திறனை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

- இந்திய துறைமுக கூட்டமைப்பு (Indian Ports Association - IPA) கப்பல் வழி போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் இயங்குகின்ற துறைமுகங்களை மேற்பார்வையிடும் ஒரு அமைப்பாகும். தற்சமயம் இச்சேவையானது மேற்கில் உள்ள தளவாடங்களின் வழித்தடங்களுக்கு மட்டும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- தளவாட தரவு வங்கி திட்டத்தின் ஒரு பகுதியாக, ஒவ்வொரு கொள்கலனிலும் ரேடியோ அதிர்வெண் அடையாள (RFID) பட்டை ஒட்டப்பட்டு அவை ரேடியோ அதிர்வெண் அடையாள பட்டை கண்காணிப்பாளர்களால் கண்காணிக்கப்படுகிறது. இது இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு பொருட்களின் போக்குவரத்து நிலையை கண்காணிக்கப் பயன்படுகிறது.
- தளவாட தரவு வங்கி திட்டமானது ஜூலை 2016ம் ஆண்டு வெளியிடப்பட்டது. இது இந்திய அரசின் வெளிநாட்டு வர்த்தகத்தை ஊக்குவிக்கவும், வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யவும், எளிதில் தொழில் நடைபெறுவதை உறுதி செய்யவும் துவங்கப்பட்டது.
- கொள்கலன்கள் செல்லும் நேரத்தை குறைக்கவும் பரிவர்த்தனை செலவுகளை குறைக்கவும் இத்திட்டம் பெரும் உதவியாக இருக்குமென கருதப்படுகிறது.
- ஜப்பானில் தகவல் தொழில்நுட்ப நிறுவனமான NEC Corporation மற்றும் டெல்லி மும்பை இன்டஸ்டிரியல் காரிடர் டிரஸ்ட் (DMIC) ஆகியவை இணைந்து ஒரு சிறப்பு நோக்கு வாகனத்தை டெல்லி மும்பை இன்டஸ்டிரியல் காரிடர் டெவலப்மண்ட் கார்ப்பரேசன் லாஜிஸ்டிக் டேட்டா சர்வீஸ் லிமிடெட் (Delhi Mumbai Industrial Corridor Development Corporation Logistics Data Services Ltd. - DLDSL) என்ற பெயரில் உருவாக்கியுள்ளனர்.
- இந்த திட்டம் உள்நாட்டு கொள்கலன் கிடங்கு மற்றும் கொள்கலன் சரக்கு நிலையங்களின் ஒட்டு மொத்த இயக்கத்தை இரயில் அல்லது சாலைப் போக்குவரத்து மூலம் உள்ளடக்குகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்ப செய்திகள்

## சிக்கன்குனியாவிற்கான புதிய மருந்து – பைப்பராஜைன்

- ரூர்க்கியில் உள்ள இந்திய தொழில்நுட்பத்தில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் ஏற்கெனவே வைரல் அல்லது கிருமி எதிர்ப்பு மருந்தான பைப்பராஜைன் என்ற மருந்தை சிக்கன்குனியா என்ற வியாதியை குணமாக்க பயன்படுத்தினர்.
- தற்சமயம், இவ்வியாதிக்கு மருந்து எதுவுமில்லை.
- பைப்பராஜைன் கிருமி தொற்றுகளை குணப்படுத்துவதற்கு பயன்படுத்தப் படுகிறது.
- பைப்பராஜைனில் உள்ள மூலக்கூறின் கிருமி எதிர்ப்பு நடவடிக்கை நோய்க்கிருமி பெருகுவதை தடுக்கிறது.
- இலக்கான பாதிக்கப்பட்ட செல்லுடன் மருந்து பிணைக்கப்படுவதால் வைரஸின் சூழப்பட்ட புரதத்தோடு உயிர் செல்லின் புரதம் தொடர்புக் கொள்ளுதல் தடுக்கப்படுகிறது. இதனால் பாதிக்கப்பட்ட செல்லில் இருந்து வைரஸ் வெளியாவது தடை செய்யப்படுகிறது.

## இரண்டு கைகளின் மேற்பகுதியிலும் – முதல் உறுப்பு மாற்று சிகிச்சை

- ஆசியாவின் முதல் இரண்டு கைகளின் மேற்பகுதிக்கான உறுப்பு மாற்றுச் சிகிச்சை கொச்சியில் உள்ள அம்ரிதா மருத்துவ அறிவியல் நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட்டது.
- முன்னங்கை அல்லது மணிக்கட்டு மாற்றுச் சிகிச்சையை விட மேற்கை மாற்றுச் சிகிச்சை மிகுந்த சவாலானது. ஏனெனில் நரம்புகளையும், தசைகளையும், தமனிகளையும், தசை நாண்களையும் துல்லியமாக கண்டுபிடித்து இணைப்பதில் உள்ள சிக்கல்களே இதற்குக் காரணமாகும்.

- இது வரையில் உலகம் முழுவதும் ஒன்பது முறை மட்டும் இம்மாதிரியான சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- உலகில் முதல் முறையாக ஆண் உறுப்புத் தானம் செய்தவரின் கை ஒரு பெண்ணிற்குப் பொருத்தப்பட்டுள்ளது.

## கருந்துளை இணைகள் கண்டுபிடிப்பு

- இந்தியாவை பூர்வீகமாக கொண்ட ஆராய்ச்சியாளர் ஒருவர் உள்ளடங்கிய விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் குழுவானது அண்டவெளியின் மையத்தில் ஐந்து கருந்துளை இணைகளை கண்டறிந்துள்ளனர்.
- இவை ஒவ்வொன்றும் சூரியனை விட மில்லியன் மடங்கு நிறையுடையவை.
- இக்கண்டுபிடிப்பு விண்வெளி ஆராய்ச்சியாளர்களுக்கு எவ்வாறு கருந்துளைகள் வளர்கின்றன என்றும், எப்படி அவைகளால் வலிமையான புவிஈர்ப்பு அலைகளை வெளியிட முடிகின்றது என்பதைப் பற்றிய அறிய நல்ல புரிதல்களை பெற உதவும்.
- இக்கருந்துளை இணைகள் விண்வெளியில் உள்ள இரு அண்டங்கள் ஒன்றோடு ஒன்று மோதி பின்பு இணைவதால் உருவாகும் பெரும் நிறையுடைய இரு கருஇந்துளைகள் ஒன்றுக்கொன்று மிகவும் நெருங்கிவரும் போது உருவாகின்றன.

    1. நாசாவின் சந்திரா எக்ஸ்ரே ஆய்வுக்கூடம்,
    2. பரந்த – புல அகச்சிவப்பு வானவியல் ஆய்வு (Wide Field Infrared Sky Explorer Survey)
    3. அரிஸோனாவில் நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள பெரும் இருமை நோக்கு தொலைநோக்கி

  போன்றவற்றை உள்ளடக்கிய பல ஆய்வகங்களிடமிருந்து பெறப்பட்ட தரவுகளின் தொகுப்பின் மூலமாக இந்த கருந்துளை இணைகள் கண்டறியப்பட்டு உள்ளன.

## சொத்துகளை ஏலமிடும் இந்தியாவின் முதல் ஆன்லைன் தளம்

- மேஜிக்பிரிக் என்னும் நிறுவனம் M3M மேம்பாட்டாளர் எனும் நிறுவனத்துடன் இணைந்து குடியிருப்பு மற்றும் வணிகச் சொத்துகளை ஏலமிட்டு விற்பதற்கான இந்தியாவின் முதல் ஆன்லைன் தளத்தை தொடங்கியுள்ளது.
- இந்நிறுவனம் சமீபத்தில் மத்திய தொலை தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் வழங்கும் தரப்படுத்துதல்,சோதனை செய்தல் மற்றும் தரக்கட்டுப்பாடு விருதினை (Standardisation, Testing and Quality Certification -STQC) பெற்றது.
- இதன் மூலம் சொத்துகளை ஏலமிட்டு விற்பனையிடும் ஆன்லைன் தளத்தை நடத்த தகுதி பெற்ற ஒரே ரியல் எஸ்டேட் நிறுவனமாக இந்நிறுவனம் உருவாகியுள்ளது.

## எரிபொருள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான தேசிய மையம் – சென்னை

- உலகின் மிகப்பெரிய எரிபொருள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான தேசிய மையம் (Combustion Research Centre) சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகத்தில் தொடங்கப்பட்டுள்ளது.
- இதன் உள்கட்டமைப்பு வசதிகள் உலகில் எந்தவொரு கல்வி நிறுவனத்திலும் இல்லாத அளவிற்கு மிகப்பெரியதாக அமைக்கப்பட்டுள்ளது.

***எரிபொருள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான தேசிய மையம்***

- இந்த மையத்தில் உந்தூர்தி , வெப்ப ஆற்றல் , விண்வெளி உந்துதல் அமைப்பு போன்றவற்றைப் பற்றி ஆராய்ச்சிகள் நடத்தப்படும். மேலும் புவிஈர்ப்பு விசை இல்லா விண்வெளியில் எரிபொருள் எரிவது குறித்த 'Microgravity Combustion' எனும் மிகக்குறைந்த ஈர்ப்பு விசை எரியூட்டல் குறித்தும் ஆராய்ச்சிகள் சிறிய அளவில் இங்கு நடத்தப்படும்.
- இந்த மையம் இந்திய விஞ்ஞான சமுதாயத்திற்கு பெரும் ஊக்கமளிக்கும். மேலும் மாற்று எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த ஆராய்ச்சிக்கும் பெரும்பங்காற்றும்.
- இந்திய அரசாங்கத்தின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறையின் (Department of Science and Technology- DST) கீழ் இயங்கும் அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி வாரியத்தால் இந்த மையம் ஆதரிக்கப்படுகிறது.

## தோல்புற்றுச் செல்களை கொல்வதற்கு தாவரச்சாறு மற்றும் வெப்பத்தை பயன்படுத்தியிருக்கிறது இந்திய தொழில்நுட்ப நிறுவனம்

- இந்திய மருந்துத் தாவரமான கடம்ப மரத்தினுடைய (அந்தோசெபாலஸ் கடம்பம்) பச்சையம் நிறைந்த உயிரி மூலக்கூறு சாற்றின் நானோதுகள் உருவாக்கமும் (Nano Particle Formulation) அருகாமை – அகச்சிவப்பு சாயமும் (Near – Infrared dye) இணைந்து தோல்புற்றுச்செல்களை தேர்ந்த வகையில் கொல்லப்படுவதை புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- மேம்படுத்தப்பட்ட எதிர்வினை ஆக்ஸிஜன் இனங்களின் உருவாக்கத்தின் போது தாவரச்சாறானது புற்றுச் செல்களுக்கு நச்சாக விளங்குகிறது. அப்போது, ஒளிவெப்பச் சிகிச்சை (Photo thermal therapy) மூலமாக புற்றுச்செல்களை அழிப்பதற்கு சாயமானது உதவுகிறது.
- அருகாமை – அகச்சிவப்பு ஒளியில் கதிர்வீச்சு செய்யப்படும் போது சாயம் வெப்பமடைகிறது. மேலும் பல்படிவ சவ்விலிருந்து சாறு வெளியேற்றத்தினை எளிதாக்குகிறது.
- நான்கு அல்லது ஐந்து நிமிட கதிர்வீச்சு செய்யப்படுதலுக்கு பின்னர் 80 சதவிகித புற்றுச்செல்கள் கொல்லப்படுகின்றன.
- ஹைதராபாத் மற்றும் மும்பை இந்தியத்தொழில்நுட்ப நிறுவனங்களின் இரண்டு குழுக்களும் ஒன்றாக இணைந்து தோல்புற்றுச் செல்களைப் பயன்படுத்தி இந்த வெற்றியினை சாதித்துள்ளன.

***ஒளி வெப்ப சிகிச்சை** : (Photo thermal therapy)*

- புற்றுநோய் உட்பட பல்வேறு மருத்துவ நிலைகளுக்கு மின்காந்த கதிர்வீச்சினை (Electro Magnetic Radiation) பயன்படுத்தி சிகிச்சையளிக்கும் முறையே ஒளிவெப்ப சிகிச்சை ஆகும்.


## நீரில் புளூரைடு கலப்பை நீக்குதல்

- ஐதராபாத்தின் இந்திய ஆராய்ச்சி கழகத்தை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் செயல்படுத்தப்பட்ட ஜாமூன் விதைப் பொடியை (நாவல்) பயன்படுத்தி குடிநீரிலுள்ள புளூரைடு கலப்பு அளவை WHO வின் புளூரைடு கலப்பு வரையறை அளவான லிட்டருக்கு 1.5 மில்லி கிராம் அளவைக் காட்டிலும் குறைவாக கொண்டு வந்துள்ளனர்.
- செயல்படுத்தப்பட்ட நாவல் விதையானது குறைந்த PH ல் நேர்மறை மின்னூட்டத்தைப் பெறுகிறது. அமில கரைசலில் உள்ள எதிர்மறை மின்னூட்டமானது புளூரைடு அயனிகளை விலக்கும் போது செயல்படுத்தப்பட்ட நாவல் விதையின் நேர்மறை மின்னூட்டம் அவற்றை கவருகிறது.
- PH ன் அளவு குறையும் போது புளூரைடு அயனிகளின் நீக்கம் அதிகரிக்கும். அதிகபட்ச புளூரைடு அயனிகளின் நீக்கம் PH 3ல் கண்டறியப்பட்டுள்ளது.

- இந்தியாவில் மோசமான புளூரைடு கலப்பு பாதிப்புடைய கிராமமான நால்கொண்டா கிராமத்திலிருந்து பெறப்பட்ட நிலத்தடி நீரில் இச்சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- இந்த சோதனை மூலம் நிலத்தடி நீரின் புளூரைடு அளவு 1.5 mg Per liter என்ற அளவுக்கு வெற்றிகரமாக குறைக்கப்பட்டுள்ளது.

## கருங்காய்ச்சலுக்கு புதிய வகை வைரஸ் காரணம் – விஞ்ஞானிகள்

- கருங்காய்ச்சலின் (காலா-அஸார்) நிலைத்தன்மைக்கு லெப்சே என்எல்வி1 (Lepsey NLV1) என்ற இதற்கு முன் அறியப்படாத புதிய வகை வைரஸ் காரணமாக இருக்கலாம் என விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.
- எனினும், ஒட்டுண்ணிகள் எப்படி தொற்றுகிறது என்றும் உடலின் உள்ளே எப்படி மறைந்து கொண்டிருக்கிறது என்பதைப் பற்றியும் விஞ்ஞானிகள் இன்னும் தெளிவாக கண்டறியவில்லை.




- கருங்காய்ச்சல் (காலா-அஸார்) விசரல் லெஷ் மேனியாசிஸ் (Visceral leishmaniasis - VL) என்று அழைக்கப்படுகிறது. இது லெஷ்மேனியா முன்னுயிரி (Protozoan) ஒட்டுண்ணிகளால் ஏற்படுகிறது.
- இது பாதிக்கப்பட்ட மணல் கொசுக்களால் மனிதர்களுக்குப் பரவுகிறது.
- இது உடல் எடையிழப்பு, கல்லீரல் மற்றும் மண்ணீரல் வீக்கம், காய்ச்சல் மற்றும் இரத்த சோகை போன்றவற்றை ஏற்படுத்தும் தன்மைகளைக் கொண்டது.
- இந்த ஒட்டுண்ணிகளானது சிகிச்சை அளிக்காவிட்டால், கல்லீரல் மண்ணீரல் மற்றும் எலும்பு மஜ்ஜை போன்றவற்றிற்குள் ஊடுருவி மரணத்தை ஏற்படுத்திவிடும்.

- இந்திய துணைக்கண்டத்தில் உள்ள நான்கு நாடுகளில் உள்ள 119 மாவட்டங்களில் இந்த நோய் பரவி இருக்கிறது.
- இது இந்தப் பகுதிகளுக்குரிய நோயாகும்.
- உலகில் பாதிக்கும் மேற்பட்ட கருங் காய்ச்சல் பாதிப்புகள் இந்தியாவில் ஏற்படுகின்றன.

## வால்மீன்களில் குறுகிய வளையங்கள்

- புவியிலிருந்து குறைந்தபட்சம் 3 சூரியக் குடும்பங்களை தாண்டி, வளிமண்டலத்தின் புறப்பகுதியில் அடர்த்தியான குறுகிய வளையங்களை கொண்ட வால் நட்சத்திரங்கள் பெரும் கோள்களை உருவாக்க ஒன்றுக்கொன்று நெருங்கி வருவது நாசாவினுடைய தொலைநோக்கியின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது .
- இவை எதிரொலிக்கும் ஒளியின் அளவினைப் பொறுத்து இவற்றின் நிறை மதிப்பிடப்படுகிறது.
- இந்த நிறை மதிப்பீடானது இத்தகு வழிகளில் உருவாகிவரும் கோள்களானது ஒவ்வொன்றும் குறைந்தபட்சம் சில பூமிகளை உள்ளடக்கிய அளவில் இருக்கும் என காட்டுகின்றன.
- பிரகாசமான சுற்று வளையங்களை கொண்ட இந்த வால் நட்சத்திரங்கள் அதனுடைய தாய் நட்சத்திரங்களிலிருந்து 75 முதல் 200 வானியல் அலகு தூரத்தில் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளன. இது சூரியனிடமிருந்து புளோட்டோ இருக்கும் தொலைவை போன்று 2 முதல் 7 மடங்கு வரை இருக்கலாம் என கருதப்படுகிறது.
- இந்த வளையங்களின் கட்டமைவானது, செறிந்த பனியிலிருந்து குறைவான பனியை கொண்டதாகவும் ஆனால் மிகுந்த கரிமப் பொருளை கொண்டதாகவும் உள்ளன.
- HR4796A என்ற கோளை சுற்றியுள்ள சிவப்பு வளையத்தை ஆராய்வதற்கு ஆராய்ச்சியாளர்கள் ஆர்வமாக உள்ளனர். இந்த வளையமானது ஆரம்ப நிலையிலுள்ள சூரிய குடும்பத்தின் அசாதாரணமான இறுக்க நிலையை காண்பிக்கிறது.

## மலேரியாவை கண்டறிய புதிய கருவி

- மலேரியாவை கண்டறிய பெங்களூரிலுள்ள இந்திய அறிவியல் கழக விஞ்ஞானிகள் புதிய கருவியை கண்டறிந்துள்ளனர்.
- தற்போது இரத்த சிவப்பு அணுக்களில் உள்பகுதியில் மலேரிய பாரசைட் பிளாஸ்மோடியம் இருப்பதை நுண்ணோக்கி வழியே பார்த்து கண்டறியும் முறையே உள்ளது. ஆனால் புதிய கருவியின் மூலம் இரத்த சிவப்பணுக்களில் பாரசைட் இருப்பதை விட மலேரிய தாக்குதல் உள்ளவர்களிடம் அருகில் இருக்கும்போதே கண்டறிய முடியும். மலேரியாவில் பாதிக்கப்பட்டவர்களின் அருகே உள்ள இரத்த சிவப்பணுக்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு உள்ளதைப் போலவே மிகுந்த விறைப்புடன் இருக்கும். இதுவே அதனை எளிதில் கண்டறிய உதவுகிறது.
- சாதாரண இரத்த சிவப்பணுக்களின் பிரவுனியன் இயக்கமானது (மூலக்கூறுகளின் சீரற்ற இயக்கம்) மலேரியாவால் பாதிக்கப்பட்ட சிவப்பணுக்களில் உள்ள பிரவுனியன் இயக்கத்தை விட வித்தியாசமாக இருக்கும்.

## பெருத்த அண்ட வெடிப்பு கண்டுபிடிப்பு

- 3 விண்வெளி சார்ந்த ஆய்வகங்களான அஸ்ட்ரோசாட் சந்திரா மற்றும் ஹம்பிள் விண்வெளி தொலைநோக்கி மற்றும் நிலத்திலுள்ள ஆய்வகமான HARPS ஆகியவை ஒரே சமயத்தில் அருகில்

இருக்கும் கிரக நட்சத்திரமான ப்ரெக்ஸிமா செண்டரியில் பெருத்த ஒளிவட்ட வெடிப்பு ஏற்படுவதாக கண்டறிந்துள்ளனர்.

- பிராக்சிமா சென்டரி நட்சத்திர குழுக்கள் பூமி போன்ற வசிக்கும் கோள்களை தமது வசிப்பிடத்தை சுற்றிவரும் பகுதிக்குள்ளே கொண்டுள்ளது.
- இது பிராக்சிமா சென்டரியை சுற்றிவரும் பூமி போன்ற கிரகங்களின் நிலையை ஆய்வு செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும். சூரியனிடமிருந்து 4.25 ஒளி ஆண்டுகள் தொலைவிலுள்ள பிராக்சிமா சென்டரி நட்சத்திர தொகுதியை பற்றி ஆய்வு செய்வதற்காக இந்தியா, அமெரிக்கா, சிலி, பிரான்ஸ், மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளிலிருந்து ஆராய்ச்சியாளர்கள் பங்கு பெற்றுள்ளனர். அந்த ஆராய்ச்சியின் போது பெரும் சுடரொளி வீச்சு அனைத்து தொலைநோக்கிகள் மூலமாகவும் கண்டறியப்பட்டது.
- பிராக்சிமா சென்டரி என்பது சுடரொளி வீச்சிற்காக நன்கு அறியப்பட்ட நட்சத்திரமாகும். காந்த மறுதொடர்பின் / மறு சீரமைப்பின் விளைவாக பெரும் அளவிலான சக்தி வெளியிடப்படுகிறது. இவை ஒரு சில நிமிடம் முதல் பல மணி நேரம் வரை சுடரொளி வீச்சை வெளிப்படுத்தும் திறன் கொண்டவையாகும்.
- அஸ்ட்ரோசாட் என்பது பல்வேறு அலைநீளமுடைய ஒளிக்கதிர்களை உள்வாங்கி செயல்படும் செயற்கைகோள். இச்செயற்கைகோள் பல்வேறு நிறுவனங்கள் ஒன்றிணைந்து உருவாக்கியதாகும். இஸ்ரோ செயற்கை கோள் மையம் (பெங்களூர்), Tata Institute of Fundamental Research (TIFR) – மும்பை, Indian Institute of Astrophysics (IIA) – பெங்களூரு, விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் – திருவனந்தபுரம், Inter-University Centre for Astronomy and Astrophysics (IUCCA) – பூனே, விண்வெளி பயன்பாட்டு மையம் – அகமதாபாத், லீஸ்டர் பல்கலைக்கழகம் (இங்கிலாந்து) கனடா விண்வெளி மையம் ஆகியவை இணைந்து இச்செயற்கைகோளை உருவாக்கியுள்ளன.
- சந்திரா திட்டமானது நாசாவின் அமெரிக்காவின் அலாபாமா மார்செல் விண்கல மையத்தால் கட்டுப்படுத்தப்படுகிறது. இந்த விண்கல செயல்பாடுகள் மற்றும் சந்திரா அறிவியல் ஆகியன அமெரிக்காவிலுள்ள மசாசுட்டிஸின் கேம்பிரிட்ஜிலுள்ள சிமித்சானியன் வானியற்பியல் ஆய்வகத்தால் நிர்வகிக்கப்படுகின்றன.

## CRISPR

- அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் முதல் முறையாக வெற்றிகரமாக மரபு வழி நோய்களை உண்டாக்கும் குறைபாடுடைய கரு அமிலங்களினை (டி.என்.ஏ) சரி செய்ய மனிதக் கருமுட்டையில் மேல் மரபணுவை திருத்தும் (எடிட்டிங்) தொழிற்நுட்பத்தை பயன்படுத்தியுள்ளனர்.
- இந்த செயல் முயற்சியில் CRISPR எனும் மரபணு திருத்து தொழிற்நுட்பத்தின் மூலம் ஒற்றை செல் கருமுட்டைகளின் மரபு வழி நோயுண்டாக்கும் குறைபாடுடைய பெரும் எண்ணிக்கையிலான DNA-க்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.
- CRISPR என்பதன் விரிவாக்கம் Clustered Regularly Interspaced Short Palindromic Repeats என்பதாகும்.
- CRISPR – Cas9 என்பது செல்களில் உள்ள மரபணு குறியீட்டினுடைய குறிப்பிட்ட நீட்சித் தொடரினை(Sequence) இலக்கிட்டு அவற்றிலுள்ள மரபணு வாக்கியத்தில் அமைந்துள்ள DNAக்களை திருத்தம் செய்ய உதவும் மிக முக்கியமான மரபணு திருத்தத் தொழிற்நுட்பமாகும்.
- CRISPR – என்பது DNA வாக்கியங்களின் தொகுப்பாகும். இவை Cas9 எனும் மரபியற் புரத கத்திரிகளை மரபணு வாக்கியங்களை எங்கு வெட்ட வேண்டும், எங்கு ஒட்ட வேண்டும் என வழி நடத்தும், DNAவை திருத்தியமைக்க உதவும் ஓர் நொதியாகும்.
- இந்தத் தொழிற்நுட்பத்தின் மூலம் ஆராய்ச்சியாளர்களுக்கு மரபு வழி நோய்களை குணப்படுத்த மனித ஜீனோம்களின் துல்லியமான இடங்களில் மரபணு பிறழ்வுகளை சரி

செய்யவும், உயிரி செல்கள் மற்றும் உயிரினங்களின் மரபணுக்களை நிரந்தரமாக திருத்தியமைக்கவும் உதவும்.

- DNAக்களை வெட்டுவதற்கு பதிலாக மரபணு வெளிப்பாடுகளை செயல்படுத்தவும், ஒரே நேரத்தில் பல்வேறு மரபணுக்களை இலக்கிடவும் இத்தொழிற்நுட்பம் பயன்படும்.
- CRISPR – Cas9 தொழிற்நுட்பமானது இரத்த நோய்கள், நோய் கட்டிகள் மற்றும் பிற மரபியற் நோய்களின் சிகிச்சைகளில் புரட்சியைத் தோற்றுவிக்கும் ஆற்றலுடையவை.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## முதல் கூட்டு புலிகள் கணக்கெடுப்பு – நேபாளம் மற்றும் இந்தியா

- அடுத்த மாதத்தில் நேபாளமும் இந்தியாவும் கூட்டாக இணைந்து முதன்முறையாக உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்பட்ட முறையில் தங்கள் எல்லையை ஒட்டிய பகுதிகளுக்குட்பட்ட தேசிய பூங்காக்கள், காடுகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட பகுதிகள் ஆகிய இடங்களில் புலிகள் கணக்கெடுப்பைத் துவங்கவுள்ளன.
- புலிகள் உலவும் நாடுகள் (TRC - Tiger Range Countries) என்பது புலிகள் சுதந்திரமாக உலவும் பகுதிகள் ஆகும்.
- 13 புலிகள் உலவும் நாடுகளாவன- வங்கதேசம், பூடான், கம்போடியா, சீனா, இந்தியா, இந்தோனேஷியா, லாவோஸ், மலேசியா, மியான்மர், ரஷ்யா, நேபாளம், தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகும்.
- அருகிவரும் இனங்களின் மீதான சர்வதேச வர்த்தக உடன்படிக்கையின் (CITES-Convention On International Trade In Endangered Species ) பட்டியலின் கீழ் புலிகள் ஒரு அருகிவரும் (Endangered Species) இனமாகும்.
- உலக வன நிதியத்தின் (WWF-WORLD WILDLIFE FUND) தகவல் படி புலிகள் தங்களது வழக்கமான வாழ்விடங்களில் 93 சதவீதத்தை இழந்து விட்டிருக்கின்றன. மனித வனவிலங்கு மோதல், பருவநிலை மாற்றம், வேட்டையாடுதல் மற்றும் சட்டவிரோத வனவிலங்கு வியாபாரம் போன்றவை புலிகளை அருகிவரும் இனங்களுக்கான பட்டியலில் சேர்க்கப்பட்டதற்கான காரணங்களாகும். இதனால் வரும் காலங்களில் புலிகள் முழுமையாக அழிந்துவிடக் கூடிய அபாய நிலையில் உள்ளன.
- நேபாளத்தில் சித்வானில் உள்ள சித்வான் தேசியப் பூங்காவும், பார்சா வனவிலங்கு காப்பகமும் பீகாரில் உள்ள வால்மீகி புலிகள் காப்பகத்தை ஒட்டி உள்ளன. அதேபோல நேபாளத்தின் பார்டியா தேசிய பூங்கா இந்தியாவின் கடார்நியாகாட் வனவிலங்கு சரணாலயத்தையொட்டியும், நேபாளத்தின் சுக்லாபந்த் தேசிய பூங்கா இந்தியாவின் தூத்வா புலிகள் காப்பகத்தை ஒட்டியும் அமைந்துள்ளன.

## அலகாபாத்தில் ஆமைகள் சரணாலயம்

- பெருகிவரும் மனித இடையூறுகளால் ஏற்படும் அழுத்தங்களிலிருந்து கங்கை நதியின் செறிந்த நீர்வாழ் உயிரினப் பல்வகைத் தன்மையை பாதுகாக்க நமாமி கங்கா திட்டத்தின் கீழ் அலகாபாத்தில் ஆமைகள் சரணாலயமும், மூன்று நதிகளின் சங்கம இடத்தில் நதிப் பல்லுயிர் பூங்காவையும் அமைக்க நீர்வளத் துறை அமைச்சகம் அனுமதி வழங்கியுள்ளது.
- இதன்படி மூன்று நதிகள் (கங்கை, யமுனை, புராண சரஸ்வதி) சங்கமிக்கும் இடமான சங்கம் எனும் இடத்தில் பல்லுயிர் பூங்கா அமைத்தலுக்கும், திரிவேணியில் ஆமை பெருக்க மையமும் (நிரந்தர

ஆமை குஞ்சு பண்ணை) அமைத்தலுக்கும், கங்கையின் முக்கியத்துவம் மற்றும் அதை பாதுகாக்க வேண்டிய கட்டாயம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் திட்டத்திற்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

## பனி உருகுதல் காரணமாக கிரீன்லாந்து கடல்பகுதியில் குறைந்த உப்புத்தன்மை

- வடகிழக்கு கிரீன்லாந்தின் பெருங்கடல் தகவல் முதல் முறையாக கிரீன்லாந்து பனிக்கட்டி உருகுதலின் நீண்டநாள் தாக்கத்தை வெளிப்படுத்தியுள்ளது.
- கிரீன்லாந்து பனிக்கட்டியின் அதிகப்படியான உருகுதல் கடல்நீர் குறைந்த உப்புத்தன்மையாக மாறுவதற்கு வழிவகுத்துள்ளது.
- இந்த குறைந்த உப்புத்தன்மையுடைய கடல்நீர் கடல்வாழ் உயிரினங்களையும், ஐரோப்பாவை வெப்பமாக வைத்திருக்க உதவும் கடல் நீரோட்டங்களையும் பாதிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.
- கிரீன்லாந்து சுற்றுச்சூழல் கண்காணிப்புத் திட்டம் பனிக்கட்டியிலிருந்து உருவாகும் நன்னீர் அப்பனிக் கட்டியை சுற்றியுள்ள கடல்பகுதியின் மேற்தளத்தில் திரண்டு கிரின்லாந்தின் நுழைகழிப் பகுதிகளில் (Fjords) பாய்ந்தோடுவதாக எடுத்துரைக்கிறது.
- 1983 முதல் 2003 வரையிலான கால அளவைக் காட்டிலும் கிரீன்லாந்து பனிக்கட்டி உருகுதலின் தற்போதைய நிலை இருமடங்காக அதிகரித்துள்ளது.
- நுழைகழி (Fjords) என்பது நீண்ட, குறுகலான, ஆழ்ந்த நுழைவாயில் பகுதியாகும். இது கடலில் பனிமூடிய பள்ளத்தாக்கு மூழ்கியதன் காரணமாக ஏற்பட்ட உயரமான பாறைகளுக்கு நடுவே காணப்படும் பகுதியாகும்.

## அச்சுறுத்தல் நிலையில் வாள் சுறாக்கள்

- முதல் சர்வதேச வாள்சுறா தினம் உலகம் முழுவதும் அக்டோபர் 17ஆம் தேதி கொண்டாடப்பட்டது.
- யானைகள் மற்றும் புலிகளைக் காட்டிலும் வாள்சுறாக்கள் மிகவும் அச்சுறுத்தப்பட்ட நிலையில் இருப்பதாக கடல்சார் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.
- வாள்சுறா இந்திய வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம் 1972ன் அட்டவணை I-ல் சேர்க்கப்பட்டுள்ளது.
- வாள்சுறாவின் எலும்புக்கூட்டமைப்பு எலும்புகளால் அமையாமல் குறுத்தெலும்புகளால் ஆனது. இதனால் இவை எலாஸ்மோபிரான்ச் எனும் துணைவகுப்பைச் (Elasmobranchs) சேர்ந்தவை.
- சுறா வகைகளோடு மிக நெருங்கிய தொடர்பையும், அவற்றை போன்ற உடலமைவையும் கொண்டுள்ளதால் இவை தட்டை சுறாக்கள் எனவும் அழைக்கப்படும்.
- இந்தியாவில் மிகவும் அருகிவரும் மீன் இனமாக வாள்சுறாக்கள் இருக்கக்கூடும் என மத்திய கடல் மீன் வள ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது. (Central Marine Fisheries Research Institute-Kochi).
- இதுவரை 5 வாள்சுறா இனங்கள் மட்டுமே கண்டறியப்பட்டுள்ளது. அவையாவன -குட்டை வாள்சுறா, சிறுபல் வாள்சுறா, பெரும்பல் வாள்சுறா, பச்சை வாள்சுறா, கத்திபல் வாள்சுறா.

## உலகின் ஆழான ஏரிக்கு ஆபத்து

- உலகில் ஐந்தில் ஒரு பங்கு உறைந்திடாத நன்னீரை தேக்கி வைத்திருக்கும் உலகின் ஆழமான ஏரியான ரஷ்யாவின் சைபீரியாவில் உள்ள “பைகால் ஏரி” வரலாற்றின் மிக மோசமான நெருக்கடியைச் சந்தித்து கொண்டுள்ளது.

- ❖ பைகால் ஏரி பரிணமிப்பு அறிவியலுக்கு தனித்தன்மையான மதிப்புடைய ஓர் இயற்கை அதிசயமாகும். இந்த ஏரி உலகப் பாரம்பரிய சின்னமாக யுனெஸ்கோவால் அறிவிக்கப்பட்டிருக்கிறது.
- ❖ சல்மன் மீன் குடும்பத்தைச் சேர்ந்த "ஒமுல் மீன்" உலகில் பைகால் ஏரியில் மட்டும் இருக்கும் மீன் வகையாகும். ஏரியில் இயற்கைக்கு மாறாக உருவாகும் அழுகிய பாசிகளின் பெருக்கம் மற்றும் வர்த்தக நோக்கம் உடைய மீன்பிடிப்புகள் இம்மீன்களில் மீளாத எண்ணிக்கை குறைவு விளைவுகளை ஏற்படுத்தியுள்ளதால் இந்த ஏரியில் இரஷ்ய அரசு மீன்பிடித் தடையை ஏற்படுத்தியுள்ளது.

## பெரிய பல்லியின் புதியவகை இனம் கிழக்குத் தொடர்ச்சி மலையில் கண்டுபிடிப்பு

- ❖ கிழக்குத் தொடர்ச்சி மலையில் உள்ள சத்தீஸ்கரின் கங்கர் காதி தேசியப் பூங்காவில் புதியவகை பல்லி இனத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள்.
- ❖ கங்கர் பள்ளத்தாக்கு பாறை பல்லி (Khanger valley rock gecko) என்பது இதன் பொதுப் பெயராகும். ஹெமிடக்டைலஸ் கங்ரேன்சிஸ் (*Hemidactylus Kangerensis*) என்பது இதன் அறிவியல் பெயராகும்.
- ❖ இது கிழக்குத் தொடர்ச்சி மலையின் பகுதிகளான சத்தீஸ்கரிலுள்ள ஜக்தல்பூர் மற்றும் சுக்மா மாவட்டங்களிலும் தெலுங்கானாவின் கம்மம் மாவட்டத்திலும் காணப்படுகின்றது.

## வண்ணத்துப்பூச்சிகளின் பிராந்தியம்

- ❖ சமீபத்திய இந்திய வனவிலங்கு கணக்கெடுப்பு நிறுவனத்தின் (Zoological Survey Of India) ஆய்வுப்படி, மேற்குவங்க மாநிலத்தின் ஹீக்ளி மாவட்டத்திலுள்ள சிங்கூர் பகுதியானது குறைந்தபட்சம் 69 வகை பட்டாம்பூச்சிகளுக்கு உறைவிடமாக உள்ளதென கண்டறியப்பட்டுள்ளது.
- ❖ சிங்கூரில் அடையாளம் காணப்பட்டுள்ள இவ்வகை பட்டாம்பூச்சிகளில் 5 பட்டாம்பூச்சி வகைகள் மிகவும் அரியவை. மேலும் இந்திய வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம் 1972-ன் படி இவை பாதுகாக்கப்பட வேண்டியவை ஆகும்.
- ❖ அந்த 5 வகை பட்டாம்பூச்சிகளாவன,
    1. Tree filter
    2. Striped Albatross.
    3. Pea Blue
    4. Common Indian Crow
    5. Danaid egg fly
- ❖ சிங்கூர் பகுதியானது பல்வகை பட்டாம்பூச்சிகளைப் போல பல்வகை தவளைகள் மற்றும் பறவைகளையும் கொண்டுள்ளது.
- ❖ சிங்கூர் பகுதியானது ஓர் வனப்பகுதி அல்ல. நெல், உருளை, காய்கறி உற்பத்திகளுக்கு பெயர் பெற்ற பகுதியாகும்.

## முதல் ஜூராசிக் சகாப்தமான ‘பிஷ் லிசார்டு’ படிமம் - இந்தியாவில் கண்டுபிடிப்பு

- இந்தியாவின் புதைபடிமவியல் வரலாற்றில் முதல் முறையாக 150 மில்லியன் ஆண்டுகள் பழமை வாய்ந்த இயற்கையிலிருந்து மறைந்த கடல்வாழ் ஊர்வன உயிரினமான இச்தையோசவுரின் புதைப்படிமங்கள் குஜராத்தின் கட்ச்பகுதியில் இந்தியா மற்றும் ஜெர்மனி ஆராய்ச்சியாளர்கள் அடங்கிய குழுவால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- 5.5 மீட்டர் நீளமுடைய இப்புதைபடிவங்கள் கண்டறியப்பட்டுள்ள இச்தையோசவுர் உயிரினமானது ஆப்தல்மோசெனரிடே குடும்பத்தைச் சார்ந்தது. இவை 165 முதல் 9 மில்லியன் வருடங்களுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்திருக்க கூடும்.
- கட்ச் பாலைவனப்பகுதியில் அமைந்துள்ள 252 முதல் 66 மில்லியன் வருடப்பழமையான மேசொஜோயிக் சகாப்த பாறைகளின் உள்ளே இந்தப் படிமங்கள் கண்டறியப்பட்டுள்ளன.
- இதுவே இந்தியாவில் கண்டறியப்பட்டுள்ள முதல் ஜூராசிக் இச்தையோசவுர் வகையாகும். இதற்குமுன் அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் ஐரோப்பாவில் இவை கண்டறியப்பட்டன.
- இந்தியாவின் பழமையான புதைப்படிவமான, 1:6 பில்லியன் வருட பழமையுடைய சிவப்பு பாசிகளின் புதைமடிமம் இதற்குமுன் மத்தியபிரதேசத்தின் சித்திரகூட் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது.
- இது இந்த வருடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டாவது முக்கிய புதைபடிம கண்டுபிடிப்பாகும்.
- இவற்றின் பல்வரிசை அமைப்பானது அவைகள் வாழ்ந்த சுற்றுச் சூழலியல் காலத்தில் உயர்மட்ட வேட்டை விலங்காகவும், பிற விலங்கினங்களை உண்ணும் விலங்காகவும் இருந்ததை உரைக்கின்றது.

## ஆர்டிக் கடலின் பனி கணித்ததை விட வேகமாக உருகி வருகிறது.

- பனிமண்டலக் காலநிலை ஆராய்ச்சிக் குழு மேற்கொண்ட ஆராய்ச்சியின் படி, ஆர்டிக் கடலின் உறைபனி கணித்ததை விட வேகமாக உருகி வருகிறது.
- ஆர்டிக் கடலின் பனியானது காலநிலை மாற்றத்தின் முக்கியக் குறியீடாகும்.
- உருகுவதால் குறைந்து வரும் உறைபனி மூடலானது உறைபனியின் மீது பட்டு வளிமண்டலத்திற்கு எதிரொலிக்கும் சூரியக்கதிர்களின் அளவில் குறைப்பையும், சூரியக்கதிர்களின் உட்கிரகித்தலையும் அதிகரிக்கும்.
- இது எல் –நினோ போன்ற வானிலை நிகழ்வுகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் பெருங்கடல்களின் வெப்பமடைதலை விரைவுப்படுத்தும்.
- எல்-நினோ ஆசியாவிற்கான பருவக்காற்றில் தாக்கத்தை ஏற்படுத்த வல்லது.
- உருகி வரும் பனியானது, பனிக்கரடிகள், நீர் நாய்கள் மற்றும் மிதவைத்தாவர நுண்ணுயிர்கள் போன்றவற்றின் உயிர்வாழ்தலுக்கான சூழலை கடினமாக்கிவிடும்.
- உப்புப்பனி அமைந்திருப்பதன் காரணமாக,பல ஆண்டுகளாக ஆர்டிக் கடல் பனியின் தடிமன் 25% என்ற அளவிற்கு செயற்கைக்கோள் அளவீடுகளால் அதிகமாகக் கணக்கிடப்பட்டுள்ளது என ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- உப்புப் பனியானது செயற்கைக்கோளிலிருந்து வரும் தொலையுணர்வு ரேடார் அலைகளை ஊடுருவ அனுமதிக்காத காரணத்தால் முரண்பாடான அளவீடுகளுக்கு வழிவகுக்கிறது.

# மாநிலச் செய்திகள்

## சர்வதேச கைப்பாவை திருவிழா – கொல்கத்தா

- கொல்கத்தா நகரம் சர்வதேச கைப்பாவை திருவிழாவை அரங்கேற்றவுள்ளது. இத்திருவிழா அக்டோபர் 26 ஆம் தேதி துவங்கவுள்ளது.
- இலண்டன் , பெரூ , போர்ச்சுகல் , இத்தாலி , இலித்துவேனியா, பிரேசில் , சிங்கப்பூர் மற்றும் இந்தியாவைச் சேர்ந்த கைப்பாவை கலைஞர்கள் இத்திருவிழாவில் பங்குபெற உள்ளனர்.
- கொல்கத்தா இத்தகைய திருவிழாவை முதல் முறையாக நடத்துகிறது. ஆறு நாட்கள் நடக்கவிருக்கும் இந்தத் திருவிழா அக்டோபர் மாதம் 31 அன்று நிறைவுபெறும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
- கைப்பாவை கலையில் இணைந்துள்ள உணர்ச்சிகளை மீட்டுருவாக்கம் செய்வதே இந்த கைப்பாவை திருவிழாவின் நோக்கமாகும். இத்திருவிழா கொல்கத்தா நகரின் மொஹோர்கஞ் என்ற இடத்தில் நடைபெறுகிறது.

## முக்கிய மந்திரி சமூஹிக் விவாஹ யோஜனா

- உத்திரப்பிரதேச அரசானது “முக்கிய மந்திரி சமூஹிக் விவாஹ யோஜனா” எனும் வெகுஜன திருமண திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- உத்திர பிரதேச மாநில சமூக நல்வாழ்வு துறையினால் நடத்தப்படும் இவ்வெகுஜன திருமணத்தில், மணப்பெண் பயனாளிகளின் பெற்றோர்கள் கண்டிப்பாக உத்திரப்பிரதேச மாநிலத்தவராகவும், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவராகவும் இருக்க வேண்டும்.

## பி.வி.சி பயன்பாட்டிற்கு தடை

- சத்தீஸ்கர் மாநில அரசு குளோரினேற்றம் செய்யப்பட்ட பிளாஸ்டிக் மற்றும் பாலிவினைல் குளோரைட் ஆகியவற்றின் பயன்பாட்டிற்கு தடை விதித்துள்ளது.
- இத்தகு பிளாஸ்டிக்கால் தயாரிக்கப்பட்ட பொருட்களின் பயன்பாடு, விற்பனை, இறக்குமதி, தயாரிப்பு, சேமிப்பு, விளம்பரங்கள் என அனைத்தும் தடை செய்யப்பட்டுள்ளது.
- சுற்றுச்சூழலைப் பாதுகாத்தலையும் , அவற்றை மேம்படுத்துதலையும் நோக்கமாகக் கொண்டு இந்த தடை அறிவிக்கப்பட்டுள்ளது.

## சூரியப் பெட்டி

- உத்தரகாண்ட் மாநில அரசு , சுவான் கலாச்சார மையம் மற்றும் அறக்கட்டளை (Swan Cultural Center and Foundation) எனும் சமூகத்தொண்டு நிதி நிறுவனத்துடன் இணைந்து “சூரியப் பெட்டி” (Solar Briefcase) எனும் திட்டத்தை கேதர்நாத்தில் துவங்கியுள்ளது.
- உத்தரகாண்ட் மாநிலத்தின் மலைப்பகுதிகளில் தொலைதூரத்தில் அமைந்துள்ள பகுதிகளுக்கு மின்சார இணைப்பை ஏற்படுத்துவதற்காக இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

## திறன் மேம்பாடு பாடத்திட்டம் – ராஜஸ்தான்

- ராஜஸ்தான் மாநில அரசு நாட்டின் முதல் மாநிலமாக உயர் கல்வியின் பாடத்திட்டத்தில் “திறன் மேம்பாட்டு திட்டத்தை” (Skill Development Programme) இணைத்துள்ளது.

- இந்திரா காந்தி தேசிய திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் கூட்டிணைவோடு தொழில்முனைதல் மற்றும் திறன் மேம்பாடு குறித்த பாடத்திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு பாடத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

## அஸ்ஸாமின் புதிய ஆளுநர்

- திரு. ஜகதீஷ் முக்ஹி அஸ்ஸாமின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு கவுகாத்தி உயர் நீதிமன்ற நீதிபதி . அஜித் சிங் பதவி பிரமாணம் செய்து வைத்தார்.
- அஸ்ஸாமின் ஆளுநராக இருந்த பன்வாரிலால் புரோகித் தமிழக ஆளுநராக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து அஸ்ஸாமில் ஜகதீஷ் முக்ஹி ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## 15வது நிதிக் குழுவில் புதுச்சேரி சேர்ப்பு

- மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான வரிவருமானப் பகிர்வீடு தொடர்பான 15வது நிதிக்குழுவின் விதிமுறைகள் மற்றும் குறிப்புகளில் புதுச்சேரியை மத்திய அரசு உள்ளடக்கியுள்ளது.
- இதுநாள் வரை யூனியன் பகுதிகள் என்றழைக்கப்படும் மத்திய ஆட்சிப் பிரதேசங்கள் நிதிக்குழுவின் வரம்பிற்குள் சேர்க்கப்படாமல் இருந்து வந்தன. ஆனால் தற்போது மத்திய அரசு புதுச்சேரியை நிதிப்பகிர்வீடு தொடர்பான விஷயத்தில் மற்ற மாநிலங்களுக்கு இணையாக நடத்த முடிவு செய்துள்ளது.
- இந்த அனுமதியின் மூலம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ள 42 சதவிகித அளவிலிருந்து யூனியன் பிரதேசங்கள் தமது பங்கை பெற முடியும்.

## பீகார் அமைச்சரவை – திவ்ய அங்கங்களுக்கு மாற்றாக அரசு வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு

- அரசு வேலை வாய்ப்பிலும், அரசு கல்வி நிறுவனங்களிலும் உடல் குறைபாடுகளுள்ள நபர்களுக்கு இடஒதுக்கீடு அளிக்க பீகார் அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.
- இந்த அனுமதி மாற்றுத் திறனாளிகள் சட்டம்,2016 என்ற சட்டத்தோடு உடன்படும் வகையில் அளிக்கப்பட்டது.
- அந்த சட்டத்தில் கூறியுள்ள படி, திவ்ய அங்கங்களின் மாற்றுத் திறனாளிகள் மேம்பாட்டிற்காக அரசு ஆலோசனை மன்றம் ஒன்றையும் ஏற்படுத்த அமைச்சரவை அனுமதியளித்தது.

## பவன்தர் புக்தன் யோஜனா

- மத்திய பிரதேச அரசானது விவசாயிகளின் நலனுக்காக பவன்தர் புக்தன் திட்டத்தை துவங்கியுள்ளது.
- விவசாயிகளின் உற்பத்தி பொருட்களுக்கு உறுதியான நியாய விலையை உத்திரவாதமளிக்கும் திட்டமாகும்.
- இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விவசாயிகள் தங்களின் உற்பத்தி பொருட்களை மண்டிகளில் விற்று இரசீதை பெற வேண்டும். மேலும் மண்டிகளில் கட்டாயம் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

- மேலும் விவசாயத்தில் முதலீடு செய்ய உழவர்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறு 10 லட்சம் முதல் 2 கோடி ரூபாய் வரை மானியமும், கடனுதவியும் வழங்கப்படும்.

## விதானா சௌதாவின் 60வது ஆண்டு விழா

- விதானா சௌதாவின் 60 ஆண்டு நிறைவை கொண்டாடும் வகையில் நடைபெற்ற வஜ்ரமகோத்சவா என்னும் வைர விழாவில் இந்திய ஜனாதிபதி கலந்து கொண்டு பெங்களூரிலுள்ள கர்நாடகா சட்டமன்றத்தின் இரு அவைகளிலும் உரையாற்றினார்.
- கர்நாடாகா மாநிலத்தின் ஆட்சி அதிகார மையமாகத் திகழும் பெங்களூரில் உள்ள விதானா சௌதா ராணி எலிசபெத் மற்றும் 1986 சார்க் உச்சிமாநாட்டிற்கான சட்ட மன்றக் கூட்டத்தில் கூடிய சர்வதேசத் தலைவர்கள் போன்றவர்களை கவுரவித்து சிறப்பித்துள்ளது.

## ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு தங்கமயில் விருது பெற்றார்

- ஆந்திர முதல்வர் N. சந்திரபாபு நாயுடு, "பொது சேவை மற்றும் பொருளாதார மாற்றம் ஆகியவை மீதான சர்வதேச தலைமை" எனும் பிரிவின் கீழ் தங்கமயில் விருதினை பெற்றார். இது இலண்டனில் நடைபெற்ற 17 வது லண்டன் சர்வதேச மாநாட்டில் வழங்கப்பட்டது.
- தங்கமயில் விருது (Institute of Directors - IOD) 1991-ம் ஆண்டு நிறுவப்பட்டது. இது கார்ப்பரேட் துறையில் சிறந்த பணியாற்றிமைக்காக வழங்கப்பட்டு வருகிறது.
- சந்திரபாபு நாயுடுவின் மனைவியும், ஹெறிட்டேஜ் புட்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனருமான நாரா புவனேஸ்வரியும், கார்பரேட் நிர்வாகம் மற்றும் நிலைத்தன்மை எனும் பிரிவில் விருது பெற்றார்.

# பிரபலமானவர்கள் , விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## தூய்மைமிகு பிரதான இடம்மதுரை மீனாட்சி அம்மன் கோவில் -


- தூய்மைமிகு பிரதான இடம்- மதுரை மீனாட்சி அம்மன் கோவில்
- தூய்மை இந்தியா மூன்றாவது ஆண்டிற்கான துவக்க நாளான அக்டோபர் 2 அன்று, தூய்மையே சேவை திட்டத்தின் கீழ் இந்தியாவின் சிறந்த தூய்மைமிகு பிரதான இடமாக மதுரை மீனாட்சி அம்மன் கோவில் அறிவிக்கப்பட்டுள்ளது.
- தூய்மை பணிகளில் துரிதமான துப்புரவுச் செயல்முறைகளை (Swift Cleaning Process) மேற்கொண்டதால் இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.
- தூய்மை இந்தியா திட்டத்தின் தூய்மையே சேவை (Swachhta Hi-Seva) தொடக்கத்தின் கீழ் தூய்மைமிகு பிரதான இடங்கள் தேர்வு செய்யப்படுகின்றன .
- இது நாட்டிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட ஆன்மீக, கலாச்சார இடங்கள் மற்றும் பிரதான இடங்களில் மேற்கொள்ளப்படும் சிறப்பு தூய்மைப்படுத்துதல் முயற்சியாகும்.
- இது மத்திய கலாச்சாரத்துறை அமைச்சகம், நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம், மற்றும் சுற்றுலா அமைச்சகம் போன்றவற்றின் ஒத்துழைப்போடு மத்திய குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சகத்தால் இம்முன்னெடுப்பு ஒருங்கிணைக்கப்படுகிறது.

## மருத்துவத் துறைக்கான நோபல் பரிசு அறிவிப்பு

- அமெரிக்காவைச் சேர்ந்த ஜெஃப்ரி சி ஹால், மைக்கேல் ராஸ்பாஷ் மற்றும் மைக்கேல் டபிள்யூ யங் ஆகிய மூன்று மரபியல் (ஜெனடிக்ஸ்) விஞ்ஞானிகளுக்கு உயிரியல் கடிகாரங்களை கட்டுப்படுத்தும் மூலக்கூறு இயக்கவியலை கண்டறிந்ததற்காக நடப்பாண்டிற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.
- தூக்கம், உணவு முறை, ஹார்மோன்கள், மற்றும் உடல் வெப்ப நிலையை முறைப்படுத்தும் உயிரியல் கடிகாரங்கள் (சிர்காடியன் கடிகாரங்கள்) அமைத்தலில் ஜீன்களின் பங்களிப்பை இக்குழு வெளிப்படுத்தியுள்ளது.
- இக்கண்டுபிடிப்பு தாவரங்கள், விலங்குகள், மனிதர்கள் எப்படி புவியின் சுழற்சிக்கு ஏற்ற வகையில் தங்களின் உயிரிக்காலச் சீர்மைகளை (Biological Rhythms) தகவமைத்துக் கொள்கின்றன என விளக்க உதவும்.



- பழ வண்டுகளின் உடல் இயக்கத்தை மாதிரியாகக் கொண்டு, உயிரி கடிகாரத்தை இயக்கும் மரபணுவை இம்மூவரும் கண்டறிந்துள்ளனர்.
- நாட்களின் காலச்சீர்மைக்கு ஏற்றவாறு பொருந்திக் கொள்ள உதவும் வகையில் மனிதன் உள்ளிட்ட உயிரினங்களில் ஓர் உள்ளமைக்கப்பட்ட காலங்காட்டி (internal timekeeper) இருப்பதாக விஞ்ஞானிகள் நீண்ட காலமாக கருதுகின்றனர்.
- இவ்வாறு பசி, தூக்கம் போன்ற உணர்வுகளை உயிரினங்களின் உடலில் தினந்தோறும் நேரம் தவறாமல் தூண்டுவதற்கு, உடலில் தானாகவே அமைந்துள்ள ஒரு 'உயிரி கடிகாரம்'தான் உதவுகிறது என்பது விஞ்ஞானிகளுக்கு நீண்ட காலமாகவே தெரியும்.
- மூளையின் சாதாரண செயல்பாட்டிற்கு முக்கியமான தூக்கத்தை சீர்படுத்தலையும் இக்கடிகாரம் மேற்கொள்ளும்.
- அந்த உயிரி கடிகாரத்தின் செயல்பாட்டில் ஏற்படும் குறைபாடுகளால் மன அழுத்தம், 'பைபோலார்' எனப்படும் மிகையுணர்வு மனநோய், மறதி நோய், நரம்பியல் நோய்கள் ஆகியவை ஏற்படுகின்றன




## சாஸ்த்ரா ராமானுஜன் பரிசு 2017 - மரியானா வயாஜோவ்ஸ்க

- சுவிட்சர்லாந்தின் லவ்சானேவில் உள்ள ஸ்விஸ் பெடரல் தொழில்நுட்ப நிறுவனத்தின் மரியானா வயாஜோவ்ஸ்கா, எண் கருத்தியலுக்கு தனது பங்களிப்பை அளித்தமைக்காக 2017-ம் ஆண்டிற்கான சாஸ்த்ரா ராமானுஜன் பரிசை பெறவுள்ளார்.

### *சாஸ்த்ரா ராமானுஜன் பரிசு*

- சாஸ்த்ரா ராமானுஜன் பரிசு 2005-ல் ஏற்படுத்தப்பட்டது. இது ஆண்டுதோறும், சீனிவாச இராமானுஜனால் பங்களிக்கப்பட்டு புகழடைந்த கணிதப் பிரிவுகளில் பங்களிப்புகள் அளிக்கும் இளம் கணிதவியலாளர்களுக்கு வழங்கப்படுகிறது.
- இதற்கான வயது வரம்பு 32 ஆக நிர்ணயிக்கப் பட்டுள்ளது. ஏனெனில் இராமானுஜன் தனது 32 வயது வாழ்க்கைக்குள் நிறைய சாதனைகளை சாதித்தார்.

### *மரியானா வயாஜோவ்ஸ்கா*

- வயாஜோவ்ஸ்கா நிறைய அடிப்படையான எண் கருத்தியல் விஷயங்களுக்கு பங்களிப்புகள் அளித்த கணிதவியலாளர் ஆவார். இவர் உக்ரைனின் கிவ் நகரத்தில் 1984 நவம்பர் 2-ம் தேதி பிறந்தார்.

## இயற்பியலுக்கான நோபல் பரிசு

- லிகோ ஆய்வகத்தில் பணிபுரியும் அமெரிக்காவைச் சேர்ந்த 3 விண்வெளி இயற்பியல் விஞ்ஞானிகளான ரெய்னர் வைஸ், பேரி பேரிஷ் மற்றும் கிப் தோர்னே ஆகியோருக்கு 2017 ஆம் ஆண்டிற்கான இயற்பியலுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.
- லேசர் ஒளியலை அளவுமானி புவியீர்ப்பு அலை நோக்குக் கூடம் எனப்படும் LIGO-விற்கு (Laser Interferometer Gravitational Waves Observatory) - அவர்கள் அளித்த தீர்க்கமான பங்களிப்பு மற்றும் அண்டவெளியில் ஈர்ப்பு அலைகள் உண்டாகுவதை உறுதி செய்தமைக்காக நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

- அண்டவெளியில் கருந்துளைகள் ஒன்றோடு ஒன்று மோதுதல், கூட்டமாக சுற்றிக் கொண்டிருக்கும் நட்சத்திரங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி இணைந்து ஒரே நட்சத்திரமாக மாறுதல் போன்ற செறிவு கொண்ட பொருட்களின் மோதலின் போது உண்டாகும் மாபெரும் ஈர்ப்பு விசை அலைகள் அண்டவெளியில் அலைகளாக பரவும்.
- ஓர் நூற்றாண்டுக்கு முன்பே ஐன்ஸ்டின் தன் "பொது சார்பியல் கோட்பாட்டின்" வழி அண்டவெளியில் ஈர்ப்பு அலைகள் இருப்பதை விளக்கினாலும் முதன் முதலில் 2015ல் மட்டுமே லிகோ உணர்மானியின் மூலம் கண்டறியப்பட்டது.
- 1.3 மில்லியன் ஒலியாண்டு தொலைவில் உண்டான இரு கருந்துளைகளின் மோதலில் உண்டான இந்த ஈர்ப்பு அலை பரவலை லிகோ உணர்மானியின் மூலம் இந்த விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.
- 1 ஒளி ஆண்டு என்பது = 9.5 டிரில்லியன் கிலோ மீட்டர்.
- 2015 லிருந்து லிகோ உணர்வி மூலம் இருமுறையும், இத்தாலியின் காஸ்சினாவிலுள்ள ஐரோப்பிய புவிஈர்ப்பு ஆய்வகத்தின் விக்ரோ உணர்வி ஒரு முறையும் என இது வரை மொத்தம் 3 முறை புவிஈர்ப்பு அலைகள் கண்டறியப்பட்டுள்ளன.

## உலக சுகாதார அமைப்பின் புதிய துணை பொது இயக்குனர்

- இந்திய மருத்துவ ஆராய்ச்சி ( Indian Council of Medical Research – ICMR ) அமைப்பின் பொது இயக்குநராக உள்ள சௌமியா சுவாமிநாதன் உலக சுகாதார அமைப்பின் (WHO – World Health Organization) திட்டங்களுக்கான துணைப் பொது இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இவர் சென்னையிலுள்ள தேசிய காசநோய் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார்.
- இந்தியாவில் காசநோய் ஆராய்ச்சி மீதான கவனம் அதிகரிக்க காரணமான இவர், காசநோய் ஆராய்ச்சிக்காக "இந்திய காசநோய் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம்" ( India TB Research and Development Corporation – ITRDC ) எனும் காசநோய் மீதான ஆராய்ச்சிக்கு என ஓர் கூட்டமைப்பை உண்டாக்கினார்.
- காசநோயை ஒழிக்க நோய்கண்டறிதல் சாதனங்கள், தடுப்பூசிகள் மற்றும் மருந்துகள் போன்றவற்றை உருவாக்க தேசிய மற்றும் சர்வதேச பங்குதாரர்களை ஒருங்கிணைத்தலை இவ்வமைப்பு நோக்கமாக கொண்டுள்ளது.

## வேதியியலுக்கான நோபல் பரிசு

- ஜாக்குவஸ் குபோஷே, ஜோசிம் ஃபிராங்க், ரிச்சர்ட் ஹெண்டர்ஸன் ஆகிய மூவருக்கு நடப்பாண்டின் வேதியியலுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.
- ஜிகா வைரஸ், அல்சைமர் எனும் மூளை நோய் போன்றவற்றை உருவாக்கும் நொதியங்களின் செயல்பாட்டை துல்லியமாக கண்டறிய உதவும் கிரையோ–எலக்ட்ரான் நுண்ணோக்கியை உருவாக்கியமைக்காக இந்த நோபல் பரிசு அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- இதுவரை செல்களின் மிக நுண்ணிய மூலக்கூறுகளின் செயல்பாட்டை அறிய செல்களின் மேல் எலக்ட்ரானை பாய்ச்சி ஆய்வு செய்யும் டிரான்ஸ்மிஷன் எலக்ட்ரான் மைக்ரோஸ்கோபி முறையும், செல் உறுப்புகளை படிமங்களாக மாற்றி ஆய்வு செய்யும் எக்ஸ்ரே-கிரிஸ்டரோகிராபி முறையும் பயன்படுத்தப்பட்டு வந்தது.
- செல்கள் இயக்கத்தில் இருக்கும் போது இவற்றால் மூலக்கூறு செயல்பாடுகளை ஆராய்வது மிகவும் கடினம்.
- இதனால் இம்மூவரும் கிரையோ-எலக்ட்ரான் நுண்ணோக்கி முறையை உருவாக்கியுள்ளனர்.

- முப்பரிமாண பதிவு ( 3D IMAGING) முறையை அடிப்படைக் கொள்கையாக கொண்டு இந்த கிரையோ – எலக்ட்ரான் நுண்ணோக்கி செயல்படும்.
- இதன் குளிர்விப்பு முறை அல்லது அதிஉணர்வு பதிவு (Ultra Sensitive Imaging) முறையில் இயக்கத்திலுள்ள செல்கள் (கிரையோ) குளிர்நிலைக்கு (-1500C) கொண்டுவரப்பட்டு, செல்லின் நுண்ணிய பாகங்கள் உறையவைக்கப்பட்டு அவற்றின் அமைப்புகள் முப்பரிமாண முறையில் பதிவு செய்யப்படுகின்றன. இம்முறையில் நுண்ணோக்கு மை (Microscopic Strain Dye) எவையும் பயன்படுத்தப்படுத்த தேவை இல்லை.
- இக்கண்டுபிடிப்பானது உயிரிவேதியியல் துறைக்கும், மருந்து தயாரிப்பு துறைக்கும் ஸிகா மற்றும் அல்சைமர் போன்ற நோய்களுக்கு எதிரான மருந்துகளை கண்டறிய உதவும்.

## அண்ணா போலிட்கோவ்ஸ்கயா விருது

- மறைந்த பிரபல பத்திரிக்கையாளர் மற்றும் சமூக ஆர்வலரான திருமதி.கௌரி லங்கேஷ் அவர்களுக்கு ரா இன் வார் (RAW in WAR – Reach All Women in War) எனும் லண்டனைச் சேர்ந்த அரசு சாரா நிறுவனத்தால் வழங்கப்படும் அண்ணா போலிட்கோவ்ஸ்கயா விருது வழங்கப்பட்டுள்ளது.
- திருமதி. கௌரி லங்கேஷ் இவ்விருதினை பெறும் முதல் இந்திய பத்திரிக்கையாளர் ஆவார்.

### *அண்ணா போலிட்கோவ்ஸ்கயா*


- அண்ணா போலிட்கோவ்ஸ்கயா ஓர் புகழ்பெற்ற ரஷ்ய பத்திரிக்கையாளர் மற்றும் மனித உரிமைகள் ஆர்வலர் ஆவார்.
- 1995லிருந்து 2005 வரை நடைபெற்ற இரண்டாம் செசன்சேன் போரின் போது செசென்யாவில் நடைபெற்ற மனித உரிமைகள் மீறலையும், ஊழலையும் வெளிகாட்டியதால் இவர் உலகப்புகழ் பெற்றார்.
- அண்ணா போலிட்கோவ்ஸ்கயா 2006ல் படுகொலை செய்யப்பட்டார். அவருடைய படுகொலையின் நினைவு தினத்தை குறிக்கும் வகையில் ஆண்டுதோறும் ரா இன் வார் அமைப்பு இந்த விருதினை வழங்கி வருகிறது.

## இலக்கியத்திற்கான நோபல் பரிசு

- ஜப்பானை பூர்வீகமாக கொண்ட பிரிட்டிஷ் எழுத்தாளரான கசுவோ இசிகுரோவிற்கு நடப்பாண்டின் இலக்கியத்திற்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.
- அவர் எழுதிய “தி பரிடு ஜயன்ட்” (The Burried Giant) எனும் நாவலுக்காக நோபல் பரிசு அறிவிக்கப்பட்டு உள்ளது.
- இவர் ஏற்கனவே 1989 ஆம் ஆண்டில் “தி ரிமெய்ன்ஸ் ஆஃப் திடே” (The Remains of the day) எனும் நாவலுக்காக புனைகதைகளுக்கான மேன்புக்கர் பரிசு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.
- இவரின் பிற படைப்புகள்
    - ✓ தி பேல் வியூ ஆஃப் ஹில்ஸ் (The pale view of Hills)
    - ✓ ஆர்டிஸ்ட் ஆஃப் ஃப்ளோடிங் வோல்டு (An Artist of Floating world)
- புனைகதைகளுக்கான மேன் புக்கர் பரிசானது ஆங்கிலமொழியில் எழுதப்பட்டு, இங்கிலாந்தில் வெளியிடப்படும் சிறந்த அசல் நாவல்களுக்காக வழங்கப்படும் வருடாந்திர உயரிய இலக்கிய பரிசாகும்.

## அமைதிக்கான நோபல் பரிசு

- சர்வதேச அணு ஆயுத ஒழிப்பு பிரச்சார அமைப்பு (ICAN – International Campaign to Abolish Nuclear Weapons) எனும் ஜெனிவாவைச் சேர்ந்த அமைப்புக்கு நடப்பாண்டின் அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.





- ICAN ஆனது சர்வதேச அணு ஆயுத எதிர்ப்பு உடன்படிக்கையின் கீழ் அணு ஆயுதத்திற்கு எதிராக போராடிவரும் உலகம் முழுவதும் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளிலுள்ள அரசு சாரா நிறுவனங்களின் கூட்டமைப்பு ஆகும்.

### *அமைதிக்கான நோபல் பரிசின் தனித்தன்மை*

- அமைதிக்கான நோபல் பரிசு நார்வேயின் நோபல் கமிட்டியால் அளிக்கப்படுகிறது.ஆனால் பிற துறைகளுக்கான நோபல் பரிசு ஸ்வீடனைச் சேர்ந்த ராயல் ஸ்வீடன் அகாடமியால் அளிக்கப்படுகிறது.
- பொதுவாக நோபல் பரிசானது மூன்று நபருக்கு மேல் பகிர்ந்தளிக்கப் படுவதில்லை.ஆனால் அமைதிக்கான நோபல் பரிசு மட்டும் மூன்று பேருக்கு மேலுள்ள அமைப்பிற்கும் வழங்கப்படும்.

## பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு

- அமெரிக்க பொருளாதார அறிஞர் ரிச்சர்ட் ஹெச். தாலர்க்கு நடப்பாண்டின் பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.
- பொருளியலுக்கும் , உளவியலுக்கும் இடையே உள்ள நெருக்கமான தொடர்பை வெளிப்படுத்தும் ‘போக்குசார் பொருளாதாரம்’ எனும் துறையில் (Behavioural Economics) அவர் அளித்த சிறந்த பங்களிப்பிற்காக நோபல் பரிசு வழங்கப்பட உள்ளது.
- பொருளியலுக்கும், உளவியலுக்கும் இடையே இணைப்பை ஏற்படுத்தி , மனிதர்களின் சுய கட்டுப்பாடு, சமுக விருப்பத்தேர்வுகள் மற்றும் பகுத்தறிவு போன்ற காரணிகள் பொருளாதாரம் குறித்த அவர்களது முடிவுகளில் எப்படி தாக்கத்தையும், அதன் காரணமாக பொருளாதார சந்தையில் எவ்வாறு பாதிப்புகளையும் ஏற்படுத்துகின்றன என தனது ஆய்வு மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.




- மேலும் இவர் சமூக பெரும் பிரச்சனைகளை எதிர்கொள்ள எப்படி போக்குசார் பொருளாதார கருத்துருவாக்கம் உதவுகிறது என்பதைப் பற்றிய “நட்ஜ்” எனும் புத்தகத்தின் துணை ஆசிரியர் ஆவார். இப்புத்தகம் சர்வதேச அளவில் அதிகம் விற்பனையான புத்தகங்களில் ஒன்று. இதன் மற்றொரு ஆசிரியர் காஸ்.ஆர்.சன்ஸ்டெயின் ஆவார்.
- போக்குசார் பொருளாதாரம் என்பது பொருளாதார முடிவுகளில் உளவியல், சமூகம், அறிவாற்றல், உணர்ச்சிக் காரணிகள் ஆகியவற்றின் தாக்கம் எப்படி இருக்கிறது என்பதை பற்றி விளக்குவதாகும்.

### *பொருளாதாரத்திற்கான நோபல் பரிசின் தனித்தன்மை*

- ஆல்பிரட் நோபல் அவர்களின் நினைவாக பொருளாதார நோபல் பரிசு “சுவரிகிஸ் ரிக்ஸ்பாங்க் பரிசு” (Sveriges Riksbank Prize) எனவும் அழைக்கப்படுகிறது.
- இப்பரிசு பொருளாதார அறிவியல் பிரிவில் வழங்குவதற்காக 1968 ல் தோற்றுவிக்கப்பட்டது.
- 1895 -இல் டைனமைட்டை கண்டுபிடித்த ஆல்பிரைட் நோபல் அவர்களின் விருப்பத்தில் தோற்றுவிக்கப்பட்ட நோபல் பரிசுகளின் உண்மையான குழுவில் பொருளாதார பரிசு தோற்றுவிக்கப்படவில்லை.

## 2017 – வயோஷ்ரேஸ்த சம்மன் விருதுகள்

- வயோஷ்ரேஸ்த சம்மன் எனும் திட்டத்தின் கீழ் மூத்த குடிமக்களுக்கான தேசிய விருதுகளை புதுதில்லியில் குடியரசுத் தலைவர் வழங்கினார்.

*வயோஷ்ரேஸ்த விருதுகள்*

- வயதானவர்கள் மற்றும் ஏழை மக்களுக்கு உதவிபுரியும் நிறுவனங்கள் மற்றும் மூத்த குடிமக்களின் சேவையை அங்கீகரிக்கும் விதமாக இந்த தேசிய விருது வழங்கப்படுகிறது.
- மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் 2005-ல் நிறுவப்பட்ட இந்த விருதானது 2013 இல் தேசிய விருது என்று நிலை உயர்த்தப்பட்டது.
- 1999 ஆம் ஆண்டினை முதியோருக்கான சர்வதேச ஆண்டாக அறிவிக்க கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை ஐ.நா. பொதுச்சபை ஏற்றுக்கொண்டதன் இணக்கமாக ஒவ்வொரு வருடமும் சர்வதேச முதியோர் தினமான அக்டோபர் ஒன்றாம் தேதியன்று இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

## IAA தலைமைத்துவ விருதுகள்

- சந்தைப்படுத்துதல், ஊடகம் மற்றும் விளம்பரத் துறைகளில் மகத்தான தொழில்முறை பங்களிப்பினையும், தங்கள் நிறுவனங்களுக்கு வணிக ரீதியாக வெற்றியையும் அளித்த தனிநபர்களை கவுரவிக்கும் வகையில் சர்வதேச விளம்பர சங்கத்தால் "IAA தலைமைத்துவ விருது" வழங்கப்பட்டு வருகின்றது.
- International Advertising Association - IAA
- இந்த வருடத்திற்கான விருதினைப் பெற்றவர்கள்,
    - ✓ முகேஷ் அம்பானி – IAA வணிகத் தலைவர் விருது
    - ✓ ராஜன் ஆனந்தன் – IAA ஊடகத் தலைமை விருது
    - ✓ விக்ரம் சக்ஹுஜா – ஊடக நிறுவனத் தலைவர் விருது

## லால் பகதூர் சாஸ்திரி தேசிய விருது

- 2017ஆம் ஆண்டின் கல்வி, மேலாண்மை, பொது நிர்வாகம் போன்றவற்றில் சிறந்து விளங்குவோருக்கான "18-வது லால் பகதூர் சாஸ்திரி தேசிய விருதினை" டாக்டர் பிந்தேஸ்வர் பதாக் பெற்றுள்ளார். இவ்விருதினை குடியரசுத் தலைவர் அவருக்கு வழங்கி கவுரவித்தார்.
- டாக்டர் பிந்தேஸ்வர் பதாக் , சுலாப் இண்டர்நேஷனல் (Sulabh International) எனும் சமூக சேவை அமைப்பினை நிறுவியுள்ளார். இவர் சுலாப் சவ்ச்சாலயா முறை (Sulabh Sauchalaya System) எனும் குறைந்த செலவுடைய, அனைவருக்கும் பொருத்தமான கழிவறை தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்து இந்தியா முழுவதும் செயல்படுத்தி வருகிறார்.
- மனிதக் கழிவுகளை மனிதர்களே கையாளும் (manual Scavenging) நடைமுறைகளிலிருந்து மக்களை விடுவிப்பதற்காக இவர் மேற்கொண்ட முயற்சிகளையும் ஆற்றிய பங்கினையும் அங்கீகரிக்கும் விதமாக நியூயார்க் நகர மேயர் ஏப்ரல் 14, 2016ஆம் தேதியை "சர்வதேச டாக்டர் பிந்தேஷ்வர் தினமாக" அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.
- இவர் 1991-ல் பத்ம பூஷண் விருதினையும் டாக்டர் பிந்தேஸ்வர் பதாக் பெற்றுள்ளார்.

## உலக மனநல தினம் – அக்டோபர் 10

- ஆண்டுதோறும் அக்டோபர் 10ஆம் தேதி உலக மன நல தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது.
- உலகம் முழுவதும் மனநலப் பிரச்சனைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், மன நல ஆரோக்கியத்திற்கு ஆதரவான முயற்சிகளை திரட்டவும் இத்தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டின் உலக மனநல நாளின் கருத்துரு - "பணி இடத்தில் மன நலம்" (Mental Health in work Place)
- உலக மனநல கூட்டமைப்பினால் இத்தினம் தொடங்கப்பட்டது. (World Mental Health Federation).

## நாகரீகங்கள் பற்றிய உரையாடல் (Dialogue of Civilization - IV)

- நாகரிகங்கள் பற்றிய உரையாடல் (Dialogue of Civilization - IV) எனும் நான்காவது சர்வதேச மாநாடு மத்திய கலாச்சார துறை அமைச்சகத்தால் புதுதில்லியில் நடத்தப்பட்டது.
- இந்திய தொல்பொருள் கணக்கெடுப்பு (ASI – Archaeological Survey of India) நிறுவனம், மத்திய கலாச்சார அமைச்சகம், மற்றும் தேசிய புவியியல் சங்கம் (National Geographic Survey) ஆகியவற்றின் கூட்டிணைவுடன் டெல்லி, காந்திநகர் மற்றும் தோலவிராவில் அக்டோபர் 8 முதல் 15 ஆம் தேதி வரை இம்மாநாடு நடைபெறுகிறது.
- இம்மாநாட்டின் நோக்கம் உலகின் ஐந்து பண்டைய நாகரிகங்களைப் பற்றி கற்றறிந்த தகவல்களை பொதுமக்களிடம் எடுத்துரைப்பது ஆகும் . அந்த ஐந்து நாகரிகங்கள்,
    - ✓ எகிப்து
    - ✓ மெசபடோமியா
    - ✓ தெற்கு ஆசியா
    - ✓ சீனா
    - ✓ மெசோ அமெரிக்கா
- இம்மாநாடு 2013-ல் தேசிய புவியியற் சங்கத்தால் தொடங்கப்பட்டது.
- தற்போதைய இந்த மாநாடு நாகரிகங்கள் பற்றிய உரையாடலின் நான்காவது பதிப்பாகும்.

## இந்திய அமெரிக்க வணிக கவுன்சில் தலைவர்

- அமெரிக்காவின் முன்னாள் துணை அரசாங்க காரிய தரிசியான நிஷா தேசாய் பிஸ்வால் இந்திய அமெரிக்க வணிக கவுன்சிலின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்திய-அமெரிக்க வணிக கவுன்சிலானது இந்தியா அமெரிக்காவிற்கு இடையே பொருளாதார வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட முதன்மை வணிக ஆலோசனை அமைப்பாகும்.

## இந்திய திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி கல்வி நிறுவனத்தின் தலைவர் - அனுபம் கெர்

- புனேவில் அமைந்துள்ள இந்திய திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி கல்வி நிறுவனத்தின் (Film and Television institute of India – FTIT) தலைவராக நடிகர் அனுபம் கெர் நியமிக்கப்பட்டு உள்ளார்.

- இதற்கு முன் இவர் தணிக்கை ஆணையம் மற்றும் தேசிய நாடகப் பள்ளியின் தலைவராக பதவி வகித்துள்ளார்.
- இந்திய திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி கல்வி நிறுவனமானது மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஓர் தன்னாட்சி நிறுவனமாகும்.
- சங்கங்கள் பதிவுச் சட்டம் 1860 ன் கீழ் இந்நிறுவனம் பதிவுச் செய்யப்பட்டுள்ளது.
- மேலும் இது திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்களில் உலகின் முன்னணி நிறுவனமான சினிமா மற்றும் தொலைக்காட்சிகளுக்கான சர்வதேச தொடர்பு மையத்தின் (International Liaison Centre of Schools of Cinema and Television -CILECT) உறுப்பினராகவும் உள்ளது.

## யுனெஸ்கோவின் புதிய தலைவர்

- பிரான்சின் முன்னாள் கலாச்சார அமைச்சரான அட்ரே அஜௌலே யுனெஸ்கோவின் புதிய தலைவராக யுனெஸ்கோ நிர்வாகிகள் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- பல்கேரியாவைச் சேர்ந்த இரினா போகோவா-வின் பதவிக்காலம் முடிவடைவதை அடுத்து அட்ரே அஜௌலே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இவர் யுனெஸ்கோ அமைப்பிற்கு தலைவராக தேர்ந்தெடுக்கப்படும் இரண்டாவது பிரெஞ்சு நாட்டவர் ஆவார். இதற்கு முன் ரெனே மாஹேவ் இப்பதவி வகித்தார்.

## கௌதம் பம்பாவாலே – சீனாவுக்கான இந்திய தூதர்

- சீன மக்கள் குடியரசுக்கான இந்திய தூதராக கௌதம் பம்பாவாலே நியமிக்கப்பட்டுள்ளார்.
- 1984 ஆம் ஆண்டு பணிப்பிரிவைச் சேர்ந்த இந்திய அயல்நாட்டுப் பணி அதிகாரியான கௌதம் பம்பாவாலே, தற்போது பாகிஸ்தானுக்கான இந்தியாவின் உயர் ஆணையராக பணிபுரிந்து வருகிறார்.
- இதற்குமுன் பம்பாவாலே பூட்டான் நாட்டிற்கான இந்திய தூதராக பதவி வகித்தார்.
- பம்பாவாலேவின் புதிய பணி நியமனத்தைத் தொடர்ந்து அவர் வகித்து வரும் பாகிஸ்தானுக்கான இந்தியாவின் உயர் ஆணையர் பதவி காலியாகிறது.
- இந்த பதவிக்கு தற்போதைய போலந்து நாட்டின் இந்தியத் தூதர் அஜய் பிசாரியா நியமிக்கப்பட்டுள்ளார்.

## மாத்ருபூமி விருது

- புகழ்பெற்ற வாழ்க்கை வரலாற்று ஆசிரியரும், பேச்சாளருமான M.K ஷானு மலையாள இலக்கியத்திற்கு செம்மையான பங்களிப்பை அளித்தமைக்காக 2016ஆம் ஆண்டிற்கான மாத்ருபூமி இலக்கிய விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

## சென்னையில் கின்னஸ் சாதனை

- சென்னையிலுள்ள அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற சர்வதேச இந்திய அறிவியல் திருவிழாவின் (IISF-Indian International Science Festival) இரண்டாவது நாளில் உலகின் மிகப்பெரிய உயிரியல் பாட வகுப்பு எடுக்கப்பட்டு கின்னஸ் சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.
- 1049 மாணவர்கள் பங்குபெற்ற இந்த பெரிய உயிரியல் பாடவகுப்பில் செல் உயிரியல் , பப்பாளி பழத்திலிருந்து DNA பிரிப்பு செய்முறை விளக்கம் குறித்த பாடங்கள் எடுக்கப்பட்டன.

## இந்திரா காந்தி தேசிய ஒருமைப்பாட்டு விருது

- கர்நாடக இசைப்பாடகரான டி.எம்.கிருஷ்ணா 2015-16ஆம் ஆண்டிற்கான இந்திரா காந்தி தேசிய ஒருமைப்பாட்டு விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டை ஊக்குவிக்கும் வகையிலும், பாதுகாக்கும் வகையிலும் செயல்பட்டமைக்காக 2015-16ஆம் ஆண்டிற்கான 30வது இந்திரா காந்தி தேசிய ஒருமைப்பாட்டு விருதுக்கு இவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இவ்விருது இந்திரா காந்தியின் மறைவு தினமான அக்டோபர் 31ஆம் தேதி அன்று வழங்கப்படும்.
- கலாச்சார விஷயங்களில் சமூக உள்ளடக்கத்தை கொணர்ந்ததன் காரணமாக (Bringing Social inclusiveness in Culture) 2016 ஆம் ஆண்டு இவருக்கு இராமன் மகசேசே விருது வழங்கப்பட்டது.

### *இந்திரா காந்தி தேசிய ஒருமைப்பாட்டு விருது*


- காங்கிரஸ் கட்சியின் நூற்றாண்டு நிறுவன வருடமான 1985ஆம் ஆண்டு இந்த விருது நிறுவப்பட்டது.
- இந்தியாவிலுள்ள பல்வேறு கலாச்சாரங்கள் மற்றும் சமூகங்கள் இடையே தோழமையையும், புரிந்துணர்வையும், தேசிய ஒருமைப்பாட்டையும் ஊக்குவித்தவர்களுக்கு அக்டோபர் 31ஆம் தேதி ஆண்டுதோறும் இவ்விருது வழங்கப்படுகிறது.

## பத்ம பிரபா புரஷ்கரம் விருது

- 2017ஆம் ஆண்டிற்கான பத்ம பிரபா புரஷ்கரம் விருதுக்கு புகழ்பெற்ற பத்திரிக்கையாளர் மற்றும் கவிஞரான பிரபா வர்மா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## இந்தியாவின் முதல் ஒலிம்பிக் நீச்சல் வீரர் மறைவு

- 1956 ஆம் ஆண்டின் கோடைக்கால ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற இந்தியாவின் முதல் ஒலிம்பிக் நீச்சல் வீரரான சம்ஷேர் கான் அக்டோபர் 15 ஆம் தேதி இயற்கை எய்தினார்.
- ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற 1956 ஆம் ஆண்டு ஒலிம்பிக்கின் இந்திய ஒலிம்பிக் வீரர்கள் குழுவில் இவர் இடம் பெற்றிருந்தார். இருப்பினும் நீச்சல் போட்டியில் 4வது இடத்தையே பிடித்தார்.



## இந்திய மகளிர் இயற்கை வேளாண்மை திருவிழா

- மத்திய பெண்கள் மற்றும் குழந்தை மேம்பாட்டு அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்திய மகளிர் இயற்கை வேளாண்மை திருவிழா வெற்றிகரமாக அக்டோபர் 15 அன்று நிறைவடைந்தது.
- பெண் விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட இயற்கை பொருட்களின் பெரும் திருவிழாவாக புதுதில்லியிலுள்ள தில்லி ஹாட் பகுதியில் நடத்தப்பட்டது.
- இயற்கை உணவு மற்றும் நறுமணப் பொருட்கள், சமையலறை பொருட்கள் மற்றும் தனிப்பட்ட பொருட்கள் போன்றவை உள்ளடங்கிய பல இயற்கை பொருட்களின் விற்பனைக்கான இடமாக இந்திய மகளிர் இயற்கை வேளாண்மை திருவிழா தற்போது வருடாந்திர நிகழ்ச்சியாக உருவாகியுள்ளது.
- இத்திருவிழாவின் முக்கிய நோக்கம் இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கும் பெண்கள் மற்றும் பெண் குழுக்களுக்கு ஆதரவு அளித்தல் ,அவ்வாறு அவர்களின் உள்ளூர் சமுதாய பொருளாதாரத்திற்கு ஆதரவளித்தல் மூலம் வேலைவாய்ப்பை உண்டாக்குதல், விவசாயிகளின் வளர்ச்சியை தொடர வைத்தல். அதோடு இயற்கை பொருட்களின் நன்மையினைப் பற்றி சரியான விழிப்புணர்வை பரப்புதல் போன்றவையாகும்.
- மகளிர் தொழிற்முனைவோர்களின் தேவை மற்றும் எதிர்பார்ப்புகளை சந்திக்க மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் அமைச்சகத்தால் உருவாக்கப்பட்ட இணையத் தொடக்கமான மஹிளா-இ.ஹாத் மூலம் பெண் பங்கேற்பாளர்கள் இந்திய மகளிர் இயற்கை வேளாண் பொருட்கள் திருவிழாவிற்கு பதிவு செய்ய இயலும். இந்த தனித்தன்மை வாய்ந்த இணைய தளமானது திருவிழாவிற்கு அப்பாலும் பெண் தொழில் முனைவோர்களின் சமூக பொருளாதார மேம்பாட்டை வேகமாக வலுப்படுத்த உதவும்.

## மேன்புக்கர் பரிசு-2017

- அமெரிக்க நூலாசிரியரான ஜார்ஜ் சாண்டர் அவர்களுக்கு 2017ஆம் ஆண்டிற்கான மிக உயரிய இலக்கிய விருதான மேன்புக்கர் பரிசு அவருடைய முதல் முழு நீள நாவலான “லின்கான் இன் த பர்டோ” (Lincoln in the Bardo) விற்காக வழங்கப்பட்டுள்ளது.
- தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக அமெரிக்கர்கள் இவ்விருதினை பெறுகின்றனர். இதற்கு முன் 2016ல் பவுல் பீட்டி தன் “தி செல்அவுட்” நாவலுக்காக மேன் புக்கர் பரிசு பெற்றார்.

### *மான் புக்கர் பரிசு*

- மான் புக்கர் பரிசு (The Man Booker Prize) என்பது ஆங்கில மொழியில் எழுதப்படும் சிறந்த முழுநீள புதினங்களுக்கு வழங்கப்படும் பரிசாகும். இப்பரிசு 1969 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இப்பரிசினைப் பெறும் நாவல்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு, இங்கிலாந்து நாட்டில் பிரசுரிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது நிபந்தனை ஆகும்.
- இதைப்போன்று, மான் புக்கர் சர்வதேசப் பரிசு (The Man Booker International Prize) 2005 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இப்பரிசு இரண்டு ஆண்டிற்கு ஒருமுறை வழங்கப்பட்டு வந்தது. எந்தவொரு மொழியிலும் முதலில் எழுதப்பட்டு , ஆங்கிலத்தில் பரவலாக கிடைக்கப்பெறும் படைப்புகள் இப்பரிசுக்கு தகுதி பெறும். புதினங்களும் , சிறுகதைத் தொகுப்புகளும் இப்பரிசுக்கு தகுதி உடையவையாகும்.
- இந்த விருது துவங்கப்பட்ட காலத்தில் காமன்வெல்த் நாடுகள் , அயர்லாந்து மற்றும் தென்னாப்பிரிக்க (பின்னர் ஜிம்பாப்வே) குடிமக்கள் பரிசு பெற தகுதிப் பெற்றிருந்தார்கள்.
- 2016 ஆம் ஆண்டில் இந்த விருது மறுசீரமைக்கப்பட்டு, தற்போது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட ஒரு புத்தகத்திற்கு ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

- இந்த விருதோடு வழங்கப்படும் ஐம்பது ஆயிரம் பிரிட்டன் பவுண்டுகள் (£50,000), ஆசிரியருக்கும் மொழிபெயர்ப்பாளருக்கும் இடையில் சமமாக பகிர்ந்து கொள்ளப்படுகிறது.
- 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் முறையே பால் பேட்டி மற்றும் ஜார்ஜ் சான்டர்ஸ் ஆகிய அமெரிக்காவைச் சேர்ந்த எழுத்தாளர்கள் இப்பரிசினை வென்றனர்.

## சுப்ரமணியன் சந்திரசேகருக்கு கூகுளின் கௌரவிப்பு

- இந்தியாவைச் சேர்ந்த அமெரிக்க வாழ் விண்வெளி ஆராய்ச்சியாளரான சுப்ரமணியன் சந்திர சேகரின் 107வது பிறந்தநாளை முன்னிட்டு இணைய தேடல் நிறுவனமான "கூகுள்" சிறப்பு டூடுளை ஏற்படுத்தியுள்ளது.
- சுப்ரமணியம் சந்திரசேகர் 1983ல் வில்லியம் A. பவுலர் உடன் சேர்ந்து தன்னுடைய நட்சத்திரங்களின் பரிணாம வளர்ச்சியைப் பற்றிய ஆய்வுக்காக நோபல் பரிசு பெற்றார்.
- இவர் நோபல் பரிசு பெற்ற முதல் விண்வெளி ஆராய்ச்சியாளர் ஆவார்.
- புவியீர்ப்பு அலைகளின் மோதல்கள் பற்றிய கோட்பாட்டின் ஆய்விற்காகவும் இவர் பெரும் பங்காற்றியுள்ளார்.
- இவரை கௌரவிக்கும் வகையில் முக்கிய X-Ray ஆய்வகத்திற்கு சந்திரா X-ray ஆய்வகம் என நாசா பெயரிட்டுள்ளது.

## தென்ஆப்பிரிக்காவின் டர்பனில் நான்காம் உலகத் தமிழர் பொருளாதார மாநாடு

- 2017 நவம்பர் 16 முதல் 20 வரை தென் ஆப்ரிக்காவின் டர்பனில், நான்காம் உலகத் தமிழர் பொருளாதார மாநாடு நடைபெறவிருக்கிறது.
- வணிக மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் தொழில்முறை பிணையம், அறிவினைப் பரிமாறுதல் மற்றும் உலகத்தின் தற்போதைய பொருளாதார சூழல் ஆகியவைகளைப் பற்றி விவாதிப்பதற்கான தனித்தன்மை வாய்ந்த தளத்தினை இந்த மாநாடு அளிக்கவிருக்கின்றது.
- இந்த மாநாட்டில் இந்தியா மற்றும் ஏனைய பிற நாடுகளின் அரசாங்கம் வணிகம் மற்றும் பிற துறைகளில் மிகவும் உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் கலந்துகொண்டு உரையாற்ற உள்ளனர்.
- உலகத் தமிழர் பொருளாதார கூட்டமைப்பும் (World Tamils Economic Federation) மெட்ராஸ் வளர்ச்சி சங்கமும் (Madras Development Society) இணைந்து இந்த மாநாட்டினை நடத்தவிருக்கிறது.

## சர்வதேச குழந்தைகள் அமைதிப்பரிசு

- தமிழ்நாட்டை சேர்ந்த சக்தி எனும் 12 வயது சிறுவனின் பெயர் 2017 ஆம் ஆண்டின் சர்வதேச அமைதி பரிசிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
- நரிக்குறவர் சமூகத்தினரின் மத்தியில் கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டி , பலர் தங்களின் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப காரணமாக இருந்தமைக்காக சிறுவனின் பெயர் இந்த விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.
- பாதிக்கப்பட்ட குழந்தைகளின் நிலைமையை மேம்படுத்துவதிலும் , குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும் குறிப்பிட்ட பங்கினை ஆற்றிய குழந்தைகளுக்காக ஆண்டு தோறும் இப்பரிசு வழங்கப்படுகிறது.
- ஆம்ஸ்டர்டாமில் உள்ள "கிட்ஸ் பவுண்டேசன்" எனும் சர்வதேச குழந்தைகள் உதவி அமைப்பு இந்த பரிசை வழங்குகிறது.

- 2005-ல் ரோமில் நடைபெற்ற நோபல் அமைதிப்பரிசு பெற்றவர்களின் அமைதி மாநாட்டில் இந்த குழந்தைகள் அமைதிப்பரிசு முதன்முதலில் வழங்கப்பட்டது.

## பிபா சிறந்த கால்பந்தாட்ட வீரர் – 2017

- கிறிஸ்டியானோ ரொனால்டோ தொடர்ந்து இரண்டாவது வருடமாக பிபா சிறந்த கால்பந்தாட்ட வீரர் என்ற விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- இந்த வருடாந்திர சிறந்த கால்பந்தாட்ட வீரர் என்ற விருதிற்கான பொதுவான தகுதிகள் விளையாட்டில் திறமையையும், ஆடுகளத்தின் உள்ளும் வெளியேயும் உள்ள நடத்தையையும் கொண்டதாகும்.

## பழம்பெரும் பாரம்பரிய பாடகர் கிரிஜா தேவி காலமானார்.

- புகழ்பெற்ற பாடகர் மற்றும் பத்ம விபூசன் விருது பெற்ற கிரிஜா தேவி காலமானார்.
- பனாரஸ் கரானாவின் புகழ்பெற்ற பாடகரான இவர் அப்பாஜி என்று அன்பாக அழைக்கப்படுகிறார். இவர் 1972ல் பத்மஸ்ரீ, 1989ல் பத்மபூஷன் மற்றும் 2016ஆம் ஆண்டு பத்ம விபூஷன் விருதுகளை வாங்கியுள்ளார்.
- இவர் ‘தும்ரி’ யின் ராணி என்று அழைக்கப்படுகிறார்.
- இது ஹிந்துஸ்தானி பாரம்பரிய இசையின் த்ருபாத், காயல் போன்ற இசை வடிவமாகும்.
- தும்ரி என்பது உத்திரப் பிரதேசத்தின் கிழக்குப் பகுதியிலிருந்து தோன்றிய இந்தியப் பாரம்பரிய இசையின் பகுதி வடிவம் கொண்ட பொது வகையைச் சேர்ந்ததாகும்.
- இதில் இசை இலக்கணம் பின்பற்றப்படாது. மேலும் இது குறைந்த அல்லது கலப்பு ராகங்களை அடிப்படையாகக் கொண்டது.
- இந்த இசை வடிவமானது அதன் குரல் மற்றும் கருவி வடிவங்களில் உள்ளது.
- இதன் கருப்பொருள்கள் முதன்மையாக காதல் சம்பந்தப்பட்டவையாகவும், குறிப்பாக காதலர்களின் பிரிவு மற்றும் கிருஷ்ணரின் குறும்புத்தனங்கள் அவரை விளையாட்டுப் பிள்ளையாக சித்தரிப்பது ஆகிய விஷயங்களிலும் கவனம் கொள்கிறது.

## தேசிய சமூகத் தொழில்முனைவோர் கருத்தாக்க போட்டி

- பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கை புனரமைவுக்கு பயன்படத்தக்க தற்காலிக இருப்பிடங்களை வடிவமைப்பதற்காக பெங்களூருவிலுள்ள அசிம் பிரேம்ஜி பல்கலைக்கழகத்தால் தேசிய சமூகத் தொழிற்முனைவோர் கருத்தாக்க சவால் போட்டி நடைபெற்றது. இதில் சென்னை ஐஐடியைச் சேர்ந்த P. கோபிநாத், R. ஸ்ரீராம், G.U. சந்தோஸ் ஆகிய மாணவர்கள் முதல் பரிசைப்பெற்றனர்.
- இந்த மட்டுக் கட்டமைப்பு வீடானது செலவு குறைந்ததாகவும், எளிதில் இடம் மாற்றக்கூடியதாகவும், விரைவாக அமைக்கும் வசதியுடையதாகவும் உள்ளது. மேலும் வழக்கமான கட்டுமான முறைகள் அளிக்காத வசதிகளான முழுப்பாதுகாப்பு, தனிமை மற்றும் மின் காப்பு உடைய மின்வசதி போன்ற வசதிகளையும் உடையது.
- வேளாண் கழிவுகள் மற்றும் வைக்கோலைப் பயன்படுத்தி வலுப்படுத்தப்பட்ட ஒலி ஓடுகளை உருவாக்கியமைக்காக கோவை குமரகுரு தொழிற்நுட்ப கல்லூரியைச் சேர்ந்த அகில் கிருஷ்ஸபா மற்றும் ரஞ்சித் குமாருக்கு இரண்டாவது பரிசு வழங்கப்பட்டது.

## இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தென்ஆப்ரிக்கத் தம்பதியினருக்கு அமெரிக்காவின் உயரிய விருது

- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தென்னாப்பிரிக்கத் தம்பதியினரான பேராசிரியர் குரேஷா அப்துல் கரிம் மற்றும் பேராசிரியர். சலீம் அப்துல் கரிம் ஆகியோர், ஹெச்ஐவி / எய்ட்ஸ் நோய் பிரிவில் ஆற்றிய அளப்பரிய சேவைக்காக, அமெரிக்காவின் மனித வைராலஜி நிறுவனத்தின் வாழ்நாள் சாதனையாளர் விருதினைப் பெற்றனர்.
- இருவரும் தொற்றுநோய் சிறப்பியல் வல்லுனர்கள். இவர்கள் அமெரிக்காவின் பால்டிமோரில் அமைந்துள்ள மனித வைராலஜி நிறுவனத்தின் (Institute of Human Virology – IHV) 19-வது வருடாந்திர சர்வதேச மருத்துவ வைரஸ் ஆராய்ச்சிக் கருத்தரங்கில் கவுரவிக்கப்பட்டனர்.
- இந்த மரியாதைக்குரிய விருதினை, HIV வைரஸ்தான் எய்ட்சு நோய்க்கு காரணம் என்பதைக் கண்டறிந்த அறிஞர் ராபர்ட் காலோ அவர்கள், பேராசிரிய தம்பதிகளுக்கு வழங்கினார்.
- பாலியல் ரீதியான எச்ஜவி தொற்றிலிருந்து ஆன்டிரெட்ரோவைரல் (HIV எதிர்மருந்து) மருந்துகள்தான் காக்கின்றன என்பதை 2010-ல் முதன்முதலாக கண்டறிந்து விளக்கினர். இவர்களது ஆய்வின் முடிவுகளை CAPRISA 004 Tenofovir Gel என்ற சோதனையில் நிரூபித்தனர்.
- இந்த ஜெல் மருந்து HIV சிகிச்சையில் பரவலாக பயன்படுத்தப்படுகிறது.
- இந்த கண்டுபிடிப்பானது 2010-இன் முதல் 10 உலகளாவிய அறிவியல் கண்டுபிடிப்புகளில் ஒன்றாக அங்கீகாரம் பெற்றது. மேலும், இந்த மருந்து பிறப்புறுப்புகளில் ஏற்படும் தோல் அழற்சி தொற்றிலிருந்தும் (Genital Herpes) காப்பதாக பேராசிரியர் தம்பதிகள் நிரூபித்தனர். இதுவே எய்ட்ஸ் நோய்க்கு எதிரான முதல் பயனுள்ள மருந்து ஆகும்.

## ஹிருதயநாத் மங்கேஸ்கர் விருது - ஜாவெத் அக்தர்

- புகழ்பெற்ற எழுத்தாளரும் கவிஞருமான ஜாவெத் அக்தர், ஹிருதயநாத் மங்கேஸ்கர் விருதினால் கவுரவிக்கப்பட்டார்.
- இது மும்பையில் நடைபெற்ற ஹிருதயநாத் கலையகத்தின் 28 வது வருடக் கொண்டாட்டம் மற்றும் , புகழ்பெற்ற இசை அமைப்பாளர் ஹிருதயநாத் மங்கேஷ்கரின் 80 வது பிறந்தநாள் விழாவின்போது வழங்கப்பட்டது.

### *ஹிருதயநாத் மங்கேஷ்கர் விருது*

- இந்த விருது 2011-ல் மும்பையைச் சேர்ந்த நிறுவனமான ஹிருத்யேஷ் ஆர்ட்ஸ் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டதாகும், இது புகழ்பெற்ற இசையமைப்பாளரும் பாடகருமான ஹிருதயநாத் மங்கேஷ்கர் நினைவாக வழங்கப்பட்டு வருகிறது.
- இது நாடு முழுவதிலும் வெற்றிபெற்றவராக திகழும் நபர்களை தேர்வு செய்து இரண்டு லட்சம் ரூபாய் ரொக்கமும், நினைவுப்பரிசும் வழங்கி கவுரவிக்கிறது.

## எழுத்தாளர் மேலாண்மை பொன்னுசாமி காலமானார்

- சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளரான புகழ்பெற்ற மேலாண்மை பொன்னுசாமி உடல்நலக் குறைவால் சென்னையில் காலமானார்.
- விருதுநகர் மாவட்டம் மேலாண்மறைநாடு என்ற கிராமத்தில் பிறந்த இவர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியுடன் தன்னை இணைத்துக்கொண்டு பல போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

- "உயிர் நிலம்' உள்ளிட்ட 6 நாவல்கள், 22 சிறுகதை தொகுப்புகள், 6 குறுநாவல்கள், ஒரு கட்டுரைத் தொகுப்பு என 35 நூல்களை எழுதியுள்ளார். "மின்சாரப் பூ' என்ற சிறுகதைத் தொகுப்புக்கு கடந்த 2007-ஆம் ஆண்டு சாகித்ய அகாதெமி விருது பெற்றார்.
- தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் சங்கத்தின் தலைவராகவும் இவர் பொறுப்பு வகித்துள்ளார்.
- இலக்கிய சிந்தனை விருது, ஆதித்தனார் விருது மற்றும் தமிழக அரசின் விருது போன்ற பல விருதுகளை இவர் பெற்றுள்ளார்.

## பிரபல வரலாற்று அறிஞர் சதீஷ் சந்திரா

- பிரபல வரலாற்று அறிஞரும் மத்திய கால வரலாற்றை பற்றி தெளிவாக எழுதியவருமான சதீஷ் சந்திரா சமீபத்தில் தனது 95 வயதில் காலமானார். மத்திய அரசின் பாட நூல் கழகமான NCERT மத்திய கால வரலாற்று புத்தகத்தை 1970களில் முதன் முறையாக எழுதினார். இந்த புத்தகங்கள் 2000ம் ஆண்டு வரை புழக்கத்தில் இருந்தன.
- இவர் மத்திய கால இந்தியாவைப் பற்றி எழுதும்போது இந்தியாவின் ஒட்டுமொத்த கலாச்சாரத்தையும் மத சார்பற்ற வகையில் ஏராளமான தகவல்களுடன் விவரித்துள்ளார்.
- 1973 முதல் 76 வரை பல்கலைக் கழக மானியக்குழுவின் துணைத் தலைவராகவும் 76 முதல் 81 ம் ஆண்டு வரை அதன் தலைவராகவும் பதவி வகித்துள்ளார். இவர் டெல்லியிலுள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக பேராசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.
- அதற்கு முன்பு அலகாபாத் பல்கலைக்கழகம், அலிஹார் முஸ்லீம் பல்கலைக்கழகம், டெல்லி மற்றும் ராஜஸ்தான் பல்கலைக்கழகங்களில் இவர் பணி புரிந்துள்ளார். இவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் 1971ல் கௌரவ விரிவுரையாளராக பணியாற்றினார்.
- இவர் திரு. S. போகால், பிபின் சந்திரா, திருமதி. ரோமிலா தாபர் ஆகியோருடன் இணைந்து ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் சமூக அறிவியல் துறையில் வரலாற்று துறைக்கான சிறப்பு மையத்தை துவங்கினார்.

## ம.கோபாலகிருஷ்ண ஐயர் குறித்த இலக்கிய அரங்கம்

- தமிழ் வளர்ச்சிக்கு அருந்தொண்டு ஆற்றிய ம.கோபாலகிருஷ்ண ஐயர் குறித்த இலக்கிய அரங்கம், சாகித்ய அகாடமி சார்பில் சென்னை பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டது.

### *ம.கோபாலகிருஷ்ண ஐயர்*

- ம.கோபாலகிருஷ்ண ஐயர் (ம.கோ). கவிதை, மொழிபெயர்ப்பு, நாடகம், பத்திரிகை, இலக்கிய இதழ்கள் என பல்வேறு தளங்களில் இயங்கிய பன்முகத் திறமை கொண்டவர். மதுரா கல்லூரியில் தமிழ்த் துறைப் பேராசிரியராக 10 ஆண்டுகள் பணியாற்றினார். பின்னர், திருச்சி தேசியக் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைமைப் பேராசிரியராக இருந்தார்.
- மாணவர்கள் மனதில் தமிழ் ஆர்வத்தை வளர்க்கும் நோக்கத்துடன் 'மதுரை மாணவர் செந்தமிழ் சங்கம்' என்ற அமைப்பை 1901-ல் தொடங்கினார்.
- மதுரை தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினராகவும், ஆய்வாளராகவும் இருந்துள்ளார்.
- இளைஞர்களிடம் தாய்நாடு, தாய்மொழி மீதான பற்றை வளர்க்க, தனது ஆசிரியர் தொழிலையும், தான் நடத்திவந்த இதழ்களையும் பயன்படுத்தினார்.
- இவரது கட்டுரைகளின் தொகுப்பு 'அரும்பொருட்திரட்டு' என்ற பெயரில் மதுரை தமிழ்ச் சங்கத்தால் 1915-ல் புத்தகமாக வெளியிடப்பட்டது. 1927-ல் மறையும் வரை தொடர்ந்து எழுதிவந்தார். '

- விவேகோதயம்', 'நச்சினார்க்கினியன்' ஆகிய இலக்கிய இதழ்களை அவரே ஆசிரியராக இருந்து வெளியிட்டார்.
- தாகூர், உ.வே.சாமிநாத ஐயர், பரிதிமாற்கலைஞர், வள்ளல் பாண்டித்துரை தேவர் உள்ளிட்ட அறிஞர்கள் பற்றிய இவரது கவிதைகள் தொகுப்பு 'தனிப்பாடல்கள்' என்ற புத்தகமாக வந்துள்ளது.
- 'விஸ்வநாதன்' என்ற செய்யுள் நாடகத்தையும், 'மவுன தேசிகர்' என்ற வரலாற்றுப் புனைவு நகைச்சுவை நாடகத்தையும் எழுதியுள்ளார்.

# விளையாட்டுச் செய்திகள்

## ஆண்கள் கால்பந்தாட்டப் போட்டிகளில் பெண் நடுவர்கள்

- இந்தியாவில் நடைபெற உள்ள 17 வயதுக்குட்பட்டோருக்கான பிபா (FIFA) உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் பெண் உதவி நடுவர்களை பணியமர்த்த சர்வதேச கால்பந்து சங்க கூட்டமைப்பான பிபா முடிவு செய்துள்ளது.
- ஆண்களுக்கான கால்பந்து போட்டியில் பெண் உதவி நடுவர்களை பணியமர்த்துவது இதுவே முதன் முறை ஆகும்.

## 9 நாடுகளுக்கு சர்வதேச பளுதூக்கல் போட்டிகளில் பங்கேற்கத் தடை

- கடந்த 2008 மற்றும் 2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்ற 9 நாடுகளின் வீரர்/வீராங்கனைகளின் மாதிரிகள் மறுபரிசோதனை செய்யப்பட்டது .
- இதில் அவர்கள் ஊக்கமருந்து பயன்படுத்தியமை உறுதி செய்யப்பட்டதை தொடர்ந்து சர்வதேச பளுதூக்கல் போட்டிகளில் அந்நாடுகள் பங்கேற்க சர்வதேச பளுதூக்கல் சம்மேளனம் (International Weightlifting Federation- IWF) ஓராண்டு காலத்திற்கு தடை விதித்துள்ளது.
- இதனால் ரஷியா ,சீனா ,ஆர்மேனியா ,அஜர்பைஜான் ,பெலாரஸ் ,மால்டோவா ,கஜகஸ்தான் , துருக்கி ,உக்ரைன் உள்ளிட்ட இந்நாடுகள் கலிபோர்னியாவில் நடைபெறவுள்ள பளுதூக்குதல் உலக சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பினை இழந்துள்ளன.
- இதனால் சீனா 2018 ஆம் ஆண்டு நடைபெற உள்ள ஆசிய பளுதூக்குதல் போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பினையும் இழந்துள்ளது .
- ஏற்கனவே 2016 ரியோ ஒலிம்பிக் போட்டியின் பளுதூக்குதலில் ரஷ்யா பங்கேற்க தடை விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## ஐரோப்பிய கார்பந்தய சாம்பியன்ஷிப்

- பார்முலா கார்பந்தய வகுப்பின் பாஸ் ஜி.பி கார்பந்தய சாம்பியன்ஷிப் போட்டியில் சென்னையை சேர்ந்த மஹாவீர் ரகுநாதன் சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.
- இதன் மூலம் ஐரோப்பிய கார்பந்தய சாம்பியன்ஷிப் பட்டத்தை பெறும் முதல் இந்தியர் இவரே ஆவார்.

## உலக உசூ (குங் ஃபூ) சாம்பியன்ஷிப் போட்டி

- ரஷ்யாவில் நடைபெற்று வரும் உலக உசூ (குங் ஃபூ) சாம்பியன் ஷிப் போட்டியின் 75 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் பூஜா கடியன் தங்கம் வென்றுள்ளார்.

- இதன் மூலம் உலக உசூ (குங் ஃபூ) சாம்பியன்ஷிப் போட்டியின் வரலாற்றில் இந்திய உசூ (குங் ஃபூ) அணி தன் முதல் தங்கத்தைப் பெற்றுள்ளது.

## இளையோர் நீர் விளையாட்டு சாம்பியன்ஷிப்

- புனேவில் நடைபெற்ற 44 ஆவது இளையோர் நீர் விளையாட்டு சாம்பியன்ஷிப் போட்டியில் கர்நாடகம் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.
- கர்நாடகத்தைச் சேர்ந்த ஸ்ரீகரி நடராஜ் இளையோர் குழுவின் - I ஆம் பிரிவில் சிறந்த நீச்சல் வீரர் பட்டத்தை தட்டிச் சென்றதுடன் ஆண்களுக்கான 50மீ பேக்ஸ்ட்ரோக் பிரிவில் தேசிய சாதனை படைத்துள்ளார்.
- மேற்கு வங்கத்தைச் சேர்ந்த ஸ்வதேஷ் மோன்டல் சிறுவர் குழுவின் – II ஆம் பிரிவில் சிறந்த நீச்சல் வீரர் பட்டத்தை தட்டிச் சென்றார்.
- பெண்கள் பிரிவில் ரேய்னா மற்றும் கெனிஷா குப்தா தனிநபர் பட்டத்தை வென்றனர்.

## ஜப்பானிய கிராண்ட் பிரிக்ஸ்

- ஜப்பானில் நடந்த ஜப்பானிய கிராண்ட் பிரிக்ஸ் பார்முலா – I கார் பந்தயத்தில் லீவிஸ் ஹாமில்டன் வெற்றியைத் தழுவியதன் மூலம் நான்காம் உலக கிராண்ட் பிரிக்ஸ் பட்டத்தை வென்றார்.
- இந்த பந்தயமானது 2017 ஆம் ஆண்டுக்கான எஃப்1ஏ பார்முலா ஒன் உலக சாம்பியன் பட்டத்தின் 16-வது சுற்றாகும். மேலும் இது ஜப்பானிய கிராண்ட் பிரிக்ஸின் 43-ஆவது பந்தயமாகும்.
- எஃப்1ஏ (F-IA) பார்முலா ஒன் உலக சாம்பியன்ஷிப் போட்டியின் ஆண்டு திட்டத்தில் உள்ள ஓர் பந்தயமான ஜப்பானிய கிராண்ட் பிரிக்ஸ் வெற்றியைத் தீர்மானிக்கும் தளமாக இருந்து வருகிறது. இதுவரை இங்கு நடைபெற்ற 30 உலக சாம்பியன் போட்டிகளில் 13 உலக சாம்பியன்கள் இங்குதான் மகுடம் சூட்டியுள்ளனர்.

## 16 வயதுக்கு உட்பட்டோருக்கான மேசைப்பந்தாட்டப் போட்டி

- ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் நடைபெற்று வரும் 16 வயதுக்குட்பட்டோருக்கான உலக ஓபன் மேசைப்பந்தாட்டப் போட்டியின் பெண்கள் பிரிவில் இந்தியாவின் அனுபமா ராமச்சந்திரன் சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.
- 16 வயதுக்குட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்கான இந்த உலக ஓபன் மேசைப்பந்தாட்ட சாம்பியன்ஷிப் போட்டி முதன் முறையாக செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் ரஷ்யா பில்லியர்ட்ஸ் விளையாட்டு கூட்டமைப்பால் நடத்தப்பட்டுள்ளது.

## U-15 ஆசிய ஜீனியர் சாம்பியன்ஷிப்

- மியான்மரின் யங்கூன் நகரில் நடைபெற்ற 15 வயதுக்குட்பட்டோருக்கான பாட்மின்டன் சாம்பியன்ஷிப் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்திய பூப்பந்தாட்ட வீராங்கனை சமியா இமாத் பாரூகி தங்கம் வென்றுள்ளார்.
- இதன்மூலம் இவர் ஆசிய ஜூனியர் சாம்பியன்ஷிப் போட்டியில் பட்டம் பெறும் இரண்டாவது இந்தியர் ஆவார்.

- இதற்கு முன் 2012-ல் தென்கொரியாவில் நடைபெற்ற U-19 ஆசிய ஜூனியர் சாம்பியன்ஷிப் போட்டியில் P.V. சிந்து சாம்பியன்ஷிப் பெற்று முதல் இந்திய ஆசிய ஜூனியர் சாம்பியன் ஆனார்.

## ஜிம்னாஸ்டிக் உலக சாம்பியன்ஷிப்

- கனடாவின் மான்ட்ரியல் நகரில் நடைபெற்ற உலக ஜிம்னாஸ்டிக் சாம்பியன்ஷிப் போட்டியில் அமெரிக்காவின் மார்கன் ஹார்ட் முழு உலக சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.
- இப்பட்டத்தை வென்றதன் மூலம் ஒலிம்பிக் போட்டியின் இளம் வயது சாம்பியன் அல்லது முழு உலக சாம்பியன் போட்டியின் இளம் வயது சாம்பியன் எனும் பெருமையினை 2010 ஆம் ஆண்டு பெற்ற அலியா முஸ்தபினாவிற்கு அடுத்து மார்கன் ஹார்ட் பெற்றுள்ளார்.

## சீனா ஓபன் டென்னிஸ் போட்டி

- சீனா ஓபன் டென்னிஸ் இறுதிப்போட்டியில் ஸ்பெயின் நாட்டு டென்னிஸ் வீரரான ரபேல் நடால் பட்டம் வென்றுள்ளார்.
- இது இவ்வருடத்தில் அவர் பெறும் 6வது சர்வதேச ஆடவர் ஒற்றையர் டென்னிஸ் (ATP) பட்டம் ஆகும்.
- பெண்களுக்கான இறுதிப் போட்டியின் ஒற்றையர் பிரிவில் பிரான்சின் கரோலின் கார்ஸியா பட்டம் வென்றுள்ளார்.

## உலக இளையோருக்கான வில்வித்தைப் போட்டி

- அர்ஜென்டினாவின் ரோசரியாவில் நடைபெற்று வரும் உலக இளையோருக்கான வில்வித்தை சாம்பியன்ஷிப்பில் ஜீனியர் கலப்பு அணி பிரிவில் இந்தியாவின் அங்கிதா பகத் மற்றும் N. ஜெம்சன் உள்ளடங்கிய அணி தங்கம் வென்றுள்ளது.
- ஜீனியர் ஆண்கள் அணி பிரிவில் ஜெம்சன் சிங், அதுல் வர்மா, அக்மணி கஜனன் பாப்ரேகர் அடங்கிய இந்திய அணி வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளது.
- குஷ்பூ தியாலா, சஞ்சிதா திவாரி, மற்றும் திவ்யா தயால் ஆகியோர் அடங்கிய ராணுவ பெண்கள் அணி (Cadet Compound Girls Team) வெண்கலம் வென்றுள்ளது.
- மொத்த பதக்கப்பட்டியலில் இந்தியா ஏழாவது இடத்தைப் பெற்றது.

## இந்திய நாட்டின் முதல் சர்வதேச கால்பந்தாட்ட கோல்

- ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் நடந்த 17 வயதுக்கு உட்பட்டோருக்கான பிபா உலகக்கோப்பை கால்பந்தாட்டப் போட்டியில் இந்தியாவைச் சேர்ந்த ஜீக்சன் சிங் இந்தியா சார்பில் ஒரு கோல் அடித்தார்.
- பிபா கால்பந்தாட்ட வரலாற்றில் இந்தியா சார்பில் அடிக்கப்பட்ட முதல் கோல் இதுவாகும்.டெல்லியில் உள்ள நேரு விளையாட்டு அரங்கில் நடைபெற்ற இந்தியாவுக்கான போட்டியின் இரண்டாவது ஆட்டத்தில் இந்த கோல் பதிவு செய்யப்பட்டது.
- கொலம்பியா நாட்டிற்கு எதிரான ஆட்டத்தின் 82 ஆவது நிமிடத்தில் இந்த கோலினை ஜீக்சன் சிங் அடித்து சாதனைப் புரிந்தார். இந்தியா ஆட்டநேர முடிவில் 1-2 என்ற கோல் கணக்கில் தோல்வியுற்றது.

- ஜீக்சன் மணிப்பூர் மாநிலத்தைச் சார்ந்த கால்பந்தாட்ட வீரர் ஆவார்.

## தயான்ஜின் ஓபன் டென்னிஸ்

- சீனாவிலுள்ள தயான்ஜினில் நடைபெற்ற தயான்ஜின் டென்னிஸ் ஓபன் போட்டியில் 5 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் பெற்றவரான மரியா ஷரபோவா சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.
- பெலாரஸ் வீராங்கனை அரைனா சபலேன்காவை வீழ்த்திய இரஷ்ய வீரங்கனையான மரியா ஷரபோவா ஊக்கமருந்து பயன்பாட்டால் விதிக்கப்பட்ட 15 மாத தடைக்காலம் முடிவடைந்த பின் பெற்ற முதல் பட்டம் இதுவாகும்.

## இந்தியாவின் முதல் WWE மல்யுத்த வீராங்கனை

- ஹரியானாவைச் சேர்ந்த கவிதா தேவி, உலகின் மிகப்பெரிய மல்யுத்த நிறுவனமான உலக மல்யுத்த பொழுதுபோக்கு நிறுவனத்தினால் (World Wrestling Entertainment) மல்யுத்த போட்டிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட முதல் இந்திய பெண் என்ற பெருமையை பெற்றுள்ளார்.
- ஜோர்டானைச் சேர்ந்த ஷாதியா பெய்ஸோ என்பவரும் WWE நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதால் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து WWE-ல் பங்குபெறும் முதல் அரபு பெண் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

## இளையோர் (Sub – Junior) கூடைப்பந்து

- தமிழ்நாட்டைச் சேர்ந்த இளம் வீராங்கனைகள் ராஜஸ்தானில் நடந்த 44வது இளையோர் கூடைப்பந்து சாம்பியன்சிப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் 88-81 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் நடப்பு சாம்பியனான சத்திஸ்கரை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றுள்ளனர்.

## உலகக் கோப்பை ஹாக்கி போட்டிக்கு சீனா முதல் முறையாக தகுதி

- உலகக் கோப்பை ஹாக்கி போட்டிக்கு முதல் முறையாக சீனா தகுதி பெற்று வரலாற்றுச் சாதனைப் படைத்துள்ளது. அதேவேளையில் 1998ஆம் ஆண்டிற்கு பிறகு தென்கொரியா முதல் முறையாக உலகக் கோப்பை ஹாக்கி போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பினை இழந்துள்ளது.
- இந்த ஆண்டு லண்டனில் நடைபெற்ற ஹாக்கி உலக லீக் அரையிறுதி போட்டியில் 8 ம் இடம்பிடித்த சீனாவுக்கும், 9 ம் இடத்தை பிடித்த தென் கொரியாவிற்கும் உலகக் கோப்பை தொடர் வாய்ப்பை பெறுவதில் போட்டி நீடித்தது.
- வங்கதேசத்தில் நடைபெற்ற ஹீரோ ஆசிய கோப்பை ஹாக்கி தொடரில் மலேசியாவிற்கு எதிரான போட்டி தென் கொரியாவிற்கு உலகக் கோப்பையில் நுழைய கடைசி வாய்ப்பாக இருந்தது. இருப்பினும் ஆட்டம் சமன் ஆனதால் தென்கொரியா தனது கடைசி வாய்ப்பையும் இழந்தது அதனால் சீனா உலகக் கோப்பையில் பங்கேற்பது உறுதியானது.
- சர்வதேச ஹாக்கி சம்மேளன விதிகளின்படி, கண்டங்களில் நடைபெறும் தகுதிச்சுற்று போட்டிகளில் வெற்றி பெறும் அணிகள் உலகக்கோப்பை ஹாக்கி போட்டிக்குத் தானாகத் தகுதி பெரும்.
- மொத்தம் 16 நாடுகள் பங்கேற்கும் உலகக்கோப்பை ஹாக்கி போட்டி இந்தியாவிலுள்ள ஒரிஸா மாநிலத்தில் கலிங்கா மைதானத்தில் 2018 ஆம் ஆண்டு நவம்பர் 24 முதல் டிசமபர் 16 வரை நடைபெற உள்ளது.

## இந்தியா ஆசிய கோப்பை சாம்பியன்

- வங்கதேச தலைநகர் டாக்காவில் நடைபெற்ற ஆசிய கோப்பை ஹாக்கியின் இறுதிப் போட்டியில் இந்திய அணி மலேசியாவை 2-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றுள்ளது.
- இந்தியா ஆசியக் கோப்பை சாம்பியன் பட்டத்தை வெல்வது இது 3வது முறையாகும். இதற்கு முன் 2003 மற்றும் 2007ல் ஆசியக் கோப்பையை இந்தியா கைப்பற்றியது.
- பிளே ஆஃப் சுற்றில் 6-3 என்ற வித்தியாசத்தில் தென் கொரியாவை வீழ்த்தி பாகிஸ்தான் மூன்றாவது இடத்தைப் பிடித்தது.

*ஆசிய ஹாக்கி கோப்பை*

- ASHF ஆசியக் கோப்பையானது ஆண்கள் மற்றும் பெண்கள் ஹாக்கி பிரிவினருக்கான சர்வதேச ஹாக்கிப் போட்டியாகும். ஆசிய ஹாக்கி சம்மேளத்தினால் (Asian Hockey Federation-ASHF ) இது நடத்தப்படுகிறது.
- ஆண்களுக்கான ஆசியக் கோப்பை போட்டி 1982 ல் தொடங்கப்பட்டது. பெண்களுக்கான ஆசிய கோப்பை சாம்பியன்ஷிப் அதிகாரப்பூர்வமற்ற போட்டியாக 1983-ல் தொடங்கப்பட்டது. பின் 1985ஆம் ஆண்டு அதிகாரப்பூர்வமாக தொடங்கப்பட்டது.
- ஆசிய கோப்பையில் ஆண்கள் பிரிவில் 4 முறை சாம்பியன் பட்டமும், பெண்கள் பிரிவில் 3 முறை சாம்பியன் பட்டமும் பெற்று கொரியா பலம் வாய்ந்த அணியாக உள்ளது.

## சர்வதேச துப்பாக்கி சுடுதல் விளையாட்டு சம்மேளனம் – உலக கோப்பை

- ஹீனா சித்து மற்றும் ஜீது ராய் International Shooting Sport Federation (ISSF) உலக கோப்பை இறுதி போட்டியில் 10மீட்டர் கலப்பு அணிக்கான துப்பாக்கி பிரிவில் தங்கம் வென்றனர்.
- இந்தியா தனது வரலாற்றில் முதன்முறையாக இந்த போட்டியை நடத்துகின்றது.
- காமன்வெல்த் மற்றும் ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கம் வென்ற ராய் மற்றும் காமன்வெல்த் போட்டியில் தங்கம் வென்ற சித்து இருவரும் கூட்டாக இணைந்து தங்கள் மூன்றாவது தங்கத்தை வென்றனர். ஆனால் இவர்கள் இருவரும் இணைந்து ISSF உலக கோப்பையில் தங்கம் வெல்வது இதுவே முதன் முறையாகும்.
- இந்த வருடத்தின் முதலில் இந்த கலப்பு அணி போட்டிகள் உலக கோப்பைகளுக்கான மாதிரி போட்டிகளாக நடத்தப்பட்டன.
- 2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் இம்மாதிரி முறை அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக திட்டமிடப்பட்டுள்ளது.

## சர்வதேச துப்பாக்கி சுடுதல் விளையாட்டு கூட்டமைப்பு (ISSF) உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல்

- டெல்லியில் நடைபெற்ற International Shooting Sport Federation (ISSF) துப்பாக்கி சுடுதல் உலகக் கோப்பையின் இறுதிப் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்திய துப்பாக்கி சுடும் வீரர் சங்ராம் தாகியா வெள்ளிப் பதக்கம் வென்றார்.
- 50மீ பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் அமன்ப்ரீத் சிங் வெண்கலப்பதக்கம் வென்றார்.
- இதன்மூலம் இப்போட்டியில் இந்தியா பெற்றுள்ள பதக்கங்களின் எண்ணிக்கை மூன்றாக உயர்ந்துள்ளது..

- இத்தாலியின் அலெசியா லெஸ்சி ஸ்பெயினின் ஃபாத்திமா கால்வெஸ்-ஐ வீழ்த்தி மகளிர் பிரிவில் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

## டென்மார்க் சூப்பர் சீரிஸ் பிரிமியர் 2017

- டென்மார்கில் நடைபெற்ற டென்மார்க் சூப்பர் சீரிஸ் பிரிமியர் 2017 - போட்டியில் இந்திய பாட்மின்டன் வீரரான கிடாம்பி ஸ்ரீகாந்த் தென்கொரியாவில் லீ ஹீயூன் II வை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.
- இது இந்த வருடத்தில் அவர் பெறும் 3வது சூப்பர் சீரிஸ் பட்டமாகும். இந்த ஆண்டு இதற்கு முன்னதாக இந்தோனேசியா சூப்பர் சீரிஸ் 2017 ல் சாம்பியன் பட்டமும், சிங்கப்பூர் சூப்பர் சீரிஸ் 2017ல் இரண்டாம் இடத்தையும் பெற்றார்.

## ஐரோப்பிய ஓபன் – 2017

- திவிஜ் சரன் 2017 ஆண்டுக்கான முதல் பட்டத்தையும் ஒட்டுமொத்தமாக 3வது பட்டத்தையும் சர்வதேச டென்னிஸ் சங்கத்தின் (ATP) உலக சுற்றுப் பயணத்தில் வென்றார். பெல்ஜியத்தின் ஆண்ட்வெர்ப் நகரத்தில் நடைபெற்ற இப்போட்டியில் அமெரிக்காவின் ஸ்காட் லிப்ஸ்கியுடன் ஐரோப்பிய ஓபன் பட்டத்தை வென்றார்.

## பால்கன் சர்வதேசக் குத்துச்சண்டை சாம்பியன்சிப்.

- பல்கேரியாவின் சோஃபியாவில் நடைபெற்ற பால்கன் சர்வதேசக் குத்துச்சண்டை சாம்பியன்சிப் போட்டியில் இந்தியா 4 தங்கப்பதக்கங்கள் உட்பட எட்டுப் பதக்கங்களை வென்று போட்டியின் மிக வெற்றிகரமான நாடாக விளங்கியது.




## தமிழ்நாடு மாநில 6 சிவப்பு ஸ்நூக்கர் சாம்பியன்சிப்

- நடப்பு சாம்பியனான J.வருண் குமார் சென்னையில் நடைபெற்ற அவரை எதிர்த்து போட்டியிட்ட பிரனித் ராம் சந்தனியை வீழ்த்தி தமிழ்நாடு மாநில 6 சிவப்பு ஸ்நூக்கர் சாம்பியன் பட்டத்தை வென்றார்.

## சர்வதேச கூடைப்பந்து கூட்டமைப்பு (FIBA) 16 வயதுக்குட்பட்ட மகளிர் ஆசிய சாம்பியன்ஷிப்

- பெங்களூரில் நடைபெற்ற சர்வதேசக் கூடைப்பந்து கூட்டமைப்பின் (FIBA) 16 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் ஆசிய சாம்பியன்ஷிப் போட்டியில் மலேசியாவின் சவாலை முறியடித்து இந்தியா B-பிரிவின் பட்டத்தைக் கைப்பற்றியது.
- 2017 ஆம் ஆண்டின் 16 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் FIBA ஆசியப் போட்டியானது 2018 ஆம் ஆண்டு நடைபெற உள்ள 17 வயதுக்குட்பட்டோருக்கான FIBA ஆசிய கூடைப்பந்து தொடருக்கான தகுதிப் போட்டியாகும்.

## ஃபிபா யு-17 உலகக்கோப்பை

- கொல்கத்தாவில் நடைபெற்ற 17 வயதுக்குட்பட்டோருக்கான பிபா உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் ஸ்பெயினை வீழ்த்தி இங்கிலாந்து தனது முதல் கோப்பையைக் கைப்பற்றியது.
- 52 போட்டிகளில் 179 கோல்கள் அடிக்கப்பட்டுள்ள இந்திய U-17 பிபா உலகக் கோப்பை தொடரே அதிக அளவு கோல்கள் அடிக்கப்பட்ட U-17 பிபா உலகக் கோப்பை தொடராகும்.
- இந்தியாவில் நடைபெற்ற U-17 பிபா கோப்பையே இதுவரை அதிகப் பார்வையாளர்கள் பங்கேற்ற U-17 பிபா கோப்பை போட்டியாகும்.

## புரோ கபடி 2017

- சென்னை நேரு அரங்கத்தில் நடைபெற்ற புரோ கபடி லீக் போட்டியின் இறுதி ஆட்டத்தில் குஜராத் ஃபார்ச்சூன் ஜியன்ட்ஸ் அணியை வீழ்த்தி பாட்னா பைரேட்ஸ் அணி தொடர்ந்து மூன்றாவது முறையாக பட்டத்தைக் கைப்பற்றியது.

## பிரெஞ்சு ஓபன் சூப்பர் சீரிஸ்

- பாரிஸில் நடந்த பிரஞ்சு ஓபன் சூப்பர் சீரிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த் ஜப்பானின் கென்டா நிஷிமோட்டோவை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றார்.
- தொடர்ந்து மூன்று முறை சூப்பர் சீரிஸ் பட்டத்தை வென்றிருந்த நிலையில், ஸ்ரீகாந்த் தனது நான்காவது பட்டத்தை வென்றுள்ளார்.
- இதன்மூலம் ஒரே வருடத்தில் நான்கு அல்லது ஐந்து சூப்பர் சீரிஸ் பட்டங்களை வென்ற நான்காவது ஆடவர் ஒற்றையர் பிரிவு வீரராக ஸ்ரீகாந்த் உருவாகியுள்ளார்.

## மக்காவோ ஓபன் போட்டி புல்லார்

- ககன்ஜித் புல்லார் சீனாவில் நடந்த மக்காவோ கோல்ப் ஓபன் போட்டியை வென்றுள்ளார். இது அவரது 8 வது ஆசிய சுற்றுப்பயண பட்டமாகும்.
- 2012ம் ஆண்டிற்கு பின்பு 2-வது முறையாக மக்காவோ ஓபன் கோப்பையை இவர் வென்றுள்ளார்.
- 2016ம் ஆண்டு நடைபெற்ற Bank BRI JCB இந்தோனேசிய ஓபன் போட்டியே இவரது கடைசி சர்வதேச வெற்றியாகும்.

## தேசிய ஆண்கள் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் 2017

- ஸ்வர்ண பாரதி உள்ளரங்கத்தில் நடைபெற்ற இரண்டாவது தேசிய ஆண்கள் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் ரயில்வே விளையாட்டு மேம்பாட்டு வாரியம் (Railway Sports Promotion Board - RSPB) ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தைப் பெற்றுள்ளது.
- சர்வீசஸ் விளையாட்டு கட்டுப்பாட்டு வாரியத்தின் (Services Sports Control Board -SSCB) மணீஷ் கௌஷிக் தேசிய ஆண்கள் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியின் 56 கிலோ எடைப்பிரிவில் தங்கம் வென்றார்.
- மனோஜ் குமார் மற்றும் மந்தீப் ஜங்ரா ஆகியோர் முறையே 69 கிலோ, 75 கிலோ எடைப்பிரிவில் தங்கம் வென்றனர்.
- ரயில்வே விளையாட்டு மேம்பாட்டு வாரியத்தின் மனோஜ் குமாருக்கு சிறந்த குத்துச்சண்டை வீரர் என்றும், மனோஜ் கௌசிக்கிற்கு குத்துச்சண்டையின் நம்பிக்கை நட்சத்திரம் என்றும், மிஷோரத்தின் NT லால்பியாக்கிமாவிற்கு சிறந்த சவால்மிக்க வீரர் என்றும் சிறப்பு பரிசுகள் அளிக்கப்பட்டன.

## லீவிஸ் ஹாமில்டனின் 4-ஆவது சாம்பியன் பட்டம்

- 2017 சீசன் ஃபார்முலா 1 கார் பந்தயத்தில் மெர்ஸிடஸ் டிரைவர் லீவிஸ் ஹாமில்டன் 4-ஆவது முறையாக சாம்பியன் பட்டம் வென்றார்.
- இதன்மூலம் ஃபார்முலா 1 வரலாற்றில் 4 பட்டங்கள் வென்ற முதல் இங்கிலாந்து வீரர் என்ற பெருமையை லீவிஸ் ஹாமில்டன் பெற்றுள்ளார்.
- 2017 சீசனுக்கான ஃபார்முலா 1 கார் பந்தயம் மொத்தம் 20 சுற்றுகளைக் கொண்டதாகும் .இதன் 18-ஆவது சுற்று மெக்ஸிகோ கிராண்ட்ப்ரீ என்ற பெயரில் மெக்ஸிகோ சிட்டியில் நடைபெற்றது.
- 4-ஆவது முறையாக பட்டத்தை வென்றதன் மூலம் ஃபார்முலா 1 வரலாற்றில் அதிக பட்டங்கள் வென்றவர்கள் வரிசையில் வெட்டல், அலேன் பிராஸ்ட் ஆகியோருடன் இணைந்து 3-ஆவது இடத்தை ஹாமில்டன் பகிர்ந்து கொண்டுள்ளார் .
- மைக்கேல் ஷூமாக்கர் 7 முறை பட்டம் வென்றதே இன்றளவும் சாதனையாக உள்ளதுஅவருக்கு . அடுத்தபடியாகஅர்ஜென்டீனாவின் ஜூவான் மானுவேல் ஃபேங்கியோ 5 முறை பட்டங்கள் வென்றுள்ளார்.

## ஸ்விஸ் உள்ளரங்க டென்னிஸ் -ரோஜர் ஃபெடரருக்கு 8-ஆவது பட்டம்

- ஸ்விட்சர்லாந்தின் பேசல்ஸ் நகரில் நடைபெற்ற ஸ்விஸ் உள்ளரங்க டென்னிஸ் போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஸ்விட்சர்லாந்தின் ரோஜர் ஃபெடரர் ஆர்ஜென்டீனாவின் ஜுவான் மார்ட்டின் டெல் போட்ரோவை தோற்கடித்து 8-ஆவது முறையாக ஸ்விஸ் உள்ளரங்க டென்னிஸ் போட்டியின் சாம்பியன் பட்டத்தை வென்றார்.
- தனது 95-ஆவது ஏடிபி பட்டத்தைக் கைப்பற்றியுள்ள ரோஜர் ஃபெடரர், அதிக ஏடிபி பட்டங்கள் வென்றவர்கள் வரிசையில் 2-ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.
- ஜிம்மி கார்னர் 109 பட்டங்களுடன் முதலிடத்திலும், இவான் லென்டில் 94 பட்டங்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

# முக்கிய தினங்கள்

## உலக வசிப்பிட நாள் )World Habitat Day)

- உலக வசிப்பிட நாள் (World Habitat Day) ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் மாதத்தின் முதல் திங்கட்கிழமை உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது.
- 1986 ல் ஐக்கிய நாடுகள் சபையால் அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டு கொண்டாடப்படும் இந்நாளின் நோக்கம் நாம் வாழுகின்ற நகரங்களின் நிலைகள் மற்றும் அவற்றில் அடிப்படை மனித உரிமையான போதுமான தங்குமிட வசதிகளை ஏற்படுத்தி தர வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதாகும்.
- எதிர்கால தலைமுறையினருக்கான வாழ்விடத்தின் அவசியம் குறித்து இன்றைய உலகம் மேற்கொள்ளவேண்டிய கூட்டுப் பொறுப்பை நினைவுபடுத்தும் விதமாகவும் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- 2017 ஆம் ஆண்டிற்கான உலக வசிப்பிட தினத்தின் கருத்துரு -மலிவான வீடுகள் மற்றும் வீட்டுவசதி கொள்கைகள் ( Housing policy: Affordable Homes)

*'Habitat Scroll of Honourவிருது '*

- ஐக்கிய நாடுகளின் மனிதக் குடியிருப்புச் செயல்திட்டத்தினால் (UNHSP- United Nations Human Settlements Programme) மனித வாழ்விடம் தொடர்பான துறைகளில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை ஆற்றியவர்களின் முயற்சிகளை அங்கீகரிக்கும் வகையில் இவ்விருது உலக வசிப்பிட தினத்தன்று வழங்கப்படுகிறது.
- இது உலகில் மனித குடியேற்றத்தில் வழங்கப்படும் மிக உயரிய கௌரவமிக்க விருதாகும்.

## உலக ஆசிரியர்கள் தினம் அக்டோபர்–5

- உலகிலுள்ள கல்வியாளர்களைப் பாராட்டி அவர்களை மதிப்பிட மற்றும் மேம்படுத்திட யுனெஸ்கோவினால் தொடங்கப்பட்ட வருடாந்திர அனுசரிப்பு தினமே அக்டோபர் 5ஆம் தேதியின் உலக ஆசிரியர்கள் தினம் ஆகும்.
- பாரிஸில் யுனெஸ்கோவினால் ஏற்படுத்தப்பட்ட நாடுகளுக்கிடையேயான சிறப்பு மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆசிரியர்கள் நிலை குறித்த உலக தொழிலாளர் அமைப்பு மற்றும் யுனெஸ்கோவின் பரிந்துரைகளின்படி உலக தொழிலாளர் அமைப்பின் (ILO-International Labour Organisation) ஒத்துழைப்புடன் யுனெஸ்கோ அக்டோபர் 5ஆம் தேதியை உலக ஆசிரியர் தினமாக அறிவித்தது.
- இந்த ஆண்டிற்கான உலக ஆசிரியர் தின கருத்துரு – "கற்பித்தலில் சுதந்திரம் மற்றும் ஆசிரியர்களுக்கு அதிகாரமளித்தல்".

## இந்திய விமானப் படை தினம் -அக்டோபர் 8

- "பாரதிய வாயு சேனா" என்றழைக்கப்படும் இந்திய விமானப்படையின் 85-ஆவது வருட தொடக்கதினம் அக்டோபர் 8-ல் கொண்டாடப்பட்டது.
- அக்டோபர் 8, 1932-ல் அதிகாரப் பூர்வமாக உருவாக்கப்பட்ட இந்திய விமானப் படையின் முதன்மை நோக்கம் இந்திய வான்பரப்பை பாதுகாத்தல் மற்றும் மோதல்களின் போது வான்வழிப்போர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகும்.
- இந்திய விமானப்படை உலகின் 4-வது மிகப்பெரிய விமானப்படையாகும்.

***இந்திய விமானப்படை இதுவரை ஈடுபட்டுள்ள போர்கள்***

- இரண்டாம் உலகப்போர் (1939-1945)
- இந்திய பாகிஸ்தான் போர் -1947
- ஆப்ரேஷன் விஜய் (1961-கோவா இணைப்பு )
- சீன-இந்தியப் போர் (1962)
- இந்திய பாகிஸ்தான் போர் -1965
- ஆப்ரேஷன் காக்டஸ் (1988- மாலத்தீவு)
- கார்கில் போர் (1999)

## உலக அஞ்சல் தினம் – அக்டோபர் 9

- ஒவ்வொரு வருடமும் அக்டோபர் 9-ம் தேதி சர்வதேச அஞ்சல் ஒன்றியத்தை (Universal Postal Union-UPU) 1874-ல் சுவிஸ் தலைநகரமான பெர்ன் நகரத்தில் ஏற்படுத்தியதன் ஆண்டு விழாவாக கொண்டாடப்படுகிறது.
- இது உலக அஞ்சல் தினமாக 1969-ம் வருடம் ஜப்பானின் டோக்கியோ நகரத்தில் சர்வதேச அஞ்சல் ஒன்றியத்தின் சபையால் அறிவிக்கப்பட்டது.
- இந்த உலக அஞ்சல் தினம் கொண்டாடப்படுவதன் நோக்கம் உலக மக்கள் மற்றும் வியாபாரங்களின் தினசரி வாழ்வில், அஞ்சல்துறையைப் பற்றியும், நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சிக்காக அதன் பங்களிப்பைப் பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்துவது ஆகும்.

## 68-வது தரைப்படையை உருவாக்கிய தினம்

- அக்டோபர் 9-ம் தேதி தரைப்படை தனது 68-வது உருவாக்கிய தினத்தை கொண்டாடுகிறது.
- இதைக் கொண்டாடும் விதம் தரைப்படையின் சிம்பொனி இசைக்குழுவின் நிகழ்ச்சி புகழ்பெற்ற இந்தியா வாயிலில் (INDIA GATE) அக்டோபர் 8-ம் தேதி நடத்தப்பட்டது.
- இவ்விழா தரைப்படையின் வலிமையை பறைசாற்றவும், நாட்டின் மக்களை ஊக்குவிக்கவும், தேச ஒருமைப்பாட்டு உணர்வை ஊட்டவும் நடத்தப்பட்டது.
- இசைக்குழுவானது தனது உறுப்பினர்களை தரைப்படையின் பல தரப்பட்ட பிரிவுகளிலிருந்து பெற்றிருக்கிறது.
- 40 இசைக்கலைஞர்களை கொண்டுள்ள இக்குழு வேற்றுமையில் ஒற்றுமையின் அடையாள பிரதிவடிவம் ஆகும்.
- இவ்வடிவமே மக்கள் ராணுவம் என பிரபலமாக அறியப்படும் தரைப்படை ராணுவத்தின் சாரம்சம் ஆகும்.

## தேசிய அஞ்சல் வாரம்

- உலக அஞ்சல் தினத்தை (அக்டோபர்-10) குறிக்கும் விதமாக இந்திய அஞ்சல் துறையானது 2014 ஆம் ஆண்டிலிருந்து அக்டோபர் 9 முதல் 15 ஆம் தேதி வரையிலான நாட்களை தேசிய அஞ்சல் வாரமாகக் கொண்டாடுகிறது.

- பொதுமக்கள் மற்றும் வியாபாரத்தில் அஞ்சல் துறையின் பங்கு பற்றியும், நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு அஞ்சல் துறையின் பங்களிப்பை பற்றியும் மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த உலக அஞ்சல் தினம் கொண்டாடப் படுகிறது.
- அஞ்சல் துறையினால் வழங்கப்படும் பல்வேறு சேவைகளின் மேல் கவனத்தை ஏற்படுத்த அஞ்சல் வாரத்தின் ஒரு பகுதியாக வங்கி சேமிப்பு தினம், மெயில் தினம், அஞ்சல் தலை சேகரிப்பு தினம், வணிக வளர்ச்சி தினம், அஞ்சல் ஆயுள் காப்பீடு தினம் போன்றவை அஞ்சல் துறையால் கொண்டாடப் படுகிறது.
- "எனது அஞ்சல்தலை" எனும் சேவையை பொதுமக்களுக்கு அஞ்சல் துறை வழங்கி வருகிறது. "எனது அஞ்சல்தலை" என்பது இந்திய அஞ்சல் துறையால் வழங்கப்படும் தனிப்பயனாக்கப்பட்ட அஞ்சல் தலைத் தாள்களாகும் (Personalized sheets of Postage Stamps).

## உலக பார்வை தினம்

- ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதத்தின் இரண்டாம் வியாழக்கிழமை உலக பார்வை தினமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.
- கண்பார்வை குறைபாடு மற்றும் பார்வையின்மை மீது உலகின் கவனத்தைக் கொண்டு வர இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இந்த தினம் உலக சுகாதார நிறுவனத்தால் (WHO) பார்வையின்மையை தடுப்பதற்கான சர்வதேச நிறுவனத்தின் (International Agency for the Prevention of Blindness - IAPB) ஒத்துழைப்புடன் தொடங்கப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான சர்வதேச பார்வை தினத்தின் கருத்துரு " பார்வையை கணக்கில் கொள்க" ( Make Vision Count ).

## சர்வதேச பேரிடர் குறைப்பு தினம் – அக்டோபர் 13

- ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 13ஆம் தேதி சர்வதேச பேரிடர் குறைப்பு தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது.
- பேரிடர் குறைப்பு மற்றும் இடர்கள் பற்றிய விழிப்புணர்வோடு கூடிய உலக கலாச்சாரத்தை மேம்படுத்த இத்தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது.
- 2017ஆம் ஆண்டுக்கான சர்வதேச பேரிடர் குறைப்பு தினத்தின் கருத்துரு- "பாதுகாப்பான வீடு, பேரிடர் வெளிப்பாடு மற்றும் இடம்பெயர்தலைக் குறைத்தல்".
- சமூக அளவில் மக்களிடையே பேரழிவு ஆபத்துக்குள்ளாகும் வெளிப்பாடுகளை குறைக்க தேவையான நடவடிக்கைகள், கொள்கைகள் மற்றும் செயல்திறனுடைய நடவடிக்கைகளைப் பற்றி உலகளாவிய விழிப்புணர்வினை அதிகப்படுத்துவதை 2017 ஆம் ஆண்டின் பிரச்சாரம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சர்வதேச முட்டை தினம் 2017

- ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதத்தின் இரண்டாவது வெள்ளிக்கிழமை சர்வதேச முட்டை தினமாக கொண்டாடப்படுகிறது.
- முட்டையின் நன்மைகள் குறித்தும் , தினசரி வாழ்வில் அவற்றின் தேவையை குறித்தும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது.
- உலக முட்டை தினம் 1996 ஆம் ஆண்டு சர்வதேச முட்டைகள் ஆணையத்தின் (International Egg Commission - IEC) வியன்னா மாநாட்டில் தொடங்கப்பட்டது.

## சர்வதேச ஊரக பெண்கள் தினம் – அக்டோபர் 15

- கிராமப்புற குடும்பங்கள் மற்றும் சமுதாயங்களின் நீடித்த நிலைத்தன்மையை உறுதி செய்வதிலும், கிராமப்புற வாழ்வாதாரத்தையும், ஒட்டுமொத்த நல்வாழ்வையும் மேம்படுத்துவதிலும் பெண்கள் ஆற்றும் பங்கினை அங்கீகரிக்கும் விதத்தில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 15 ஆம் தேதி சர்வதேச ஊரக பெண்கள் தினம் என கொண்டாடப்படுகிறது.
- 2017 ஆம் ஆண்டிற்கான ஊரக பெண்கள் தினத்தின் கருத்துரு- "காலநிலை–நெகிழ்ச்சியுடைய வேளாண்மையில் ஊரக பெண்கள் மற்றும் சிறுமிகளின் மேம்பாடு, பாலின சமத்துவம் போன்றவற்றிற்கான சவால்கள் மற்றும் வாய்ப்புகள்".
- ஐநா பொது அவையால் சர்வதேச ஊரக பெண்கள் தினம் நிறுவப்பட்டு அக்டோபர் 15, 2008 அன்று முதன்முதலில் கடைபிடிக்கப்பட்டது.
- ஐ.நா அவையின் கருத்துப்படி, வறுமை மற்றும் பட்டினி ஒழிப்பு, உணவு பாதுகாப்பை அடைதல், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு அதிகாரமளித்தல் போன்றவற்றை இலக்காக கொண்டுள்ள நீடித்த வளர்ச்சி இலக்கின் (SDG-Sustainable Development Goal) தொலை நோக்கு பார்வையை அடைய ஊரக பெண்களுக்கு அதிகாரமளித்தல் ஓர் கட்டாய முன் தேவையாகும்.

## உணவு தினம் – அக்டோபர் 16

- ஐநா சபையின் உலக உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம் 1945ல் நிறுவப்பட்டதை நினைவு கூறும் வகையில் ஒவ்வொரு வருடமும் அக்டோபர் 16ம் தேதி உலக உணவு தினமாக அனுசரிக்கப்படுகிறது.
- 2017ம் ஆண்டிற்கான கருத்துரு "இடப்பெயர்வின் எதிர்காலத்தை மாற்று ; உணவு பாதுகாப்பிலும் ஊரக மேம்பாட்டிலும் முதலீடு செய்".
- உலக உணவு தினம் 1979ம் ஆண்டு நவம்பர் மாதத்தில், உணவு மற்றும் விவசாய அமைப்பின் உறுப்பினர்களுக்கான 20வது பொது மாநாட்டில், வறுமை மற்றும் பசி ஆகியவற்றின் மீது உறுப்பு நாடுகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்டது.

### *உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம்*

- வேளாண்மை உற்பத்தியினை பெருக்கி அதன் மூலம் பட்டினியை ஒழித்தல்,வாழ்க்கைத் தரம் மற்றும் ஊட்டச்சத்தை அதிகரித்தல் போன்றவற்றிற்கான சர்வதேச முயற்சிகளை வழிநடத்தும் ஐ.நா.வினுடைய ஓர் சிறப்பு நிறுவனமே உணவு மற்றும் வேளாண்மை நிறுவனமாகும்.

| | |
|---|---|
| தோற்றம் | அக்டோபர் 16, 1945 |
| தலைமையகம் | ரோம், இத்தாலி, |
| உறுப்பினர்கள் எண்ணிக்கை | 194 (ஐரோப்பிய யூனியன் சேர்த்து). |
| கொள்கை | எல்லோருக்கும் உணவு ( Let There be Bread) |

- ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக சபை( ECOSOC -United Nations Economic And Social Council) இதன் தாய் நிறுவனமாகும்.

## சர்வதேச வறுமை ஒழிப்பு நாள் – அக்டோபர் 17

- ஆதரவின்மை மற்றும் வறுமை ஆகியவை ஒழிக்கப்பட வேண்டியதன் அவசியத்தைப் பற்றி உலகம் முழுவதும் உள்ள குறிப்பாக வளரும் நாடுகளின் மக்களிடையே விழிப்புணர்வை அதிகரிக்க ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 17 ஆம் தேதி சர்வதேச வறுமை ஒழிப்பு நாள் (IDEP – International Day for Eradication of Poverty) கடைபிடிக்கப்படுகின்றது.
- 2017 ஆம் ஆண்டிற்கான சர்வதேச வறுமை ஒழிப்பு நாளின் கருத்துரு: "வறுமை ஒழிப்புக்கு அக்டோபர் 17 ஆம் தேதியின் அழைப்புக்கு பதிலளித்தல்; அமைதியான மற்றும் உள்ளடங்கிய சமூகத்தை நோக்கிய ஓர் பாதை"
- ஐநா அவையின் ஐக்கிய நாடுகள் வளர்ச்சி திட்டத்தால் (UNDP-United Nations Development Programme) வெளியிடப்பட்ட IDEP அறிவிப்பின் 25வது ஆண்டு நிறைவை குறிக்கும் விதத்திலும் இந்த ஆண்டுக்கான சர்வதேச வறுமை ஒழிப்பு தினம் கொண்டாடப்படுகிறது.
- ஐநா பொது அவையால் சர்வதேச வறுமை ஒழிப்புதினம் துவங்கப்பட்டு 1993ல் முதன்முறையாக கடைபிடிக்கப்பட்டது.

## டாக்டர் A.P.J. அப்துல்கலாம் பிறந்த நாள் ஆண்டு விழா – அக்டோபர் 15

- டாக்டர் அப்துல்கலாமின் பிறந்த நாள் ஆண்டு விழாவை முன்னிட்டு ராமேஸ்வரத்திலிருந்து "டாக்டர் கலாம் சந்தேஷ் வாகினி விஷன் 2020" என்ற பேருந்து மூலம் குழந்தைகள் குடியரசுத் தலைவர் மாளிகைக்கு சென்று ஜனாதிபதியை சந்தித்தனர்.
- கலாம் சந்தோஷ் வாகினியானது கலாம் நினைவு இல்லத்தாலும் சின்மயா பல்கலைக்கழகத்தாலும் சேர்ந்து ஆரம்பிக்கப்பட்டது.
- இந்த வாகினியானது மக்களுக்கு விழிப்புணர்வையும் கல்வியறிவையும் பரப்பும் பொருட்டு, கலாமின் வாழ்க்கையில் நடந்த பல்வேறு நிகழ்ச்சிகளையும் இந்தியாவின் முக்கிய அறிவியல் சாதனைகளையும் சித்தரிக்கிறது.

## உலக எலும்புப் புரை தினம் – அக்டோபர் 20

- எலும்புப்புரை மற்றும் வளர்சிதை மாற்ற எலும்பு நோய்களின் சிகிச்சை, நோய் கண்டறிதல், தடுப்பு முறைகள் போன்றவற்றைப் பற்றி உலகம் முழுவதும் விழிப்புணர்வை உண்டாக்க ஆண்டுதோறும் அக்டோபர் 20 ஆம் தேதி உலக எலும்புப்புரை தினம் கொண்டாடப் படுகிறது.
- 2017ஆம் ஆண்டிற்கான எலும்புப்புரை தினத்தின் கருத்துரு "உங்கள் எலும்புகளை நேசியுங்கள்" உங்கள் எதிர்காலத்தை பாதுகாத்து கொள்ளுங்கள்.
- இங்கிலாந்தின் தேசிய எலும்புப் புரை கழகத்தால் 1996 ஆம் ஆண்டு உலக எலும்புப் புரை தினம் துவங்கப்பட்டது. ஐரோப்பிய ஆணையம் இதற்கு ஆதரவு அளித்துவருகின்றது. 1997 லிருந்து சர்வதேச எலும்புப்புரை அறக்கட்டளையால் இந்த விழிப்புணர்வு நாள் நடத்தப்பட்டுவருகிறது.

## சர்வதேச புள்ளியல் தினம்

- தனிநபர்கள் மற்றும் அரசாங்கத்தின் அறிவிப்புகளில் பயன்படுத்தப்படும் சரியான காலத்தைய மற்றும் நம்பகமான தரவுகளின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் விதமாக ஆண்டுதோறும் அக்டோபர் 20 ஆம் தேதி உலக புள்ளியியல் தினம் கொண்டாடப்படுகிறது.

## தேசிய ஒற்றுமை தினம்

- சீனாவுடனான இராணுவ தோல்வியினால் பெற்ற விழிப்பை அடுத்து 1962ல் சீனா நம்மை தாக்கிய நாளை குறிக்கும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 20 ஆம் தேதி தேசிய ஒற்றுமை தினம் கடைபிடிக்கப்படுகிறது.

## தேசிய பாதுகாவல் படையின் 33-வது நிறுவு தினம்

- தேசிய பாதுகாவல் படையின் (NSG – National Security Guards) 33-வது நிறுவு தினம் அக்டோபர் 26 அன்று ஹரியானாவின் மனோசரில் கொண்டாடப்பட்டது.
- உள்நாட்டு கலவரங்களுக்கு எதிராக நாட்டை பாதுகாக்கும் நோக்கோடு பயங்கரவாதிகளின் நடவடிக்கையை எதிர்ப்பதற்காக ஆப்ரேஷன் புளூ ஸ்டார் மற்றும் இந்திரா காந்தியின் படுகொலைக்கு அடுத்து 1984ல் இந்த படை உருவாக்கப்பட்டது.
- கருப்பு நிற பூனையை சீருடையில் இலச்சினையாக கொண்டதாலும், கரும்பூனையை போல கருப்பு நிற உடை அணிவதாலும் பொதுவாக NSG படையினர் கருப்பு பூனைகள் என்றழைக்கப்படுவர்.
- NSG ஓர் பலதரப்பட்ட பணிப்பொறுப்புகளை கொண்ட சிறப்பு பயிற்சியும், மிகுந்த திறமையையும், உந்துதல் உடைய படையாகும்.
- பதன்கோட் தாக்குதல், அக்சர்தம் கையகப்படுத்துதல், மும்பை தாக்குதல் போன்றவற்றில் NSGன் பங்களிப்பு என்றும் நினைவு கூறத்தக்கது.

## சர்வதேச மாமியார்கள் தினம் அக்டோபர் மாதத்தின் நான்காவது ஞாயிற்றுக்கிழமை

- அமெரிக்காவின் டெக்ஸாசில், 1934 ஆம் ஆண்டு மார்ச் 5 அன்று மாமியார்கள் தினம் முதன் முறையாக கொண்டாடப்பட்டது. அங்குள்ள உள்ளூர் செய்தித்தாளின் ஆசிரியர் ஒருவர் இந்த முன்முயற்சியை முன்னெடுத்துள்ளார்.
- பின்னாட்களில், சர்வதேச மாமியார்கள் தின கடைபிடித்தலானது அக்டோபர் மாதத்தின் நான்காவது ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றலானது.
- இந்த தினமானது ஆனும் பெண்ணும் அவர்களின் மாமியார் மீதான அன்பினை வெளிப்படுத்தும் வகையில் அமைந்திருக்கிறது.
- இந்த வருடாந்திர கடைபிடித்தலானது இந்தாண்டு அக்டோபர் 22 ஆம் தேதி கொண்டாடப்பட்டது.

## ஐ.நா சபை தினம்

- இரண்டாம் உலகப் போருக்கு பின்னர் 1945 ஆம் ஆண்டு சர்வதேச அமைப்பாக ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டது.
- June 26, 1945 அன்று சான் பிரான்சிஸ்கோவில் ஐநா சாசனம் கையெழுத்திடப்பட்டது. இந்த சாசனத்தில் 51 நாடுகள் கையெழுத்திட்ட பின்னர் அக்டோபர் 24, 1945ல் ஐநா அமைப்பானது செயல்முறைக்கு வந்தது.
- ஐ.நா தினமானது 1945ல் ஐநா சாசனம் நடைமுறைக்கு வந்ததை குறிப்பிடும் விதமாக ஆண்டுதோறும் அக்டோபர் 24ம் தேதி 1948 ஆண்டு முதல் கொண்டாடப்படுகிறது.

- ஐநா வின் தலைமையகம் – நியூ யார்க்
- உறுப்பினர்களின் எண்ணிக்கை – 193. கடைசியாக தெற்கு சூடான் உறுப்பினராக சேர்ந்தது.
- இதன் அலுவலக மொழிகள் - அராபிக், ஆங்கிலம், பிரஞ்சு, சீனமொழி, ஸ்பானிஸ், ரஷ்யன்.

*ஐநாவின் அங்கங்கள்*

1. ஐநா பொது அவை
2. ஐநா பாதுகாப்பு கவுன்சில்
3. பொருளாதார மற்றும் சமூக கவுன்சில்
4. சர்வதேச நீதிமன்றம்
5. தலைமையகம்.

## உலக போலியோ தினம் – அக்டோபர் 24.

- உலகப் போலியோ தினம் ஆண்டுதோறும் அக்டோபர் 24 ஆம் தேதி போலியோ நோயின் அபாயங்களைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.
- இளம் பிள்ளை வாதம் எனும் போலியோ நோய்க்கு எதிராக முதல் வெற்றிகரமான தடுப்பூசியைக் கண்டுபிடித்த ஜோனஸ் சால்க்-ன் பிறந்த நாளை நினைவு கூறும் வண்ணம் பத்தாண்டுகளுக்கு முன் ரோட்டரி இன்டர்நேஷனல் எனும் அமைப்பால் உலக போலியோ தினம் துவங்கப்பட்டது.
- இந்தியா உட்பட வடகிழக்கு பகுதிகளை போலியோ அற்ற பகுதியாக 27 மார்ச் 2014 அன்று உலக அமைப்பு அறிவித்தது.
- உலகளாவிய போலியோ ஒழிப்புத் திட்டம் (GPEI) 1988 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இத்திட்டம் இளம்பிள்ளை வாதத்தை உண்டாக்கும் போலியோ வைரஸ்களை அழிப்பதில் பெரும்பங்காற்றி உள்ளது. இத்திட்டம் துவங்கப்பட்ட பொழுது, போலியோ வைரஸ் சுமார் 125 நாடுகளில் நிலவி வந்தது. தற்பொழுது இந்த வைரஸ் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய இரு நாடுகளில் மட்டுமே இருக்கிறது.
- போலியோமியெலிட்டிஸ் (Poliomyelitis) வைரஸ் கிருமியால் உண்டாகும் போலியோ நோய் ஐந்து வயதுக்கு குறைவான குழந்தைகளை அதிகம் தாக்குகிறது. இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் மலம் வழியாக இந்நோய் பிறருக்கு பரவுகிறது. மலத் துகள்களினால் மாசடைந்த நீர் அல்லது உணவை உட்கொள்ளும்பொழுது, இந்த வைரஸ் குடலில் பெருகி அங்கிருந்து நரம்பு மண்டலத்தில் குருதியோட்டம் வழியாக கலந்து வாதத்தை ஏற்படுத்துகிறது.

*அறிகுறிகள்*

- போலியோ நோயின் முதல்கட்ட அறிகுறிகள் காய்ச்சல், சோர்வு, தலைவலி, வாந்தி, கழுத்து, கை கால்களில் விறைப்புத் தன்மை மற்றும் வலி ஆகியவை ஆகும்.
- இருநூற்றில் ஒரு பங்கு நோய் தாக்குதல் நிகழ்வுகள் மீளமுடியாத/குணப்படுத்த முடியாத வாதத்தை (குறிப்பாக கால்களில்) உண்டாக்குகின்றன.
- இவ்வாறு நோய் பாதிக்கப்பட்டவர்களுள் 5 முதல் 10 சதவீத மக்கள் சுவாச தசை நார்கள் செயல் இழப்பால் உயிர் இழக்கின்றனர்.

*நோய் தடுப்பு*

- போலியோ நோயினை குணப்படுத்த முடியாது, இருப்பினும் நோயில் இருந்து பாதுகாத்துக் கொள்ளத் தடுப்பூசிகள் உள்ளன. நோயெதிர்ப்புத் திறனூட்டல் மூலமாக போலியோ நோயைத் தடுக்க முடியும்.


- போலியோ நோய் தடுப்பு மருந்துகள் இருவகைப்படும்,
    - i. வாய் வழி போலியோ மருந்து (OPV)
    - ii. ஊசி வழி உட்செலுத்தும் போலியோ மருந்து (IPV)

## உலக வளர்ச்சி தகவல் தினம் – அக்டோபர் 24

- உலக வளர்ச்சி தகவல் தினம் ஒவ்வொரு வருடமும் அக்டோபர் 24ம் தேதி, வளர்ச்சியின் மீதான பிரச்சினைகளின் மீது உலகின் கவனத்தை ஈர்க்கவும் அதை சரி செய்வதற்கு சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான அவசியத்தை உலகில் பரப்பவும் அனுசரிக்கப்படுகிறது.
- இந்த தினம் கூடுதலாக, 1970ம் ஆண்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச வளர்ச்சித் திட்டத்திற்கான இரண்டாவது நாடுகளின் வளர்ச்சிக்கான தசாப்த ஆண்டை ஏற்றுக்கொண்ட தினத்திற்காகவும் நினைவு கூரப்படுகிறது.
- இணைய தளங்கள், பத்திரிக்கைகள், செய்தித்தாள், வானொலி, மற்றும் தொலைக்காட்சி ஆகியவற்றை உள்ளடக்கிய ஊடகங்களில் பணிபுரியும் பத்திரிக்கைவியலாளர்கள் மீது கவனம் செலுத்துவதற்காக அனுசரிக்கப்படுகிறது.

## உலக கேட்பொலிக் காட்சி பாரம்பரிய தினம்

- ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 27ஆம் தேதி ஆனது உலக கேட்பொலிக் காட்சி பாரம்பரிய தினமாகக் கொண்டாடப்படுகிறது.
- 2017ஆம் ஆண்டிற்கான உலக கேட்பொலிக் காட்சி பாரம்பரிய தினத்தின் கருத்துரு – கண்டறி, நினைவு கொள், பகிர்.




- திரைப்படங்கள், ஒளி-ஒலி பதிவுகள் , ரேடியோ மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் போன்ற கேட்பொலிக் காட்சிகளின் பதிவுகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட ஒலிகளின் முக்கியத்துவம் மற்றும் அவற்றின் பாதுகாப்பிலுள்ள அபாயங்களை பற்றிய விழிப்புணர்வை பெருக்க 2005ஆம் ஆண்டு யுனெஸ்கோவால் இந்தத் தினம் தேர்வு செய்யப்பட்டது.

## காலாட்படை தினம் – அக்டோபர் 27

- ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 27ஆம் தேதி இந்திய காலாட்படை தினமாக அனுசரிக்கப்படுகிறது. இது இந்திய இராணுவத்தில் காலாட்படையில் பணிபுரிந்து 1947 ஆம்

ஆண்டு ஜம்மு காஷ்மீரில் பாகிஸ்தானுக்கு எதிராக போரிட்டு மரித்தவர்களின் நினைவாக கொண்டாடப்படுகிறது.

- இது சுதந்திரத்திற்கு பிறகான இந்திய இராணுவத்தின் முதலாவது காலாட்படை நடவடிக்கை ஆகும்.

## சர்வதேச இணைய தினம் – அக்டோபர் 29.

- சர்வதேச இணைய தினமானது உலகம் முழுவதும் ஆண்டுதோறும் அக்டோபர் 29ம் தேதி கொண்டாடப்படுகிறது.
- 2005ஆம் ஆண்டு முதல் சர்வதேச இணைய தினம் தொலைத்தொடர்பு மற்றும் தொழில்நுட்ப வரலாற்றில் நினைவுகொள்ளும் வகையில் முக்கியமான நாளாக கடைபிடிக்கப்படுகிறது.
- இது 1969-ல், முதல் மின்னணு செய்தியை ஒரு கணினியில் இருந்து மற்றொரு கணினிக்கு அனுப்பிய நிகழ்வாகும்.

## உலக சைவ உணவு தினம்

- உலக சைவ உணவு தினம் ஆண்டுதோறும் அக்டோபர் 1 அன்று கடைபிடிக்கப்படுகிறது.
- சைவ உணவு முறையினால் ஏற்படும் சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் மனிதாபிமான நன்மைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.

## உலக முதியோர்கள் தினம்

- உலக முதியோர்கள் தினம் ஆண்டுதோறும் அக்டோபர் 1 அன்று கடைபிடிக்கப்படுகிறது.
- வயது முதிர்ந்த காலத்தில் முதியோரை பாதிக்கும் பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் , வயது மூத்தோர் சமூகத்தில் ஆற்றும் பங்களிப்பை பாராட்டுவதும் இந்த தினத்தின் நோக்கங்களாகும்.

# இதரச் செய்திகள்

## நவீன அடிமைத்துவம்

- ஆஸ்திரேலியாவிலிருந்து செயல்படும் மனித உரிமைகள் அமைப்பான வாக் ஃப்ரி பவுண்டேஷன் (Walk Free Foundation) “நவீன அடிமைத்தனத்தின் உலகளாவிய மதிப்பீடு” எனும் ஆய்வை மேற்கொண்டது.
- இந்த அறிக்கை சர்வதேச அமைப்பான "சர்வதேச தொழிலாளர் அமைப்பின்" சார்பாக வெளியிடப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கையில் 2016-ல் உலகில் மொத்தம் 40.3 மில்லியன் மக்கள் நவீன அடிமைத்தனத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை தெரிவித்துள்ளது.
- மேலும் இந்த வால்க் ஃப்ரி பவுண்டேஷன் ஆண்டுதோறும் “உலக அடிமைத்தன குறியீடு” (Global Slavery Index) எனும் சர்வதேச குறியீட்டை வெளியிடுகிறது.
- 2016-க்கான குறியீட்டின் படி 167 நாடுகளில் இந்தியா 4 வது இடத்தில் உள்ளதாகவும், இந்தியாவில் 18.3 மில்லியன் மக்கள் நவீன அடிமைத்தனத்தில் சிக்கியுள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மதிப்புமிக்க தேசிய நிறுவனம் பட்டியல் – 2017

- சமீபத்தில் 2017ஆம் ஆண்டிற்கான தேசிய வணிக அடையாள அறிக்கை (Nation Brands 2017 Report) வெளியிடப்பட்டது. நூறு நாடுகளைக் கொண்ட மதிப்புமிக்க தேசிய நிறுவன அடையாள பட்டியலில் இந்தியா 8வது இடத்தைப் பெற்றுள்ளது.
- 2016 அறிக்கையை ஒப்பிடும் போது இந்தியா ஒரு இடம் சரிந்துள்ளது. இந்தியா வகித்த ஏழாம் இடத்தை இவ்வருடம் கனடா பெற்றுள்ளது.
- பிராண்ட் பைனான்ஸ் எனும் அமைப்பால் (Brand Finance) வெளியிடப்படும் தேசிய வணிக அடையாள அறிக்கையின் ஒரு பகுதியான உலக மதிப்புமிக்க நாடுகள் பட்டியலானது 100 முன்னணி நாடுகளுடைய தேசிய நிறுவனத்தின் வலிமையையும் மதிப்பையும் கணக்கிடுகிறது.
- ஒவ்வொரு நாட்டிலும் உள்ள அனைத்து வணிக அடையாள பொருட்களின் விற்பனையும் 5 வருட காலத்திற்கு கணிக்கப்படுகின்றன. அதனைத் தொடர்ந்து நாட்டின் மொத்த வருவாய்க்குச் சார்பாக மொத்த உள்நாட்டு உற்பத்தியினைக் (Gross Domestic Product - GDP) கணக்கில் கொண்டு மதிப்பிடப்படுகிறது.

## பாதுகாப்பான நகரங்களின் குறியீடு 2017

- பொருளாதார வல்லுனர்களுக்கான பாதுகாப்பான நகரங்களின் குறியீட்டில் ஜப்பான் நாட்டின் டோக்கியோ நகரம் மீண்டும் முதலிடம் பிடித்துள்ளது.
- இந்திய நகரங்களான டெல்லி மற்றும் மும்பை முறையே 43 மற்றும் 45 ஆவது இடத்தைப் பிடித்துள்ளன.
- NEC எனும் ஜப்பானின் பன்னாட்டு நிறுவன ஆதரவுடன் பொருளாதார நிபுணர்களின் நுண்ணறிவுப் பிரிவு (Economist Intelligence Unit) இந்தக் குறியீட்டை வெளியிடுகிறது.
- டிஜிட்டல் பாதுகாப்பு , ஆரோக்கிய பாதுகாப்பு , உள்கட்டமைப்புப் பாதுகாப்பு, தனிப்பட்ட பாதுகாப்பு போன்ற அளவுருக்களின் அடிப்படையில் இக்குறியீடு கணக்கிடப்படுகிறது.

## டைம்ஸ் உயர்கல்வி தரப்பட்டியல்

- டைம்ஸ் உயர்கல்விக்கான தரப்பட்டியலில், பொறியியல் மற்றும் கணினி அறிவியல் போன்ற பாடம் சம்பந்தமான தரப் பட்டியலில் உலகில் முதல் 200 நிறுவனங்களில் பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனமும், மும்பையில் உள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனமும் இடம் பெற்றுள்ளன.
- உலக அளவில் 89வது இடத்தில் இந்திய அறிவியல் நிறுவனமும், 126-150 என்ற இடப்பிரிவில் இந்திய தொழில்நுட்ப நிறுவனமும் இடம்பிடித்துள்ளன.
- இந்த பதிப்பில் அமெரிக்காவின் ஸ்டான்போர்டு பல்கலைக்கழகம் முதல் இடத்தைப் பெற்றுள்ளது. அதனைத் தொடர்ந்து கலிபோர்னியா தொழில்நுட்ப நிறுவனம், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம், மாசாசூட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் கேம்பிரிட்ஸ் பல்கலைக்கழகம் ஆகியவை இடம்பிடித்துள்ளன.

## பிரதி மோனாலிசா ஓவிய ஏலம்

- வரலாற்றுப் புகழ்பெற்ற லியானார்டோ டாவின்சியின் மோனாலிசா ஓவியத்தின் பிரதிமீது மார்செல் டுச்சாம்ப் வரைந்த தாடி மீசையுடன் கூடிய மறு உருவாக்க (Reproduction) ஓவியம் பாரிஸில் 6,32,500 யூரோவிற்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.
- அமெரிக்க – பிரெஞ்சு ஓவியரான மார்செல் டுச்சாம்ப் “கருத்துருவாக்க கலையின் தந்தை” எனவும் அழைக்கப்படுகின்றார். (Father of Conceptual art).
- 1919ல் வரையப்பட்ட மோனலிசாவின் உண்மையான ஓவியத்தை பிரதியெடுத்து தாடி, மீசையுடன் கூடிய மோனோலிசா ஓவியத்தை 1964ல் டச்சம்ப் வரைந்தார்.

----------